உ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# ஸ்ரீபகவற்கீதை.

மூலமும் - உரையும்.

——(*)——

இஃது.

மதுரை-புதுவை-சென்னை

இம்முச்சங்களிற்றமிழ்த்தலைமைப்புலமை

நடாத்தியகளத்தூர்

## வேதகிரிமுதலியாரவர்களால்,

முன்னம் அச்சிட்டப் பிரதிக்கிணங்க

——*——

இது.

சிதம்பரம்;

## சுருணாநந்த சுவாமிகளால்,

பரிசோதித்தப் பிரதிக்கிணங்கச்

சிந்தாத்திரிப்பேட்டை

## ☞ நாராயணசாமிமுதலியார்.

அண்டுசன் அவர்களால்,

தமது,

## பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது,

௧௮௯௰ ௵—ஜனவரி.



உ

கடவுள்துணை,

# பகவற்கீதை

மூலமும்-உரையும்.

---

## பாயிரம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்-

ஐவகைப்பெயருநான்குகரணமுங்குணங்கண்மூன்றும்
செய்வினையிரண்டுமொன்றியாவருந்திகைப்பநின்ற
பொய்யிருள்கலஞானப்பொருட்கதிர்விரித்தபுத்தேள்
கைவளராழிசெங்கட்கண்ணனைக்கண்ணுள்வைப்பாம்.

இதன்பொருள்,

அண்டசம், சுவேதசம், சராயுசம்' உற்பீசம், மந்திரசமென்கிறஐந்துவிதசன்னசீவன்களும், மனம், புத்தி. சித்தம், அகங்காரமாகியநான்குகரணங்களும்.சத்துவிகம்-இராசதம் - தாமதமாகிய மூன்றுகுணங்களும் செய்கின்றகாரியமான புண்ணியபாவமாகிய கன்மமிரண்டும் பொருந்தியஎல்லாருந்தன்னையறியாதபடி மயங்கமெய்போலநின்றபொய்யான அஞ்ஞானம்போகத் தனதுசுபாவசோதியான ஞானப்பொருளைவிரித்தருளிச்செய்ததெய்வம் திருக்கையிலேவளரப்பட்ட சக்கரத்தையும் சிவந்தகண்களையுமுடைய ஸ்ரீகிருஷ்ணசுவாமியைக் கண்ணுக்குள்ளேவைப்பாம்-எ-று. கண்ணுக்குள்வைப்பாமெனவே, எல்லாமவனாகக்காண்போமென்பதுகருத்து இதுவணக்கம், அருச்சுனனுக்கு ஞானப்பொருளையென்றெழுதாததேதுகளெனில், உத்தமனுக்கும்பின்னுஞ்சிலருக்குமுபதேசித்ததினாலே அருச்சுனனுக்கென்றெழுதாமற் பொதுவாகவெழுதினது! இதில்வினையுவமும் பயனுவமுங்கண்டுகொள்க ஐவகைப்பொருளென்றது பிருதிவி, அப்பு. தேயு, வாயு.ஆகாயம் என்றபஞ்சபூதங்களும்பொருந்தும். (க)

ஞராகியபாண்டவர்களும் நம்முடையவர்களும் அங்கேநினைத்ததென்னவென்று கண்ணில்லாததிருதராட்டிரன்கேட்க அதற்குக்குளிர்ந்த இனியசொல்லினாலே சஞ்சயன்சொல்லத்தொடங்கினான்-எ-று. ௧

போர்முகமாகிநின்றபுல்லலார்படையைப்பார்த்துக்
கார்முகவுழவனுபகலைமறையவனைநோக்கி
வார்முரசதிருந்தானைவாளாவுயர்த்ததோன்ற
லோர்முகின்முழக்கமென்னவின்னனவியம்பலுற்றான்

இ-ள் தோலாற்கட்டினபேரிகை முழங்கப்பட்டசேனைகளுடனே பிரகாசமுடையபாம்பைக் கொடியாகவுயரப்பண்ணின துரியோதனன் சண்டைமுகமாகிநின்ற சத்துருக்களானபாண்டவர்களுடைய சேனையைப்பார்த்துவில்லாகியகலப்பையாலேபகைவராகியநிலத்தையுழுகிறவராகியசாத்திரவேதவல்லவரானதுரோணரைப்பார்த்துநீருண்டஅழகியமேகமுழக்கம்போலஇவ்வண்ணமாகசொல்லத்தொடங்கினான் -எ.

கொச்சகக்கலிப்பா.

வீமனையும்விசயனையுநிகர்தருபோர்வில்லாள
ரேர்மருவுசிலையனுள்ளிட்டாரெனப்பலருந்
தார்மருவுதலைவர்களாய்த்தலைப்பெய்ததானையினை
மாமருவுபெருந்தேராய்பாரென்றுமறித்துரைப்பான்

இ-ள் வீமனையும் அருச்சுனனையும் ஒப்பாகத்தரப்பட்டசண்டைக்கு உபகாரமான ஆயுதங்களையுடையவர்கள் அங்குதங்கினவில்லையுடைய அபிமன்னன்முதலான உள்ளிவிட்டாரென்கிற அனேகரும் தும்பைமாலைதரித்துச்சண்டைக்குஆயத்தமானநாயகர்களாகப் பின்னிட்டுமுன்னிட்டசேனையைக் குதிரைகள்கட்டினபெரியதேரையுடையஆசாரியரேபாருமென்று திரும்பவுஞ்சொல்லுவான்-எ-று. ௨

கலிவிருத்தம்,

கங்கையாள்பெறுகாதலனுட்புக
ழங்கர்கோனெனதாருயிர்த்தோழனு
நங்கள்வாழ்துணைநம்பியுநீயுமிங்
குங்களாருயிரென்பொருட்டொக்குமீர்.

இ-ள் கங்காநதியானவள்பெற்றகுமாரனாகியபீஷ்மரும்கீர்த்திபெற்ற அங்கதேசத்தாருக்கரசனான வென்னுடைய அரியவுயிர்த்தோழனாகிய கண்ணனும் நம்முடையசெல்வத்துணையான அசுவத்தாமாவும் நீருமற்றவிடங்களிலேயேற்றக் குறைச்சலாயிருப்பினும்அன்பினாலே இங்கே என்னிமித்தமாக உங்களுடைய அரியசீவன்களெல்லாம் ஒத்திருக்குந்தன்மை-எ-று. ௩

அன்றியேயுமரசரனேகரால்
வென்றியேதரவல்லதுவேண்டலா
ரொன்றியேதமௌக்குறுமேலுயி
பொன்றியேயது போக்குதன்மேற்கொண்டார்.

இ-ள், அல்லாமலுமென்மேலன் பினலேயுங்களைலப்பாகஇசையப்பட்ட அரச ரனேகம்பேர் ஆவர்கள்எனககுவெற்றியேதரவேண்டுவர்வெற்றியையல்லாததொல்வியைவேண்டார் எனககுஅவசியமானகுற்றமவந்துகலந்து வருமாகிற்றங்களுடையசீவனை விட்டேயந்தக்குற்றத்தைப் போக்கிச்செய்ததைவருவிககிறஉத்தியோகத்தைமேற் கொண்டார்கள் எ-று, (௫)

எய்தவெங்கள்பிதாமகனேவலாற்
கைகொள்கின்றகடற்படைகண்ணுறில்
வெய்யவீமன்வியப்பொடுகாத்திடு
மைவர்தம்படைக்காற்றவற்றுகுமோ

இ-ள், சேனாதிபதியாகிவந்துஎங்கள்பாட்டனாகியபீஷ்மருடையஏவலினலேகைகலந்துகொள்ளுகிறகடலேயொப்பான சேனையைபபார்த்தாற்கொடுமையானவீமன் அதிசயத்துடனே காக்கப்பட்டபஞ்சவர்களுடையசேனைக்குஆற்றத்தக்கதாகுமோ-எ-று,இதனுள்வீமன்மேற்றனக்கிருக்கின்ற பயத்தைச்சேனைமேல்வைத்துச்சேனைநடுங்குமென்றுப்பாட்டன்கிழவனென்றும் சேனையைச்சேனாபதிகாப்பார் நமக்கென்ன வென்று பராமுகமாயிராமலுந்தெரிவிப்பது குறிப்பு' (௬)

மேல்வகுத்ததுகாமின்விரைந்தெனு
மேல்வயிற்றிறல்யாதவர்தம்மொடும
கால்வளைத்தசிலைக்கங்கையசண்மகன்
வால்வளைத்திரடன்னையும்வாழ்வையா

(இ-ள்,) இனிமேல்யூகாகாரமாகவகுத்தவிடத்தில்எவரொவரை யெவ்விடங்களிலே எங்கள்பாட்டனார்வைக்கிருரோ அவ்விடங்களிலேஅவரவரிருந்துஅதைக்சீக்கிரப்பட்டுக் காத்துக்கொள்ளுங்களென்கிறபோதுதிறமையுடையயாதவர்களுடனேநின்று நாணையேற்றிக்காலைவளைத்துவில்லைத்தரித்தகங்காபுத்திரனாகியவீஷ்மர்வெள்ளைநிறமாகச்சங்குக்கூட்டங்களைவாயில்வைத்து-எ-று [எ]

வஞ்சகர்செய்தவினைமறலிக்குண
வெஞ்சமர்விளைந்தென்னவும்வேந்தர்க்கே
னெஞ்சமுண்மகிழ் வெய்தவுநேரலா
ரஞ்சவுங்கனன்றூர்த்தனர்சங்கமே.

இ-ள்,வஞ்சகர்செய்தகாரியம்யமனுக்குப்புசிக்கக்கொடுமையான்சண்டைவிளைந்ததெனவும் இராசாதிராசனான துரியோதனனுடையமனமா

னது உள்ளேசந்தோஷமடையவும் பகைவரானபாண்டவர்கள் பயப்ப டவும் கோபித்துச்சங்குகளை முழங்கினர்கள் எ-று [மேலென்றபாட்டும் வருசகரென்றபாட்டுமொருதொடர்] [அ]

கலிநிலைத்துறை.

ஆர்த்தனவனைகளெங்குமதிர்ந்தனபல்லியங்கள்
போரிடப்படைநின்றிப்பாற்புவனமீரேழும்பூத்த
தீர்த்தனுந்தனது சங்கைச்செங்கையால்வாங்கிக்கொண்டு
கார்த்திரண்முழக்கமென்னக்கடல்கலந்தார்த்ததென்ன,

இ-ள், சங்கங்கள்முழங்கினபலவாத்தியங்களுமெங்குமதிர்ந்தனசேனை நின்றிந்தப்பூமியைப்போர்த்துக்கொண்டதுபோலநிறையஅப்போதுப திநாலுலகத்தையும்பெற்ற ஸ்ரீகிருஷ்ண சுவாமியும் தம்முடையபாஞ்ச சன்னியமென்கிறசங்கைச்சிவந்ததிருக்கையாலேவாங்கிக்கொண்டு மேக க்கூட்டங்களின்முழக்கமென்றுசிலர்சொல்லஏழுகடலுமொன்றாகக்கூ டிப் பொங்கியெழுந்துமுழங்கினவென்றுசிலர்சொல்ல-எ-று சு

கலிவிருத்தம்,

வையமனைத்தையும்வாரிமுன்வைக்கு
செய்திருப்பவளத்திடைவைத்தா
னைவரொமக்குயிராதலினாலே
யுய்வதுமக்கிலையென்பதையொத்தே.

இ-ள், மூற்காலத்திலேபூமியெல்லாவற்றையும்வாரியுள்ளேவைக்கப்ப ட்டசிவந்தபவழத்தையொப்பான திருவதாரத்தில்வைத்துமுழக்கினா ரதெப்படியிருந்ததென்னால்பஞ்சவர்களெமக்குச்சீவனாகையாலேதப்பிப் பிழைப்பது உமக்கில்லையென்று அண்டகடாகமறியச்சொன்னதையொ த்ததென்றவாறு. ஆர்த்தனவென்றகவியும்வையமனைத்தையுமென்றகவி யுமொருதொடர்சகலசீவன்களுமுயிராயிருக்கிற நமக்குப்பாண்டவர்க ளுயிரென்பதுஇருவை உமக்கரிதென்றுபாடமாயில்உங்களுக்கரிதுபஞ் சவர்களெளிதெனவரும் இல்லையென்பது, அரிதென்பது சந்தேகம்ஆ கையாலேசந்தேகமாகத் தெய்வனு சொல்லாததினாலே அரிதென்றுபா டம்ஒக்கக்கூடாது, ம

அறுசீரடியாசிரிய விருத்தம்,

தருமன்பலவீமனருச்சுனனகுலன்சகாதேவன்
திருமருவுவிசயம்வுண்டாநதேவதத்தமெழின்
மருவுசுகோடகமணிபுட்பகத்தொடுமெனவிவற்றி
னருமனையகுரலெதிர்ந்தோர்செவிபோர்ப்பவூதினர்

இ-ள், இப்படிச்சுவாமியானவர் பாஞ்சசன்னிய விமென்கிறசங்கை யூதின வுடனேதரும ராசாசிறப்புப்பொருந்திய சய மென் கிறசங்

சங்கம்பலமுள்ளவீமன்பௌண்டரமென்கிறசங்கம்அருச்சுனன்தேவதத்தமென்கிறசங்கம்நகுலன் அழகுபொருந்தியசுகோடகமென்கிறசங்கம்சகாதேவன்மணிபுட்பகமென்கிறசங்கம் இப்படியென்றுபெயரையுடைய இந்தஐந்துசங்கினும் இடியையொப்பானகுரலானது பகைவர்களுடையகாதுகள்செவிடுபடலாகின்றன-என்றவாறு. [௧௧]

சந்தவிருத்தம்

ஒன்மலர்து பலவூதினார்கள் பலவுந்தும்பவால்வளையிறைசைபோய் நின்றகௌரவர்களெனஞ்சையூடுருவி விஞ்சுவரணியுநிரம்பமேல், வெள்ளிப்பரிதொடகுமியல்லையினில்வெள்ளிமாகடவுந்தேரின்மேல்,நின்ற போர்விசயனென்றுமாயனெதிர்நில்லாமையொடுசொலலுவான்,

இ-ள்,மற்றுமுள்ளராசாக்களொன்றல்லாதனேகஞ்சங்கையூதினார்கள்; அப்படியனேகருமூதினவெள்ளைச்சங்குகளுடையசத்தமானதுபோய் எதிராகநின்றகௌரவர்களுடைய நெஞ்சுக்குள்ளேபுகுந்துபிறகேபுறப்பட்டுவளர்ந்துயாதாலுநிரம்பாத ஆகாயத்திலுமிறைய அதற்குமேலிரண்டுசேனையும் வெற்றிசேரப்பட்டசண்டைதொடங்குகிறபோது வெள்ளைக்குதிரைகளாலே நடத்தப்பட்டதேரின்மேல்நின்று சண்டைசெய்யத்தனப்பட்ட அருச்சுனன் அந்தத்தேரின்மேலே நிற்கமாட்டாதசோகத்துடனேசுவாமிக்கெதிரேஒருவசனஞ்சொல்லுவான்-எ-று. (வானினுமென்றவும்மைநிற்கமாட்டாமையாலாதுகள்ளாடல். [௧௨)

யாவர்போர்கருதியெய்தினார்களெதிரெய்தினின்றவிவர்தங்களில்யாவரோடமர்தொடங்கலமெனவறிந்துகொள்ளுமளவியாவையுக,காவல்பேணியவைதந்துபின்னவைகாந்துகொண்டருள் செய்பகண்ணனே, மேவநீகடவுமாகொடேரினைநிறுத்துவாயெனவிளம்பினான்.

இ-ள், எல்லாவற்றையுங்காவலாகவாதரித்து அவைகளையுண்டாக்கிப்பின்பு அவற்றினொளித்துக்கொண்டருளப்பட்டசுவாமியெதிராகவந்து நின்றவிவர்களில்யார்சண்டையைநினைத்து வந்தார்கள்யாரோடேசண்டைதொடங்கலாமென்று அறிந்துகொள்ளுகிறமட்டும்மனம்பொருந்தநடத்தப்பட்டகுதிரை பூண்டிருக்குந்தேரை நீநிறுத்துவாயென்று சொன்னான்-என்றவாறு. ௧௩

விளம்புமவ்வளவின்மேகவண்ணனும்மவ்வெள்ளைமாகடவுதேரினைக் களங்கொளும்பரிசினிலெறசேனைநடுவேகடாவிபிதுகாணென,வளங்கொள்கங்கைமகனுபாக முடிமன்னர்யாவரையுமுன்னுறத், துளங்குகின்றமுடபோடு நெஞ்சினோடுவல்லவாறுசிலசொல்லினான்

இ-ள், சொல்லப்பட்ட அவ்வளவில்மேகநிறமானசுவாமியும்அந்தவெள்ளைக்குதிரைகளாலே நடத்தப்பட்டதேரைப்போர்க்களத்திலெவ்விடங்களிலும்நிறையக்கொள்ளும்படி நின்றசேனைநடுவேயோட்டநிறுத்திச்சொன்னதுபாரென்றுசொல்லவல்லமைகொண்டகங்காபுத்திரனாகியவீஷ்மே

ர்முதலாகக்கிரீடந்தரித்தராசாக்களெல்லாரையுங்கண் முன்னாகக்கண்டு அசையப்பட்டகிரீடத்துடனேசொல்ல நல்லவழியாகத் தன்மனதுடனே சிலவசனஞ்சொன்னான்-என்றவாறு. ௰௪

கொச்சகக்கலிப்பா.

தாவிலருந்தந்தையருந்தந்தையர்தந்தையரு
மேவியுடன்பிறந்தாருமெய்ஞ்ஞானமளித்தாரு
மாவியெனநட்டாருமான்றோருமமர்க்களத்தே
மேவியெம்பொருட்டாகவுயிர்விடவெண்ணுடங்கினர்

இ-ள், வருத்தமில்லாத அருமையான தகப்பன்மாருந்தகப்பன்மாருடையதகப்பன்மாரும் இவர்களுடனேகூடிப்பிறந்தவர்களும்மெய்ஞ்ஞானோபதேசம் பண்ணினபேருமசீவனைப்போலசிநேகமானவர்களும் அமைந்தடங்கினபெரியோரும போர்களத்திலேவந்தஎங்களுடையநிமித்தமாகதங்களுடைய சீவனைவிடவேண்டி சண்டைசகுத்தொடங்கினர்கள்-என்றவாறு. ௰௫

கலிவிருத்தம்

தீதறுகுரவர்மற்றவர்கள்சேய்களு
மாதுலர்சிலர்களோமாய்கின்றாரெனக்
காதல்செய்கிடரினாற்கலக்கமுற்றவன்
மாதவனெதிர்சிலமாற்றங்கூறுவான்

இ-ள், குற்றமற்றகுருக்களும் பின்னுமவர்கள்பிள்ளைகளும் அம்மான்மார்களும் இவர்கள்முதலானவர்களோ சாகிறார்களென்று அவர்கள்மேலாசைவைத்து அத்தத்துக்கத்தினால் கலக்கமடைந்தஅருச்சுனன் சுவாமியின்மேலேசிலவார்த்தைசொல்லுவான்,எ-று.குருக்கள்மாராவது கிருபத்துரோணர்.எ-று. ௰௬

வாயேயன்றிமுகம்புலருமனமொன்றுணரமாட்டாது
தீயேயன்றியுடல் வெதுபபுஞ்செவ்வே நிற்கமாட்டுகிலேன்
மெய்யேதருதிண்காண்டீபவில்லுநழுவிவிழாநின்ற
தாயேயனையாய்போர் நின்றதமரைக்காணுந்தோறுமன்றே

வாயுலர்ந்தது அதுவுமல்லாமல் முகம்வாடுகிறதுமனதுமொன்றையுமறியமாட்டாது நெருப்பையல்லாமற்சரீரம்வெதும்புகின்றதுசெவ்வேநிற்கமாட்டேன் மூங்கிலாலேயுண்டானதிண்மையான காண்டீபமென்கிறவில்லும் நழுவிவிழுகிறதுதாயையொப்பான சுவாமி சண்டைக்கு நின்ற உறவினரைக்காணும்போதெல்லாம்-எ-று.*(வாயுலர்ந்து முகம்வாடிமனமயங்கிச்சரீரம்வெம்பித்தள்ளாடிவில்லுநழுவிவிழுகின்றதென்று சொன்னதுகுறிப்பு.) ௰௭

ஓதலாகநிமித்தங்களொன்றேயல்லபலவுளவாங்
காதலாரைக்கொன்றுபெறும்பயனே தொன்றுங்காணேனு
ஆதலாலிவ்வெற்றியுடனரசினுரிமையானதனை
ஏதலாவதென்னின்றதியாதின்பொருட்டோவியம்பாயால்

இ-ள், சொல்லலாகாதநிமித்தங்களொன்றுதானே அல்ல அனேகமுண்டாகிறதுஎன்மேலே அன்புடையவர்களைக்கொன்றுபெறப்பட்டபிரயோசனமோநான்ஒன்றுங்காணேன் ஆதலால் வெற்றியுடனேஅரசுரிமையான அதனைவிசாரிக்கில்எனக்கு ஏலநாசமென்றேகிறஎச்சாகிறதுஇப்போதுஇந்தச்சண்டையென்னநிமித்தமோசொல்லுவாய்-எ-று

அறுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்,

அரசவ்வரசால்வரும்போகமதனுலின்பமெய்துமென, உரைசெய்
பொருள்களியாவர்சிலர்பொருட்டாலுலகையுழைந்தடைவர்வரைகொ
ள்புயனேமற்றவர்தம்பொருளுந்சுங்கள்வாழ்நாளும் நினைசெய்தொருவ
ரொருவரின்முன் னீக்கிவந்துநின்றாரால்

இ-ள். மலையைக்குடையாகக்கொண்டபுயத்தையுடையசுவாமிஅரசு அந்த அரசால்வருகிறபோகம்போகத்திலேவருகிற சுகமென்றுசொல்லப்பட்டமூன்றுபொருள்களையுஞ்சிலபேர் நிமித்தமாகவருந்தியார்பூமியையடைவார்களோ அவர்கள்தங்களுடைய அரசுபோகம் சுகமெனகிறமூன்றுபொருள்களையும் தங்களுடையஆயுசுகளையும் விட்டுவந்து வரிசைவரிசையாக ஒருவர்முன்னேயொருவர்நின்றார்கள்-எ-று, அரசுபோகஞ்சுகமென்றமூன்றுபொருளுமூன்றுபேறு-அவைதகப்பன் தாய்குருசினேகர் உறவினர் பெரியவர்கள்நல்லவர்கள் இவர்கள்முதலானபேர்களனுபவிக்கவேண்டிப்பெறுகையால் இப்போதுஇந்தச்சண்டையில் இவர்களைக்கொன்றுபெறுவதாகவந்திருக்கின்றது ஆகேதெனில்இவர்களெனக்குமுன்னேஎனக்குமுன்னேயென்று அவசரப்பட்டுஒருவர்முன்ஒருவர்வந்துநிற்கையால் இவர்களைக்கொன்றுவரும்பிரயோசனம்ஆகாதென்பதுகுறிப்பு (௰௯)

ஆனபொருளீதாதலினாலவரைக்கொன்றாலருள்சேரா
தீனமல்லாவெங்களுக்கோரின்பமெய்துமில்லையால
கூனவரிவிற்கொண்டென்னைக்கொலினும்வனையான்சோறல்
வானம்பெறினுமினிவேண்டேன்மண்ணினபொருட்டால்வல்லேனே

இ-ள், இந்தச்சண்டையினாலான பொருளிது ஆதலாலவைரச்சவையயில்லாமதொன்றார்குற்றமேயல்லாமல் எங்களுக்கு ஒருசுபாதிதுபடங்குமில்லை, ஆகையால [illegible] என்னைக்கொன்றாலும் அவர்களை நான்கொல்லுகிறதுபொருட் தேவலோகத்தைப்பெற்றும் இனிஆசைப்பட்டேன்இப்படிச் தேவலோகத்

தேவேண்டிக்கொல்லாதநான்மண்ணுலகநிமித்தத்தாலேகொல்லமாட்டு வேனோமாட்டேன்-எ-று' (௨௰)

கொற்றவர்தங்குலங்கெடுத்தால்வருகின்றகுற்றமுமெய்
யுற்றவர்தந்திரமபிழைத்தாலுறுகின்றவுயர்பழியு
மற்றவர்களறியாதுமறந்திடுகமறந்தாலுங்
குற்றமெனவறிந்தவியான்குறிக்கொள்ளாதொழிவேனோ'

இ-ள், இராசாக்கள்தங்கள்குலத்தைக்கெடுத்தால்வருகிறகுற்றமுஞ்ச த்தியசகிதமானவர்கள்தங்களுடைய ஒழுக்கத்தைவிட்டால் அடையப்ப ட்டபெரியபழியும் அவர்களறியாததற்குமுன்னேமறக்கவேண்டும், அப் படிமறந்தாலும்ஆகாதுசெய்தாற்குற்றமென்றறிந்தயானோ இனியெப்போ தும்நினைவாயிருக்கிறபடிக்குக் கிடமாய்க்கொள்ளாமல் மறந்துவிடுவே னோவிடேன்-எ-று, *(இதில்வினையால்மறந்து ஆயுத்தமானேன் இனிஅ றிந்துபின்பு அதையொப்புக்கொள்ளேனென்பது குறிப்பு, (௨௧)

குலங்கெடவேவருகின்றகுலதருமங்கெடுதலும்
நலங்கெடவேகுலம்பாவத்தண்ணுமதுநண்ணவே
இலங்கிழையார்செறிதிரிவரிவர்களைநிதிரியவே
தலங்குலவுமுறைமையெலாந்தலைதடுமாறுமால்

இ-ள், குலநாசமாகவே அனாதியாகத்தொடர்ந்துவருகிற குலதருமம் நாசமடையும்' குலநலமானதருமமழிவே குலத்தைப்பாவமூடிக்கொள் ளும், அந்தப்பாவங்கள்கூடினமாத்திரத்திலே பிரகாசிக்கிறபொன்னாலு மமணியாலுஞ்செய்தஆபரணம்பூண்டபெண்கள்தங்கள் மார்க்கத்தைத் தப்புவார்கள், இந்தப் பெண்கள்பதிவிரதாமார்க்கத்தைத்தப்பிவிபசாரியம் பண்ணவேபூமியிலேவழங்கினவரிசையானமுறைமையெல்லாந் தலைத டுமாற்றமாகும்.எ-று, [௨௨]

தடுமாற்றமக்குலத்தைச்சார்ந்தார்க்குஞ்சாராதே
கெடுமாற்றநினைத்தவர்க்குங்கொடாநிரயங்கிடைப்பிக்கும்
படுமாற்றமென்னுரைக்கேன் பண்டிறந்தோர்களுந்தமக்கொன்
றிடுமாற்றலவர்கள்பெருநிரயகத்திழிவர்களால்,

இ-ள், முறைகெட்ட தடுமாற்றமசங்கரமான அந்தக்குலத்தை யடைந் தவர்களும்அந்தக்குலத்தைத்தான்சாராமல்அழியும்படிநினைத்தவர்களு ம, எந்தக்காலமும் அழியாதநரகத்தை யனுபவிக்கப்பண்ணும, ஆகை யால்உண்டானவசனத்தையென்னசொல்லுவேன் முன்மரணமானபிது ர்த்தேவர்களுக்குந்தங்களுக்கிடுவதொன்றுமபிண்டவுதகக்கிரியைகளை இடுவாரில்லாததினாலே பெருமாலிருண்டநரகத்திற்பிதுர்களிறங்குவார் கள்-எ-று,*[இது அதோகதியானநரகிலேதலைகீழாகவிழுவது] [௨௩)

வாராநின்றகுலமயங்கப்பண்ணினார்க்குமற்றவரை
சாராநின்றகுலத்துக்குந்தருமந்தளர்ந்துசாயுமற்

சாராநின்றகுலந்தருமமிரண்டுந்தளர்ந்துசாயவே
பேராநிரயமெய்துமெனபபெரியோராயாருமபேசுரால்

இ-ள் பூமியுள்ளநாள்முதலாக வரப்பட்டகுலத்தைக் மயக்கம்பண்ணிச் சங்கரமாக்கினவர்களுக்கும, அந்தக்குலத்தைக்கெடுத்தவர்களைச் சார்ந்து நின்றகுலத்தாருக்குந் தருமங்கெட்டுவிழுந்துபோய, இந்தவுலகத்தைச்சார்ந்து நின்றகுலமென்றும், தருமமென்றுஞ் சொல்லப்பட்ட இரண்டுமகிலைகெட்டுவிழுமேவ அந்தமனிதர்களுக்குநீங்காதநரகங்கிடைக்குமென்று பெரியோரெல்லாருஞ் சொல்லுவார்கள்-எ-று. * (குலைத்தாருங் குலத்தைக்கெடுத்தாரும நரகத்திலெக்காலமுமிருக்கவேண்டுமெனபதினாலேபேராநிரயமென்றார்.] ௨௮

மின்னையனைசெல்வத்தைவேண்டித்தங்கண்மெய்யுயிரைக்
கொன்னேகழிக்கநின்றவரைக் கொல்லத்துணிந்தகொடுவினையே
னென்னேரெடியபெரும்பாவமெய்தநினைந்தேனியானுமிவர்
முன்னேபடைவிட்டமாதுறந்துநின்றாலிவர்கண்முனிவாரோ.

இ-ள் மின்னையொப்பானசெல்வத்தைவேண்டித்தங்களுடையசரீரத்துயிரை வீணிலேபோக்கநின்றவர்களைக்கொல்லத் துணிந்தகொடும்பாவியானநான் என்னமோகொடுமையான பெரியபாவத்தையடையநினைத்தேன்நானும் இவர்கள்முன்னே ஆயுதத்தைவிட்டுச் சண்டையை வெறுத்து நின்றாலிவர்கள்கோபிப்பாரோகோபியார்-எ-று.*மின்காட்டினஅந்தக்கூக்ஷ்மமேமறைகையாற்செல்வநிலையாதென்பதுகருத்து.

கலிவிருத்தம்.

கொல்லினுமெனக்கது பொறுக்கைகுணமென்றே
சல்லினுயர்தோல்விடலை கண்ணனெதிர்கூடு
வில்லினுடனேபகழுசோரவிழிசோரச
சில்லிமணியாழிபொருதேர்மிசையிருந்தான்

இ-ள் நிராயுதனென்றுபாராமலென்னைக்கொன்றாலும்அதுபோகிறதுஎனக்குமிகுதியுமநல்லதுஎன்று மலையையொப்பாகஉயர்ந்ததோள்களையுடைய காளையாகிய அருச்சுனன் ஸ்ரீகிருஷ்ணசுவாமிமுன்னே சொல்லிவில்லுடனே அம்புநழுவக்கண்கள்நீர்துளிக்க அழகியவண்டிலானதுஇடியைப்போலபூமியைப்பிளக்கப்பட்டதேரமேலிருந்தான் என்றவாறு. ௨௯

சோக அத்தியாயம்- முற்றுப்பெற்றது.

———[*]———

பாயிரமுட்பட-ஆக திருவிருத்தம்-௩௰.

இரண்டாவது.

# சாங்கியயோக அத்தியாயம்

[*]

கொச்சகக்கலிப்பா.

இவ்வண்ணமறிவோதுங்கவெழுகின்றவிரதந்தாற்
செய்வண்ணமறியாதுதிகைத்திருந்ததேர்விசயன்
உய்வண்ணமருணாடிபொருவண்ணமுலகோதுங்
கைவண்ணமலருடையகார்வண்ணன்கட்டுரைப்பான்

இ-ள் இந்தப்படிக்கு அறிவுவிலகவெழும்புகிற தலையினாலேசெய்யத்தக்கதை யறியாமற்றிகைத்துத்தேரிலிருந்த அருச்சுனன்மயக்கந்தீர்ந்து பிழைக்கத்தக்கதெதுவென்று ஆலோசனைபண்ணி உலகத்தார் தோத்திரம்பண்ணக்கொடுத்தருளுகின்றசெந்தாமரைப்பூவையொப்பான திருக்கையையுடையமேகநிறமான ஸ்ரீகிருஷ்ணசுவாமி உபதேசமார்க்கமான அநேகத்தில் ஒருவிதத்தைச்சொல்லுகிறார்-எ-று. *இராகமாவது பகைஞரை நமமுடையவர்களென்றும் அபிமானத்தாலெழும்புகிற இராகம்.)

ஆயாதவர்க்குமலிகட்குமப்பகழியாப்பழியினது
தேயாலறிவைத்தோய்ப்பதாகசிறுமைகளினுஞ்சிறுமையது
சாயாநரகத்திடைசாய்ப்பதுன்போலடவர்க்குத்தகாததுவந்
தேயாநிலத்திலுனையெவ்வாறடைந்ததெனவறியேன்

(இ-ள்) ஐயா வேதசாஸ்திரங்கள் விசாரியாதவர்களுக்கும் ஆணும்பெண்ணுமல்லாத அலிகளுக்கும் அடுப்பது தீராதபழியையுடையதுங் கெடாவறிவைக்கெடுப்பதுமேத்தவும் அற்பமானவைகளிலும் அற்பமானது-ஒழியாதநரகத்தினிடத்திலே விழப்பண்ணுவதுமுனையொப்பானவர்களுக்குத்தகாதது இப்படிக்கொத்த அஞ்ஞானம்வந்து இந்தப்போர்க்களத்திலேயுன்னை யெப்படியடைந்ததென்றறியேன்-எ-று. உ

ஒவ்வாதீதொழிந்தமர்மேலொருப்படுகென்றருக்கரிய
செவ்வாயின்றிருமொழியத்தேர்விசயன்செப்புவான்
மெய்வாயினுமனத்தான்மிகப்போற்றற்குரியாரை
எவ்வாறுகொலைபுரிவேனென்றிவ்வாறியம்பினன்.

இ-ள் இந்தஅஞ்ஞானம்பெரியோர்களுக்கு ஒவ்வாது இதைவிட்டு உயிர்தயத்தின்மேலே ஒருமைப்படுவென்று கரியதிருமேனியுஞ்சிவந்தவாயுமுடையசுவாமி திருவாக்கருளிச்செய்யவிசாரிக்கிற அருச்சுனன் சொல்லுவான்மனோவாக்குக்காயமென்கிற மூன்றுகரணத்தாலும்மிகவு

ம்பூசிக்கிறதற்குரியவரான பீஷ்மர் துரோணர் முதலானவர்களையெப்படி க்கொலைசெய்வேனென்றிந்தப்படிசொன்னான் எ-று.* [தேர்விசையனை இரதமேறுகிறவர்களே ஆகையாலே கூடாத,தேர்கல்விசாரித்தல்,ஆகையாலேவிசாரிக்கிற அருச்சுனனுக்குபதேசிக்கிறதினாலேஉரையில்விசாரித்தென்றெழுதினது-ஒடுவென்றது திரிகரணத்தோடாகிறது. [௩]

மாற்றலர்களெனவிவரைக்கொன்றுபெரும்பெரும்பாவி
னேற்றமுறைத்தியானபிறர்பாலிரந்துகவள்கையினிதன்றே
கூற்றஇவருண்டாலவர்குருதியாம்குழைந்த
சோற்றையினிதாகவன்றேபான்பின்னைத துய்ப்பதெல்லாம்.

இ-ள்,பாட்டன்குரு- இவர்கள்முதலானபெரியோர்களைப்பகைஞரென்றுகொன்றுமேற்பட்ட பெரியவாழ்வினும் அவர்களுடையமகிமைகளைச்சொல்லி அன்னியரிடத்திலநான்பிச்சைஎடுத்துண்பதுஇனியதல்லவோ அவர்களுயிரைஎன்னாலேயமனுண்டால் அவர்களுடையஇரத்தத்தினாலேகுழைத்தசோற்றை இனியதாகவல்லவோநான் அவர்களைக் கொன்றபின்புபொசிப்பதெல்லாம்எ-று ௪

தவர்கொல்படைவிடுகையோதவிகையோதகுவதமற்
றவர்களெனைவெல்வரோயார் வெல்வனோவதீயே
னவர்கள்சிலரிந்தக்காலகனாலென்னுருயிர்போ
மவர்களமர்கொடங்குகவென்றடல்குறித்துநின்றமரால்

இ-ள், வில்லிலேதொடுத்துக்கொல்லப்பட்ட அம்புவிடுவதோதவிர்வதோ இந்தவிரண்டிலேதகுமானதெதுவோ அல்லாமல் அவர்களென்னைச்செயிப்பரோநான் அவர்களைச்செயிப்பனோ அவர்களிற்சிலரிறந்தால் அதினாலேஎன்னுடைய அரியசீவன்போம் அவர்கள்சண்டைதொடங்கென்றுபலத்தைக்குறித்துநின்றார்கள்.-எ-று. ௫

ஆதலாலறிவாய்விழியினைமற்றுங்கவர்பாற்
காதலாலிருண்மறைப்பநெறியெங்குங்காணே
னாதலாலெனக்குறுவதறிகிலேனுரைத்தருள்தாய்ச்
சாதலானதும்பிறப்புமில்லாததனிமுதலே,

இ-ள், ஆகையாலறிவாகியஞானக்கண்ணை அவர்களிடத்திலவைத்த ஆசையினாலே அஞ்ஞானமாகியவிருள்மறைக்கநானொருவழிகாணேன் ஆதலால் உறுதியானதை யறிவில்லாதஎனக்குறுதியைச்சொல்லியருளவேண்டும்சாகின்றதானமரணமும் பிறப்புமில்லாத ஒப்பற்றமுதன்மையானசுவாமி-எ-று. ௬

உஞ்சேபோகுநெறியாளாவுனைப்பனேவென்றுளங்கருதி
தஞ்சேயென்றுன்சாண்புரிந்தேன்தன்டிற்புகுந்தேன்றமனாக்கண்
மஞ்சேபுன்றன்மாணுக்கனுயுன்பாதமலர்புனைந்தே
னஞ்சேலென்றிங்கடியேன்செய்வினைகளேவியாள்வாயே

இ-ள், செந்தாமரைப்பூவையொப்பான திருக்கண்களையுடையமேகவண்ணனே நம்பிப்பிழைத்துப்போகப்பட்ட வழியைக்கேளாமற்சொல்லுமேவேனோவென்று திருவுளத்தில்நினைத்தருளவேண்டாம அடைக்கலம்புகுதுமிடமென்றும்முடையமறைவுபுகுந்தேன் இடைவிடாதபக்திசெய்தேனைஉம்முடையசிஷ்யனாகஉன்றுதிருவடிதாமரைகளை அடியேனுடையசிரசிலேதரித்தேனபயப்படாதேயென்று இங்கே அடியேன்செய்யவேண்டிய காரியங்களைப்பேவச்செய்தருளியாளுவாய்-எ-று. ௭

கலிவித்தம்.

மண்ணாளும்பெருஞ்செல்வமன்றியேமாயாத
விண்ணாடுபெற்றினுமென்னுடையமெய்யுணர்வு
நண்ணாமலிந்துபாதலிபாமம்காப்பதனைக்
கண்ணாரிங்கெவ்வினத்துங் காண்கிலேனெனக்கலுழ்ந்தான்

இ-ள், அழியப்பட்டபூமியை யாளுகிறபெரியசெல்வமுமல்லாமல் அழியாததேவலோகத்தைப்பெற்றாலுமென்னுடையமெய்யானவறிவு சேராமற்செய்வக்கப்பட்ட துக்கமானது என்னைவருத்தாமற்காக்கப்பட்டதை இங்கேஎந்தவிடத்திலேயுங்கண்டிலேகாணேனென்று அழுதான் எ-று. ௮

நெய்மார்பிற்சொரிவதெனநெடுங்கண்ணீர்சோர
விம்மாநின்றவன்காதல்வெந்தியால்வேவாமே
கைம்மாறொன்றின்றியுயர்காக்கவேகடன்பூண்ட
வம்மாயன்றிருவாய்மையருண்மாரியால்விப்மான்

இ-ள், மார்பிலேநெய்சொரிவதுபோலநீண்டகண்கள் நீர்சிந்தவிம்மிவிம்மிநின்ற அருச்சுனன் உடலின்மேல்வைத்தஆசையானஉஷ்ணமுள்ளநெருப்பாலேவேகாமல்முன்னேதானேபிரதியுபகாரமில்லாமற்பஞ்சவர்களுடைய சீவனைக்காக்கிற தேசடனாகப்பூண்ட அந்தகிருஷ்ணசுவாமிதிருவாக்கினாலே பொழியப்பட்ட கிருபையாகியமழையால் அவிக்கவேண்டி-எ-று. ௯

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மின்னையனையதிருநகைகொண்டருளிவிளைத்தாமரைநாறும்பொன்னையணியுந்திருமார்பன்போகாத்துயர்போமபரிசெண்ணிமுன்னையறைகளெடுத்துரைத்துமுடியாப்பொருளைமுதற்பொருளாய், தன்னையுள்ளபரிசவர்க்குநதானேசாற்றத்தொடங்கினர்.

இ-ள், பரிமளிக்க பொற்றாமரைப் பூவினிற்றோன்றிய மகாலட்சுமியைத்தரித்த திருமார்பையுடையஸ்ரீகிருஷ்ணசுவாமி மின்னலையொப்பான திருநகைகொண்டருளி எப்போதும் போகாததுக்கம்போம்படிக்குநினைந்தும பழையவேதங்களெடுத்துச் சொல்லியு முடியாதபொருளை முதலான பொருளினாலே தன்னையுள்ளபடி அங்க

க்குத்தாமேசொல்லத்தொடங்கினார்-எ-று.(எடுத்துச்சொல்லாவதுமேலானபொருள்களாலே தூக்கிச்சொல்லியுமடங்காதபொருள்தானேயென்றது தன்னைக்குருமுகமாக அறிவியாமற்றானே அறிவித்தாரென்றது இதனாலேகுருவேதெய்வமென்றுகுறிப்பு) [௰]

கலிவிருத்தம்.

சாவதில்லையாவர்களு மிறப்பதுதானே
மாய்வரெனநீகருதுமாரதர்களெல்லாந்
தேவரியதீவினைசெய் யாதமையினாலே
வீவதன்முன்வா னுலக மேவுவர்கண் மேன்சீயல்

[இ-ள்] எல்லாருஞ்சாகிறதில்லை அதுநிற்கசாவார்களென்றுநீ நினைக்கப்பட்ட பெரியதேர்க்காரரெல்லாம் ஒன்றாலுங்குறைய அரிதானபாவங்களைச் செய்யாமையினாலே சாகிறதற்குமுன்னேதேவலோகத்தைமேன்மேலுஞ்சேருவார்கள்-எ-று. * தேய்வரியதீவினையாவது யாகங்கள்மகாதானங்கள் முதலானவையால் தீராதபாவங்கள் செய்யாததினாலே தேவலோகத்தைச்சேருவார்களென்றதுகருத்துபாவிகள்நரகில்விழுவாரென்றதருத்தாபத்தி [௰௧]

அன்னவர்கள்சோகிதரெனவழுதலாலும்
மன்னவரியோர்கண்மொழியேபகர்தலாலும்
மன்னுவயமேறியுண்மயங்கினைசொல்லையா
இன்னதொழிலானவை மறந்திடுவையுங்கேள்

(இ-ள்) அப்படிப்புண்ணியவான்களாய்த் தேவலோகத்தைச்சேருகிறவர்களாயிருக்கிற அந்தச்சோகிக்கத்தகாதவர்களைச் சோகிதரென்றுநீ அழுகிறதினாலும் பேசவரியவரானவரென்று அறிந்தும்அறியாதவர்கள் போலநீபேசுகிறவசனத்தையேசொல்லுகிறதினாலும்நிலைமையானபயக்கமேற்கொண்டு புத்திமயங்கினையோ இந்தத்துக்கத்தொழிலானது உனக்குத்தகாது இதைமறந்துவிடு இன்னஞ் சொல்லுகிறதையுங்கேள்-எ-று. * அற்பசுகத்தையுமகாதுக்கத்தையுமுடையபூமியைவிட்டு மகாசுகத்தையுடைய தேவலோகத்தைப்பெறுகிற சந்தோஷமுடையவர்களைத் துக்கமுடையவர்களென்று துக்கிக்கிறதினாலும் அறிந்துமறியாதவர்களான வாதிகளைப்போல பேசுகிறதினாலும், புத்திமயங்கினையென்றது பன்னவரியோர், பெரியோர்மன்னவரியோர்பாவிகள்வாதிகளென்று சொல்லுகிறது வாதிகளையறிந்தும் அறியாதவரானபிரஞ்ஞாவாதிகளென்றுசொல்லதென்னையென்றால், தற்கபுத்திகளை நன்றாக அறிந்துவாதிக்கிறதினாலேசொன்னது இவனுடனேபேசுகிறதே அரிதென்றுபயப்படவாதிக்கிறதினாலே வாதியைப்பன்னவரியேரென்றுபாடினார்.) [௰௨]

மாயுமவராலுமுயிர் வாழுமவராலு
மாயுமறிஞோர்களழியாமையறியாமோ

நீயுமிலதாமுங்கழ் நானுநெறிதேறி
லேயும்வகையாதுலகி லென்றுமுளமேகாண

[இ-ள்] சாகிறவர்களாலுஞ் சீவன்வாழ்கிறவர்களாலுஞ் சகலத்தையும் ஆராயப்பட்ட அறிவுடையவர்கள் மனத்திடமழிந்து துக்கப்படாததை நீயரியாயோ இவர்களையெப்படிக்கொல்லுவேனென்றழுகிறநீயும் உன்னுடைய இரக்கத்துக்குரியவரான இவர்களும் எல்லாவற்றையும் நடத்துகிறநானுஞ் சாகிறவர்களோ இருக்கிறவர்களோவென்றறிந்தயார்க்கத்தை விசாரிக்கிற கருமத்துக்கீடாக விசையப்பட்ட வெணபத்துநாலு லக்ஷம் அச்சுப்பேதவகையாலே யுலகத்திலே யென்றுமிருக்கிற நாமே யல்லாம லிலலாதநாமல்ல கண்டாய்-எ-று. (௰௧)

பொன்றுவதுடம்புசனு னின்றபொருள்பென்று
தென்றுமோரியற்கையினி னிற்குமியல்பைக்கேளா
முன்றுடமகப்பருவம்விட்டிளமைமூப்போ
டொன்றுமுடலாயினு முயிர்க்கியல்பதென்றால்

(இ-ள்) அழிவதுதேகம் அந்ததேகத்துக்குள்ளே நின்றவுயிர் அழியாது அந்தவுயிர்என்றும் ஒருசுபாவத்திலேநிற்கும்அந்தச்சுபாவத்தைக் கேள் அர்ச்சுன முன்னேதொடர்ந்துவரப்பட்ட குழந்தைப்பருவத்தை விட்டு இளமையோடும் மூப்போடு தேகங்கூடுமானாலும் அந்தவுடலுக்குச் சுபாவமேயல்லாம லுயிருக்குச்சுபாவமல்ல-எ-று. ✻ [விட்டென்றுசொன்னதினாலே என்றுங்குழந்தைப்பருவமாகவேயிராமல்விட்டு இளமையானயவ்வனபருவத்தைக்கூட்டி யப்படியேயானாலுமிராமல் அதையும்விட்டுமரணதிசையையடைந்து அப்படியுமிராமல் அதையும் விட்டுக் குழந்தைப்பருவத்தைககூடி இப்படிக்கொள்ளிவட்டம்போலச் சுழலுகையால் உடலுக்குப்பருவஞ்சுபாவம்போல மரணமுஞ்சுபாவமேயாகையால் உயிருக்கு ஒருகாலமும் நாசமில்லையென்பதுகருத்து

அன்னவகையாலுரு வழிந்துவருமங்கே
என்னதுருவாமறி விறந்துபிறவாதார்
பின்னதறியானுட லழிந்துபிரிபோதுந்
தன்னதெனவேதுமோர்சலிப்பதறியானன்.

[இ-ள்) அந்தந்தவகையினாலே அந்தவிடத்திலே தேகமழிந்துவரும் எனனுடையசொரூபமான ஆன்மாவழிந்துபிறவாது ஆதலாற்பின்பு அதையறிந்தவன் உடம்புஅழிந்து ஆன்மாவுடம்பைப்பிரிகிறபோதுங் கூடுகிறபோதும் எவ்வளவுந்தனதென்று சலியான்-எ-று. ✻ (தானான ஆன்மாவுக்கு ஒன்றுமில்லை உடம்பிற்கேமரணமும் பிறப்புமாகையால் அதுவந்தபோது நம்முடையதல்லவென்றிருப்பான் நம்முடையதென்று சலியானென்பதுகருத்து (௰௩)

இவ்வகையதாகிலழல் சீதமிடரின்பஞ்
செய்வகையிலாதவறிவு சேர்கருவதேனென்னில்
மெய்வகையினாலிவை விளைந்ததாமேய
வைவகையினால்புலமபொறியுமையா.

இ-ள், இப்படிச்சொன்னதைக்கேட்ட அருச்சுனன் சொல்லுவது இந்தப்படி சனனமரணம் ஆன்மாவுக்குஇல்லாவிட்டால்உஷ்ணம், சீதளம் துக்கம், சுகம், இவைகளைத் தன்னுடையதல்லவென்று செய்யும்படியில்லாமல் ஆன்மாவின்மேலேசேர்ந்து சுட்டதென்றும்குளிர்ந்ததென்றுமிங்கிலே சிந்துஞ்சந்தோஷிந்துஞ்செய்வதென்னவென்றுகேட்டதற்குஸ்ரீகிருஷ்ணசுவாமி வாக்கியம் அச்சுப்பேதந்தே கவிதங்களினாலிவைகளுண்டாக்கி வரவற்றதுக்கசுகந்தைப்பஞ்சிகாணபேதத்தினாலுண்டாக்கியபஞ்சதன்மாத்திரைகளாகியசத்த, பரிச, ரூப, ரச, கந்தமென்கிறஐந்துஞானேந்திரியமாகியமெய்வாய்கண், மூக்கு, செவி, யென்கிறஐந்துவுருவாய் அடைந்து அனுபவிப்பதல்லாமல் ஆன்மா, அனுபவிப்பதல்லவை-எ-று. ௰௪

கொச்சகக்கலிப்பா

சீதமழன்முதலவற்றின் செயல்கேட்கிலநித்தியமாய்ப்
போதலொடுவருவனவா யிருக்குமவைபொறுநீயு
மாதலிலென்பயனென்னிலவைபொறுத்தபெரியோரை
ஏதமவைநிலைகலக்கா தவன்வீடேய்துவனால்

இ-ள், சீதள, உஷ்ணமுதலானவைகளின்செயலைக்கேட்கில் அநித்தியமாய்ப்போகிறதும் வருகிறதுமாயிருக்கும் அவற்றைப்பெரியோர்கள் பொறுப்பார்கள்நீயும் பொறுத்தால் ஆகிறபிரயோசனமென்னவென்றால், அவைகளைசமமாகப்பொறுத்தபெரியோரைக்குற்றமான அந்தசீதள உஷ்ணமுதலானவைநிலையைக்கலக்கிவாதியாது அவர்மோக்ஷத்தையே அடைவார்நரகமடையார்-எ-று. ௰௫

மண்ணினாயவிகாரமுமம் மண்ணேயந்தமண்ணொழிந்து
பண்ணுவருமற்றில்லைப் பண்ணப்பட்டபலபொருள்க
ளென்னவருங்காலமுமதுமற்றிறந்தவிடத்துநிகழ்விடத்துங்
கண்ணினுடன்மண்ணொழியக் கண்டாருளரோகட்டுரையாய்

இ-ள், மண்ணினுண்டாகிய விகாரங்களான கடமுதலானவெல்லாம் அந்தமண்ணேயல்லாமல்வேறல்ல-அந்தமண்ணைவிட்டுமற்ற அப்பு தேயு வாயு ஆகாசங்களாலே கடமுதலானவைகளைப்பண்ணினபேருமில்லை-அப்படிப்பண்ணப்பட்டபலபொருள்கள் நினைப்பாலுண்டாகியவருங்காலத்திலும் போங்காலத்திலும்இப்போதுநடக்கிறகாலத்திலும்நினைத்து விசாரிக்கில் மண்ணைததவிரவேறு பூதங்களாகக்கண்டபெயருண்டோசொல்லுவாய்-எ-று. * கண்ணினுனென்றுபாடமாயிற் கண்ணினு

லேபார்க்கிலென்றுரைகொள்ளும்- அப்படியுரைசெய்தால்கண்டதுமெய்காணாதுபொய்யென்ற சாருவாகனமதாம் அதுகூடாது.) [௰௮)

கலிவிருத்தம்-

வையாரயினுழவாவதன்வகையேயதன்வகைகேள்
மெய்யானது நசியாதிதனுடன்வேறெனவிரவும்
பொய்யானதுநிகழாதிவை புலனாகியபொருளே
ஐயாவெனையறிவாரிவை யறியார்பிறரறியார்.

இ-ள்-கூர்மைபொருந்திய ஆயுதத்தினாலே பகையரசரான பூமியையுழுதுபிளக்கப்பட்ட அருச்சுனா அந்தந்தப்பூதங்களாலாகிறஇதங்கள் அதனதனாலேயாகிறதல்லாமல் ஒருபூதத்தின் தொழிலைவேறொருபூதஞ்செய்யமாட்டாது-அதனதன்விதத்தைக்கேள்சத்தியமானஆன்மாவானது அழியாதுஇந்த ஆன்மாவினுடனேவேறான ஆன்மாவென்றுகலக்கப்பட்டபொய்யானதேகமானது நித்தியமாகாது-இந்த அருத்தம்அறிவாலுண்டாக்கிய பொருளேயல்லாமல்வேறல்ல - ஐயா இந்த அர்த்தத்தைஎன்னையறிந்தபேரறிவார்கள்- அறியாதவர்கள் இதையறியமாட்டார்கள்-எ-று. ✻ (தெய்வத்தைகர்த்தாவென்றும், ஆன்மாவைகர்த்தாவென்றும் உடலைநான்மரவென்றும் வழங்கப்படுகையால் வேறெனவிரவுமென்றும்பாடினர்-பொய்யைத்தேகமென்றும்மெய்யைஆன்மாவென்றும் சொன்னதேதென்னில், இவ்விடத்திற்சொன்னதெல்லாம்உடலுயிரிரண்டின்செய்தியாகையாலும்உடல்மாயாசம்பந்தமாயிருக்கையாலும் உயிர்நித்தியஞானசம்பந்தமாயிருக்கையாலும்சொன்னது.) (௰௯)

யானும்வகையதுகேளெழு மொலியேமுதலியாவும்
வானாதியில்வருபூதமும் வருநாள்வருமிடா
யானெழுமறியானையு மறிகாரணமதுவாய்ப்
போனாளொடுவருநாள்வழிபுணராததோர்பொருளே.

இ-ள், நானிறவிதத்தைக்கேள்அருச்சுனா எழும்புகிறசத்தமுதலான அஞ்சும் ஆகாசாதிபூதங்களில்வரப்பட்ட மகாபூதங்களும் உண்டாகிறகாலம்வருமிடமாய் நீங்காமலெழும்பப்பட்ட அறியானையும்அறியப்பட்டகாரணமாய்ப் போகிறகாலத்துடனே வருகிறகாலத்தின் வழியைப்பொருந்தாதபொருளேநான்-எ-று. ✻ (மகாபூதமாவதுபஞ்சீகரணத்தில்ஒன்றோடொன்றுகலக்காமல்நிறை முதற்பாகபூதம் இந்தமகாபூதங்களுண்டாகிறகாலம்பிறக்கிறவிடமாய்அறியானையும் அறிவானையும் அறியப்பட்டகாரணமாய் திரிகாலத்தைச்சேராதபொருளேநானென்றது.]

அழியாதமெய்யஃதியாதெனில்விகாசத்தையுருவா
யொழியாநிறைவொடுநீடிய வெனதியானெனவுணரா
வழியாமதியல்பாலிது சிலமாறுகொள்குவதாய்
மொழிவார்செயன்முடியாமையின் முயலார்கெடவயலார்

இ-ள். அழியாதசத்தியமெதுவென்றுகேட்கில் விக்கிரமில்லாத அஃது விசாரத்தையுருவமாய் அணுவளவிடமாகிலும்விட்டொழியாமல்நிறைந்தபரிபூரணத்துடனே வளர்ந்ததுஎனதென்கிறசுத்தமும்நானென்கிறஆங்காரமும் அறியாதவழியானது அதுசுபாபத்தினாலேஇதுசிலவேறுபாடுகொள்கிறதாய்ச்சொல்லுவாருடையசொல்லுந்தொழின்முடியாததினாலேமுயற்சிபண்ணாராகினைக்கப்படாததாய்ச் சேடத்துக்கு அன்னியராயிருப்பது ஆன்மா-எ-று-* (சிலமாறுகொள்ளுவதாவது மாயையுடனேகூடியபோது தேகியாய்ச்சுதந்தரியாய் ஆங்காரியாய்நிற்பதுசருத்து; ௨௧

இல்லாமையினியல்கேளெழு சமுசாரியினடையே
யல்லாதெழுவினல்போலழி வுறவேயழிகுதலா
யெல்லாவகையினுமாயதில் வருவேயழிவதுதான்
கொல்லாதழிகொலையானது குறுகாததனெறிகேள்

இ-ள், இனிஎப்போதுமில்லாதது இருந்தும்உள்ளதுபோலக்காணுகிறதேகத்தினுடைய சுபாவத்தைக்கேள் அருச்சுன கோடையிலெழும்புகிறபேய்த்தேராகிய கானலினிடத்திலே நிச்சயமான சலமல்லாமற்பொய்யாகவெழும்பப்பட்ட சலத்தைப்போல அழிவுண்டாகஅழிகிறதினாலே பொருந்தாதவிதத்தினாலும்பொருந்தும் விதத்தினாலும்உண்டாகியஇந்ததேகமே யழிவதுஆன்மா அழிவதில்லைஅது அவிகாரியானதினாலே தான்கொல்லாது-தான்எல்லாவற்றிற்கு மன்னியமாகையால் அதைக்கொலையானதுசேராது அந்தஆன்மாவினுடைய சுபாவத்தைக் கேள்என்றவாறு-(கொலைசேராதென்பது அதையாராலுங்கொல்லப்படாதென்பது எல்லாவகையிலுமென்றஉம்மை எதிரதுதழுவியஉம்மையாகையால்ஒல்லும்வகையிலுமென்றெதிர்தழுவியது) [௨௨]

கொச்சகக்கலிப்பா-

ஊறுபடவொன்றிலே பிறத்தல்பிருந்துளகாதல்
வேறுபடவளர்த்தல்வளர்ந்தயலொன்றாய்விளைந்தமைதன்
மாறுபடத்தேய்கலற மாய்தலெனவருகின்ற
லாறியல்பமுடம்பன்றி யறிவடையாதனால்

இ-ள், தூலசரீரமுண்டாகவொன்றோடொன்று பரிசப்பட ஒன்றிலே பிறக்கிறதுபிறந்திருக்கிறது அந்தப்பருவம்வேறுபடவளருகிறதுவளராது அன்னியமானதொன்றாகவிளைந்து அமருகிறது இவையல்லாவற்றிற்

கு மாறுபட்டு இழந்தனமாய்க்குறைகிறது இந்த வைந்துந்தீரச்சகிறது எ
ன்றுவரப்பட்ட ஆறுசுபாவமும் உடம்பையல்லாமல் ஆன்மாவையடை-
யாவாம்-எ-று * (அறிவையான்மாவென்றது அசேதனமானதேகத்தை
நடத்துகையால் [௨௰]

கலிவிருத்தம்,

நில்லாவுடற்கேநின்றேயுநித்தமாகியதுநாசமில்லாததுபோய்ப் பி
றப்பிறப்பெனமறியாதது மறைநுவறிந்தோர் கொல்லார் கொலையேவலு
ஞ்செய்யார்கொலைமேலிடுகைக்குமறைகளெல்லாமவித்தத்தெறிவினை-
யேயியம்பிற்றென்றேயிதுதெளிநீ

இ-ள், நிலைமையாய்நில்லாமல்அழிகிறவுடலுக்கே ஆகாரமாகின்று
ம் அந்தவுடலைப்போல்அநித்தியமாகாமல் நித்தியமாகியதுஅழிவில்லா
ததுமெய்ப்பானபிறப்பிறப்பென்ற இரண்டுமொன்றுமறியாதது ஆன்மா
அதை அறிந்தவர்கள் சொல்லாமல் கொல்லுவிக்கிறதுஞ்செய்யார் நாலொ
ன்றொருசாஸ்திரமன்று வேதங்களெல்லாம் கொலையை மேலிட்டுக்குலாசார
தன்மத்தைச்சொல்லிற்றென்றுஇதைத்தெளிவாம்-எ-று *(ஆன்மாவை
நித்தியமாய் நாசமில்லாததாய் ஜெனனமரணமில்லாததாய் அறிந்தவர்க
ள் கொலைசெய்தாலுஞ்செய்வித்தாலும் செய்தும் செய்வித்ததுந்தமக்க
ல்ல-தேகத்துக்கென்று சாட்சியாய்ப்பார்ப்பார்களென்பதுகருத்து

இதுவுங்கலிவிருத்தம்,

பழியபோர்வையைப்பெயர்ந்தும்பின்னரோ
வேறியபோர்வையை விரும்புவானென
ஊறியவுடற்பிணி லுத்தவுண்மைதான்
மாறிப்போடரும்பினை மருவுமன்னனே

இ-ள் இருந்தபோர்வையைவிட்டுப் பின்பொருவேறு போர்வையை
ஆசைப்பட்டுப்போர்த்துக்கொள்ளுநவரைப் போலச்சிரமமுடையதூ
லமான வுடம்பிலேயிருந்தேசிக்கஆன்மா அந்தச்சிரமத்தூலதேகத்தைவி
ட்டுவேறொருதூலதேகத்தைக் கூடும்இராசாவே-எ-று, *[இதனு
ள்சொல்லியான ஆன்மாசிரமதேகத்தைவிட்டு நூதன தேகத்தைதரிப்பத
ல்லாமல் அத்தேகத்தைப்போலத்தேகி நாசப்படானென்பது* போர்த்து
மென்றதுபிரின்போர்வையைவெறுத்து விட்டுப்பின்பு வேறொருபோ
ர்வையை விரும்புமபோது முந்தின்போர்வையைப்போலச்சிலநாளிலே
கிழியுமென்றறிந்தும் இனிமேல்கிழிகிறபோர்வையை இப்போதுபுதிது
கெட்டியாயிருக்குமென்று போர்த்துக்கொள்வதுபோல அழிந்ததேகத்
தைவிட்டும் இனியொன்றையெடுத்தாலும் அழிவதுதானேயென்றுசும்
மாயிராமல் வேறொருதேகத்தைக்கூடுமென்றவுவமை ௨௧

### இருவுங்கலிவிருத்தம்,

உருப்பான்மைமற்றவனுக்கொருநாளுமின்மையாற்
செருக்கால்வெம்படைகாலங்கள்சேதிக்கமாட்டாள்
நெருப்பாய்வெந்தழியாதுநீராலினைக்கொழுகாது
மருத்தாலுஞ்சலியாதுமற்றதன்றனியல்கேசாய்.

இ-ள், தேகசுபாவம் அந்ததேகிககுஒருநாளுமில்லையாகையால் அந்ததேகியைச்சண்டையிடத்துக்கு உபகரணமான கொடுமையுள்ள ஆயுதங்கள் பிளக்கமாட்டாவாம் நெருப்பால்வெந்து அழியாதுதண்ணீரால் இளகியோடாதுகாற்றினாலுமசையாது இந்தவிர இலனம் அதினுடையசுபாவத்தைககேள்-எ-று *தேகத்துக்குச்சலவருத்தமுமுண்டென்பதுகருத்து-சுகத்துக்குச்சுபாவமானதுதேகம்தேகசுபாவமாகையால் அதற்குத்துக்கப்படத்தேவையில்லையென்றது, ஆயுதமாவது பிருதிவியினுடையகாரியமாகையால்காரியத்தையுடையசாதனமானமை ஆகப்பிருதிவிமுதல்நாலுபூதத்தாலும் அழியாதென்றது இவ்விடப் ஆன்மசொரூபம். ௨௬

### அறுசீரடியாசிரியவிருத்தம்,

எல்லாட்பொருட்கும்பழயதனை எங்குந்தானாயிருப்பதனை
நில்லாத்தன்மையில்லபனைநித்தியத்துவதனைநிலப்பேறனை
யல்லாப்புலன்கள்பதினாலுமறியாவறிவையறியாதே
இல்லாப்பொருள்போலழியுமெனவிரங்குகின்றதென்கண்டோ.

இ-ள், எல்லாப்பொருளுக்கும் பழையபொருளாவதை எங்குந்தானாயிருக்கின்றதைநிலையாய் அழிகிறசுபாவமில்லாததை இன்றபோவென்று மிருக்கின்றதைப் பெயர்ந்துபோகாமல்நிலையாயல் நின்றபேருடையதை இந்தகுணங்களையல்லாதபதினாலுகரணங்களுமறியாத அறிவானசைதன்னியத்தை இப்படிக்கொத்த ஆன்மாவையறியாமல்இல்லாபொருளைப்போலஅழியுமென்றிரங்குகிறதுஎன்னகண்டோம்-எ-று (பழையதொன்பது அநாதியங்குநதானுயென்பதுபூரணமானதன்மையில்லாதென்பது அழியாததுபதினாலுகரணமாவது-இந்திரியம்பத்துகரணம்நாலு ஆகபதினாலும் இல்லாப்பொருளென்பதுமாயாசம்பந்தமானதேகிபிரபஞ்சத்தை. ௨௭

### கலிவிருத்தம்.

விவரெனக்கொடுமெய்தளர்வர்மேல்
யாவர்பிறப்பவர்யாவர்களேனுஞ்
சாவர்பெயர்த்துமிவ்வாறுசனிப்பவர்
காவலிதற்குளதோகடனேகாண்.

இ-ள், இவர்கள்சாவார்களென்றெண்ணிக்கொண்டுநீசரீரந்தளர்ந்துவாடுகையால், ஆர்பிறப்பார்களோ அவர்களாணலுஞ்சாவார்கள் திருமபவுமப்படியேபிரப்பார்கள் இதைவாராமல்காக்கத்தக்ககாவலுண்டோ இல்லைஇதுவிதியேயல்லாமல் வேறில்லைகண்டாய்-எ-று. ௨௮

செரிந்தநெவ்வாரிவரென்றதுநேராய்
பிறிந்தவர்போமிடமும்பெரிதோரா
யறிந்துநீநடுவேசில்நாளே
எறிந்திடுவேலிவர்பாலிடரென்னே,

இ-ள், இவர்கள்திருஷ்டிகாலத்துக்குமுன்னேயெப்படியிருந்தார்களென்றதையறியாய்-இவர்களிந்ததேசத்தைப்பிறிந்துபோறவிடமும் வெகுவாய்விசாரித்தாலும் அறியாய் இவர்களைநீயறிந்துநடுவேசிலநாளேயல்லாமல் அனேகநாளில்லை எறியப்பட்டவாயுதத்தையுடைய அருச்சுனா இவர்களிடத்திலேயுனக்குத் துக்கமென்னபோசொல்வாய் எ-று, *(வேலையருச்சுனாவென்றதாகுபெயர்) ௨௮

## கொச்சகக்கலிப்பா.

ஒருவனென்றுங்கண்டறியாததைக்கண்டாற்போலுணர்ந்திருக்கும், ஒருவனென்றுங்கேட்டறியாததனைக்கேட்டான்போலுவக்கும், ஒருவனென்றுமுரைத்தறியாததனையுரைத்தான் போலுரைக்கும், ஒருவனென்றுங்கேட்டாலுமறியானிந்தவுண்மையினை.

இ-ள், இந்தஆன்மாவைஒருவனென்றுங்கண்டறியாததைக்கண்டறியாததைக்கண்டாற்போலப்பார்த்திருப்பன் ஒருவனென்றுங்கேட்டறியாததைக்கேட்டவனைப்போலச்சந்தோஷப்படுவான் ஒருவனென்றுஞ்சொல்லியறியாததைச்சொன்னவனைப்போலச்சொல்லுவான் ஒருவனென்றுங்கேட்டாலுங் கண்டாலுஞ் சொன்னாலுமறியான்-எ-று [கேட்டாறுமென்ற உம்மையார்கண்டாலுஞ்சொன்னாலும் அறியானென்றெதிரதுதழுவியது. ௩௰

இதனாலெவருமறியாதபொருளைத்தெரிந்துகொண்டுநீ
இதனாலவரையான்கொன்றெனென்பதொழிவாயின்னங்கேண்
மதனாலாயமறைமொழியுமன்னர்தருமம்வாளமரென்
பதனாலமரேதுடங்கிதனையறனன்றேநீயையுறேல்.

இ-ள், சகலதேசங்களிலுமிருக்கிறவனாய்எவர்களுமறியாத ஆன்மாவைநீதெரிந்துகொண்டு இவனாலேயிவர்களை நான் கொன்றேனென்று அகம்வகிக்கிறதைவிடுவாய்அருச்சுனா, இன்னதுங்கேள்சாஸ்திரமாகச்சொன்னவேதவாக்கியமும்அரசர்தருமம், கீர்த்திப்பிரகாசமுள்ளசண்டையென்றுசொல்லுகிறதினாலேசண்டையையேதொடங்கு இந்தச்சண்டையதருமமல்லவென்று நீசந்தேகப்படாதே-எ-று [௩௧]

கலிவிருத்தம்.

செய்தியின்றியதேவர்கள்வானுல
கெய்தநின்றதிருபெறுவார்கள்கேள்
வைதிகந்தருமாதவமேற்கொடு
மெய்திருத்தியவேந்தர்களல்லரோ,

(இ-ள்] தவந்தானமுதலானவருத்தஞ்செயலில்லாமல் அந்தத்தேவர்களுடையதேவலோகத்துக்குபபோகநின்றதுஇப்படிக்கொத்தசண்டையைப்பெறுவார்களைகேள் வேதவாக்கியஞ்சொல்லப்பட்டபெரியதவத்தை மேலாகக்கொண்டதிருத்தமானதேகங்களையுடைய அரசர்களல்லவோ-எ-று. [௩௨]

இன்றுகாளமர்தன்னிலெதிர்த்துநீ
பொன்றில்வானவர்போற்றவிண்காக்குவை
வென்றிசேரிவ்வேந்தரெலாந்தொழ
நின்றுஞாலமளிக்குவைநீயரோ

(இ-ள்) இப்போது இங்கக்கீர்த்திப்பிரகாசமுள்ள சண்டையிலெதிர்த்துநீசெத்தால்தேவர்கள் தோத்திரம்பண்ணத்தேவலோகத்தையாளுவாய்சாகாமற்செயமடைந்தால் இந்தராசாக்களெல்லாம்வணங்கிநிற்கபூலோகத்தையாளுவாய் எ று. (௩௩]

ஆவதானவமர்தொடங்காயெனிற்
போவதானபுகழ்ந்தகருமமும்
பாவமாம்பழியாமிப்பழியினிற்
சாவதானவேதலையல்லவோ,

(இ-ள்) இராஜதருமமானசண்டையைத் தொடங்காயென்னில்தருமமுங்கீர்த்தியும் போய்ப்பாவமும்பழியுமாகும் அந்தப்பழியிலும் சாவுதலைமையல்லவோ-எ.று ❋ [சாவுசிரேஷ்டமாகிப் பழிநாணங்கெடுக்கிறதாம் ஆகையால்சாவிலும்கெட்டது அபகீர்த்தியென்பது.] [௨௪)

அன்றியும்முனையஞ்சினனென்பரா
னின்றியங்குநிலத்து முன்னீசெய்த
வென்றியும்பழியாய்நிற்குமேலவை
யொன்றியம்பினின்னுங்கிதன்மேலுண்டோ

(இ-ள்) அல்லாமலும்உன்னைப்பயந்தானென்றுங்கொஞ்சமாகப்பேசுவார்கள் முன்னேபூமியிலே நீசெய்தநிலைமையாக நின்றுவிளங்கப்பட்டகெவற்றீலும்பழியாக எக்காலமும்நிற்கும் மகாரதக் காரருன்னையொன்றுசொன்னால்அதற்குமேலானபொல்லாங்குவேறேயுண்டோ-எ-று❋

(மேல்வரைப்பெரியோரென்றுசொன்னால் ஏற்றக்குறைச்சலில்லாதவர்களைப் பெரியோரென்றுஉலகஞ் சொல்லுகையாம் இந்தக்கவியிலேபயபடப் பண்ணுகிறவனைப் பயந்தவனென்றுஞ்சண்டைபண்ணிச்செயித்தவெற்றியைவஞ்சனைபண்ணிச்செயித்தாயென்றுஞ் சொன்னதினாலுமிப்படிச்சொல்லுகிறவர்களைப் பெரியோர்களென்றுசொல்லக்கூடாததினாலும் அதிரதர், சமரதர், அர்த்தரதரெனச்சொல்லக்கூடாததினாலுமமகாரதரென்றுசொல்லப்பட்டது, (௫௫)

துற்றவின்பமுந் துன்பமுந்தோல்வியும்
வெற்றியும்பிழிவும்மிகுபேறுமென்
றுற்றவின்னவரொருத்தமனத்தனாய்
கொற்றவெஞ்சமர் செய்குற்றமில்லையால்

(இ-ள்-) நெருங்கினசுகத்துக்கமும் அபசெயமும்,நஷ்டமும்,மிகுந்தலாபமுமென்றுவந்த இவைகளுக்குச்சமமான மனதுடையவனாய் வெற்றியும உக்கிரமுடைய சண்டையைச்செய் இப்படியானாற்குற்றமில்லை எ-று, *குற்றமாவதுபாவம் ௨௬

கலி-விருத்தம்,

கருவியபொருளைஞானக்கறையருமுமையமில
பொதுவறுவகைநீயும்புலனத்தகையானார்
யொதுவொருவினையாலே யிருவினைகளும்விடு
மதுகனையறியாவிடணைபவமதுகேளாய்

(இ-ள்) இப்படியுறுதியாகபிடிக்கப்பட்ட பொருளானது ஞானம்நிறதஞானத்தைக்கறையற்ற வசனத்தினாலே யெல்லாருக்கும்பொதுவென்றதில்லாமல் அறும்படிக்குநீயும்ஐம்புலன்களாலும்,அறியும்படியானால் எந்தக்காலமானதுஒருகாமத்தினாலேநல்வினைதீவினையானஇரண்டும்அறியுமோ அந்தக்கர்மத்தை அறிகிறவர்களே மோட்சத்தையடைவார்கள் அந்தக்கர்மத்தை யினிச்சொல்லுகிறோம் கேட்பாயாக எ-று,* ஒருகர்மத்தினாலென்றதாவது அநேககர்மமென்றுபயப்படாமல்ஒருகர்மமத்தினாலேயிரண்டுகர்மங்களும் கெடச்சொல்லுகிறோம் கேளென்றது

அரிதினொருடியேனுஞ்செயினுமதழிலாகா
திரிதரவிடையூறுமவகைகளுமிடைகூடா
தெரிபொருள்சிறிதேனும்பெறுபயற்றுமானா
லுரியதிவ்வுலகோர்பாலிதுவலதுளதோதான்

(இ-ள) அந்தக்கர்மத்தை நாலுபாதமாகப்பிரித்து அதிலதில்அரிதாக ஒருபாதமசெய்தாலும்அதுநாசமாகாது இடைவிட்டோ-

த்தக்கஇடைபூருனவிதங்களும்நடுவேவந்துகூடாது இப்படிபலனையி ச்சிய தகர்மமென்றுதெரியபபட்டபொருள்கொஞ்சமானாலும்பெரியம யக்கத்தைக்கெடுக்குமானால் அதுவேயரிது இந்தவுலகத்தாரிடத்திலே இது அல்லாமல்வேறுண்டோ இல்லை-எ-று *(காமியகருமங்கள் அனே பாதகமுமறுப்பது பலனிச்சியாதேகருமமொருபாதகம் அதுவொருபா தகமானாலும் அந்தப்பாதகத்தையேசெய்யென்பது கருத்து. ௧௮

தெளியவருணர்வொன்றே தெளிவிலருணர்வோஇர்
றளிர்கிளைபலவாகுந் தருபயனதுமேவு
மொளிமறைநெறிமேலாயுணர்பொருளெனவோது
மளியவர்தெளியாதாலவையலதறியாரால்.

இ-ள், பலனை ஆசைப்படாமல்மோக்ஷத்தில்இச்சையுண்டாய்க்கரும ஞ்செய்யத்தெளிவுடையவர்களுக்கு அறிவொன்றேயல்லாமல்அனேக மாயிராதுகாமியகருமங்களையேசெய்கிறதெளிவில்லாதவர்களுடையஅ றிவைச்சொல்லில்நிச்சயமில்லாததளிரைப்போல அனேகமாகுங்கரும த்தினாலேவரப்பட்டபிரயோசனத்தைச்சொல்லியிருக்கப்பட்டபிரகாச முள்ளவேதமார்க்கத்தையே மேலாயறியப்பட்டபொருளென்றுவாது பேசப்பட்டஅளியவர்களேமயக்கந்தெளியாதவர்கள் அந்தஅளியவர்க ள் அந்தக்காமியகருமத்தையல்லாமல் மோக்ஷத்தையறியார்கள்-எ-று அளியவர்களாவதுபிறரால்அளிக்கத்தக்கார்தனக்கெனவோருறுபயறிவி ல்லாதாரென்பது அதாவது கருமமேயல்லாமல்வேறில்லையென்றுதிட மாகப்பேசுதல்.] ௧௯

புண்ணியவுலகத்தைப் பொருண்முடியில்வைப்பார்
கண்ணியபிறவிக்கேகருத்தழிநெறிநிற்பார்
பண்ணியவினைகட்கேபயனினையவர்கட்பா
னுண்ணியபொருள்செப்பார் நுணுகியவறிவுந்றோர்

இ-ள், பலனையிச்சித்துயாகாதிகருமங்களைப்பண்ணினவர்கள் புண் ணியலோகமான சொற்கத்திலே பிரயோசனமுடிவைவைத்துப்போக ங்களை அனுபவிப்பார் அறிவையுடையவர்கள் போல்லாதென்றுநினைத் துப்பிறவியினாலேகெற்பவழியிலேபிறந்து அந்தக்காமியகருமங்களையே செய்து சொற்கபூமியிரண்டுக்கும்போக்குவரத்தாய் ஆத்மஞானங்கேட் டுநிற்பார் பண்ணப்பட்டகருமங்களுக்குள்ளபலனைநினைக்கிறவர்களிட த்திலே நுண்மையானபொருளைச்சொல்லார்கள் நுண்மையான அறிவு பெற்றது பெரியோர்கள்-எ-று *(நுண்மையாவதுசூட்சுமம் ௨௰

தவைதருகுணமுப்பானணுகியபலனுய்த்தார்
சுவைதெரிகுணவைப்பார்த்தொழின்மறைநெறியுந்றே

கவ்வைதருகுணமூன்றோர் கருமமுதிடனுற்றோர்
அவைகெடவருமெய்ப்பாலறிவினையெனநிற்பார்.

இ-ள், ஆன்றற்காமியகருமங்களை வேதத்திலேசொல்லுகிறதேயென்றால்கேள்குற்றத்தைக்கொடுக்கப்பட்டகுணங்கள்மூன்றினிடத்திலேபலனைவைத்துநிறைந்தபலவிஷயத்தில் சுவையைத்தெரியப்பட்டமுக்குணங்களிலேவைப்பாகவிருந்த கருமங்களைவேதத்திலே சொன்னமார்க்கத்துடனேசேர்த்து மூன்றுகப்பாகத்தரப்பட்டமூன்றுகுணத்தையுமடைந்தவர்களேபலனையிச்சித்த கருமத்தினிடத்திலேகூடினவர்கள் அந்தமூன்றுகுணங்களுங் கெடவிட்டுக்குணாதீதமாகிய அரியஆத்மாவினிடத்தில் ஞானியென்றுதிடமாகநிற்பார்-எ-று, ௪௧

குளமுதலியவற்றே குளிர்முதலியதுய்ப்பா
னளவறுபுனல்பெற்றா லவைகொளவருமங்ஙே
வளமுறுகருமத்தால்வருசிறுசுவையறறா
லுளமகிழ்பிரமத்தேயுட்கொளலுரிமைத்தால்

இ-ள், ஆனால்வேதஞ்சொன்ன,கருமங்களைவிடலாமோ வென்றால்குளிர்ச்சிமுதலாகியனவேண்டியதாகமானவன் குளமுதலானவற்றிலே அளவற்றதண்ணீரைப்பெற்றால் அவற்றில்தனக்குவேண்டியதண்ணீரையெடுத்துக்கொள்ளுகிறது அருமையோ அல்லவே அதுபோலவுள்ளமையானகருமத்தினாலேவருகிற அற்பவிஷயத்தை இச்சியாவிட்டால்இருதயமகிழப்பட்டபிரமத்திலே யுள்ளதைக்கொள்ளுகிறதரிதாம் -எ-று* ¦வேதங்களிற்சொன்னஅனேகத்தில் அறிவுள்ளவன்மோட்சத்துக்கு அதிகாரியென்பதுகருத்து ௪௨

அறிவினையறிகும்பா யகிலமுமடைகுற்றே
பிறிபொழுதினிலொற்றே பெருவினைதனினிற்பாய்
செறிதருமறிவெட்டா வகைவினைதனினிற்பார்
சிறியவரெனமிக்கோர் தெளிபவர்செயலைக்கேள்

இ-ள், விவேகியான நீ அறியத்தக்க கருமத்தையறிவாய், தருக்கினால் வருகிறபலன் சகலமுங்கிடைத்தபோதும் பிரிந்தபோதுஞ்சமானவர்கள் இவர்களால்என்னையறியக்கூடாது என்னைப்பெரியோர்கள்தெளிந்தறிபவர்கள் அவர்கள்செய்கிறகருமத்தைக்கேள்-எ-று. *[பெருவினையாவது-பலனையிச்சியாதகருமம்.] ௪௩

தருபயனதுவிட்டே தகுவினைசெயலுற்றா
லருமயலருமற்றா லறிவுறுமறிவுற்றா
லிருவினைவிடும்விட்டா லிழிவொடுபெறுதற்பா
லொருமனக்கருமத்தா லெனையுணருளாகிற்பார்.

(இ-ள்) கொடுப்பட்ட பிரயோசனத்தைநிச்சயமாகவிட்டு அவரவ
ருக்குத்தக்ககாரியத்தைச்செய்தால் வேறொன்றாலு மாறாதமயக்கமறு
ம் மயக்கமற்றால் அறிவுண்டாகும்அறிவுண்டாகில் நல்வினைதீவினையா
னஇரண்டுகருமம்விடும்இந்தஇரண்டுவிட்டால் இழக்கிறதுடனேபெ
றுகிறதுமானநஷ்டம் வந்தவிடத்திலும்ஆதாயம்வந்தவிடத்திலுமொரு
னதாகவநும், அந்தமனதினாலேஎன்னையறிவார்கள்அறிவுடையவர்கள்
எ-று. ※ [பலனையிச்சித்தால்மயக்கம்விடாது - விடாவிட்டால்ஞானம்
பிறவாதுபிறவாவிட்டாற்புண்ணியபாவம்விடாது - விடாவிட்டால்இ
லாபநஷ்டத்திலேமனது ஒருமைப்படாதுபடாவிட்டால்என்னையறிய
மாட்டானென்பது அருத்தாபத்திஒருமனமாவது இலாபம்வந்தபோது
சந்தோஷமில்லாமலும்நஷ்டம்வந்தபோது துக்கமில்லாமலும்இந்தஇ
ரண்டும் பிராரத்துவமென்றிருத்தல். தகுவினையாவது குலத்தருமம்த
காவினையவது பரகருமம்கருபயனது விட்டேதகுவினைசெயலுற்றாலெ
ன்றது பிரயோசனத்தையிச்சியாதவன்தகாவினையுஞ் செய்யலாமென்
றெண்ணாமல் தகுவினையேசெய்யவேண்டுமென்பதுகருத்து. சச

பேதமையடைகுற்றேபிறிதுறுமனமற்றே
பேதமிறெளிவுற்றானியாதொருபொழுதப்போ
தோதலொடுகேத்தேயனைகளினுள்ம்விட்டா
ஞதவிலெலனைமெய்ப்பாட்டைகருநெறியைக்கேள்

[இ-ள்] அறியாமையையடைந்துமோட்சத்துக்குவேறானசொற்காதி
பதங்களை இச்சித்திருக்கப்பட்டமனதானது அந்தஅறியாமையைநீக்கி
ச்சொற்காதிபதங்கள் அநித்தியமும்துக்கமுமென்று குற்றமில்லாததெ
ளிவையடைந்தான் அதுஎப்பொழுதோ அப்பொழுதேஉலகத்திலே
சொல்லுடனே விஷைகளிலேமனத்தையீரத்தாமல்விட்டான்ஆகையா
லேயென்னைமெய்யாக அடைகிறமார்க்கத்தைச் சொல்லக்கேள்-எ று
அறியாமையாவதுமயக்கம்மனத்தில்தெளிவாவதுசொற்காதிபதங்களை
நித்தியமென்றுஞ் சுகமென்றுந்தடுமாறிமயங்காமல்அநித்தியமென்று
ந் துக்கமென்றும் நிச்சயம்பிறந்ததுக்குமெய்ஞ்ஞானமென்றுந்திடஞா
னமென்றுந் தெளிவென்றும்பேராசையாற்குற்றமில்லாததெளிவென்
றான் இந்தத்தெளிவுபிறந்தபோதே நூல்களிலும் அதினுரைகளிலும்
போகவிட்டானென்பதுகருத்து] சடு

விடலருஞ்வசையீதால்வினைபயனதுவிட்டே.
கடவியவினைமுட்டாவகைசெய்துசழிவுற்றோ

ருடனொடிவ்வுலகத்தேயுளனெனநிகழ்பெற்றே
இடர்களையறவிட்டானென்னையறிவகைபெற்றார்

[இ-ள்] விசித்திரமான இந்தவகையினாலே விளையப்பட்டபிரயோசனங்களைவிட்டே நடக்கப்பட்டகாரியங்களைத் தடைபடாதபடிசெய்து கழிந்தபேர்கள் இந்தவுலகத்திலே இப்போதிருக்கிறார்போல எப்போதுந்தேகத்துடனே யிருக்கிறாரென்னப்பட்டபேரும்பெறறே துன்பங்களையறத்தக்கதாகவிட்டபேர் என்னையறியப்பட்டவகையைப்பெற்றார்-எ-று. [கடவியவினையாவது தெய்வச்செயலாலேநடத்தப்பட்டகாரியம் விளைபயனாவது உண்டாகிறபிரயோசனம் விடலாகும் வகையாவது அபிமானத்தை நம்பிப்பிரயத்தியட்சத்தைவிட அரிதாகையால்விடலரிதென்ற

கொச்சகக்கலிப்பா.

தலைநின்றபொருளினிற்சந்தேகமின்றிச்சலியாதே
நிலைநின்றதியாதொருபோதப்போதுநெறிநின்றாய்
கலைநின்றமெய்ஞ்ஞான யோகங்கணுறுமென்னச்
சிலைநின்றதோள்விஜய னிவ்வவண்ணஞ்செப்பினான்

(இ-ள்) எல்லாவற்றிற்குந் தலைமையாகநின்றபொருளிலே சந்தேகமில்லாமற் சலியாமல் நிலையாகநின்றதெப்போதே அப்போதுமோட்சமார்க்கத்திலேநின்றாய் அதினாலே சாத்திரங்களிலே அசையாமல்நின்றமெய்ஞ்ஞானயோகம் காணப்படுமென்று கிருஷ்ணசுவாமிசொல்லவில்லு நிறகப்பட்ட கையையுடைய அருச்சுனன் இந்தப்படிசொன்னான்-எ-று (கலைநின்றஞானமாவது, வாசகஞானத்தை நம்பாமல்மயக்குகையிலந்தமயக்கந்தீரவும்நம்பவும், திடம்பிறக்கவும்வேத முதலானதுகளிலேசொல்லாநின்றஞானத்திடம்பிறக்கவும்வேதமுதலானதுகளிலேசொல்லாநின்றஞானத்தைக்காட்டுகையாம். ௪௭

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

இல்வகையவனைநின்றே ரெவ்வகையுரைப்பரந்தச்
செவ்வகையிலாதோன்செய்யுஞ் செயல்களென்செப்புமாறென்
மெய்வகையதனுக்கென்னவிவ்வினையேமுதலாக்கொண்ட
வைவகைப்பொருளுமீன்றவவனிதையருளிச்செய்தான்

[இ-ள்] இந்தப்படிபிரம்மமேநித்தியமென்றுசலியாமல்நின்று அடுத்தகாரியங்களைச்செய்து அடுக்காத காரியத்துக்கு முயற்சியல்லாமலிருக்கிறசமாதியறிவுடையன் அவனேதவிர நின்றபேர்கள்யெப்படிச்சொல்லுவார்கள் அந்தச்செய்யும்வகையென்றுமில்லாதவன்செய்யப்பட்டசெயல்களென்னபேசுகிற வழியென்ன இவைகளை மெய்யானவகையாக

அருளிச்செய்யுமென்ன ஆகாயத்தையேமுதலாத எண்ம்வைத்துக்கொண்டஐந்துவகைபூதங்களையும்உண்டாக்கின அந்தச்சுவாமி இதையருளிச்செய்வார். எ-று-*[ பிருதுவிமுதலாகிகழகஇனுலும்சோத்திராதி.சத்தாதி,வாக்காதி,வசனுதிமுதலானதத்துவ உற்பத்தியுஞ்செயலுமஒழுக்கமும்சொல்லும்போது ஆகாயமுகதலாய்வைத்துக்கொண்ட தினுலே தேற்றேகாரம்வருவித்தார் ௨அ

அறிவினையழகிதாகவறிந்தெலாவரவநீக்கி
வெறிசுருவெகுளிகாமமயக்கநீத இன்ப துன்பம்
வரிதெழுபொழுதில்லாமகிழ்ச்சியென்றிவையுமாய்த்தே
பொரிதருபுகழுந்தீங்கும் போற்றல்போற்றாமைபோக்கி

இ-ள் ஆத்மஞானத்தைநன்றாகவறிந்து அந்த மனதுக்குப்புத்தியிந்திரியங்களாலும்வருகிற வெல்லா ஆசைகளையும்போக்கி மோதப்பட்ட கோபம் ஆசைமயககம் இந்தமூன்றையும்விட்டு விருதாவாகச்சுகதுக்கங்களெழும்புகிறபோது சந்தோஷமுங்கிலேசமுமென்ற இந்தவிரண்டையுங்கெடுத்து உலகத்திலெழுதி நிறுத்தினகீர்த்தியைப் பரிபாலித்தலும் அபகீர்த்தியைப்பரிபாலியாததும்போக்கி-எ-று, ௨௯

ஆமைதன்னுறுப்போனாங்குந்தன்னுளேயடக்குமாபோற்
றீமைசெய்புலன்களைந்துந்தன்னுளேசெறியச்சேர்த்தி
வாய்மையினிகழுமன்னேனழுக்கவும்படுகின்றாராற்
றாய்மைசெய்தவையத்தானுய்ச்சொல்லுவதவன்நன்சொல்லே

இ-ள், ஆமையானதுதன்னுடையவுறுப்பானநாலுகாலும் ஒருதலையும் ஆகிய ஐந்தையுந்தனக்குள்ளே யடக்குகிறவழியைப்போலப் பொல்லாங்கு செய்யப்பட்ட ஐந்துபுலன்களையுந்தன்னுள்ளேயடங்கிச்சேர்த்து வாக்கினுலேநிந்திக்கிறதும்வாழ்த்துகிறதுஞ்செயகிறவர்களாலேஇரண்டையுஞ்சமனுக்கி யப்போதே மனதைச் சுத்தஞ்செய்து அந்தமனதேதானுய்ச்சொல்லுகிறதாஅவனுடையசொல்லென்றவாறு, ௩௰

குறையுமாற்பணியற்றாலுங் கொண்டவிப்புலன்களெண்ணி
லறைகடலனையநெஞ்சத்தவாவறுவரிவினில்லா
மறையொழிபலவுமோதியடக்குவான்மனத்தைவாங்கிப்
பொறைகெடப்புலன்களைந்தும் பொறியிலே போக்குங்கண்டாம்

இ-ள், இப்படியடக்கிங்கொண்ட இந்த ஐந்துபுலன்கள் செயலற்றாலும் ஆத்மஞானங்குறைவுமாகில் அளவில்லாத அலைகளாலேசத்தமுள்ள கடலையொப்பானமனதிலே ஆசையறாது ஆத்மஞானத்தில்நில்லாமல்வேதவாக்கியங்களை அனேகமும் ஓதியடக்குகிறவனுடையமனதை ஐந்துபுலன் களும் வாங்கிப் பொறுமை கெடத்தக்கதாக ஐந்துபொறிகளிலும் போகவிட்டுக் கெடுக்குங்கண்டாய்அருச்சுனு-எ-று* ஆத்மஞானமவை

னுமாகில் ஆசைவிடுமென்றும் ஆத்மவரனத்தில் நின்றவனுடையமன தைவிடயங்களாலாகியபுலன்கள்கெடாதென்று அப்போதும் இந்திரியங் கள் செயலற்றுச்செடமாமென்றும் அருத்தாபத்தி இந்திரியங்களுடை யசெயலானதுவிஷயங்கள் ஆசையறியலாவது அனுபவியாது விடுதல் ஆகையால் ஆத்மஞானமில்லாமல் இந்திரியங்களை அடக்கிவிஷயங்களை யனுபவியாமல்விட்டாலும் ஆசைவிடாதென்பது ஆத்மஞானத்திலிரு ல்லாமல் வேதவாக்கியங்களினுலடக்குகிறவனுடையமனதைவிஷயங்க ளிந்திரியங்களிலேபோகிக்கவெடுக்கு மெனவேமோக்ஷத்திலேசெலுத் தாதென்பதுங்குறிப்பு] ௬௧

ஆதலாற்புலன்களைந்துமடக்கறிதடங்காவாகிற்
றீதலாகளுக்குந்தீதாலவற்றிலேசெல்லுஞ்சென்றாற்
காதலாற்புகைந்துவெய்யகாமமாக் கொளுமக்காம
மேதிலாகமத்தியாவெகுளியாயெரியுமன்றே

இ-ள், ஆத்மஞானமில்லாதவனுடைய மனதைவிஷயங்களிந்திரியகளி ந்திரியங்களிலேசெலுத்தும் ஆகையாலே ஐம்புலன்களையும்அடக்குவ து அரிது அது அடங்காதாகிற் பொல்லாதல்லாதநல்லமனதும்பொல்லா தாய் அந்தப்பொல்லாங்கிலேபோம் போனால்விஷயயிச்சையினலேஅ ந்தமனது புகைந்துவிருப்பத்தையுடைய காமமாகக்கொள்ளும் அந்தக் காமமனதிற்கு அன்னியமாகாமலொன்றாகியபொல்லாதகோபமாகியெ ரியும்-எ-று ✻விடயங்களடங்காவிடில்மனதுபுகைந்துகொளுத்தியெரியு மென்பது மனதுஞானத்தைக்கூடிற்றேறு அதுபோலே நடக்கையாலு ம் ஞானத்தைக்கூடிமோட்சத்தைப்பெறச்செய்வதுமாகையால்நல்லம னதென்றார் ௬௨

ரிகர்வெகுளிபொங்கமயக்கம்வந்தெய்துமெய்தத்
தெரிவைகையுமுள்ளதெரிந்தவைகைந்தபோதே
யுரியமெய்புணர்வுமாயுமுணர்வுமாயுந்தொழிந்தவாறே
யறியவென்றறிஞர்பேசமனைத்துமாய்ந்தொழியுமன்றே

இ-ள், இப்படிநெருப்பையொப்பான கோபங்கொத்தெழும்ப அப் போதுஅஞ்ஞானமுண்டாம் இஞ்ஞானமுண்டாகவே அப்போதே ஆ த்மஞானத்தைத்தெரிகிறபுத்தியழியுமனது தெரிந்தபுத்தியழிந்தபோ தே யுரித்தானசத்தியஞானம்நாசமாம்தெளிந்தஞானம் நாசமாய்ப்போ னவுடனே பெரியவாகள் அரிதென்றுசொல்லப்பட்ட சகலமும்நாசமா ய்ப்போம்-எ-று. ௬௩

வேண்டல்வேண்டாமையின்றிமிகைசெல்லாப்புலன்களாலே
மாண்டபோகங்கடுப்பான்மனங்கலங்குறுன்மற்றத்தா
லீண்டியதெளிவுண்டாமற்றெளியவேயெல்லையின்றிப்
பூண்டநோய்நீங்குநீங்கிற்புலனலாப்பொருளுந்தோன்றும்

இ-ள், கண் தன்வழியே போகாமலடக்கின விஷயங்களாலே மகிமையுள்ள போகங்களை விருப்புவெறுப்பு இல்லாமல் அநுபவிக்கிறவன்மனதுகலக்கமடையான் அந்தக்கலங்காதமனதினாலே நெருங்கியதெளிவுண்டாம் தெளியவே பிரமாணமில்லாமற்பூண்ட பிறவிமுதலானவியாதிநீங்கும் நீங்கினால்விடையங்களை யெல்லாமென்றிருந்ததினாலே அந்தவிடையங்களல்லாத பரமாத்மாவும் பிரசன்னமாம். ௬௪

அடுத்ததன்தொழில்செய்யாதார்க்கறிவில்லையறிவின்றாக
விடுத்தமெய்யுண வின்றாமல்மெய்யுணர்வில்லையாகத்
தொடுத்தபின்சிந்தகாந்திதோன்றிடாததுதோன்றாதே
லெடுத்தநல்லின்பமென்றுமில்லையேயிசைக்கவேண்டாம்

இ-ள், பிரசன்னமாகவே அடுத்த பரமாத்மாவினுடைய தொழிலான ஞானயோகத்தைச்செய்யாதவர்களுக்கு ஞானமில்லை ஞானமில்லையாகவே சகலமுமித்தையென்றுபெரியோர்களைகைவிட்டமெஞ்ஞானமில்லையாம்மெஞ்ஞானமில்லையாகவேயோகசூத்ரேதுவாகத் தொடுத்தஇனிதானசித்த சாந்திதோன்றாது அதுதோன்றாதாகில் மேலாகவெடுத்தமோட்சசுகமென்னைக்குமில்லை உண்டென்றுசொல்லவேண்டாம்-எ-று.* ௬௬
மித்தையாவதுபொய்

ஆறுசொல்பொருள்கடுக்குமைம்புலன்களுக்கும்பின்னே
காறொடர்நெஞ்சையந்தப்புலன்களேகலக்குமாறே
நாறுசெய்கடலுளோடங்கலத்தினையுடன்செல்காற்றே
வேறுசெயகரைக்குமாய்த்துவிழ்க்குமாபோலவேயாம்

இ-ள், வழியாகப்போகப்பட்ட போகங்களை யநுபவிக்கப்பட்டவிடயங்களைநுக்கும்பிரவேசகாலந்தொடரப்பட்ட மனதைஅறிந்ததுன்பண்ணச்செய்யப்பட்ட விடயங்கள்தானே கலங்குகிறவழியைக்கேள்அருச்சுனா கடலினிடத்தோடுகின்றமரக்கலத்தை அந்தமரக்கலத்துடனேகூடப்போகின்றகாற்றுத்தானேமோதி வேறுபடுத்தி அழித்துவிழப்பண்ணுகிறதுபோலவேயாகும்-எ-று. * [இதனால்விடையங்களினபிறகேதொடருகிறமனதை அந்தவிடையங்களே தெளிவைக்கலக்கி ஆத்மஞானமில்லாமல் மயங்கப்பண்ணுகிறது எப்படிப்போலவென்னில் கடலிலோடுகிற மரக்கலத்தைக்கூடப்போகிறகாற்றே கெடுத்ததுபோலவாமென்பது ஆத்மஞானத்துக்கு உவமைகடல் அதிலேநடக்கிறமனதுக்குவமைமரக்கலம் ஆசைகெடுக்கிற விடையங்களுக்கு உவமைகாற்றுஆகையால்விடையங்களின்பிறகேதொடராமல்ஆத்மஞானத்தைத்தொடரவேண்டுமென்பதுகுறிப்பு.] ௬௭

யாதொருபொருளெல்லாவுயிர்களுமிருள்போற்காணு
வோதருஞானியத்தையுளங்கையிற்கனிபோற்காணும்

யாதொருபொருளையெல்லாவுயிர்களுமெங்குங்காணும்
காதலில்யோகியத்தைக்கண்ணினாற்றெரியக்காணான்

(இ-ள் எல்லாச்சீவன்களும்யாதொருபொருளையிருள்போலவெங்குங்
காணுவோ அந்தப்பொருளைச்சொல்லவரிதானஞானி உள்ளங்கையிலி
ருக்கிறநெல்லிப்பழத்தைப்போலக்காண்பான் எல்லாச்சீவன்களும் யா
தொருபொருளை எங்குங்காண்பனவோ அந்தப்பொருளை ஆசையில்லா
தயோகிகண்ணினாலே தெரியக்காணான்-எ-று. * தேகிகாணுபபொரு
ள் ஆத்மா தேசிகாணும்பொருள்விஷயங்கள் ஆகையால்ஆத்மாவை
ஞானிகாண்பான்விஷயத்தையோகிகாணானென்பது குறிப்பு.) ௫௭

நீரினானிறைந்துநின்றகடலிலேநெறிமேற்கொண்டு
நீரினானிறைந்தவாறு விழுமதுநெறிவுறாது
தேரினலதுபோலாசைசெறிந்தவர்திறமேநோக்கிச்
சாருமாலாகிலத்தையவர்களுஞ்சலித்தல்செய்வார்

(இ-ள்) சலத்தினாலேநிறைந்துநின்ற சமுத்திரத்திலே சலத்தினாலே
நிறைந்த ஆறானதுஓடுகிறவழியைமேற்கொண்டுவழிஅந்த ஆற்றுச்சல
த்தினுடையவழியைய அந்தக்கடல்சேராது எப்போதுமுள்ளபடியேயி
ருக்கும் அதுபோலநாம்விசாரிக்கில் ஆசையானதுசித்தசாந்தியானகுண
முடையவர்களிடத்தைக் குறித்துச்சேருமாகில அந்தஆசையையவர்
களுஞ்சலித்தல்செய்வார்கள்-எ-று. * [இதனால்கடலிலேதனையாற்று
ச் சலங்கூடினாலும்கடலானது அதிக்குறைச்சலும் ஆற்றுச்சலத்தினு
டைய குணமில்லாமல் தன்சுபாவப்படியேயிருக்கிறதுபோலச் சகலஆ
சைகளும்வந்தாலும்அதிலேபற்றில்லாதவர்கள சலனப்பட்டார்களென்
பது கருத்து இச்சையுள்ளவனுக்குச்சாந்தமில்லையென்றதருத்தாபத்தி

யானெனதென்பதின்றியெவ்வகைபொருளுமிட்டான்
றானெனசசரிக்கின்றான்யாரவனேயேயடையுஞ்சாந்தி
ஈனமதடையாதித்தையடைந்தவரிறக்கும்போதின்
ஞானமேயடைவாரென்னை நண்ணுவார்பிறவிநண்ணார்

[இ-ள்] நானென்கிற அகங்காரமும்என்னுடையதென்கிற சுதந்திர
முமில்லாமல்எந்தவிதப்பொருள்களையும்விட்டவன்சகலபொருள்களுந்
தானேயென்றுஞ்சஞ்சரிக்கிறவனெவனோஅவனேயேசாந்தியடையவும்
அஞ்ஞானமடையாது இந்தச்சாந்தியையடைந்தவர்கள் மரணமாகிற
போது ஞானத்தைச்சேர்ந்துபிறகு என்னைச்சேருவார்கள்-எ-று.*ஞா
னமேயென்றதேற்றேகாரத்தினாலேசாந்தியானபிரமத்தினுடையபத்தி
னைபிசமானஅப்பியாசம்பண்ணினவன்ஞானத்தைப்பெற்றுமோட்சத்
தையடைவானென்பது கருத்து.] ௬௫

கலிவிருத்தம்

பின்னையோவிவ்வுலகமெல்லாம்பெற்ற
வன்னையோதிருமார்பத்தணைத்தவன்
முன்னையோர்புகழ்வேதமுடிவையோ
தன்னையோவுள்ளவாறெலாஞ்சாற்றினர்.

இ-ள்,மகாலட்சுமியோஉலகமெல்லாம்பெற்றதாயோ அவளைத்திருமார்பிலேயணைத்த கிருஷ்ணசுவாமிபெரியோர்கள் புகழப்பட்டவேதாந்தத்தையோ தன்னையோ அந்தப்பிரமத்தையுள்ளபடியெல்லாஞ்சொன்னாரென்றவாறு ௬௰

௨-வது.சாங்கியயோக அத்தியாயம்-முற்றுப்பெற்றது,

ஆக அத்தியாம்-௨-க்குக்-கூடியசெய்யுள்-௬௰

——*——

மூன்றாவது,

# தேவபூசா அத்தியாயம்

—*—

கொச்சகக்கலிப்பா,

அலையிலேகடற்கிடந்தவருமறைகளாவற்றின்
தலையிலேயிருக்குமவன்றேரிலேநின்றருளிக்
கலையிலேபொருள்விரித்துக்காட்டவும்மெய்காணுதோ
சிலையிலேயுயர்விசயனிவ்வண்ணஞ்செப்பினான்,

இ-ள்.திருப்பாற்கடலில்அலையிலேபள்ளிகொண்டவர்ஒதவரிய வேதங்களின்சிரசிலே யிருக்கிறவர் இப்படிக்கொத்த கிருஷ்ணசுவாமிதேரிலேநின்றருளிச் சாத்திரத்திலே சொன்னபொருளை விரித்துக்காட்டவும் உண்மையாகக்காணமல் வில்லிலே அதிகனென்றபெயர்பெற்ற,அருச்சனன்இந்தப்படிசொன்னான்-எ-று (கிடந்ததையும் இருந்ததையுங்கண்ணாலேகண்டதல்லை தேரின்மேலே காண நின்றருளி வேதாந்தப்பொருளை விரித்துக்காட்டவுங் காணாத அர்ச்சுனன்கிடந்த போதுமிருந்தபோதுஞ்சொல்லுவது ஒருசொல்வேதாந்தப்பொருள்பசாசூட்சுமம் அப்படிக்கிடந்தபோதுமிருந்தபோதுங்காணுமற்கேட்கப்படுகிற ஒருசொல்லாலே மகாசூட்சுமத்தைக்காணமாட்டுவானோ மாட்டானென்பதுகுறிப்பு,

அறுசீரடியாசிரிய விருத்தம்.

நன்றேவினையின்மெனவுணர்ந்தாயமீளவினைநல்ல
வென்றேயுரையாநின்றனையாலிவற்றிலெதுநன்றெனவுணரக்
குன்றேயனையாயுனையடைந்தேன்குற்றதுயர்தீர்க்குவதா
மொன்றேயாகவுணர்த்தருள்வேண்டுமெனவவனுரைப்பான்,

இ-ள், கருமத்திலும் ஞானமேநல்லதென்று சொன்னீர் திரும்ப ஞானத்திலுங் கருமமேநல்லதென்று சொல்லாநின்றீர் இந்தக்கருமஞானமிரண்டில்எதுநல்லதென்று நானறியவேண்டும். நீலமலையையொப்பான திருமேனியையுடையவரே உமதுசரணமாக அடைந்தேன்-என்குற்றமான துக்கத்தைத்தீர்க்கிறதாகிய ஞானமிரண்டில் ஒன்றேநிச்சயமாக உபதேசித்தருள வேண்டுமென்றுகேட்கக் கிருஷ்ணசுவாமிசொல்லுவார் எ-று ௨

கலிவிருத்தம்.

ஆதியிலுலகினையாக்கியநாதனா
னோதியபொருளிவையிரண்டுமுண்மையே
தீதியல்வாவறுவன்செயலைமாற்றுவான்
மீதியல்வினையுறான்விடுமேவிடான்

(இ-ள்) ஆதிகாலத்திலே யுலகத்தையுண்டாக்கிறபோது நான்சொன்னபொருளான இந்தக்கருமஞானமென்றவிரண்டுமேநிச்சயமே இவற்றிற ஞானிகளுக்கு ஞானமுங் கருமிகளுக்குக் கருமமென்று நீகேட்டிருந்து மறந்தாய் பொல்லாங்கே சுபாவமான ஆசையையறுதவன்கருமத்தை விடுவான் ஆசையைவிட்டவன் கருமத்தைவிடான்-மேலானசுபாவமுள்ளகருமத்தையடையாதவன்மோட்சத்தையடையான்-எ-று. * (மீதியல்வினையாவது பலனையிச்சியாதகருமம் ஆசையையறுதவன் கருமத்தைவிடுவது ஆசையறவேண்டி அந்தவேண்டலே ஆசையாயிற்று ஆசையாற்கருமத்தைவிட்டாலும் விட்டவனல்ல-கருமத்தையடையாதவன் மோட்சமடையானென்பதென்னவெனில் ஞானோபதேசமும் அனுசந்தானமுங்கருமமாகையால்மோட்சம்வேண்டிக்கருமத்தைவிடும்போது ஞானோபதேசமும் அனுசந்தானமுங்கூடவிடும், இதைவிடவேமோக்ஷமடையான்.] ௩

ஒருவருமொருபொழுதினுமோர்காலமு
மிருவகைவினைசெயாதவர்களில்லையா
லருமையினவாவறுவினையடக்குவான்
பருவாலொடுபொய்யேயாவிப்பானரோ.

(இ-ள்) ஒருவரும் அனேகரும் ஒருநாளிலும் அனேகநாளிலும்ஒருகாலமும் அனேககாலமும் நல்வினை தீவினை யென்றிரண்டுவகையான கருமத்தைச் செய்கிறார்களே யல்லாமல் செய்யாதவர் களில்லை யாகையால் அருமையினாலே ஆசையறுதவன்கரும

த்தையடக்கினால் அவன்விசாரத்துடனேபொய்யேபாவிக்கிறவன்-எ-று ஒருத்தனுகிலுங் கருமஞ்செய்யாதவனில்லை-கருமஞ்செய்யாதநாளுங்காலமுமில்லை ஆசையறாமல்கருமத்தையடக்கிறவனை பொய்யேபாவிக்கிறவனென்றது கருமத்தையடக்கி ஞானிபோலடயனை யிச்சியாத கருமானுஷ்டானத்தினாலே ஞானயோகஞ்சாதிக்கவேண்டும் விஷயங்களை நினைத்துககொண்டிருக்கிறவனை [மாமிசாசாரமென்று] சொல்லப்பட்ட விசாரமாவது கருமத்தையடக்கிஞானியென்று பேர்விடுவித்துக்கொண்டோமே விஷயத்திலே பிரவேசித்தால் உலகமநிந்திக்குமேயென்கிற விசாரமதுவையால் இக்கநித்திய நைமித்தியகருமம் விட்டதினுலே கருமஞ்செய்யாமலிருக்கிறதில்லை மூன்று மென்பது குறிப்பு.] ௪

பனவைவபொறிவழி போக்குமாற்றிமெய்ப்
பலனறவினைகளென்பொருட்டுப்பண்ணுவாய்
நலனுறுமவ்வினைநரகமன்றியே
சலமுறுபிறவியுந்தவிர்க்குந்தன்மைகேள்

(இ-ள்) விஷயங்களை ஐம்பொறியானவிந்திரியங்களிலேசெல்லுகிறதைவிலக்கி மெய்யானபலனையறப்பட்டகருமத்தை என்னுடையநிமித்தியமாகப்பண்ணுந்தன்மையுடைய அந்தக்கருமமானதுநரகமல்லாமல் வாமடைந்தபிறவியையுந்தவிர்க்கும் அந்தச்சுபாவத்தைக்கேள்-எ-று என்பொருட்டென்பேயுன்பொருட்டாகஇச்சித்துச்செய்யாதேயென்றதுநரகமன்றியென்றதுநரகைவிலக்கும அதுமாத்திரமோபிறவியையுந்தவிர்க்குமென்றது இப்படிப்பலனையிச்சியாமல்கருமானுஷ்டானம்பண்ணுகிறவனைச்சுகஞானநிஷ்டையிலும் அதிகமென்றுசொல்லப்படும கேகமெடுத்தவனுக்கெல்லாங்கருமம்பண்ணுகிறதுநியமம்ஆகையால்நீயும்நிசமானகருமங்களைப்பண்ணுகருமத்தைவிட்டஞானத்திலுங்கருமத்துடனேகூடினஞானம்நல்லது-கருமம்பண்ணமாட்டேனென்றால்சரீரத்துக்குநடக்கவேண்டியகருமத்தைவிடவேண்டும், இவையெல்லாம் அருக்காபத்தி தன்மைகேளென்றதாவது இந்தக்கருமம்பண்ணிற்பந்தமென்றால் இந்தக்கருமமேபந்தமல்லாமல்தேவதாபூசையானஎஞ்ஞார்த்தமான கருமபந்தமல்ல அதெப்படியென்றால்அதினுடையசுபாவத்தைக்கேளென்ற கருத்தாபத்தேவதாபூசையென்றும் எக்கியார்த்தமென்றும் பாட்டிருக்கிறதோவென்றால்பின்வரும்பாட்டுக்களாலும் இந்தபபாட்டில் என்பொருட்டென் இருக்கிறதினாலுஞ்சொன்னது

தேவர்களைமகிழ்விக்குஞ்செயலோடேதெரிந்திந்த
மூவகையவுலகினையுமுன்படைத்தமுதன்மொழிவான்

மேவரிசுரர்பூசையிலுநீங்கள்வேண்டினுன்
யாவகையுந்தருமின்ன மிதுகேட்பிரொனவிசைப்பான்

[இ-ள்] தேவர்களைச்சந்தோஷப்படுத்துகிற கருமத்தோடகூடவிந்த மூன்றுவிதமான உலகங்களையும், ஆதிகாலத்திலே விசாரித்துண்டாக்கின பிரமதேவர் அச்சனங்களுக்குச சொல்லுவார்' இது அடைய அரியதேவர்பூசை இந்தத்தேவர்பூசை நீங்கள்வே ண்டிய இஷ்டார்த்தவிதமெல்லாம்கொடுக்கும இதையின்னமுங்கேட பீர்களென்று சொல்லுவார்-எ-று. * செயலோடேயென்றது-மகிழ்வியாத செயலோடென்றதுபாராமல் மகிழ்விக்குஞ்செயலோடுயென்றதுநிச்சயஞ்சொன்னதுதெரிந்தென்றதுசிருஷ்டிக்குமுன்னேபிரமதேவர் ஆலோசனைபண்ணினது இந்தச்சிருஷ்டியைச் சத்தகருமத்துடனேஉண்டாக்கவேண்டுமே அதற்குச்சகல நமமேதேவர்களைமகிழ்விக்குஞ்செயல். ஆகையால் அதுவுடனேசிருஷ்டிக்கவேண்டும், அதல்லாத துற்கருமத்துடனே சிருஷ்டிக்கலாகாதென்று ஆலோசனையில் விசாரித்துத்தெரிந்தபின்புஇந்தமூவுலகமும்படைத்தாரென்றது' இதுவென்றதுசொல்லும்பொருளைக்காட்டல்) ௬

செயல்வகையாநீங்களவர் திறம்போற்றுமாங்கவரும்

பயல்வகையாலுங்களையே புறம்போற்றிபரந்தருள்வா

ரியல்வகையானதுபினமுமீ ரொனிவிரண்டுதிரத்திரு

முயல்வகையாலெனையடைவீரொந்நிலத்தோர்க்குரைத்தனனுல்

(இ-ள்) நீங்கள்செய்யும்விதங்களினலே அந்தத்தேவர்களின்விதங்களைப்பூசைசெய்யுங்கள்-அப்போது அந்தததேவர்களும்மேகமென்கிற விதத்தினலே வுங்களையேபுறமபோத்துத்தயை செய்வார்கள் உங்களாலியன்றவிதமானது தப்பாமற்செய்வீராகில் இரண்டுயிமானதேவர் மனிதரான நீஙகளுந்தப்பிப்பிழைக்கிறவிதத்தினலேயென்னைச் சேருவீரொன்றுமனிதருக்குச்சொனனுர்-எ-று. *[இதனுள்எக்கியம்பண்ணித்தேவர்களைச்சந்தோஷம பண்ணுங்கள்-அவர்கள்மேகங்களாலேமழையைப்பெய்வித்துப புறம்பேகாத்துரட்சிப்பார்கள்-இப்படியிருவகையாருந் தப்பாமல்நடந்தர்களானு லென்னைச் சேருவீர்களென்றுமனிதரைப்பார்த்துஇருவகையாருக்குஞ்சொன்னுர்,ஒருவனைப்பார்த்திருவருக்குஞ்சொன்னதேதெனில் ஒருவன்முன்னேசெய்தால் மற்றொருவன் பின்னேசெய்யவேண்டிய விதியாகையால் முன்னேசெய்யவேண்டி மனிதரைப்பார்த்துத்தேவர்நடத்தையுங்கூடச்சொன்னதுதப்பிப்பிழைக்கிற விதமாவது நான்எனதென்கிற ஆங்காரசுதந்திரமிரண்டினலும்படாமலிருத்தல்இபபடியொருவருக் கொருவர்அன்னியோன்னியமாகவிருந்தால்மேன்மையை யடைவார்களென்பதுகுறிப்பு. எ

மற்றவர் தந்தது கொண்டு மறித்தவரைப் பேணுகான்
கற்றவர் முன் பழத்துரைதத களவரினுங் கடைப்பட்டான்
பெற்றவர் கொண்டவர்ப் பேணிப்பிழைக்கது கொண்டுண்ணுதே
யுற்றது தன் பொருட்டாகவுண பவன் றீதுண்கின்றான்

இ-ள் ,எக்கியத்தினலே பூசை பண்ணினதற்கு அந்தத் தேவர்கள் வேண்டினது கொடுப்பார்களவர்கள் கொடுத்தவை கொண்டு திரும்ப அந்தத் தேவர்களைப் பூசியாதவன் பெரியோர்கள் முன்னே பழித்துச் சொன்ன திருடரிலுங் கடையனுன் அவன் அந்தத் தேவர்களாலே கொடுக்கப்பெற்றவை கொண்டு அந்த தேவர்களைப் பூசித்து அவைகளிலே மிஞ்சினதைக்கொண்டு பொசியாமற்கிடைக்கதைத் தன்னுடைய நிமித்தமாகப் பொசித்தவன் பாபத்தினலே விழுங்கப்பட்டவன், எ-று ✻ (எக்கியத்திலே மிஞ்சினதைப் பொசித்தவன் பாபத்தில் விடுபட்டவனென்றதருத்தாபத்தி.) அ

கலிவிருத்தம்.

உளவாமுயிருண்வா லுன வயர்மாரியினுளவாம்
வளவான்மழையுயர்வானவர் மகிழ்வால்வருமதுதா
னிளவாளரியனையாயிசை தொழிலால்வருமிசையி
னுளவாமறைதருநான்மறையறிவாலறிவுறுமால்

[இ-ள்] இப்படிக்கொத்தபொசிப்பாலே ஆத்மா உண்டாம் இந்தப் பொசிப்பு உயர்ந்தமழையாலுண்டாம், இந்தவளமையுள்ள மேகம் பொழியுமழைகீர்த்தியுடைய தேவர்களின் சந்தோஷத்தால்வரும் இளமையுப்பிரகாசமுள்ள சிங்கத்தையொப்பான அருச்சுனு அந்தமழைதான் சொல்லப்பட்ட எக்கியமான கருமத்தினால்வரும் இந்தக்கருமதவ தச்சொல்லுகிறவேதஞ்சொல்லிலுண்டாம் இந்தச்சொல்லாலுண்டானநாலுவேதத்தினுடைய அறிவினலே அறிவுண்டாமென்றவாறு, சு

இதனுல்வினைகளிலே விளை வனையாவையுமின்று
னெதினுல்வருவினையாழியினெறிசேரலர் திரிவார்
மதனுரிப்புலனேமகிழ்விடமாகவுமுடையா
ரதனுலவரவமேகழி பவராமெனவறிநீ

(இ-ள்) இப்படியொன்றுலொன்றுண்டான இதனலே கருமங்களிலே சகலமும்விளையப்பட்டன இவ்விடத்திலே எக்கியத்திலேயுள்ளாயிருக்கிறபரமபுருஷனலேவருகிற கருமசக்கிரதினுடையமார்க்கத்தைச் சேர வில்லாதவராய்த் திரிவார்களே மதமுண்டாகிய விஷயங்களிலே சந்தோஷப்படுமிடமாகவும், விஷயங்களே சந்தோஷமாகவுமுடையவர்கள் அதனலேயவர்கள் விருதாவிலேநாசமாகிறவர்களாமென்றுநீயறிவாய் எ-று. ✻ (இதனுவது உள்ளானவன் அதீதனுவது கடந்தவன்) ய

எழுசீரடியாசிரியவிருத்தம்.

கண்ணிற்கருக்கரு மறிவைக்கருதிய கறிவேமிகவருகளிகூர்வோர்
வெல்லணிமெருழிறருபயனுமறிவெனகயிலைசயாளுதலின்வினையாவும்
புண்ணிப்பெறுவதோர்பயனுண்டேவனை பண்ணுதலவேசோர்பழிப்
புண்டோ, மண்ணிற்பிறரிவனினவயுமறிலனெனமதியாரவைசெய்தவி
திபாரால்.

(இ-ள்) கண்ணாலேகாணவும், மனதாலேநினைக்கவும், அரிதாகிய ஆத்மாவைத்தரிசனமுந்தியானமுஞ்செய்து அந்த ஆத்மாவேநஷ்டமில்லாமலிருந்திருக்க அதனுல்வரப்பட்டகளிப்புமிகுந்தவன் விசாரித்தாலவனுக்குச்செய்யவேண்டியகாரியமொன்றுமில்லாததினுலே கருமத்தால்வருகிறபலனையடையும்படிக்குச் சம்மதிபான ஆதலால் ஆத்மதரிசனஞ்சித்தியானவனுக்குச்சகல மதுவேயல்லாமல்வேறேசகலகருமங்களையும் பண்ணிப்பெருவதொரு பிரயோசனமுண்டோ அதுவில்லை ஆனால் அந்தக்கருமத்தைப் பண்ணுததினுலேயடைகிறதொருபழியுண்டோ அதுவுமில்லை ஆன லிவனையுலகத்தில்மற்றப்பொருள் இவன் இந்தக்கருமத்தைச் செய்து இந்தப்பிரயோசனத்தை யடையவில்லாதவனென்று மதியார்கள் யென்றவாறு ✻ (விதியென்கிறதை விதியாவென்றது உபசாரம் விதியாவது பிராமம்பகனை பிச்சியாதவனுக்கு உலகம்மதித்தலென்ன பிரயோசனம் மதியாமையால் என்னநஷ்டம் இரண்டுமில்லையென்பது கருத்து. ௰௧

எழுசீரடியாசிரியவிருத்தம்.

ஆதலானீயும்பலத்தின்மேலவ்வறடுத்தகாரியஞ்செய்வாயதனுங்
தீதிலாவீட்டேசேருவாய் முன்னஞ்சேர்ந்தவரனேகர் முன்றேறிற்
சாதலாலரசன்சநகனேமுதலோர்கருமமோடொழுகியேயன்றோ
போதலாவுலகுபுக்கதுமற்றப்புகுந்தனரனேகர்முன்பொலிவார்

(இ-ள்) ஆகையால் நீயும்பலத்தின்மேலாசையற்று இராசாக்களுக்கு அடுத்தகாரியத்தைச்செய்வாய் அதனுலே குற்றமில்லாதமோக்ஷத்தையே சேருவாய் இப்படி முற்காலத்திலே சேர்ந்தவர்கள் அனேகம்பேர் அவர்களாரென்று ஆசையாலேமுன்னே விசாரிக்கில்ராசாவானசனகனே முதலானவர்கள் கருமத்தோடே நடந்ததேயல்லவோ மற்றவர்கள்யாரும் போகமாட்டாதமோக்ஷமாகியஉலகத்திற்புகுந்துபின்னேயுமுன்னே புகுந்தனரனேகர்விளங்குவாரென்றவாறு. ✻ விளங்குவாரென்றது அவர்களையுலகர் புகழ்ந்துகொண்டேயிருக்கையால் விளங்குவாரென்றார் பலத்திலாசையற்றவன் அடுத்தகாரியத்தைமுயறசிபண்ணினன், அடுத்தகாரியத்தைச்செய்வான் அடுத்தாவதுபசிவந்தபோது தனக்கல்லவென்று பொசித்தது அடுக்காதாவது பசியில்லாதபோ

னு பொசிப்பைக்கண்டாற் பசிவாராமற்பொசிக்கவேண்டுமென்றுபொசித்தல்இன்னமும்அடுத்தாவது அவரவர்குலத்துக்கு அடுத்தகருமம்அநேகாத்துபாகருமமும் சனகாாசாவைச் சொன்னதேதென்னில், இந்த அர்த்தம்அன்னியசாதிக்கென்றுநினையாமற்காட்டினதுகருத்து, ௰௨

பெரியவர்பயின்றபடியலாற்பயிலார்பின்புளோரென்பதன்றுயீனிரிபவிவ்வுலகமூன்றினுமெனக்குச்செய்யவேண்டுவதுமொன்றுண்டோ வரியவையென்னுலுறுகவுமுறுநற்பாலவுமியாசைகயுகையா, பரியவிவ்வுலகுமகிழவும்வினைதான்பண்ணுதற்கென்னையும்பாராய்.

[இ-ள்] பெரியவர்கள் ஆசரித்தபடியேமற்றசனங்களும்ஆசரிப்பார்களேயல்லாமல் மற்றொன்றையுமற்றசனங்களாசரியார்கள் இப்படியென்றுசொல்லப்படும் அப்படியாகில்உரியதான இந்தப்பூமியந்தரசுவர்க்கமென்றமூன்றுலோகங்களிலும்என்னிச்சையாயிருக்கிறவெனக்குச்செய்யவேண்டிய தொன்றுண்டோ ஒன்றுமில்லைஎன்றாலேகூடாத அரிபதுவுங் கூடத்தக்கவுரியதுவும்என்ன இந்தவுலகங்களிலொன்றுமில்லை ஐயா இப்படியெங்கும் என்னிச்சையாயிருந்து ஒன்றுடனுங்கூடாதவனு மினிமேற்கூடுகிறவனுமல்லாதஎனக்குச்செய்யவேண்டுவதொன்றுமில்லையே இப்படிக்கொத்தநான்பருக்கு இந்தஉலகங்கள்சந்தோஷிக்கவும்துதிக்கவும்கருமம்பண்ணுகிறேன் இப்படிப்பலனையிச்சியாமற்கருமம்பண்ணுகிறதற்குமுன்னேஜனகமகாராசன்முதலான அனேகரைப்பார்க்கச்சொன்னேன் இப்போதுஎன்னையும்பார்-எ-று.*[மகிழவுமென்றவுமமையாற்றுக்கிக்கவுமென்றுவருவித்தது என்னையுமென்றவும்மையால்முற்காலத்துச் சனகன்முதலானோரையும் இந்தக்காலத்திலென்னையும்பாரென்றுமுற்பாட்டோடேயை எதிரதுதழுவியது. ௰௩

என்செயறவிறில்யான்செயாவினைகளியாவருஞ்செயாரதனாலே
மன்செய்தகுலங்கண்மயங்கிமாய்ந்திடுவர்மற்றவர்மற்றதற்காகப்
பின்செயலறியாதவர்வொடுமுயலும் பேதையைப்போர்பிறர்பொருட்டா, லுன்செயல்களைச்செய்பவைசெய்வார்தம்மையுணர்வு வேறாக்கலுமுனைப்பான்.

[இ-ள்] இப்படிக்கொத்ததென்னுடையசெயலானதுசெய்யாமல்விட்டால் நான்செய்தகருமங்களையாருஞ்செய்வார்கள் அதனாலேநிலைமையாகச்செய்தகுலங்கள்மயங்கி நாசமாவார்கள் ஆனாலிந்தநாசம்நானேபண்ணினவனாவேன்மற்ற அஞ்ஞானியான்ஜனங்கள் அந்தக்கருமத்தைத்தங்களுக்காகச்செய்து பின்னேவருகிற அனுபவச்செயலையறியாமல்ஆசையுடனே செய்யப்பட்ட மூடனைப்போலநீயும்பிறர்நிமித்தியமாக உங்க

ருமங்களைச்செய் அந்தக்கருமத்தைச்செய்கிறவர்களையறிவு வேறாக்குவ
தையுஞ் சொல்லுவார்-எ-று, * என்செயல்தப்பிலயாவருந்தப்பாவா
யென்றதினாலேஎன்செயல்தப்பாவிடில்யாவருந்தப்பாரென்றது அருத்
தாபத்திகுலங்கள்மயங்குவதாவதுஎல்லாமொன்றாகிச்சங்கிரமாகிறதுக
ருமத்தைவிட்டதுகாரணபடியினாலே அங்காசமும் என்னாலேவந்த
தென்றது கருமத்தைத்தங்களுக்காகச்செய்தாற் பின்னாலேவருகிறது
ஜெனனமரணசுகதுக்கமென்றறிவதுமூடன்தனக்காக எப்படிகருமம்
பண்ணுவானோஅப்படிபிறருக்காகவுன்கருமத்தைப்பண்ணென்றதுஉ
னக்காகப்பண்ணாதேஎன்றதருத்தாபத்தி. ௰௪

மெய்வகைதனக்கும்புலன்கட்கு முள்ளவேறுபாட்டினைமிகவறிந்
தேன், ஐவரையியற்கைப்புலன்களே பொறியுற்றமுழுந்துகின்றன வென
மயங்கா, விவ்வகையறியாதவனிருவினையு மியான்செய்தேனெனவினை
ந்தெககும்,உய்வகையிதுநீயுணர்ந்துனக்கடுத்தவினை செயென்றுரைத்
துமீட்டுரைப்பான்.

இ-ள்,உள்ளபடிக்குத்தக்குணம்விடையங்களுக்கு முள்ளவேறுபாட்
டைநன்றாகஅறிந்தவன்ஜைந்துவிதசுபாவத்தையுடைய விஷயங்களே
இந்திரியங்களில் விழுந்தழுந்துகின்றனவென்றும் தான்மயங்கான்இப்
படியறியாதமூடன்புண்ணியபாவமான இரண்டுகருமமும்நான்செய்தே
னென்று அகங்காரம்பண்ணியினைத்துத்திகில்படுவென்தப்பிப்பிழைக்கி
றவகையிது நீயறிந்துஉனக்கு அடுத்தகருமத்தைச்செய்யென்று சொ
ல்லித்திரும்பவுஞ் சொல்லுவான்-எ-று. * (மிகஅறிதலாவதுநன்றாக
அறிதல்பொறியுற்றதுபுலன்களே யென்றதேற்றே காரத் தி னா லே
விஷயங்களேயல்லாமல் ஆத்மாவல்லவென்றநிச்சயமயங் கா வெ ன
ன்றபாடத்தை அகங்காரமென்றுபாடமோதில்அசையா வெ ன் று
ரைகொள்ளும் இளைத்தலாவது அகங்காரத்தினாலேபிறந்திறந்து சுகது
க்கங்களை யனுபவித்துழன்றிளைத்தல் திகிலாவது இந்தத்துன்பமெப்
போதுதீருமோ இதுநன்மைவிடாதோவென்றேவருத்தல்.) ௰௫

அறுசீரடியாசிரியவிருத்தம்.

யன்பாற்பொருமையினைத்தவிர்த்தேன்கருத்தாயுள்ளவினையதனை
என்பாற்பயில்வாரியாவர்கள்வினைகளறவிட்டா
ரென்பாற்பொருமையாலேயானுரைத்தவிவற்றையிகழ்கிற்பார்
வன்பார்த்தரையிலொழுமாம்பொன்மாய்ந்தறிவுபாய்ந்தாரே.

இ-ள்,என்னிடத்திற்பொருமையைவிட்டுத்தன்கருத்தே என்கருத்
தாயவரவருக்குள்ளகருமத்தைஅன்பினாலேஆசிக்கிறவர்களா

ரோசிலபேர் அவர்களேகருமங்களை அறவிட்டவர்கள் இனியென்னிடத்திற்பொறுமையாலேநான்சொன்ன இந்தவாக்கியத்தையிகழுகிற பேர்கற்பாறையானதறையிலேமுளைத்தமரம்போலமாய்ந்துபோவார் களதுவல்லாமல் அறிவுமாய்ந்த பேர்களென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர் எ-று.
(௰௬]

கலிவிருத்தம்.

பண்டுநின்றபழவினையின்படி
கொண்டுநின்றதுகூடுமவர்கட்குக்
கண்டுநின்றவர்கற்பனையென்செயு
முண்டுநன்றவெனுவுறைகண்ணுமோ

[இ-ள்] தேகமெடுத்திருக்கிறபேருக்குமுன்னே பழையதாயிருந்தவினையின்படி கைகூடுமென்றுவஸ்துவைக்கண்டுமிருக்கிறபேர்களுககுக் கற்பனையானவினையென்னசெய்யுமென்று அறுவகைச்சுவையுண்டுநல்லதென்றாலது நாவுடனேசேரும்அப்படிப்போலவஸ்துவைக்கண்டு இருக்கிறபேரைவினைசேராதுஎன்றுசொன்னார்ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று.

இதுவுங்கலிவிருத்தம்,

அஞ்சுபுலன்வழிதொடமஞ்சுபொறியிவையாம்
வெஞ்சுரனலுழறியுயிர்வெம்பியழிவுறுவோ
ருஞ்சுபுகும்வழிதகையவொன்றுபகையுளதே
ளெஞ்சுதவிலின்பமிடரொன்பவையயிகநீ

(இ-ள்)ஐந்துபலனையும்ஐந்துபெறிதொடருமதினால் உலகத்திலிருக்கிறபேர்கோபத்தினாலேயுழன்று உயிர்வெம்பியழிந்துபோவார்களப்படிக்கொத்தபேர் பிறந்திருக்கிறவழியை மறிக்கிறதற்குஒருவகையுண்டு சொல்லுகிறேன்கேள் அதுஎப்படியென்றால் சுகதுக்கமென்கிறவையிரண்டு இழந்துவிடுகிறதே பிறந்திருக்கிறவழியை மறிக்கிறவகைஆகையினாலேநீயுமிகழ்ந்துவிடுமென்றுசொன்னார்ஸ்ரீகிருஷ்ணதேவர்எ-று௰அ

தடுத்தொழில்செய்வதுதகாததுதனக்கே
யடுத்ததொழில்செய்துகொடுமேனுமழகையா
விடுத்தகருமம்பெரிதுசெய்வதெனின்மேலோர்
தொடுத்தகருமஞ்சிறிதுசெய்வகைதொழிலென்றான்

[இ-ள்) ஞானவான்கள்வேண்டாமென்னத்தொழிலைசெய்கிறது ஆகாதுதனக்குஅடுத்ததொழிலைச்செய்வது யாதாகிலுங்கொடுக்கிறதேஅழகையாவென்று விட்டுவிட்டகருமத்தைத்திரளாய்ச் செய்கிறதினாலேயுமேலோரானஞானவான்கள்செய்கிறகாரிய

ங்கொஞ்சமாகிலு நாமத்தைச்செய்கிறதேதொழிலெனறுசொன்னர் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௰௯]

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மாயனிவைபென்றுரைசெய்யவிசையன்றுமறுத்துக்கூறுவான்
தியவினைசெய்யாதவரைத்திகைப்பச்செய்துதிறலாலே
யேயபணிகொள்வரைப்போலியற்றுவிப்பாராரொன்றுன் [ன்
பாயல்பரவையாக்கொண்டபழையோ னிவ்வா றெனப்பணித்தா

(இ-ள்) இந்தவிதம்ஸ்ரீகிருஷ்ண தேவர்சொல்லஅதற்குத்திரும்பவும் அருச்சுனராசன்கேட்கிருன் அதுஎப்படியென்ருல் கொடிதானவினை செய்யாத பேரைத்திகைக்கச்செய்து வல்லமையிறலே வேண்டிய தொழில்செய்வித்துக்கொள்ளுகிறவர்களைப்போலசெய்விக்கிறபேர் ஆரென்றுகேட்க அதற்குயாக்கையென்கிறபொம்மையை ஆட்டிவைக்கிற ஸ்ரீகிருஷ்ணதேவர்சொல்லுவார்என்றவாறு (௨௰)

கலிவிருத்தம்,

[இ-ள்) அக்கினியிலேபிறந்தது. மனதுமனதிலேபிறந்தது காமம்காமத்திலேபிறந்து குரோதம் குரோதகர்ம மென்கிறதாயினுடையகை போலச்சகலமும்வளர்கின்றது குரோதமென்கிறதுமதனமயங்கொண்டிருக்கிறது இதுஇரண்டையும்பேரற-விட்டுவிடுகிறதே நல்லநலம். அதைஇன்னந்தெரியச் சொல்லுகிறேன்கேளென்றுசொன்ஞர் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று, (௨௧)

எவ்வகைப்பயனுந்தினவல்லது
மெவ்வகைப்பெரும்பாவமுமிவ்வகை
வெவ்வகைப்பொருட்கும்பகையாவகை
யெவ்வகைத்தெனப்பேசுவதின்னங்கேள்

(இ-ள்) எந்தத்தருமஞ்செய்காலு மந்தத்தருமத்தை விழுங்கிப்போடுகிறதும.எந்தவகையினுலேயும் வெறும்பாவத்தையுண்டாக்கிறதும்எந்தப்பொருளுக்கும்பகையாக்கிறதும், எந்தவகையினுலேயுந்தினம்பேசுகிறதும் காமக்குரோதத்தினுலேயென்று இன்னஞ்சொல்லுகிறேன்கேளென்றுசொன்ஞர் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௨௨)

நெருப்பைமூற்றிய தூமமுநீடொளி
தருபபணத்தைமறைத்தனமாசுமொத்
துருப்படைத்தருள் ஞுணர்வியாவையும்
விருப்பமுற்றவெங்காமம்விழுங்குமால்

(இ-ள்) புகையினாற்பிறந்த அக்கினிக்குமதிகப்பிரகாசம்பொருந்திய மனக்கலக்கமமானது எப்படி மறைந்ததுவென்றால் தங்கப்பணத்தைமா சுமறைக்காப்போலவுலகத்திலேயிருக்கிறபேர்களுக்குளென்னாலுண்டா கிய உள்ளுணர்வான மனதெல்லாவற்றையும் விருப்பமுற்றகாமமுமவி மூக்கிப்போடுமென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (அ௨௩)

காதலாற்றவிக்காமபுலனகளை
வாதவரற்புகுந்துள்ளமயக்குவ
தாதவாற்புலனைந்துமடக்கியே
வேதலாற்கடுங்காமமிறக்குவால்

(இ-ள் ஆசையினாலே தவிக்கிறகாமமானது ஐம்புலன்களினுடைய வாசலிலேபுகுந்து மனவகமயக்குமாகையினாலே ஐந்துபுலனையுமடக்கி ஒப்பில்லாதகாமக்குரோதபாசத்தைநயிறக்கிப்போடுவாயென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. [௨௪]

ஆற்றுமிவ்வுடம்பிற்பரமைம்புலன்
மாற்றுமைம்புலனிற்பரமாமனம்
போற்றும்புந்திபினிற்பரம்புத்தியி
ரேற்றுமிகிகுவைபாண்பதுதொல்பாம.

[இ-ள்] வாயுவினாலே சஞ்சரிக்கிற தேகத்துக்குப் பரமாயிருக்கிறது ஐம்புலன்தேகத்தைமாற்றுகிற ஐம்புலனுக்கும் பரமாயிருக்கிறதுமன துமனம்போற்றுகிறதக்குப பரமாயிருக்கிறதுபுத்தி-அந்தபபுத்தியிலே பரமாயிருக்கிறதுகானுமதைக் காண்பதுமேலான பரமென்றுஞ்சொ ன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (௨௫)

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

மேலாயுள்ளவிப்பொருளைவெய்யாவறிந்துபொய்மாய
மாலான்மயங்குமனத்தினையுடடக்கியந்தமனங்கலக்குங்
காலாயுள்ளகாமத்தைக்காபபாயென்றுகட்டுரைத்தான்
சேலாயுலகமுறுபுலனோர்செவியின்புரையிற்செலுத்தினன்

(இ-ள்)சகலத்துக்குமேலாயிருக்கிறவஸ்துவைவமெய்யாகவறிந்துபொ ய்யானது இறந்துபோகத்தக்கதாகமயங்குகிறமனதையடக்கிக் கலக்கிற தற்குக்காலாயிருக்கிறகாமத்தைக்காப்பாயென்று முன்சேலாயுலகத்தி லே அவதரித்து இப்போது ஜனங்கள்செவியின்வழியாக ஞானத்தைப் போதித்தார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. ௨௬

௩-வது-தேவபூசா அத்தியாயம்-முற்றுப்பெற்றது

---

ஆக-அத்தியாயம்-௩-க்கு-கூடியசெய்யுள்-௱௰௬

நான்காவது.

# சப்பிரதாய அத்தியாயம்.

—(*)—

### கலிவிருத்தம்.

நற்றவமுமகிழ்கருகருமஞானமு
மற்றதுற்றவுனக்கறியக்கூறினேன்
மற்றவைகளினிவர்வாறுகேளெனக்
குற்றமிலாழியானகையன்கூறுவான்

(இ-ள்) நல்லதவமகிழ்வினாலேயுண்டானதல்லாமல் முன்னிருந்தபேருக்குஞ்சொன்னேனென்று, கருமஞானமிரண்டுமுனக்குமயக்கமறத்தக்ககாக அறியச்சொன்னேனென்றுசொன்னதல்லாமல்முன்னிருந்தபேருக்குஞ்சொன்னேனென்று மவர்கள்பெயரையுஞ்சொல்லுகிறேன்கேளென்றுகுற்றமில்லாதகையிலேசங்குசக்கரத்தைத்தரித்த ஸ்ரீகிருஷ்ணதேவர்சொன்னார்-எ-று. (க)

எவமறமுன்பியானிரவிக்கோதினே
னவனமனுவாசனுக்கறியக்கூறினா
னுவகையோடகனுமிக்குவாவுக்கோதினான்
தவமுயலாகனீயறியுநன்மையா

(இ-ள்) மயக்கமறக்கியானத்தைமுன்னாலேசூரியனுக்குச்சொன்னேனென்றும், சூரியனுமனுராசனுக்குச்தெரியச்சொன்னானென்று மனுராசனுக்குவாவுக்கு வகையாய்ச்சொன்னானென்று மாயையிலேஞானயோகத்தைமுயன்றுஆசரிக்கிற பேரிதையறிவார்களென்றுமின்னமதன்வகையைத்தெரியச்சொல்லுகிறேன்கேளென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. [உ]

கருதரும்பலவகைநிகழ்காலஞ்சேரலா
னருவரும்வகையதாய்மறைந்தவாய்மையை
யிருவினைகெடவருயோகசீர்மையை
யொருவருமறிவரிதாயவுண்மையே

[இ-ள்] முற்காலத்திலேமாயைவஸ்துச்செந்து அனேகவிதமுண்டானவகையுங் கருவுண்டாய்ப்பிறந்திறந்துபோனவகையையு மிப்போதுபிறந்துஇனியிருக்கிறவகையையு மிருவினைகள்கெடவருகிறயோகநிலையையுமுன்னுடையவுண்மையுமறிகிறதற்குஎவர்களாலேயு மரிதென்றுசொன்னனருச்சுனன்-எ-று.

நல்லகாதல்செய்நண்பெனுமாயனே
யல்லதியாவுமறியலையாதலால்

சொல்லினென்மெய்யினெதென்றனன்றூயவன்
மெல்லவேறுவிசயன்விளம்புவான்,

இ-ள், இந்தவகைகளெல்லாமறிகிறதற்கு எனக்கும்தொண்டுபட்டுளேன்பேரிலேயன்பாய் மனதுவைத்து என்னுடேல் யறியவேண்டுமென்னையல்லாமலவீயப்போகாது ஆகையினலே யிது மெய்யென்றுதூயவனான ஸ்ரீகிருஷ்ணதேவர்சொல்ல, விசயனான அருச்சுனன் கேட்டு மெள்ளச்சொல்லுவானஎ-று. (௪]

கலிவிருத்தம் .

ஞானமாமிதுநல்லவர்கேட்டிடப்
போனகாலமும்பான்புகன்றேனென
வானதாயினுமவ்வுடம்பன்றிது
தானதாம்வகைதாமறிதக்கதோ

இ-ள். ஞானமானதைநல்லவர்கள்கேட்கத்தக்கதாகமுற்காலத்திலேயும்நான்சொன்னேனென்றுசொன்னீரேயுமக்குமெனக்குமுன்னேமாயாதேகம்வந்தவகையுமிப்போதுதேகமவந்தவகையும்நமக்குத்தெரியுமோவென்று அர்ச்சுனராசன்கேட்டான்-எ-று.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

சொல்லார்விசைபனிதுமொழியத்துளபமுடி யோனநள்செய்வான், பல்லாயிரங்காலுடம்பெனக்குமுனக்குநவேம்பரிதமிங்க, தெல்லாமறிவன்யானீயுமேறுமறியாயிதுவன்றோ. வில்லார்தோளாய்நமக்குள்ள வேறுபாடுவிளம்புங்கால். ௫

இ-ள், விசேடத்தினலேவிசையனான அருச்சுனராசன் இந்தவகைகேட்கஅதற்குத்துளபமாலே முடியோனான ஸ்ரீகிருஷ்ணதேவர்கிருபைபண்ணிச்சொல்லுகிறாரதெப்படியென்றால் பல்லாயிரமானகுகும்வியாபித்திருக்கிறதேகங்காணெனக்கென்றும்உனக்கென்றுமுனக்குநவேவேதேகம்வந்துஅழிந்துபோனதுமிப்போதுதேகம்வந்ததும்நானெல்லாமறியேனென்றுமநீயேதுமறியாயென்றும்இவையல்லாமல்வில்லேத்தோளிலேதரித்த அருச்சுனராஜனேநமக்குள்ளேவேறு பாடானவிருத்தாந்தத்தைச்சொல்லுகிறேன்கேளென்று சொன்னார்ஸ்ரீகிருஷ்ணதேவர்எ-,று []

கலிவிருத்தம்,

சாவாதுபிறவாதுதனிமுதலாயிருந்தவனு
ளுவாதுவுலகுபடுமெழிதுயர்தீர்ப்பதற்காக
மேவாதுநின்றேயெனமாயையினுல்மெய்போல
வோவாதுபிறந்திடுவேனுகந்தோறுமுகந்தோறும்

இ-ள். என்னுடையவிருத்தாந்த மெப்படி யென்றால்நான்சாகிறதுமில்லேபிறக்கிறதுமில்லேதனிமுதலாயிருக்கிறவனுன்என்னையறியாமல்உல

கத்திலேயிருக்கிறபேர் நானாவிதமாய்ப்பிறந்து அழிகிற துயரத்தீர்க்கி
றதற்காக உலகத்தைச்சேராமலிருந்து என்மாயையாலேமெய்போலவொ
ப்பில்லாமலும் தங்கள்தோறும் பிறந்திடுவேனென்று சொன்னார் ஸ்ரீகி
ருஷ்ணதேவரென்றவாறு, (எ)

மெய்வகையதிதுவென்னவேண்டியார் வேண்டியன
வைவகையநேயமுமாயானேகாண இப்போது
மிவ்வகையென்செயல்களினையறிந்தாரிவ்வும்மையினின்
றுய்வகையநெறிபெற்றுருயர்ந்தாரையுரைப்பரிதால்

இ-ள். இந்தபனைகநான்சொன்னதேமெய்யென்று எவரெவர்களுக்குள
ந்தந்தெய்வத்தின்பேரிலேயிச்சையோ அந்தவிதப்பலவகையான தெய்
வங்களையுண்டாக்கினவனுனென்றுமென்செயல்களையிந்தவகையென்று
அறிந்தபேரிம்மையான சனனமரணவகையைச்சேராமலுலகத்தார்க்
கெல்லாமுயர்ந்தகதியடைவார்கள் அவர்கள் பெருமையைச்சொல்லுகிற
தற்கு அரிதென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர், -எ-று (அ)

செயலாலுங்கருத்தாலுஞ்செயநாடுங்குணநாலு
மியலானமுற்படைத்தனிப்பொழுதுகாப்பேனுன்
மியலாலவ்வினைப்பயனின்மனம்வையேன்மற்றவனு
மயவாயேயுருக்குமெனக்கவையிலவையோதிடாரார்

(இ-ள்) மகிமையுண்டாடநான்குகுணத்தை வல்லமையினாலேயுறிய
லாகமுன்னேயுண்டாக்கினவனான் இப்போதெல்லாவற்றையுங்காக்கிறவ
னும் நான் ஆகையினாலேகாலபபலத்தின்பேரிலேமயலாகியமனதைக்கா
றறினாலே யென்னையே யவுஞ்சேராமலிருக்குமிப்படிச்சேராமலிருக்கிற
வென்னையிறந்தை அழிகிறபேர் ஆமொன்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்
எ-று. ௯

அறுசீரடியாசிரியவிருத்தம்.

உய்யும்பரிசிலுணர்ந்தவர்களுணர்ந்தவினைமேலொருபடுநீ
செய்யுங்கருமஞ்செய்யாமைதீருமையொன்றிலதை
மெய்யும்பொய்யுமறிவரியவேணடும்பொருளுமிதையன்றி
மெய்யுஞ்சிலைக்கையுறவோய்மற்றிவற்றன்செயலையியம்பக்கேள்

(இ-ள்) வினையொழிக்கிறகாரியமறிந்தபேர்செய்த கருமத்தின்பேரி
லேநீயுமொருமையாய் மனதைவைத்துச் செய்யென்றுமுன்னேசெய்த
கருமமெல்லாந்தீதானகாரியமென்றறிந்து அதைச்செய்யவேண்டாமெ
ன்று மெய்யானஞானத்தையும் பொய்யானகருமத்தையும் விசாரித்து
வைத்துவை நன்றாயறியவேண்டுமென்றுகருத்தைச்செய்கிற விறலையு
டைய அருச்சுனராசனே மனத்தினுட்செயலைச் சொல்லுகிறேன்கேளெ
ன்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. ௰

ஓடுகின்றபுலன்பகற்றுனேடக்குடனேயோடுவான்
மாடுகின்றமரமோடத்தானின்றார்போல்வாய்ச்செய்தே
நீடுகின்றமரங்கனிவைநிற்குமியற்கைத்தன்மனத்தி
லோடுகின்றயானேயென்றுணர்வுமிக்கோனுணர்ந்தாற்போல்

இ-ள் ஆறுபோலோடுகிறபுலன்வழியாய்மனதோடுகிறபேர்மாட்டுக்கு ச்சமானமென்று மதுவல்லாமல் மனதானது ஆற்றங்கரையில்நின்றமா ம்போலவேற்று ஆறறிலேயோடுகையில் உருவாயுயர்ந்திருக்கிறமரத்தி லேகட்டுப்பட்டுநின்றாற்போலச்செய்து நிற்குமியற்கையாக மனதைநி றுத்தி ஓடினது மரம்நிறுத்தின அடிநுனிமரத்தினலேயெல்லாநானே யென்று அறிவினலறிந்தபேர் அறிந்தாற்போல நீயுமறியென்று சொ ன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. ௰௧

செயன்மேனின்றவழிவிடையேசெயலின்மையுமச்செயல்செய்யா
வியன்மேனின்றபலன்களிலேயெல்லாவினையு மிசைவதுவும், மயன்மே
லின்றியறிந்தான்யாரவனே யெல்லாமறிந்தானுமுயன்மேனின்றபோகி
யுநல்வினைகளெல்லாமுறுவானும்

இ-ள் மனதிற்குமேலாயிருக்கிற அறிவுமனதிலேயடங்கிமனதுவழி போகாதென்று மனதிற்குமேலாயிருக்கிறபுலன்களிலேயெல்லாவினையு ஞ்சேருமென்றும் விகாரமேவிடாமல் ஞானத்தையறிந்தபேர் ஆரோ அவர்களெல்லாமறிந்தவர்களென்றும் அவர்களேமனதிற்குமேலாயிரு க்கிறயோகிகளென்றுமவர்களேநல்லகருமங்களை யெல்லாஞ்செய்கிறபே ர்களென்றுஞ்சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர் என்றவாறு. ௰௨

## கலி விருத்தம்.

ஆவதென்பதுமாசையுமாற்றறு
மேவஞானவெந்தீயிடைவெந்ததீ
யாவர்தந்தொழிலில்வகையோர்களே
சாவதும்பிறப்புந்தவிர்ந்தார்கடாம்

இ-ள் என்னுமேலாகிறதென்கிறதையுமெனதென்கிறதையுமற்றதே மேலானஞானமென்றுந் தன்தொழிலேஞானக்கினியினலே சுட்டுவெ ந்த தீயாக்கும்பேராரோ அப்படிச்சொத்தபேர் ஜனனமரணத்தைச்சு ட்டுச் சாம்பலாக்கினபேரென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர் என்ற வாறு.

எண்ணுமின்றுமிகபரன்யாளினவை
பண்ணுகின்றனனென்றுமப்பான்மைபோ
யுண்ணுமேவினையுண்டெனவோர்கிலார்
நண்ணுகின்றவினைநலிவுண்ணுமோ

இ-ள் இகபரமாமென்றுயிருக்கிறவனும் இகபரத்தையுண்டாக்கினவ னும்நானென்கிறதையறிந்தபேர்மனதிலேவினையையெட்டுகின்று போ,

ட்டு வினையுண்டென்றுசொல்லார்கள் அப்படிச்செய்திருக்கிற பேர்களை வினையானது நலிபண்ணுமோ வென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. ௰௪

அடங்குகின்றபுலன்களோடாசைபோய்
மடங்குகின்றமனத்தினனானவை
வுடம்பிதன்பொருட்டாலுளதாவெனத்
தொடங்குகின்றவினைத்தொடக்குண்ணுமே

இ-ள்- ஆசைசேர்ந்திருக்கிற புலன்களுடனே மனதுசேர்ந்திருக்கிற பேர்களுக்கு அதின்மேலேதேகமுண்டாம் தேகந்தனதென்றுஎண்ணிவினைதொடர்ந்திருக்கிற பேர்களுக்குவினையென்கிற தொடக்குக்கெட்டுப் போகாதென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. ௰௫

பெற்றதேகொடங்கைவந்துமுன்பேரிழ
வுற்றபோழ்திலொத்தொன்றுமொருவர்பாற்
செற்றமேதுமிலாதவன்செயவினைக்
குற்றமோவவற்றின்றிறங்கூறக்கேள்

இ-ள் தேகமுண்டானதுகொண்டுஐம்புலாதிகளின்விவ்வார்த்தைதன்னுகமுன்னேதெரிந்தஞானவான்களவற்றிலொன்றிலேயுஞ் சேருகிறதுமில்லை அவர்களுக்குமொருவரிடத்திலேயும்சினேகமுமில்லை அப்படிக்கொத்தபேர்செய்கிற வினைகுற்றமாமோவென்றுமனதிலுடைய விவரத்தையின்னஞ்சொல்லுகிறேன் கேளென்றுஞ்சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர் எ று. ௰௬

விட்டுமுற்றும்வினைகள்வினைப்பயத்
திட்டமற்றிவைதன்னிலெழுங்கருத்
தொட்டநின்றவன்யாகப்பொருட்டுறப்
பட்டகாமப்பலத்துடன்மாயுமால்

இ-ள் கருமங்களையெல்லாம்விட்டுக்கருமபயத்தினுடையநடத்தையுமற்றுலோகத்திலே யுண்டானகருவைததொட்ட வஸ்துவேநானாகவெண்ணியிருக்கிற ஞானவான்செய்கின்றகருமம் பலத்துடனே மாயுமென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. ௰௭

பிரமநேயம்பிரமநெருப்பிடை
பிரமமாயமந்திரந்தன்னினாற்
பிரமமாயசருவுடன்பெய்துபின்
பிரமமேயடைவாருளர்பின்னுங்கேள்

இ-ள் நேசப்பிரமமானபிரமாக்கினியிலே நேசப்பிரமமாயிருக்கிறமந்திரத்தினாலே பிரமம் மாயாசமித்தானதேகத்தையாகுதிபண்ணிப்பின்பு பிரமத்தையடைகிறபேருண்டு இதுவல்லாமல் இன்னம்பிரமத்தை

யடைகிறபேர் செய்கிறவிதத்தைச்சொல்லுகிறேன்கேளென்றுசொன்
னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. ௰௮

அறிவதாகியவக்கினியிலேகொள
வறிவையேசிலராகுதிபண்ணுவர்
செறிவதாஞ்சமத்தியிடையேசில
வெறியதாய்புலன்களையிவர்கள்

இ-ள், அறிவாகிய அக்கினியிலேசேர்த்தக்கதாகஅறிவைத்தானேசிலபேராகுதிபண்ணுவார்களென்றுஞ் சமயத்திலேதாமுண்டாக்கின அக்கினியிலே குறிவைத்தெரிவதுபோலச்சிலபேர் ஐம்புலாதிகளை யிவார்களென்றுஞ்சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. ௰௯

புந்தியாய்ப்பொறியைந்தையும்போக்கவே
யிந்திரியத்சுழல்வாயிடுவார்சில
ரிந்திரியத்தொழில்யாவையுஞானம்செய்
சித்தியோக்கவெந்தியிடுவார்சிலர்.

இ-ள், நல்வாயிருந்தைஞ்துபொறியையும்,இந்திரியாக்கினிவாயிலிடுகிறபேர்சிலபேரென்றுமிந்திரியத்தொழிலெல்லாவற்றையும் ஞானமென்கிறசெய்வார்த்து யோகத்திலேவெந்த அக்கினியிலே யிடுகிறபேர்சிலரென்றுஞ்சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவரென்றவாறு. ௨௰

## அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

தேடியபொருள்களாலுஞ்செயலறிதவங்களாலும்
நாடியயோகத்தாலுநவின்மறைஞானத்தாலும்
கூடியபரிசில்வேள்விகுலாவுவாரனேகரிங்குப்
பாடியவிவர்களன்றியிணைஞ்சிலபரிசுங்கேளாய்.

இ-ள், சம்பாதித்ததிரவியங்களினாலேயும்வல்லமையினாற்செய்ததவங்களாலேயும்பிரமத்தைநாடிச்செய்தயோகத்தினாலேயுமசொல்லுகினநால்வேதஞானத்தினாலேயும்,பிரமத்தைக்கூடுகிறசித்தியம் யாகஞ்செய்கின்றபேரனேகம்பேருண்டென்று மிப்போதுசொன்னவிவரமல்லாமலின்னம் பிரமத்தைச்சேருகின்றவிவரமுண்டு அதையுஞ்சொல்லுகிறேன்கேளென்றுசொன்னார்ஸ்ரீகிருஷ்ணதேவர்என்றவாறு, ௨௧

## கொச்சகக்கலிப்பா.

மிகமேவின்றபிராமணனையங்கபானனிடையேபுகவிட்டுள்
ளகமேவின்றவபானனையிப்பிராணனிடையாகுதிபண்ணி
யிகமேயிரண்டுமயக்கமறவிருப்பார்சிலர்மற்றிவர்கள்கான
டகமேவின்றபிராணாயாமத்தேதலைநின்றவரென்பார்.

இ-ள்,முகத்திலேயிருக்கிறபிராணனை அபானனிடத்திலேபோகவிட்டுமென துக்கு அதிகமாயிருக்கிற அபானனை இந்தப்பிராணனிடத்திலேயாகுதிபண்ணிஇகத்திலேயிந்த இரண்டுமேயக்கமுமறத்தசகதாகவிருக்கிறபேர் சிலபேருண்டுபின்னையும் இப்படிக்கொத்தபேர்தேகத்துடனேயிருந்தாலும்,பிராணயாமததிலேமேலாயிருக்கிறபேரென்பார்களென்றுசொன்னார்ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. ௨௨

கலி விருத்தம்.

இன்னவர்கள்யாவர்களும்யாகமறிவாரே
யன்னவர்களேயானிற்றீமையினகன்றார்
சொன்னபரிசாவிவைதொடங்கிமுடியாதார்க்
கென்னபரிசாலுமிகமில்லைபரமுண்டோ

இ-ள்,இப்படிக்கொத்தபேரெல்லாரும்பிரமத்தைச் சேர்கிறவிவரத்தையறியார்களென்றும், அதுவல்லாமலிவர்களேதீமையைநீங்கஅறுத்திருக்கிறபேர்களென்றும்,அதுவல்லாமலிவர்களேதீமையைநீங்கறுத்திருக்கிறபேர்களென்றும்,நான்சொன்னபிரகாரமிந்தவகைசெய்துமுடியாதபேர் எந்தவகைசெய்தாலுமவர்களுக்குஇகபரமிரண்டுமில்லைஎன்றுசொன்னார்ஸ்ரீகிருஷ்ணதேவர்.எ-று ௨௩

அறுசீரடியாசிரியவிருத்தம்,

இப்படியுரைத்தவிந்தயாகங்கள்யாவுமுன்னுஞ்
செப்பியமரத்தின்கண்ணேசெனித்தனசெய்யுங்காலை
யொப்பரிதாயபுத்திகருமதத்தினுளவாமுள்ள
தப்படியறிந்துநீயும்பாவத்தினைகலநிற்பாய்

இ-ள், இந்தவிதஞ்சொல்லுகின்ற யாகங்களெல்லாமுன்னேசொன்னபிரமத்தினுடையகண்ணிலே பிறந்தனவென்று மதுவல்லாமல் ஒப்புக்குஅரிதானபுத்திகருமத்துக்குள்ளாவா யென்றும்யிதுவுண்டானகாரியமென்று நீயுமறிந்துபாவத்துக்கு அகலநில்லென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. ௨௪

கலி விருத்தம்.

தொன்மையாகமுன்சொன்னதொகைக்கெல்லாம்
நன்மையாமிகற்பாலதுஞானமே
பின்மையாலுறத்தாங்கதுபேணிடும்
தன்மையாதெனிலாங்கதுசாற்றுவாம்

இ-ள், என்போலாகிறதற்கு விவரமாய்முன்னேசொன்ன துகைக்கெல்லாம்நன்மையானதென்னவென்றால்களங்கமில்லாத அமுர்தமாயிருக்கின்றதுஞானமென்றும் இதுவல்லாமல்பின்னையும் தேகம்நாளுகத்தானேசெய்கின்றவகை எப்படியென்றாலதுவுஞ்சொல்லுகிறேன்கேளென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. ௨௫

விழியாமெனவறிவாலறிவுறுவார்விழிவசமே
வழிபாடுசெய்தவர்சேவடிமலர்சூடினவர்தா
மொழியாதவர்களுமயாவையுமொருநீயுனதிடையே
யழியாவகையதுவாவதோரறிவையருளுவரால்

[இ-ள்] அறிவின்கணவசமாய் வழிபாடுசெய்தவர்கள் சேவடியிலேமலர்சூடினபேர்கள் தமையிலாதநீச்சராகிலும் அவர்களுக்கு வழிபாலே அறிவினாலே அறிவுண்டாமென்று மானபடியினாலே எல்லாவற்றையும் நீவிட்டுவுன்னிடத்திலே அழியாவகையாயிருக்கிற பேரறிவையறியென்றுசொன்னார் கிருஷ்ணதேவர்-எ-று. ௨௬

அதனால்வருபயன்யாதெனிலறிபாதகமுதலாய்
விதனாடம்வினையாழியினிடையேவிழுகுறுவார்
இதனோடவறிவாகியசிகைபாமிதனையின
விதனும்வகைகளைசேர்வர்களொன்றுனேயெனிலதுகேள்

(இ-ள்) தயவுஞ்சாத்மீகமுமிக்லாமல்உலகத்திலேயிருக்கிறபேர்களுக்கு அதனால்வருகிறபயனென்னவென்றால் பழிபாதகமுதலானவெல்லாமுண்டாய் வினையென்கிற சமுத்திரத்திலேவிழுந்து அழுந்திப்போவார்களது எப்படியென்றால் அதிதனாயிருக்கிறதற்கு அறிவாகியவாளினாலே வினையெல்லாவற்றையும் சங்கரித்தால் எனைப்போலாகிறவகையாயத்தனைசேர்வார்களது எப்படியென்றால் அதுவுஞ்சொல்லுகிறேன்கேளென்றுசொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. ௨௭

எறியாவெரிவருகானிடையெரியாதனவெனவதா
னறியாவறிவுடையிர்களுமறிவீரதுமதுபோம்
குறியால்வருகுணஞானமேயனலேகொளுவிடுமேற்
பொறியால்வருவினையாமிவைபொடியாமிதுபொருளோ

(இ-ள்) காடானதுவெந்துபோமென்றறியாமல் காட்டுமொத்தானேயிறைந்து படுதிப்படுகோடுவெந்ததுபோலமனதினாலே வருகிறதையுங்குணத்தினால் வருகிறதையும் மெய்ஞ்ஞானமென்கிற அனலகொளுத்திப்போடுமென்று அறிவுடைய பேரறிவார்களென்றும் அதுவல்லாமல்பொறியினாலே வருகிறவினைப்பொடியாக்கிறது ஒருபொருளோவென்றுஞ் சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்என்றவாறு. ௨௮

கலித்துறை.

இதற்பாலம்வினைபுரிவோருஞ்சிலநாளி
லேதற்பாலாமறிவறிதக்கோயாமொன்னி
லோதற்பாலர்பாலுமிவ்வுண்மைப்பொருள்பாலுங்
காதற்பாலாம்புலன்களைவென்றாரிவர்கண்டாய்

(இ-ள்) கருமத்தைச்செய்கிறபோர் சிலகாலையிலே கருமத்தைப்போலத்தியையடைவர்களாகியவை நன்றாகவறிந்து பெரியோர்களாமென்ற ஞானத்தைச்சொல்லுகிறபெரியோர்களிடத்திலேயுமுன்னமையானவஸ்துவிடத்திலேயுங் காதலுடனே மனதுவைத்தபோர்களேஐம்புலனையும் வென்றபேர்களென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. ௨௯

சொல்லருஞானப்பொருடெரியாதுசொன்னாலு
மல்லவிதாமென்னையுறுவாருங்களில்லா
ரில்லைவராவரிகபரமில்லாரிவர்கண்டாய்
சொல்லறியாலேயையுறவற்றார் துறவுற்றார்

(இ-ள்) கருமிகளுக்குச்சொல்லுதற்கரிதான ஞானத்தினுட்பொருள் தெரியாது அல்லவென்றுஞானத்தைஎத்தனைசொன்னாலும்இதுபரமல்லவென்றுசந்தோஷப்படுவார்கள், சொல்லுகிறஞானத்தினிடத்திலேயன்பில்லாதபோவர்களுக்குச் சுகமிகபரத்திலுமில்லைபோறிவினுலேசந்தேகமற்றிருக்கிறபோ துறவான ஞானத்தை அறிந்தபேர்களென்று சொன்னார் கிருஷ்ணதேவர்-எ-று. ௩௰

அறுசீரடியாசிரிய விருத்தம்.

யறியாமையுமேபிறந்துன்றனகத்தேவளர்ந்தையமுறவை
நெறியாகிறஞானமெனும்வாளால்வெட்டியறநீக்கிக்
குறியாயுன்றன்வினைவிளைத்துக்கொள்வாயென்றங்கூறினன்
உறியார்வெண்ணெய்தொட்டுண்டிவ்வுலகமுண்டபெருவாயான்

[இ-ள்] என்னையறியாமையிலுலேயிதுவைக்கும்உலகத்திலேயுனே கசனனமெடுத்தாய் நீயுன்னுடைய மனதிலேவளர்ந்தசந்தேகத்தைச்செவ்வையாயிருக்கின்ற ஞானவாளினாலே நீக்கியறவெட்டிப்போட்டுக்குறிப்பாய்என்பேரிலே மனதைவைத்துஉன்னுடையகருமத்தைச்செய்துகொள்வாயென்று வெண்ணையுறிதாவியெட்டியுண்டுபூலோகத்தையுமுண்டபெருவாயனான ஸ்ரீகிருஷ்ணதேவர் சொன்னாரென்றவாறு.

௪-வது-சம்பிரதாய அத்தியாயம்-முற்றுப்பெற்றது.

—[*]—

ஆக-அத்தியாயம்-௪-க்கு-௩௰-யசெய்யுள்-௱௪௭

—[*]—

## ஐந்தாவது

# சந்நியாசியோக அத்தியாயம்.

—————(*)—————

கலிவிருத்தம்.

பூத்தருளியொருமலரார்புவனமவையேழுங்
காத்தருளிவிளையாடிக்கடையொடுக்கிக்கண்வளரும்
தீர்த்தன்மறைமுறைமொத்ததிருவாக்குத்தெரியாது
பார்த்தனவனெதிர்நின்றுசிலவின்னும்பகருரைத்தான்.

(இ-ள்) திருவுந்திக்கமலமா பூவொன்றிலே ஆதியிலே பதினாலு லோகத்தையுஞ்சிருஷ்டித்தருளிநடுவிலே அதைக்காத்தருளித்தாமுங் கூடிநின்றுதிருவிளையாடலாடி அந்தத்திலேயொடுக்கியோகநித்திரை செய்தருளுகிறசுவாமிவேதவிதியாகச்சொன்னதிருவாக்குத்தெரியாமல் அந்தச்சுவாமிமுன்னேநின்றுபின்னையும் அருச்சுனன்சிலவசனஞ்சொல்லுகிறானென்றவாறு. * கடையென்பதனாலே ஆதிமத்தியம் வந்தருத்தாபத்தியொடுக்குதலாவது திருவயிற்றிலேயடக்குதல்.) ௧

கலிவிருத்தம்.

கருமநன்றெனவுமெதிர்கூறுகின்றனையறிவை
யருமருந்தெனமொழிதியவையிரண்டினுமமல
ஒருமையென்றுவர்தலையுணர்செயென்றனன்விசைய
னிருமையின்பரிசுமீதுவெனவியம்பிடுமிறைவன்.

(இ-ள்) கருமத்தைநல்லதென்றும்முன்னேசொல்லுகிறீர் ஞானத்தை அரிதான அமிர்தசஞ்சீவியென்றும்பின்னேசொல்லுகிறீர் நின்மலமான சுவாமி அந்தக்கர்மஞானமென்றவிரண்டிலும ஒன்றென்று அதிகமான தேது அதைச்சொல்லுமென்றான் அருச்சுனன் அதற்குச் சுவாமியிரண்டின்விசுமுமிதுவென்று சொல்லுவாரென்றவாறு, * மருந்தெனவுமென்றும்மைவருவிக்க.) ௨

துறவுநன்றருவினைசெய்தொழிலுநன்றிவைதுணியி
லறவுநன்றருவினைகள்விடுவிலக்கவைமுயல்கை
பெறலினின்பமுமிழவினிடருமொன்றிலர்பெரிது
துறவினின்றவர்பிறர்கடியேறினின்றிடுதொழிலர்

[இ-ள்.] ஞானமும்நல்லது அரியகாரியத்தைச்செய்கிறகருமமும் நல்லதுஇந்தஇரண்டிலும் அதிகமேதென்று சொல்லத்துணிந்தால் அரியகருமங்கள் மெத்தவும்நல்லது அந்தக்கர்மங்களைவிடுகிறதிலுஞ்செய்கிறதிலும்நல்லது பலன்பெறுதலிலே சந்தோஷமும்இழக்கிறதிலேதுக்கமும்இவைகளொன்றுமில்லாதகாமிகளேபெரியஞானத்தில் அசையா

மல்நின்றவர் இப்படி இல்லாதவர்களானஞானிகளே துக்கத்திலசையாமல்நிற்கிறகருமிகள்-எ-று. * (பிறர்களாவது பெறுதலிலேசந்தோஷமும் இழக்கிறதிலே துக்கமுள்ளஞானிகள் பெரியகருமியென்றுமறிவது ௩

பெறுமையென்றிய துறவுகருமமென்றிருமையினு
மருமையொன்றினையறிஞானவிரண்டையுமுடைய
ரிருமையென்றறியுமவரிவையறிந்திலரியல்வி
னொருமையென்றுணருமவரிவையுணர்ந்தவருணர்வில்

(இ-ள்) பெருமைபொருந்திய ஞானகர்மமென்கிற இரண்டிலும் ஒன்றையருமையாக அறிந்தவர்களே அந்தஇரண்டையுமுடையவர்கள் இரண்டையுமொன்றென்றறியாமலிரண்டென்றறிகிறவர்களே இரண்டையுமறிய அறிவில்லாதவர்களிந்தவிரண்டும் ஒழுசுபாவத்திலே அறிவினொன்றென்றறிகிறவர்களே யிரண்டையுமறிந்தவர்-எ-று, * துறவாவது விடுதல் இந்தவிடுதலே ஞானமென்றுரையெழுதுவானேனெனில் அறம்பொருளின்பமான கர்மமூன்றையும்விட்டதேஞானமாகையாலே துறவைஞானமென்றுரையெழுதினது இரண்டாகஅறிதலினாலேகர்மபந்தப்படுவனென்பது இயல்பினொருமையென்றுணருமவரென்பது கர்மானுபாவத்தையும், ஞானானுபவத்தையும், முன்னிலாராய்ந்து மனதிற்கொண்டுதக்கொண்டதுசுபாவம்இந்தச்சுபாவத்திலேயிரண்டனுபவமுமொன்றென்றதினாலே ஞானகருமமென்றயிரண்டுமொன்றென்றுகொண்டறிகிறவர்களென்பது இதனாலே யிரண்டென்றறிகிறவர்கள் அறிந்தவிரண்டையுமே அறியார்களென்பது ஒன்றாக அறிந்தவன் ஞானியென்பதருத்தாபத்தி ) ௪

வினைமுயன்றிடவதனில்வினைதருந்துறவதுகொ
டெனைநடந்திடுமெவர்களுமதன்செயலெதெனி
னினைவருந்தகையபொருணெறியந்தவர்கணெறி
டனைதந்தொழில்புரியுமவர்களென்பதனையறி.

[இ-ள்] பதனையிச்சியாதகருமத்தைச்செய்ய அந்தக்கருமபலத்தில் ஞானமென்னையும் அந்தஞானத்தைக்கொண்டவர்களும் என்னைச்சேருவார்கள் அந்தக்கருமத்திலசைகையேதென்றால்நினைக்க அரிதானசுபாவமுள்ளபொருளின்மார்க்கத்தை அறிந்தவர்களுடையவழியையொப்பான தங்கள்கருமத்தைச்செய்கிறவர்களென்கிறதைநீயறியென்றவாறு *என்னையடைதலாவது பிரமத்தையடைவதென்பது இந்தப்பிரமத்தையடைகிறது இன்னாருக்குண்டு இன்னாருக்கில்லையென்பதில்லைஎவர்களுங் கருமநிஷ்டனாகிப்பிரமத்தையடைவார் அந்தக்கருமச்செயலேதென்னிற் பிரமத்தையடைகிறவர்கள்வழியேகருமம்நினைக்க அரிதானசுபாவமுள்ளபொருளாவதுபிரமம்நினைவருசத்ய பொருணெறியறிந்தேதெலறிய தனையதந்தொழில் புரியுமவற்றிந்தேவா றிஞ் பாட மோதில்

பிரமார்க்கத்தை யறிதலரிது அதையறிவதாரென்னில், அதையொப்பாரையங்களுடைய கருமத்தைச்செய்கிறவர்களறிவர் அதைநீயறியென்றுரைகொள்ளும்( [ரு]

கவைதருங்குணனுமிகுகளிதரும்புலனுமெனு
மிவைகடந்தவர்களெனையறிவினின்றிசையுமர்
கவைதருந்தொழில்செயினுமலிவதெங்கவரையவை
யவையுகந்தவர்கள்வினையவையுறந்தடைகுவதென்

(இ-ள்) கருமத்தைத்தரப்பட்ட குணமுமிகுந்தசுகத்தைத்தரப்பட்டவிஷயமுமென்றுசெல்லப்பட்ட இதைக்கடந்தவர்களென்னையறிவிலேநின்று பொருந்தப்பட்டவர்களிவர்கள்துக்கத்தைத்தரப்பட்ட கருமத்தைச்செய்தாலும் அந்தக்கருமம் அவர்களை எங்கேயும் துக்கப்படுத்தும் வருத்தமாட்டாது தானேகெடும் அந்தக்கருமத்தை இச்சித்தவர்கள் அந்தக்கருமத்தினாலே விளைகிறபயனை விட்டுப்பெறுவதென்ன அந்தப்பலனையேபெறுவதென்ன அந்தப்பலனையேபெறு என்றவாறு(குணத்தையும் விஷயத்தையுங் கடந்தவர்கள் நிர்மலராகையாலே அவர்களைச்கருமமான அழுக்கடையாது இச்சித்தவர்கள் குணவிஷயங்களுடனே கூடினவராகையாலே பலனாகிய அழுக்கடையுமென்பது) சு

அறுசீரடியாசிரிய விருத்தம்,

காணுங்கேட்குமுறுமுகக்குங் காலானடக்குங்கண்வளரும்பேணுந்துறக்குமூச்சுவிடும்பேசும் கண்விழிக்குஞ்சும்பிளிக்கும்,பூணுமினும்பலவெளினும்புலன்சேர் பொறியின்புணர்ப்பென்றே, தூணுங்கிரியுமெனவென்றுந்துளங்கான்விளக்குந்துணிவுடையோ.

[இ-ள்] கண்பார்க்கும் காதுகேட்கும் தோல்பரிசிக்கும் மூக்குமுகக்கும் கால்நடக்கும் நித்திரைபண்ணும் கூடும்விடுமூச்சு விடும்பேசும்நண் விழிக்கும்கண்மூடும் இப்படித்தரிக்கப்பட்ட இந்திரியங்களேமோனும் விஷயங்களைச்சேர்ந்த இந்திரியங்களின் அனுபவமென்றேநிச்சயமாக இவையெல்லாம் நான்பண்ணினவனல்லவென்றும் தூணைப்போலும்மலையைப்போலும் என்றைக்குஞ்சலங்காத அணிவுவிளக்கப்பட்ட துணிவயுடையவன்-எ-று.*இவையெல்லாம் தான்பண்ணினவனென்றுந்தன் அனுபவமென்றும் அறிந்தவன் துரும்பைப்போலும் அனுவைப்போலுஞ்சேமாறுவனென்றதருத்தாபதத்தினாலல்லவென்று விளங்காதவன் துளங்குவனென்றும். (எ)

யாரும்வினைகளென்பொருட்டாலியற்றிப்பயனையிகள்வார்கள்
சேரும்வினைகள்வற்றோடுசேராரோவத்திடனுரைக்கிற்
சாருமுடனேபிறந்திகழினுந்தண்டாயரையின்றகையிலையு
நீருமெனலாவிரப்பாதுநின்றூர்கென்றுநிகழாதால்.

(இ-ள்)ஆராகிலுமென்னிமித்தமாகக்கருமங்களைச்செய்துபிரயோசனத்தைவிட்டவர்கள்தங்களைச்சேரப்பட்டகருமங்களோடுந்தாங்கள்சே

ரார்கள் அந்தக்கருமங்களோடு சேராதவர்களுடனே அந்தக்கருமங்கள்
சேர்ந்தவிதத்தைச்சொல்லிச் சார்பாகப்பட்ட தந்நீருடனே கூடப்பிற
ந்தெழும்பினாலுங் குளிர்ந்த தாமரையினிடமான இலையும்நீரும் ஒன்
றோடொன்று கூடினாலும் ஒட்டாதுபோல விரும்பார்கள் அப்படிஒ
ட்டாமல் நின்றவர்களுக்கு என்றைக்கும் நடவாது-எ-று நடவாதாவது
அவர்களுடனேகூடிநடவாது அப்பொழுதே யழியுமென்பது ஒழிவு
மென்றவும்மை சிறப்பும்மை நீரிலேபிறந்துநீரிலேவளர்ந்து நீரிலெழு
ம்பிஎல்லாம்நீராகே விளங்கினாலு மந்தநீரும் இலையும்கூடினாலும் ஒட்
டாததினாலேசிறப்பும்மை] [அ]

கொச்சகக்கலிப்பா.

உடனாயபுலனானுமன்னானுமுடம்பானு
நடமாகுமெனமுயல்வானாடோறுமுயன்றாலும்
விடமாகும்வல்வினையேவீடாகும்வினைப்பயனைக்
கடனாகுமெனநிலவானவற்றாலேகட்டுண்பான்.

(இ-ள்) மருமத்துக்குடனாகிய விஷயத்தினாலும் மனதிலும்உடம்
பினாலும் பலசங்கம்நஷ்டமாகுமென்று கருமத்தைச்செய்வார்கள் தின
ம்தினமுஞ்செய்தாலும விஷயத்தையொப்பாகவெறுக்கப்பட்டவனு
மையானகருமமேமோக்ஷமாகும்கருமப்பலனைத்தனக்கு அனுபவிக்கக்
கடனென்றிச் சித்துச்செய்கிறவன் அந்தக் கருமத்தாலே கட்டுண்பா
ன்-எ-று. 'பலசங்கநஷ்டமாவதுகருமபலத்துடனேகூட்டம்நாசமென்ப
து பலத்துடனே கூடினசித்தத்துக்குப்பலசங்கம்நஷ்டமாக 'வசித்தசு
த்தியாமென்றறிவதுபலனை விஷயமாகநினைத்துச்செய்கின்றகருமிக்கு
அந்தக்கருமமேமோக்ஷமாம்வேறிலலைகருமம்பலனை அமிர்தம்போல அ
னுபவிக்கக்கடனென்றிச்சித்தவன் கருமபந்தப்படுவனென்பது விஷ
யத்தால் வந்த அமிர்தம் ஆகுபெயர் [௯]

கலிவிருத்தம்.

அன்பவினையாருபயன்விட்டமைதியாலே
யொன்பதுபொய்வாயிலமைபுரதனினுள்ளே
இன்பவுருவாயினிருப்பனியல்பாயே
முன்பயில்வதாம்வினைசெயன்முயல்வியேனால்

இ-ள், தோழர்கருமத்தாலுண்டாகிறபிரயோசனத்தைவிட்டு அடங்கி
மைந்தவிவேகசித்தத்தினாலேஒன்பதுபொய்வாசலமைந்த டங்கானதே
கம் அந்தத்தேகத்தினுள்ளேசுக சொரூபமாய்ச்சுகமாயிருப்பான்கரும
மானதுசுபாவமாகவே அநாதி யேவந்தபழக்கமாம் நான்கருமத்தைச்
செய்யேன்செய்வியேன்என்றவாறு ❋ ஞகன்பொழிப்புரை இந்திரியசெ
யமுண்டானவன்எப்படியிருப்பானென்னில் அடங்கியமைந்த விவேகசி
த்தத்தினாலே கருமத்தாலுண்டாகிறபிரயோசனத்தைவிட்டுத்தான்கரு
ம ம ப ண் ணே ன் ப ண் ணு வி யே ன் க ரு ம மா ன து ந வ த்
து வா ர பு ர மா ன தே க த் து க் குச் சு பா வ மா க அ

ணாகியேவந்தபழக்கமென்று அந்தத்தேகத்துக்குள்ளேசுகசொரூபமாய்ச் சுகமாயிருப்பனென்பது இதனையமைதியாலேவினையாகுபயனைவிட்டு வினைசெய்யேன்முயல்வியேனென்பது பொய்வாயிலனைமயூரியல்பாயே முன்பயிலவதாமதனினுள்ளேயின்பவுவாயினிதிருப்பனென்மாறுக [௰

இவ்வகையினையசெயல்யாவுமியல்பேசா
னெவ்வகையமாயையதனாலறிவுறாதே
செவ்வகையன்யானெனதுசெய்கையிவையென்றே
மொய்வகையினாலழிவரோபுலனிலாதார்

[இ-ள்) இந்தவிதத்தினாலுண்டாகிய கருமங்களெல்லாஞ்சுபாவமேகண்டாய் அருச்சுனா அந்தவிதமானமாயையினால் அறியமாட்டாமல்கருமங்களைச்செய்தவன் நான் இந்தக்கருமங்கள் நான்செய்தேனென்று நிச்சயமாகப் பொய்விதத்தினாலேநாசமாகிறவனேயறிவில்லாதான்-எ-று*என்றேயென்றஏகாரமும் இயல்பேயென்றஏகாரமும் உறாதேயென்றஏகாரமும்அழிவதேயென்றஏகாரமும்தேற்றேகாரம். அறியமாட்டாமலாவது கருமங்களைச்சுபாவமென்றறிய மாயாமயக்கத்தினாலே மாட்டாமலே நான்செய்தேன்என்கருமமென்றேபொய்யானஅகங்காரசுதந்தரவிதத்தினாலே யறிவில்லாதானாசமாகிறதே யல்லாமல் இருக்கமாட்டுவானேமாட்டானென்பது இயல்பேயாவது சுபாவமேயல்லாமல் வேறல்லவென்பது அறிவுறாதேயாவது அறியமாட்டாமலேயல்லாமல் அறிந்தல்லவென்பது என்றேயாவது நான்செய்தேன்கருமமென்றேயெல்லாம சுபாவமாகச்செய்யப்பட்டது சுபாவமாகவுள்ளகருமமென்றெண்ணமலென்பது, அழிவதேயாவது அழிவதல்லாம லிருப்பதில்லையென்பது அறிவுள்ளவர்கள் மாயையைநீங்கிச்சுபாவமென்றறிந்து தன்செயலுஞ் சுதந்திரமும்மற்றும் அழியாமலிருப்பனென்பதருத்தாபத்தி- (௰௧)

கலிவிருத்தம்.

அறிவினாலறிகிலா தவையெலாமழியவே
செறிவினாரறிவுளா னிரவிபோற்றிகழுமா
னெறியினானிதனினோர் நிலையுமாயிதனிலோர்
பிறிதிலாவகையினார் பிறவியாணையிலார்

[இ-ள்) ஞானத்தினாலே அஞ்ஞானமெல்லாம் நாசமாகவேகனமானவர்கள் ஞானமான ஆகாசத்திலேவிளங்குகிற சூரியனைப்போலப்பிரகாசிக்கும். இந்தமார்க்கத்தினாலேஞானத்திலேநிலைமையும் நிஷ்டையுமாகி இந்தஞானாத்மாவானசைதந்நியனிடத்தில் வேறொன்றில்லாவிதத்தினாலேபரவசத்தையுடையவர்கள்இனிமேற்பிறக்கிறதான சன்மமில்லாதவர்கள்-எ-று,* வேறொன்றாவது அஞ்ஞானத்திலேமயங்கி ஆங்காரத்தையடைந்து மறுபடியும்பிறக்கிறது) [௰௨)

அறுசீரடியாசிரிய விருத்தம்.

நன்றேஞானம்வருமறையோனாட்டினாயினிறைச்சியினைத்
தின்றேயழலுமவன்யானையாவேனறிந்திறந்தெல்லா
மன்றேயெனவுணர்தாமென்னுரைநிவாய்நின்றவனேயெங்கும்
ஒன்றேயரக்கக்கண்டிருப்பானுடம்போடிருந்தேயுடம்பறுப்பான்

(இ-ள்] நன்கமையுள்ளஞானம்வரப்பட்டபிராமணன் நாட்டிலேநாயி னைச்சியைத்தின்று தம்மாறுகின்றநீசன் ஆனை பசு இப்படியென்றறிந் தவிதத்திலெல்லாம் ஏற்றைககுறைச்சலினுமேல அல்லவென்னுமல் ஆத் மாவைப்பின்று அந்தக்கருமங்களெங்கும் ஒன்றாகவேகண்டிருக்கிறவன் அந்தவுடம்போடேயிருந்த சிருஷ்டிதேகத்தைத்இனிமேல்வாராமலறுப் பான்-எ-று-*இப்படியெல்லாரிடத்திலும்ஆத்மாவொன்றாகக் கருமங்க ளுமொன்றாக இதையல்லவென்னுமல் ஆமென்னுமல்சமமாகக்கண்டிரு க்கிறவனிந்ததேகத்துடனே இந்தப்பிறவியையொழிப்பானென்ன பது. [௰௩]

இகமேநிகழுபுலன்விளைந்தவின்பமெல்லாமறவிழ்ந்துள்
ளகமேநிறையும்பேரின்பமடைந்தார்கமென்றுமழியாதாற்
புகமேய்கின்றபுலன்பொறிகளபுணர்ந்தெயின்பமாமென்றுந்
துகமேவிடார்களெனவுவமைதத்கோரென்றுஞ்சராரால்

(இ-ள்]வெளியிலேவிளங்கும் விஷயங்களிலே விளைந்தசிற்றின்ப மெல்லாமறவிட்டு உள்ளேநிறையப்பட்டபேரின்பத்தை யடைந்தவர்க ளுக்கு என்றைக்குமக்கப்பேரின்பமழியாது மனதிலேபுகுந்த அனுபவிக் கின்ற விஷயங்களிந்திரியங்களைப்பொருந் திச்சுகமாமென்றும, அ நுபவத்துக்குத் தக்கதாகமேலிட்ட துக்கமாமென்றும், அவைகளை ஞானத்துக்குதக்கவர்களான பிரமஞானிகள என்றைக்குஞ்சேரார்க ளென்றவாறு*[பேரின்பமாவது ஆத்மசித்திஆசையால் ஆத்மலாபம் பெற்றவர்களுக்குபிரமநிஷ்டைதவிராதென்பது ஆல் ஆசை சுகமாமெ ன்ற சந்தோஷத்தையுந்துக்கமாமென்ற கிலேசத்தையும ஆத்மஞானிக ளடையாரெனவே இதிவிளையாததிருத்தியாயிதைமோகியாத அமோகி யாயிருப்பானென்பது அருத்தாபத்தி) [௰௪]

கலிவிருத்தம்

உடம்புடனேயுளனாகியிருந்தே
விடம்புனாகாமவெகுளியின்வேகாச்
சடம்பொறையாமைதவிர்ந்தவனேநல்
விடம்புகுஞானியுமின்புறுவானும்

[இ-ள்] உடம்புடனேயுள்ளவனாகியிருந்தேவிடத்தை யொப்பான காமத்தின்வேகம் கோபத்தின்வேகம் இந்தவேகங் களாலாகிறதேக ம்பொறுமையைத் தீர்த்தவனேநல்லிடமானமோட்சத்தைக்

கூடுகின்ற ஞானியுமானந்தம் பெறுவானென்றவாறு *(உடம்புபோன பின்பு அறிவுவாராததினாலே உடம்புடனே இருக்கும்போதுதானே ஞானம்பெறவேண்டுமாகையால் தம்மிருக்கும்போதுதானே காமக்குரோதாதிகளின் வேகத்தைப்பொறுக்க அறிகிறவனே ஞானியுஞ்சுகியுமென்பது, இதையறியாதவன் மூடனுந்துக்கியுமென்ற கருத்தாபத்தி.) (௰௫)

மெய்பறிவே விளையின்பமதாகவு
மெய்பறிவே விளையாடிடமாகவு
மெய்பறிவே மொழியாகவுமே யவா
மெய்பறிவே பெறுமின்பம்விடாதார்.

இ-ள் ஆத்மாவே விளையப்பட்ட சுகமாகவும் ஆத்மாவே விளையாட்டிடமாகவும், ஆத்மாவே சோதியாகவும், இப்படியாகுமிவர்கள் ஆத்மாவே பெறப்பட்ட மோட்சசுகத்தை விடாதவர்கள்-எ-று *(விளையாடுமிடமாவது, ஆத்மா ராமமானந்தமாவன-இதை ஆத்மாராமனென்பார்கள்) (௰௬)

காவல்செய்தைந்துபுலன்களிரண்டு
மேவலரும்புருவத்திடை விட்டிட்
டாவகைநின்றவபானபிராண
னேவலிலானடக்கைகடறுந்தே.

இ-ள், பஞ்சேந்திரியங்களை விடயங்களிலோடாமற் காவல்செய்து கண்களிரண்டும் போகத்தைக்கூடவருகிற புருவத்திடைவிலேவிட்டு நிறுத்தி யோகத்துக்கானவிதமாய்நின்று அபானவாயுவையும் பிராணவாயுவையுந்தன்னுடையவவ்விருலோடி மீளுவதல்லாமல் உவைகளின் சுபாவமாகவோடுவதான அசைகின்றதையறுத்தது அக்களென்றவாறு. (௰௭)

அஞ்சுபொறுத்திறனாசையடக்கா
னெஞ்சுபயத்தொடுகோபமுனீவா
வெஞ்சுகிறத்தொலியேகிகளேகா
ஞஞ்சுபிறப்பிடரியாவுமுதிர்ந்தார்

இ-ள் பஞ்சேந்திரியவிதங்களின் ஆசையையடக்கி மனதுபயத்துடனே கோபமும்நீக்கிஒருநிமிடமானாலு மிளைத்துவிடுவதில்லாமல்நிரந்தரமுமிப்படியிருக்கிறயோகிகளேகண்டாய்கருமத்துக்குத்தப்பிப்பிழைத்துப்பிறவிதுக்கமுதலான துக்கமெல்லாங்கீழேவிழ அடித்தவர்கள்-எ-று *(காவல்செய்தன்றகவியும் அஞ்சுபொரியென்றகவியும் உரைபொருதொடர்-இந்திரியங்களைக்கட்டிக்கண்ணிரண்டையும் புருவநடுவேநிறுத்திப் பிராணவபானனுனவிரண்டும் ஆசையாக அசையாமற்றனக்

குவேண்டியபோதசையஅடக்கிஇந்திரியஆசையையடக்கி மனப்பயத்
தையுங்கோபத்தையுநகைவிட்டு இளையாமலெப்போதுமிப்படியிருக்
கிறயோகிகளே தப்பிப்பிழைத்துப்பிறவித்துக்கமுதலான துக்கமெல்லா
ம் விழுந்தள்ளினவர்களல்லாமல் இப்படியிராதவர்களல்ல கண்டாயருச்
சுனவென்று இரண்டுகவிக்கு மிதுபொழிப்புரை உயர்ந்தலாவதுஇப்ப
டியிருக்கிறயோகிகள் மேலேறினவர்களாகையால் அங்கேகூடவிருந்த
பிறவித்துக்கமுதலான வெல்லாங்கீழேயுதிர அடித்தவர்களென்பதுஇ
வர்களுக்குப் பிறவி முதலொரு துக்கமுமில்லாதவரென்றதருத்தாபத
தி.] ௰௮

அறுசீரடியாசிரிய விருத்தம்.

சாதிபுரியுந்தொழில்களுக்குந்தக்கோர்செய்யுந்தவங்களுக்குத்
தீதிலுலகமேழினுக்குஞ்சேருமிடனுயுள்ளவெனை
யோதிமுடியும்பரிசேமெய்யுணர்ந்தார்பிறவாரெனவுரைத்தா
னாதிமுடிவொன்றின்றியேயனைத்துந்தானேயாய்நின்றான்.

இ-ள், அந்தந்தச்சாதிகள்செய்யப்பட்ட கருமங்களுக்கும்பெரியோர்
செய்யப்பட்ட தவசுகளுக்குங் குற்றமில்லாத வேழுலோகங்களுக்குஞ்
சேரப்பட்ட இடமாயிருக்கிற வென்னையோதி முடியப்பட்டமுறைமை
போல மெய்யாக அறிந்தவர்கள் இனிபிறவாரென்று சொன்னார் அவர்
யாரெனில்ஆதியந்தமொன்றுமில்லாமலே யெல்லாந்தானேயாகின்றஸ்ரீ
கிருஷ்ணதேவர்-எ-று. ௰௯

ரு-வது-சந்நியாசியோக அத்தியாயம்

முற்றுப்பெற்றது.

——[*]——

ஆ-அத்தியாயம்-ரு-க்கு-கூடியசெய்யுள்-௩௯.

ஆறுவது-

# அப்பியாச யோகஅத்தியயம்,

கலிவிருத்தம்.

யோகமனந்தவர்யோகமதற்கே
யோகமுதற்பொருளாகியிருந்தே
நாகபடத்திடையேநடமாடு
மேகனவர்க்கிவைமீளவிசைப்பான்,

இ-ள், யோகமனதுடையவர்களின் யோகத்துக்கு ஒன்றானபொருளாயிருந்தே காளிங்கனென்னுமொருபாம்பின்நடுவே கூத்தாடப்பட்ட மேகநிறமானதிருமேனியையுடைய ஸ்ரீகிருஷ்ணசுவாமி அருச்சுனனுக்கு இவைகளைத்திரும்பச்சொல்லுவார்-எ-று, (க)

செய்தவினைப்பயன்வட்டவைதீரா
செய்தவியத்தியிருப்பவனேகா
ணுய்யநினைத்தநல்யோகியுஞானி
வெய்தழற்பொலிவேள்விசெய்வானும்.

இ-ள். செய்தகருமபலத்தை யிச்சியாமல்விட்டு அந்தக்கருமத்தைவிடாமற்சேரச்செய்கிறவனேகாண் டாயருச்சுனா தபபிப்பிழைக்கநினைக்கிறநல்லயோகியும்ஞானியும் உஷ்ணமுள்ள அக்கினியிலேவிலங்கயாகஞ் செய்கிறகருமியும்-எ-று, * இவன்பலநகிகனேயல்லாமல் கருமர்கித நல்லவென்பது இதைஞானயோகமென்பார்கள் இதுவேசத்துவயோகமென்றறிவது.] (உ)

யேவினையாவையும் விடுதலில்லா
ரிபாவர்களேனுநல்யோகிகளாகா
ராவர்களாகில்வாவறலாகா
னேவலிலாதமெய்யோகமுடையா,

இ-ள். ஐபாதங்களைச்சேர்ந்ததான சங்கற்பமெல்லாம்நாசமில்லாதவர்களெவர்களானாலும்நல்லயோகிகளாகமாட்டார்கள்சங்கற்பமுள்ளவர்கள்யோகிகளாவார்களாகில் ஆசையறுதலேகண்டாயிந்திரியவிஷயமில்லாதமெய்யோகமுமெய்ஞ்ஞானமும்-எ-று இதனாலாசையறுவிடிற்சங்கற்பமறுந்து சங்கற்பமறுவிடில் யோகிகளாகார்கள் ஆவர்களெனில் அவர்களைபொய்யோகியும பொய்ஞ்ஞானியுமென்ப தருத்தாபத்தி யோகமுங்கருமமாகவிருக்கயோகம்வேறுகருமமவேறாக்க சொல்லுவதேதெ

ன்னில் சரியைகிரியையோகம் ஞானமென்றுநாலாம் இந்நாலுங்கருமமே இதைப்பற்றிவிபேதத்தினாலே ஒன்றைநாலாகினதுபதவியாவது சாலோகஞ்சாமீபஞ்சாரூபஞ்சாயுச்சியமென்று நாலாம்சாலோகம்கடவுளுலகத்திலிருந்தல் சாமீபத்திருத்தல்சாரூபம்கடவுளுருப் போன்றிருத்தல் சாயுச்சியம்கடவுளிற்கலந்திருத்தல். (௩]

உய்வகையோகமொருப்படுவார்க்குக்
கைவருமாசெயல்காரணமேகாண்
மெய்வகையோகம் விளைந்தபின்மெய்யே
செய்பவனவானவைதீமையவேயாம்

இ-ள். தப்பிப்பிழைக்கிறவிதமானயோகத்திலொருமைப் படுகிறவர்களுக்கு அந்தயோகம் கைவருகிறகருமமேகாரணங்கண்டாயருச்சுனா அப்படி மெய்யானவிதமாகியயோகம் விளைந்தபின்பு செய்கிறதான் அந்தக்கருமமானது மெய்யாகவே பொல்லாதாகும்-எ-று. * (ஏகாரம்) அசையோகமே ஞானம ஞானத்துக்குமப்படியென்பதருத்தாபத்தி] (௪)

புன்மைவாயபொறித்திரளோடும்
பன்மைவாயவினைப்படலோடும்
அன்னமையவனைப்பொழுதையா
தன்மையில்யோகமதித்தலைநின்றான்

இ-ள். பல்லியதாகிய விந்திரியவிரங்களோடும் பலவிதமாகியகருமபலத்தோடுங்கூடாதவன் அப்பொழுதே ஐயாதன்சுபாவமில்லாதயோகத்திலே தலைமையாகநின்றவன்-எ-று. * [கூடினவன் கீதாநாசமானமென்பதாகத்தாபக்கி உண்மையாவது அல்லாதவன் அதாவது விஷயங்களோடும் பலத்தோடுங் கூடினவனல்லாதவன் ஆகையாலேகூடாதவனென்பது அப்பொழுதேயென்றது பின்னேவருமென்றபடி அப்பொழுதேயென்றது சங்கைநிவார்த்தி-] [௫)

தானலதியாவர் தன்மேன்மைதக்கோர்
தானலதியாவர் தன்கீழ்மைகமைப்பார்
தானலதியாவர் தனமெய்ப்பகையராவார்
தானலதியாவர் தனக்குறவார்

இ-ள். இப்படிஞானசிரேட்டனாகநின்றவர்தானே தனக்குமேன்மை செய்யத்தக்கவரல்லாமல்வேறேயார்தனக்கு மேன்மைசெய்யத்தக்கவர்களாருமில்லை இப்படி ஞானநிலையில்நில்லாதவன்தானே தனக்குக்கீழ்மை செய்கிறவனல்லாமல் வேறேயார் தனக்குக்கீழ்மைசெய்கிறவர்களாருமில்லை இப்படிக்கொத்த அஞ்ஞானிதானே

தனக்குமெய்யான பகையல்லாமல் வேறேயார்பகையாகிறவர் ஆருமில்லை உங்களுக்குத்தானேதனக்கு உறவல்லாமல்வேறேயார்தனக்கு உறவாகிறவர்கள்யாருமில்லை-எ-று. ※ [இதனால் ஞானியாயிருந்தால்தானே தனக்குமேன்மைசெய்கிறவனும்உறவாகிறவனும் அஞ்ஞானியாயிருந்தால் தானேதனக்குக் கீழ்மைசெய்கிறவனும் பகையாகிறவனும்தன்னையல்லாமல் வேறேயாருமில்லையென்பது ஆனாலன்னியராலே வருகிற தேகிதனைனில் அதுவுந்தன் ஞானஞ்ஞானங்களால்வந்ததாகையால் அன்னியராலே வந்ததல்ல தன்னாலேவந்ததேயாம் ஆகையால்தனக்கு நன்மைவேண்டில்ஞானியாயிருவென்றது அருத்தாபத்தி. [சு)

அறுசீரடியாசிரிய விருத்தம்.

இறவாவகைதம்முள்ளத்தையடக்குமவரோதமக்சென்றுமுறைவாயுள்ளாரல்லாதார தமக்கேபகையாரொழுகுவார். துறவாதொழுகுந்துவந்துவங்கடுறந் தொன்றினையேதொடர் தவாபான், மறவாதொழுந்த மெய்யறிவும்மாயைமறைக்கமறையாதலால்.

[இ-ள்) ஆத்மஞானத்தை நாசமாக்காதபடிக்குத் தங்களின்மனதையடக்கப்பட்டவர்கள் என்றைக்குந்தங்களுக்கு உறவாயுள்ளவர்களிப்படியல்லாதவர்கள் தங்களுக்கே பகையாய்நடப்பவர்கள்விடாமல்நடக்கப்பட்ட பாவத்தொடர்புகளைவிட்டு ஒன்றான ஆத்மாவையே தொடர்ந்தவர்களிடத்தில் மறவாத அனுசந்தனத்தி லெழுந்தமெய்ஞ்ஞானமானது இந்தமாயைமறைக்க அதனாலே மறையாது-எ-று. ※(இதனால் நன்மனதைச் செயித்தவனுக்கு அந்தமனதே யுறவு செயிக்காமலவிட்டவனுக்கு அந்தமனதேசத்துருதுவந்துவமானமாயாசம்பந்தங்களைவிட்டு ஆத்மாவையே தொடர்ந்தவனுக்கு அனுசந்தானத்தி லெழுந்த ஞானத்தை இந்தமாயைமறையாதென்பது ஆகையாலாத்மஞானமில்லாமல் மனதைச்செயிக்கமாட்டான் இவன்ஞானத்தைமாயை மறைக்குமென்பது அருத்தாபத்தி) [எ]

பாடும்பனுவல்பலவோதியவற்றாலறியும்பயனுணர்ந்து
நீடும்பலன்களவைவென்றுநிலையிற்கலக்கற்கரியானு
யோடும்பொன்னுமொருபொருள்போலோக்கப் பார்க்குமவனேயிங்
காடும்பெரியமாயக்கூத்தாட்டங்கண்டேய்மைந்திருப்பான்

(இ-ள்) பெரியோர்களாலே பாடப்பட்டபலநூலுமோதியந்நூலாலே யறியப்பட்ட பலனையறிந்துவளரப்பட்ட விஷயங்களைசெயித்துத் தான்நின்ற நிலைமையில்நில்லாமல் கலங்கச்செய்கிறதற்கு அரிதானவனாய் ஓடும்பொன்னு மொருபொருளைப்போலச் சரியாகப்பார்க்கப்பட்டவனே யிங்கேயாடப் பட்ட பெரியமாயக்கூத்தாட்டத்தைக்கண்டு அமைந்திருப்பான்-எ-று. ※ (நிலைகலங்காதது. பகைசெயமானது ஓடும் பொன்னுஞ் சரியாகப்பார்க்கிறதாவது-நிருவிகாரப் இப்படிச்சித்தாந்திரி

யனாய்நிருவிகாரனாய்ச்சித்தசெயவானாயிருக்கிறவனேமாயக்கூத்தாட்டத்தை கண்டனாய்நிருப்பவனிப்படி யிராதவன்மாயக்கூத்திலகப்பாடுகிறவனென்ற கருத்தாபத்து இங்கேயென்றது இகம்திலங்கேயென்றதுபரம் இகத்திலிந்திரியவியாபாரனாய் விகாரனாய்ச்சித்தசஞ்சலனாய் இருக்கிறவன் இவைகளில்லாதவன்பரத்தில் மாயக்கூத்தாடாததுகண்டு முன்னையிகத்திற கூடியாடிமாயக் கூத்தாடாததுகண்டு முன்னையிகத்திற்கூடியாடின மாயக்கூத்தொழிந்திருப்பானென்பது) (௮)

கைம்மாறில்லாதனசெய்வான்காதற்றோழன்கடும்பகைஞன்
விம்மா தெவற்று மொத்திருப்பான்வேண்டப்படுவான்வேண்டதா
னம்மாமறைநூனெறிபுரிவானுதாசனமாக்கிடுவானென்
றிம்மானிடவானைவர்க்குமொப்பான்ரோகியெனப்படுவான்

[இ-ள்] எதிருபகாரமில்லாதவுபகாரஞ்செய்கிறவன் அன்புள்ளசினேகிதன் கடுமையுள்ளபகைஞன் சுகதுக்கம் வந்தபோது சந்தோஷமுங்கிலேசமும்படாமல் எல்லாவற்றினு மொத்திருக்கிறேன் வேண்டப்பட்டவுரவினின்-வேண்டாதபாவி அழகும்பொருமையுமுடைய வேதசாத்திரத்தில்சொன்னமார்க்கத்தைச்செய்கிறவன் ஆகாதகாரியத்தையாகப்பண்ணிஎல்லாராலும்உதாசனிக்கப்பெற்றவனென்றுசொல்லப்பட்ட இந்தமனிதரெல்லாருக்கும்ஆத்மாசமமென்றறிந்துசமமாயிருக்கிறவன்யோகியென்றுபெரியோராலேசொல்லப்படுவேன்-எ-று, இவர்கள்முதலானவர்களெல்லாரும் தானாய் இவர்கள் செய்வதெல்லாம் தான்செயவதாய்இவர்களுக்குவருகிற பிரயோசனங்களெல்லாந் தனக்குவந்ததாய்இவர்கள் அனுபவமெல்லாந்தான் அனுபவிக்கிறதாக நிச்சயமாக அறிந்துசமமாயிருக்கிறவனே யோகியென்று பெயருண்டானவனென்பது) [௬)

தலையாமிந்தயோகத்தைத்தலைநின்றெழுந்தன்மைகே
ளலையாவாசையறமாற்றி யொன்றுந்தனக்கென்றெழுகாதே
மலையார்முழைஞ்சேமுதலாக யோகங்களுக்குவகுத்துரைத்த
நிலையாவையினுமொன்றினில்வுந்தியாதுநலியாநிலந்தனிலே

(இ-ள்) சிரேஷ்டமான இந்தயோகத்தை மோக்ஷத்துக்குமுதன்மையாகநின்று நடக்கப்பட்ட வியல்பைக்கேள் அருச்சுனவருத்தஞ்செய்யப்பட்ட ஆசையை நன்றாயறவிலக்கி ஒருவிஷயமானாலுந்தனக்குவேணுமென்று அந்தவிஷயபந்துடனேகூடிநடவாமல் யோகங்களுக்குவகுத்துச்சொன்ன மலையிலிருக்கிற முழைஞ்சுமுதலாகஉள்ளவிடங்களெல்லாவற்றிலு மோரிடத்தில்மிருகபட்சிமுதலானவைகளெல்லாம்வந்துவருத்தாத நிலத்தில்-எ-று. * இதனால்ரகசியத்தில் ஏகனாய் ஆத்மாவினிடத்தில் நிறுத்தினஏகாக்கிர சித்தனாய் ஆசையில்லாதவனாய்விஷயபதார்த்தங்களிலே கூடாதவனாய் சுசியானதலத்திலேயிருக்கப்பட்சியால் வ

ருத்தமில்லாதநிலத்திலே யிருக்கவேண்டாமென்பதுயாதுநலியாதாவ
துதழைநீர்விறகுதருப்பைமுதலானவைகிடையாயல்வருத்தாது கிடை
க்கிறநிலத்திலென்றுஞ்சொல்லலாம்) [௰]

ஒக்கும்வகையாற்குசைபரப்பி யதன்மேலுழையின்றோல்படுத்து
த், தக்கபுடைவையதன்மேலேவிரித்துத்தானங்கதிலிருந்துமிக்கமனனை
யறவொடுக்கிவேறுசெய்யும்வினைகளுடன், றொக்கபுலன்கடமையர்க்கி
யுணாவுதூய்தாவதன்பொருட்டால்.

(இ-ள்) உயரமும் தாழ்வுமில்லாமல் ஒத்தபடியாலேதருப்பையைப் பரப்பியதன் மேலேமானின்றோலைப்படுத்துச் சுத்தமாகத்தக்கபுடைவையைஇந்தகிருஷ்ணாசலத்தின்மேலே விரித்து அந்தப்புடைவையின் மேலே தானங்கிருந்து சேட்டைமிகுந்தமனதைச்சேட்டையற ஒடுக்கி திரமாக்கிஞானத்தைவேறுபடுத்தப்பட்டகருமங்களுடனேகூடினவிஷயங்களையடக்கி அறிவு சுத்தமாகிறநிமித்தமாக-எ-று *[அறிவுசுத்தமாவது சித்தசுத்திஒக்கும்வகையாவது மேடுபள்ளமில்லாதபடிபுடைவையென்றபாடத்தைத் துகிலையென்றோதுவாருமுளர்) (௰௧)

தலையுங்கழுத்துமுடம்புமிமைசெவ்வேதளராதேயிருத்தி
நிலையிலிருந்துகண்களைத்தன்மூக்குநுனிமேலேநிறுத்தி
யலையுங்கடல்போற்காமமுமெய்ப்பயமுந்தன்னைவிட்டகல
உலையுமனமுள்ளடக்கியென்னையுணர்ந்தேயிருக்குமதுயோகம்.

[இ-ள்] தலையுங்கழுத்தும்உடம்பும்இவைகளைச்செவ்வையாக அசையாமல் நிறுத்திபத்மாசனமுதலான ஆசனத்திலிருந்துதன்மூக்குநுனியின்மேலே கண்களைநிறுத்தி அலையாமலலையப்பட்டகடலையொப்பான ஆசையுஞ்சரீரபயமும் விட்டுப்போக விஷயங்களிலேதிரியப்பட்டமனதைத்திரியாமலுள்ளடக்கிஎன்னைமேலான பலனென்றறிந்திருக்கப்பட்டதுவே யோகம்-எ-று. *தலையாமென்றகவியும்ஒக்குமென்றகவியும த லையுங்கழுத்து மென்றகவியும் ஒருதொடர்) (௰௨)

கொச்சகக்கலிப்பா.

என்டிகழும்யோகத்தையிப்பரிசாலெப்பொழுதுங்
கொண்டுபயில்பவர்கடைக்காலென்னையேகூடுவா
ருண்டியினின்மிகவாவருண்டுறப்பார்மிக்குறங்கிக்
கண்டுயிலையறத்துறப்பாரவர்க்கிதுகைவாராதால்

(இ-ள்) உலகத்தார்மதித்துவிளங்கப்பட்டயோகத்தைஇந்தவிதத்தினாலெல்லாநாளும் என்னிடத்திலேமனதைநிறுத்திக்கொண்டு பழகுகிறவர்கள்முடிவுகாலத்திலென்னையேசேருவார்களல்லாமல் மாயையினாலே கூடார்கள்-பொசிப்பில் மிகுந்தவர்கள் அந்தப்பொசிப்பைவிட்டவ

ர்கள் மிகுந்து நித்திரிக்கிறவர்கள் நித்திரையைச்சுக்கமாகவிட்டவர்கள்
அந்தநாலுபேருக்கும் இந்தயோகங்கைவராதுபசித்தபோதுஅற்பபோ
சனமும் நித்திரைவந்தபோது அற்பநித்திரையுஞ்செய்து யோகத்தை
ச்செய்தாற்கைவருமெ-எ-று. * கைவருதலாவது பலிதமல்என்னைக்கூடு
வாரென்றுபாடமோதில் இருவருக்குமிடம்வேறுபடும் அதேதென்னி
ல் ஓரிடத்திலிருககிறவனைமேவேறோரிடத்திலிருககிறவன் வந்துகூடுவதா
குமதனாலே என்னைவந்து கூடுவாரென்ற பாடமாகாது அற்பபோசன
மும்அற்பநித்திரையும்செய்கிறபோதுயோகஞ்செய்யக்கூடாததினாலே
அவ்விரண்டையு மவிட்டு எந்நேரமும்யோகமொழியாமல் யோகஞ்செ
ய்யலாமே அதனை லறவிட்டவர்களுக்குங் கூடயோகம்வலியாததேதெ
ன்னில் பிராரத்தம்மூன்றுவிதம அதாவது சுவேச்சையாபிராரத்தமெ
ன்றும, அநிச்சையாபிராரத்த மென்றும், பிரவிச்சையா பிராரத்தமெ
ன்றுமாம இவற்றில்சுவேச்சையாபிராரத்தமாவதுதானிச்சித்துவருகிற
து பாவிச்சையாபிராரததமாவது அன்னியருடைய விச்சையினாலேவ
ருவது அனிச்சையாபிராரத்தமாவது சுபாவமாகவந்துகொணடேயிரு
க்கிறது இவற்றில் சுவேச்சையானகாமக்குரோதாதிகளைவிட்டுப் பரவி
ச்சையான மிருகபட்சி வருத்தாதவிடத்திலிருக்கச்சொன்னதினாலே சு
வேச்சைபரவிச்சை இந்த இரண்டுந் தன்னாலாகிறது இனித்தன்னாலா
காததான அநிச்சியாபிராரத்தமானபசிநித்திரைமுதலானவைகள் சுபா
வமாகவேவந்து கொண்டிருக்கிற தாகையால் அவைகள் பிறவியற்றாலல்
லாமல்விடா அவைகளைச்சத்துபரிசத்தடக்காவிட்டா லவையேயொழி
யாத்துன்பமாவுபசரித் தடக்கிக்கொண்டே யோகஞ்சாதிக்கவேணுமெ
ன்றதிதனால் ஒருநாள் அறுபதுநாழிகையுங்கழிவதிலவைகளை யுபசரித்
தடக்குகிறதொரு நாழிகைக்கழிவதுநன்று ஐம்பத்தொன்பதுநாழிகை
யோகமேபோது மென்றுகுறிப்பு, இதனாலேகொஞ்சப்பழிப்பைச்செய்
துமேருவத்தனைகீர்த்தியடைதல்நன்றெனவறிவதுபழிப்பில்லாமற்கீர்த்
திவாராதுசெலவில்லாமல்ஆதாயமவாராதுபோலவென்றறிவது. ௰௫

துயிலுமுணவுஞ்செய்தொழிலுமிகாமேகுறைந்துதோறுமே

பழிலுமவனேயோகத்தைத்தன்பாற்படுக்கும்பான்மையா

னயிலும்பொறிவிட்டவ்வறிவுதன்பானடக்குமப்பொழுது

குயிலுமியோகந்தனினின்றானென்றுங்கவனைக்கூறலாம்.

(இ-ள்) நித்திரையும் போசனமுஞ் செய்கிறகாரியங்களும் அதிகமா
காமற்குறைந்துகாணமற் சமனுகதனகுத்தக்க நித்திரையும்போசன
மூங் காரியமுஞ் செய்யப்பட்டவனே தன்னிடத்தில் யோகத்தை
யொழிபாமலிருக்கப்பட்ட சுபாவத்தையுடை வன் பொசிக்கிற வி
ந்திரியத்தைவிட்டு நியமமான அந்தச்சித்தத்தைத்

தன்னிடமாகிய ஆத்மாவினிடத்தில் நிறுத்தியடக்கப்பட்ட அப்பொழுது சகல இச்சைகளிலும்விடுபட்டு செய்யப்பட்ட யோகத்தில் முதன்மையாக நின்றோனென்றவனைச்சொல்லலாம்-எ-று, * அறிவைச்சித்தமென்பது அறிவுண்டாகின்ற விடமாகையால் சித்தமென்பது அறிவையே சொல்லலாகாதோவென்றால் அறிவையடக்கில்ஆத்மாதோன்றுதலாகையாலலைகிற சித்தத்தை லலையாமலடக்கியென்றுசொன்னது ஆனால் அறிவினால் ஆத்மாவிளங்குகையால் அறிவென்றும், ஆத்மாவிரண்டாகிறதே அறிந்தபின்பு ஆத்மாவென்றாகவே நிற்கையால் அப்போதறிவு காணுமேகாணுதனாலே யடங்குமென்றுசொல்லலாகாதோவெனில் அறிவடங்குமாகில் ஆத்மாவையொன்றெனக்காண்பதெதுகொண்டு ஆகையால் அறிவேசொரூபமான ஆத்மாவைச் சைதந்நியமென்று சொல்லுவதல்லாயல் சேதனமென்றுசொல்லக்கூடாது ஆதலால் அறிவுபிறந்தசித்தத்தை அடக்கியென்றுரையெழுதினது-ஆங்கு அசை, ௰௪

கொச்சககலிப்பா.

இப்பரிசுபயில்கின்றயோகிகாலில்லிடத்து
மெய்ப்பரிசனடுங்காதவிளக்குப்போல்விளங்குமா
லெப்பொழுதுங்கவனுணர்வவ்வுண்மையிலேசென்றிசையு
மப்பொழுதுபரமானந்தத்தினையேயடையும்

(இ-ள்) இந்தப்படி பழகுகிறயோகியினுடைய சரீரசுபாவமானது காற்றில்லாவிடத்து அசையாதவிளக்கைப்போல் விளங்குமாகையால்அவ்விடத்திலவனுடையஞானம் அந்த ஆத்மாவிலெப்போது கூடிப்பொருந்துமோ அப்போது அந்தஞானமானதுபரமானந்தத்தையே அடையுமல்லாமல் விஷயானந்தத்தையடையாது-எ-று. * [யோகிமெய்ப்பரிசகாலிலவிடத்திலெனவும் உண்மையிலெப்பொழுதெனமாறுக * எப்பொழுதப்பொழுதென்பதனாலே யிச்சையுமென்றுகாரியவருவிக்க ஏகாரத்தேற்றுகாரம, ஆல்அசை, ஆனந்தமாவது சுகம தேவிகளின்மையாலேதேகிகளுடைய யுண்மையென்றது] ௰௫

அறுசீரடியாசிரியவிருத்தம்.

யாதொன்றிந்தப்புலன்றியாவளவிலின்பமாயிருக்கும்
யாதொன்றினைச்சென்றடைந்தார்கள்பின்னையதனிரண்டாகா
ரியாதொன்றினைப்பெற்றவரிதனின்மிக்கதொப்பதுவென்னா
ரியாதொன்றறிந்தவறிந்தவறிவிற்கேயறிவாய்நிற்குமதினின்றோர்

(இ-ள்) யாதொன்று இந்தவிஷயங்களறியாத அளவான புத்தியிலே சுகமாயிருக்குமேயாதொன்றைச்சென்று கூடினவர்கள்பின்பு அதிலிரண்டாகாமல் ஒன்றுவர்களோ யாதொன்றைப் பெற்றவர்கள் இதிலதிகமானது ஒத்ததொப்பானது உண்டென்று சொல்லார்களோயாதொன்று இந்த அறிவுக்கே அறிவாய்நிற்குமோ அந்தயோகத்தில் நின்றவர்களே எ-று. * [புலனறியாவளவாது விஷயாதீதம] ௰௬

### கலிவிருத்தம்.

வஞ்சவேல்கொடுமார்பினெறியினு
மெஞ்சவேதழன் மூடியெரியினு
நஞ்சினாரழலாகநலியினு
மஞ்சிடாரஃதானந்தமாவதே

[இ-ள்] கொலைத்தொழிலைக்காட்டாமலுள்ளடக்கிக்கொண்டிருக்கிற வஞ்சனையுடைய வேலாயுதத்தைக் கொண்டு மார்பிலெறிந்தாலும் எப்படிபிழைப்போமென்று மனதிளைக்க அக்கினிமூடிக்கொண்டெரிந்தாலும விஷத்தினாலேநிறைந்த அக்கினிவீசப்பட்டநாகமானதுவருத்தினாலும் அவர்களுக்கு இதுஆனந்தமாவதேயல்லாமல் துக்கமாவதையடைந்துபயப்படார்கள்-எ-று.* (யாதொன்றெனக்கவியும்வஞ்சவேலெனற கவியும் ஒருதொடர்.) ௰௭

போகமாயபுலன்களைப்போக்கறுத்
தாகமாமெய்யறிவிடையேயந்த
வேகமாயமனத்தினைமெல்லவே
யேகமாகவிருத்திகலாதுநீ.

இ-ள். போகமாகிய விஷயங்களை இந்திரியங்களிலேபுகுகிறபோக்கை நீக்கி அந்தவிஷயபோகங்களின்றிக்கிலேபோகிறஇந்திரியங்களைத்தொடருகிற வேகமாகிய மனதைப்பகையாமல மெள்ளமெள்ளயோகமாகஉள்ளாகியமெய்யான ஆத்மாவிடத்தில்நீயிருத்தென்றவா. *(இதனைப்புலன்களைப்போகமாய் போகஅறுத்தந்த வேகமாய்மனத்தினையிகலாது மெல்லவேஏகமாகவாகமாமெய்யறிவிடையே நீஇருத்தென்ப பொருளுக்கேற்பமாறுக அறுவிடையேயென்றதனாலிந்திரியவிஷயபோகங்கள் இருக்காமல்ஆத்மாவிலே நிறுத்தென்பது மெல்லவேயென்றதனால் சீக்கிரமாகநிறுத்தில் தடுமாறிப்போம்அதனால் மெல்லவே நிறுத்தென்பதுபோய் மாயபபோக்காவது விஷயங்களின்பின்னே இந்திரியங்கள் போறபோக்கென்றது அதைவிஷய போகங்களிருக்கிறதிக்கைஇந்திரியங்கள் நாடிப்போகிற போக்கையென்றுஞ்சொல்லலாம்ஒன்றையொன்று கொண்டதாகையால் ஆத்மா மெய்யறிவென்றார்ஆத்மாவை மெய்யாத்மாவென்பதேதென்னில் நித்தியமாயிருக்கையால்ஆனால்பொய்யாத்மாவுமுண்டோவென்னில் அஞ்ஞானிகளுக்குத் தேகமிந்திரியங்கள்முதலானவைகள் ஆத்மாவாகமயங்குகையாலும் அவைகள் அநாத்மாவாய் அழிகையாலும்பொய்யாத்மாவுமுண்டென்பது இகலாதென்றபாடத்தை யிகழாதென்றுபாடமோதல் வெறுக்காதென்றுரைசொல்வது பகைத்தாலும்வெறுத்தாலும்மனதுவேறுபடுத் தன்வசம்பட்டடங்காது)

வாங்கியைம்பொறிநின்றுமனத்தினை
நீங்கிடாவகைநெஞ்சுளிருத்தியே
தீங்கியாவையுஞ்சிந்தைசெய்யாமையாற்
பாங்கியாத்துவேபயில்வாயரோ

இ-ள்' பஞ்சேந்திரியங்களில் நின்றும் மனதைஅப்பால்வாங்கி ஆத்மாவைவிடாதபடிநின்றும் ஆத்மாவில்மனதையிருத்தி மற்றப்பொல்லாங்கெல்லாவற்றையும் நினையாததுசுபாவமாகையால்வேறுசுபாவபடாமல் அதுவேபழகுவாயருச்சுனு-எ-று ✻(மனத்தனைவாங்கியென்மாறுக அரோ அசை அதுவேயென்பகனல்வேறுபாவனைபண்ணுமல் அதுவே பாவிப்பாயென்ற தேற்றேகாரமபோகமாயரென்ற கவியும்வாங்கியைம் பொறியென்றகவியும் ஒருதொடர்] ௰௬

தேறுகாஞ்சினனுய்த்தன்செயலல்லால்
வேறுகண்டறியாபொய்யறிவினு
லூறியிந்தவுடம்புடன்வீடுபெற
றேறுகின்றவனேயின்பமெய்துவான்

இ-ள் இப்படி எங்கெங்கவிதத்தினாலேதெளியவேணுமோ அங்கங்கவிதத்தினாலேதெளியப்பட்டமனதுடையவனாய் ஆத்மாவினுடைய செயலல்லாமல்வேறுசெயல்கண்டறியாதசத்தியஞானத்தினாலே ஆனந்தவெள்ளமூறி இந்தவுடம்புடனேயே மோக்ஷத்தைப்பெற்றுஏறுகிறவனே சுகத்தையடைவான்-எ-று ✻(ஊறுதலாவதுமுன்னே ஆரறாமலாகவூறிவரவரப்பெருகிநிறைந்து தேங்கிவெள்ளமேமகொண்டுமுழுவதற்கு அரம்பமஊறுவது உடம்புடனேமோக்ஷம்பெறுதலாவது சீவன்முத்தி உடம்புவிட்டமோக்ஷமாவதுவிதேகமுத்தி விதேகமுத்தியென்பதாவது சிரேஷ்டமபெறுதல்.) ௨௰

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

இழியாவிந்தயோகத்தையென்றுந்தலைநின்றவனென்று
மழியாயின்பத்தினையின்பத்தாலேயடையுமதுநிறக
வொழியாயெல்லாவுயிருந்தன்னுள்ளேகாணுமவற்றுள்ளே
கழியாதெங்குந்தானின்றபரிசுந்தெரியக்காணுமால்

இ-ள் இழிவில்லாதஇந்தயோகத்தையென்றைக்குமுதன்மையாகநின்றவனெனறைக்குமழியாதசுகசொரூபமானபிரமத்தையானந்தத்தாலேயடைவன் அதுநிறகஒழிவில்லாதசகலஆத்மாவையும் தன்னுக்குள்ளே காண்பான்சகல ஆத்மாவுக்குள்ளும்நீங்காமலெங்கும் பரிபூரணமாகத் தானின்றபடியுந் தெரியக்காண்பனென்றவாறு.[தலைநிற்றலாவது யோ

கமேசிரேஷ்டமாகமற்றெல்லாமிழிவாகநிற்றலென்பது இழியாதெனவே வயிர்க்கயோகமென்பதுச்சகலஆத்மாவுங்கண்டு எவ்குமபரிபூரணமாகச் சமமாகவிருப்பமென்னபது. ௨௧

யாவனொருவனென்னையெல்லாவுயிர்களிடையுமென்னிடையே
மேவவெல்லாவுயிர்களையும்வேறுகாணமெய்கண்டான்
தேவர்பகைமுன்செகுத்தோனேயவன்யாதேனுஞ்செய்திடினு
மாவவனாகின்றேனனதுநீயேதுணையுறேல்

இ-ள், எவனாகிலுமொருவன் என்னையெல்லா வுயிர்களிடத்திலுமென்னிடத்திலெல்லாவுயிர்களையுங் கூடாதபடிகாணாமல் கூடும்படிமெய்யாகக்காணுபவன் எவனோ அவனேதானாலுஞ் செய்தாலு மங்கச்செயலாவதாகச்செய்தவனேதானாகிறவன் அதைமுன்னே தேவர்களுடைய பகையான அசுரராடசதர்களைக்கொன்றஅருச்சுனநீயொன்றுஞ்சந்தேகப்படாதே-எ-று ⁕ வேறுநாமதையாவதுசகலவுயிர்களும்வெவ்வேறு என்னைவேறாகக்காணாமல் எல்லாவுயிர்களிலும என்னையும் என்னிலெல்லா உயிர்களையுங் கூடமெய்யாகக்காண்கிறவனெவனோ அவனென்ன செய்தாலும் நான்செய்ததே அதெப்படியென்னில்அவனாகிறவன் நானாகையால் அவன் செய்ததும்நான்செய்ததே அதைநீசற்றாகிலுஞ்சந்தேகப்படாதேயென்பதுதேவர்பகைமுன்செகுததோனேஎன்றதனாலிப்போதுன்பகையான மனிதர்களைக் கொல்பவனே யென்றதருத்தாபத்திவருவிக்கமுன்செயதவனேறதுகுறிப்பு] ௨௨

இடரானதுதானின்பந்தானியாரேனுக்குமாயிடுகப்
படாநின்றவதுதானுமுறுவான்யோகியெனப்படுவான்
கடாநின்றவடிவேலோய்தெளிநீயென்றுதுழாயலங்க
லடாநின்றநெடுமுடியோனருளிச்செய்யவவனுரைப்பான்

இ-ள்;யாருக்கானாலுந்துக்கந்தான்சுகந்தான்வந்தானல் வராநின்றஅந்ததுக்கசுகங்களைத்தானுமடைகிறவன் யோகியென்றுலகஞ்சொல்லப்படுவனபிரகாசித்துநிற்கிற நீண்டவேலாயுதத்தையுடைய அருச்சுனஇங்கபபடிதெளியென்று திருத்துழாய்மாலையசைந்துநின்றநீண்டகிரீடந்தரித்தஸ்ரீகிருஷ்ணசுவாமியருளிச்செய்யககேட்டு அருச்சுனன்சொல்லுவான் -எ-று. ⁕ (சகல ஆத்மாக்களிலுந் தானுந்தன்னிற்சகல ஆத்மாவுமாய்ச்சமமா யெங்கு நிறைந்து நின்ற யோகிக்கு எந்த ஆத்மாவுக்குத் துக்கசுகம் வந்தாலும்

தானும் அதைச்சமமாக அயோகியென்றுலகஞ் சொல்லுமாகையால் இந்தப்படிசீக்கிரமாக அனுசந்தானம் பண்ணியுன்னுடையகலக்கத்தைத் தெளியென்று சொன்னது) ௨௩]

எல்லாவுயிருமொன்றாகப்பார்ப்பதியோகமெனவுரைத்தாய்
மல்லார்தோளாயிதற்கு நிலைகாணேன்மனமாகின்றவிது
நில்லாவியற்கைத்தாய்ப்புலன்கலக்கு மிதனைநிலைநிறுத்த
லொல்லாதெனவுங்காற்கடக்கறகொக்குமெனவுமுணர்கின்றேன்

[இ-ள்) மற்போர்செய்யுந் தோளையுடையசுவாமி எல்லாவுயிரையு மொன்றாகப்பார்ப்பது யோகமென்று சொன்னீர் இதர்கு மனதுசஞ்சல சுபாவமானதினாலேகல்லையொத்தநிலைகாணேன் இப்படிக்கொத்தமன சாகிற இது அசையாதநிலையில் நில்லாதசஞ்சலசுபாவத்தையுடையதா ய் விஷயத்தைக்கலக்கும இதையசையாதநிலைநிறுத்தக கூடாதென்று ம் இதைநிறுத்துகிறோம் என்கிறகாற்றைப்பிடித்தடக்கிறதற்கு ஒப்பா குமென்றும் அறிகிறேன்-எ-று.*காற்றுவமானம்காற்றலைவதே சுபாவ மாகையால் அதைப்பிடித்து அலையாமலடக்கிறதற்குக்கூடாது போல அலைகிறமனதை அலையாமலடக்குவதுகூடாதென்பது, (௨௪]

அறுசீரடி ஆசிரிய விருத்தம்,

இவ்வகைவிசையன்கூறமாயவனியம்பல்செய்வா
னைவகைப்புறனுநெஞ்சுமடக்குகையரிதானாலு
முய்வகையுணர்த்தாயோகமுஞற்றலிதானுமோவா
வைவகைப்புலன்செயின்பமனைத்தையும்வெறுத்தலானும்

[இ-ள்] என்றிப்படியருச்சுனன்சொல்ல ஸ்ரீகிருஷ்ணசுவாமிசொல்லு வார் அஞ்சுவிதமான விஷயங்களையும் மனதை யடக்குத லரிதானாலும் பிழைக்கும்படிசொன்னயோகாப்பியாசத்தினாலும விடாதபஞ்சவிஷய ங்கள் செய்கிறவெல்லாசுகத்தையும் வெறுக்கிற வயிராக்கியத்தினாலும் என்றவாறு. (௨௫)

கலிவிருதம் .

வெய்யநெஞ்சமடங்கிடுவேறிதற்
கையமில்லையென்றேயறியாதலாற்
பையவேகாரணம்பதினான்கையுங்
கைகடந்தவர்யோகமுங்கைக்கண்டார்,

[இ-ள்] இந்தஅப்பியாசத்தினாலும் வயிராக்கியத்தினாலுங்கொடுமை யுள்ளமனது அலையாமலடக்கும இதற்குஅடங்காதென்றசந்தேகமில்லை இதுநிச்சமென்றேயறி அருச்சுனா ஆகையால் சீக்கிரப்படாமையால்மெ ள்ளமெள்ளபதினாலுகரணத்தையுங் கைகடந்தவர்களே யோகமும் ஞா

ய

னமுங்கைகண்டவர்கள், எ-று, * (அடங்குதலுக்குவேராவது அடங்காததுபதினறுகரணமாவதுஞானேந்திரியமைந்தும் கன்மேந்திரிமைந்தும்அந்தக்கரணம்நாலுங்கூடியதுபதினலுகரணம்) [உசு)

என்றுகூறவிசையனியம்புவா
னின்றியோகத்திலேநெடுநாளெலாம்
பொன்றுங்காலத்தயர்ந்துயிர்போயினுற்
சென்றுந்தகதியேயன்றிற்சேருமோ

[இ-ள்) இப்படி யென்று ஸ்ரீகிருஷ்ணசுவாமிசொல்ல அருச்சுனனு வனசொல்லுவான்யோகத்திலே அநேகநாளெல்லாம்நின்றுசாகிறகாலத்தில்மறந்து சீவன்போனல் நல்லமோட்சத்திலேபோய்ச்சேருமோ அல்லாமல் பொல்லாத நரகத்திலேபோய்சசேருமோ-எ-று, (உஎ)

யோகமேவவினைகளொருவினன்
மோகமேவலின்யோகமுடிந்தில
னேகமோவிருபாலும்விட்டானிற்ற
மேகமேயெனவிழ்ந்துகழியுமோ

(இ-ள்] யோகத்தையடையவேண்டிக் கருமங்களைவிட்டவன்மோகத்தின் தேவலான இச்சையினுலேமனது சஞ்சலப்பட்டுயோகமுடியவில்லாதவனுக்குக்கெதி மோட்சமோநரகமோ மூடனும ஞானியுமல்லாமல்இந்தஇரண்டும்விடஉபையபிரஷ்டனுயொன்றிலுங்கூடாதவன ஆகாசகமனபற்றமேசத்தைப்போலக்கீழேவிழுந்தழுவானே மேலெழும்பியிருப்பான்.எ-று. (உஅ)

கலிவிருத்தம் ,

ஐயமிது வென்மனத்தினின்மற்றிந்த
வையமறுக்கவல்லாரில்லைநீயன்றி
யுய்யவிதனையுரையென்னயோகத்தின்
மெய்யனிதனைவிரியவுரைக்கின்றான்

[இ-ள்) என்மனதிலிதுசந்தேகம்இந்தச்சந்தேகத்தைத் தீர்க்கச் சர்வக்கியனுனநீயல்லாமல்வேறுவல்லவர்களில்லைநான்பிழைக்கஇந்தச்சந்தேகத்தைவிளங்கச்சொல்லுமென்றுசொல்லஇந்தயோகத்தினில்சத்தியனுன ஸ்ரீகிருஷ்ணசுவாமிவிளங்கச்சொல்லுவார்-எ-று-* மற்று அசை[உகூ

பொம்மையடையாப்புலனுடைமாந்தர்த
னிம்மையிடையுமறுமையுலகத்தும்
வெம்மையடைகிலர்மெய்மைவிடாரென்னுஞ்
செம்மைதெளியவினஞ்செப்பிடுவேன்கேள்

இ-ள், மாயையடையாத அறிவுடையயோகஞ்சலமானமனிதர்களிந்த சென்மத்தினிடத்திலிச்சையானதை - மறுசென்மமானமரணதிசையிலேகொடுமையானநரகத்தையடையார்-சத்தியமானமோட்சத்தைவிடாரென்றுசொல்லப்பட்டசெவ்வையானதுதெளியஇன்னஞ் சொல்லுவேன்கேள் அருச்சுனா-எ-று ✻ வெம்மையாவது இம்மைக்கு விருப்பமும் மறுமைக்குமரணமுமாக விரண்டுபொருள்கொண்டது. ௩௰

யோகமுடியாதிடையேயிறந்தவன்
யாகவினைபலசெய்தாங்கியைந்திடுஞ்
சோகமீனுடெய்தித்துன்பந்துடராத
போகதுகர்ந்துபல்காலங்கள்போய்பின்

இ-ள், யோகமுடியாதநடுவிலேயோகத்திலிச்சித்துயாககர்மங்கள்புலவாகச்செய்துசெத்தவன் அந்தப்போகம்பொருந்தியிருக்கப்பட்ட மெலிவில்லாத லோகத்தையடைந்துதுக்கந்துடராதபோகத்தையநுபவித்து வெகுகாலஙகள்போனபிறகு-எ-று. ✻ (யோகமுடியாதிடையே யாகவினைபலசெய்திறந்தானுங்கெனமாறுக.) ௩௧

சிறந்தவரசர்திருக்குத்தாகுத
லறந்தருமியோகிகடங்குலத்தாகுதல்
பிறந்துபெறுவதெலாம்பெற்றுப்பின்னையும்
பறந்தவியோகமகிழ்வுடனெய்துவான்

இ-ள்.சிவந்தவரசர்களுடைய அழகியகுலத்திலாகுதல் தருமத்தைத்தரப்பட்டயோகிகளின் குலத்திலாகுதல்பிறந்து பெறவேண்டியபோகமெல்லாம் பெற்றுப்பின்னையும முன்சென்மத்திலேமறந்தயோகத்தைப் பின்சென்மத்திலே மகிழ்ச்சியுடனேயடைவன்-எ-று, ✻ [யோகமுடியாதென்ற கவியுஞ் சிறந்தவாரென்றகவியுமொருதொடர்.] ௩௨

கொண்டுபயிலுங்குணமிலனாயினு
முண்டுதெளிவென்றுணர்ந்தவியோகந்தான்
பண்டுபயின்றபயிற்சியன்னார்களைத்
தண்டுதலின்றிமுன்றுனேதலைப்படும்

இ-ள், யத்தினம்பண்ணிக்கொண்டு அப்பியாசம்பண்ணப்பட்டகுணமில்லாதவனானாலும் தெளிவுண்டென்றறிந்தயோகமானதுபூர்வம் அப்பியாசம்பண்ணின அப்பியாசிகளைநீங்குதலில்லாமல்அவர்கள்முன்னே தானேவந்துதலைப்படும்-எ-று. ✻ [வேறொருயத்தினத்திலும் வேறொருவராலும் வரவேணுமென்ற பிரயோசனமில்லாமல்எளிதாகத்தானே வந்து முன்னிற்குமென்றது. ௩௨

அனையவியோகத்தையாற்றுவனென்று
நினையிமவனுநெறிபிறழாமலே

வினைகள்பலசெய்துவேழ்விமுடித்தாற்
கனையுங்கதிர்மேற்கதியையவன்பெறும

இ-ள்; அப்படிக்கொத்தயோகத்தைச்செய்வமென்றுநினைக்கப்பட்டவனுஞ்சாஸ்திரமார்க்கந்தப்பாமற் கருமங்களைப் பலவாகச்செய்துயாகத்தைமுடித்தாற்சத்திக்கப்பட்ட சூரியனுக்குமேலானகதியையவன்பெறுவன்-எ-று. ✻ (நினையுமவனுமெனறவும்மைசிறப்பும்மை அதாவதுநினைக்கிறவனுக்குமேற்கதிபெற்றார் செய்கிறவனுக்குஞ்செய்துநடுவிலேவிட்டவனுக்குமபெறுவது சந்தேகமில்லையென்றசிறப்பும்மைகளையுநகஇராவது நித்திரையாயடங்கினசீவன்களையெழுப்பிப் பேசுவிக்கிறசத்தத்தைக்கொடுக்கையாலேசத்திக்கப்பட்ட சூரியனென்றது.] ௩௪

நீடுமதினிலைநின்றிலனாயினு
மோடும்வகைபின்விடாதேயுறன்றவன்
டாடும்பவங்கள்பலகடந்தாயினும்
விடும்பேரின்னமும்வேறுஞ்சிலகேளாய்

இ-ள்,பெரிய.அந்தயோகத்திலசையாதநிலையாக நிற்கவில்லாதவனானுமிச்சைகளினாலேசஞ்சலப்பட்டோடப்பட்டவிகத்தினாலும்விடாமலந்தயோகத்திலேயுறன்றவன் சொல்லப்பட்டபிறவிகளனேகங்கடந்தாலுமந்தப்பிறவிமுடிவிலே மேலுலகங்களைப்பெற்று முடிவுபிறப்பிலே மோட்சத்தையும்பெறுவன் இன்னம்வேறுவிதஞ்சிலசொல்லுகிறேன் கேட்பாய்-எ-று. ✻ [ஆயினுமென்றவும்மையும்சிறப்பும்மை] ௩௫

எல்லாத்தவமுமியற்றின்றோனினு
மெல்லாக்கலைகளுங்கற்றுணர்ந்தோனினுஞ்
சொல்லாக்கருமமெல்லாஞ்செய்தவனினு
நல்லானியோகியேநீயவைநண்ணுவாய்

இ-ள், எல்லாத்தவங்களுஞ்செய்துநின்றவனிலும் வேதமுதலானநூல்களுங்கற்றுத்தெளிந்தவனிலும்நல்லவன்யோகியேயல்லாமல் வேறொருவனல்ல - ஆகையால் நீயுமந்தயோகத்தைச்செய்வாய் என்றவாறு,

கொச்சகக்கலிப்பா.

இருவகையவினையறுக்கும்யோகியரொல்லார்களினு
மருவரியமனத்தையுமனையுமென்பாலேவைக்கு
பொறுவனுமேபானுவக்கப்படுகின்றானெனவுரைத்தா
னொருவெனவுருவெனமுன்பாராலுமறிவரியோன்

இ-ள், நல்வினை தீவினையென்றிரண்டுவிதமானகருமங்களையறுக்கப்பட்ட யோகிகளெல்லார்களிலும் கூட அரிதான மனதையும் அ

ன்னையுமென்னிடத்தில் வைக்கப்பட்ட ஒருயோகியுமேநான்சந்தோஷப்படத்தக்கவனல்லாமல் மனதையுமன்னையும் என்னிடத்தில் வைக்காதமற்றயோகிகள் நான்சந்தோஷப்படுதற்குரியரல்லவென்றுசொன்னர் அருவமென்றும் அலைவுருவமென்றும முன்புள்ளத்தை ஆராலுமறிய அரிதான ஸ்ரீகிருஷ்ணசுவாமி-எ.று.

சு-வது-அப்பியாசயோக அத்தியாயம் முற்றிற்று.

——(* ——

ஆக அத்தியாயம்-சு-க்கு-கூடியசெய்யுள்-உ௱௩

ஏழாவது.

# மாயாரூப அத்தியாயம்.

——()——

அறுசீரடியாசிரிய விருத்தம்

உய்யவன்பினொடுமென்னையேயடையயோகமேபயிலும்யோகிதா
னையமின்றியென்னையேயடைந்திடு மதையுநீயுமறிவாயென
வையமுண்டுமறைநீர்மையுண்டிடையர் மாதருண்டிடமலர்ந்திடுஞ்
செய்யதன்பவளவாய்திறந்துதிருமாதுகேள்வனிவை செப்புவான்.

(இ-ள்) ஸ்ரீமகாலட்சுமி நாயகனுன ஸ்ரீகிருஷ்ணசுவாமிமுன் பூமியையுண்டு வேதகுணத்தையுண்டு இப்போது இடையருடைய பெண்களுண்ணத்தக்கதாக மலரப்பட்டசிவந்தகுளிர்ந்தபவளத்தையொப்பான திருவாயைத்திறந்து ஐயா பிழைக்கவேண்டியபத்தியோடும்மெய்ஞ்ஞானத்தோடும்என்னைசேரத்தக்கதாகயோகத்தைச்செய்யப்பட்டயோகிதான் சந்தேகமில்லாமல்வேறொருவனையடையாமல் என்னையடைவான் அதைநான்உனக்குச்சொல்ல நீயுமறிவா யென்றவாறு. *(மேலறியவேண்டுவதில்லையென்பதுகுறிப்பு] க

மாயுமாயை மறையாத நெஞ்சினிடை மற்றெனுன்மையினுவாய்
மையா, லேயுமாறறிவறிந்தவோர்களறியாதவொன்றுமிலையென்னினு
மாயுமானிடரனேகர்பாலொருவனென்னை யாயமனமவைத்துளா
ணுயுமாதுடரனேகர்பாலொருவனேயறிந்துமுடிவானையா.

(இ-ள்] அழியப்பட்ட மாயையால்மறையாதமனதினிடத்தில்மற்றவனுடையஉண்மையைஞானததிலேயிசையும்படி ஞானத்திலறிந்திரு

க்கிறபேர்களறியாததொன்றுமில்லை யென்றாலும்நாசமாகப்பட்டமனித ரனேகரிடத்தி லொருவனென்னை ஆராயமனமவைத்திருக்கிறவன் இப் படி ஆராயப்பட்டமனிதரனேகரிடத்திலொருவனே என்னையறிந்து க வலையொழிவானல்லாமலெல்லாரும ஆராயவுமறியமாட்டார்களையாவெ ன்றவாறு. *(ஆராய்ந்தலாவது ஞானத்தால்விசாரித்தல்) உ

மண்ணுநீருமெறிதீயும்வாய்வுமவவானினோடுமனம்புந்தியுமொண் ணுநீர்மைகளின்யானெனும்பதமுமென்றவெட்டுமிவையன்றியே,பண் ணுநீர்மைகளின்மேலதாயுலகில் யாவையுங்கொடுபேரித்துடற், கண்ணு நீடுயிருமாகியென்னுடையமாயைநிற்பதுகைவேலினோய்.

(இ-ள்) பிருதியும்,அம்பும்-எரிகிறதேய்வும்-வாய்வும்-அந்தஆகாசமு ம்-அதனுடனேமனதும், புத்தியுமதிக்கப்பட்டகுணங்களிலேநானென் றுசொல்லப்பட்ட ஆங்காரமும்இந்தவெட்டும்உண்டாகிறகாரணமான பிரகிருதிஇது அபாப்பிரகிருதிஇல்லாமல் பண்ணப்பட்ட குணங்களி லே மேலானதாய்ச்சகலசெகத்தையுந் தாங்கிக்கொண்டுசுமந்து அபாப் பிரகிருதியானஉடலிடமுந்தானதிலிருக்கிறஉயிரும்போலவாகி என்னு டையபரமப்பிரகிருதியானமாயை திவ்யசபையில் வேலையுடைய அரு ச்சுனு-எ-று. ந

கண்ணினிற்றெரியலுற்றுணர்ந்தவிவ்விரண்டினாலும்வருகாரியம், பண்ணினிற்பனநடப்பவென்றபொருள்யாவுமற்றிவ்விருபான்மை யே,விண்ணினிற்பதுலகாதலாலுலகி னைவும்பவமுநனவா தெண் ணின்,மற்றறிவதில்லையெப்பொருளுமென்னிலன்னிய மதல்லவா

(இ-ள்) கண்ணிலேதெரியப்பட்டறிந்தஇந்தபராபரப்பிரகிருதி இர ண்டினாலும் பிறக்கப்பட்டகாரியத்தைப் பண்ணிநிற்பனநடப்பனவெ ன்றபொருள்கள் சகல முமுன்சொன்ன இந்தஇரண்டுபிரகிருதிகளினு டைய சுபாவமேபெற்றுநிற்கிறது உலகம் ஆகலால் உலகத்திலேசென னமரணமும்இவைகளைச்செய்கிறகாரணமும்நானேயென்னையல்லாமல் வேறேயுண்டோவென்றுவிசாரிக்கில்வேறில்லாததினாலே யுண்டென்ற றிவதில்லை ஆகையாற்பிரகிருதியுமதனாலுண்டாகிறசெகத்துமுதலான அபாப்பிரகிருதியாவது சடமானவுடம்புமபாபிரகிருதியாவது அசே டமானசீவன்இல்லையென்றதனாலே பிரயமோன் இதற்குமேலானதுநி ச்சயமாகவில்லையென்பது ச

வேதமாகிநிகழ்யானலாதுலகிலென்னில்வேறெனவிளங்கிடும், பூதமானவைபொருக்கவேறுபொறையாளரில்லையேதுபொலெனி லோதுமாமணியனேகமூடுருவுகோவைநூலினுருபான்மைபோ பேதமாயபொருடோறுநான்மருவிநின்றவாறுநனிபேசுவாம்.

இ - ள், சொல்லும் பொருளு மொன்று போலவும் பொருள் சொல்லு கின்ற சொல் வேறுபொருள் வேறான விரண்டு போலவும்இப்படி இரண்டாகப்பிரிக்ககூடாதவொன்றாகவும்இப்படி இருக்கிற வேதத்தையொப்பாகி உதகமென்றும்நானென்றுமிரண்டாய்உற்றறியும்போதொன்றாய் விளங்கபபட்டகாளில்லாமல் என்னில்வேறென்று சொல்லத்தக்கதாகஉலகத்தில்விளங்கப்பட்டபஞ்சபூதங்களையுந் தாங்க வேறேதாங்குவாரில்லைநானேதாங்குகிறவன் அதெப்படிப்போலவென்னில்சொல்லப்பட்டஅழ துள்ளரத்தினங்களனேகம் ஊடுருகும்படிகோவைப்பட்டநூலிலிருக்கிறபடிபோலநானேசெகத்துக்குஆதாரம் இப்படிஅளவற்ற பேதமாகியபதார்த்தங்கள்தோறும்நான் கலந்துநின்றபடியைமிகுதியாகச்சொல்லுவேன்என்றவாறு. ௫

கொச்சகக்கலிப்பா.

திரியுமிருசுடரினிடை திகழொளிநான்றிருமறையி
னரியும்முதலெழுத்துநானுடவர்பாலான்மையுநான்
விரிபுனலிற்சுவையுநான்மேதினியில்வாசமுநா
னெரியில்வருவெம்மையுநானாகாயத்தெழூமொய்நான்

இ-ள், ஆகாசத்திலேசஞ்சரிக்கப்பட்டசூரியசந்திராளிடத்தில்விளங்கப்பட்ட பிரகாசம்நான்ஓத அரிய அழகியவேதத்தில்முதலெழுத்தான பிரணவம்நான்புருஷர்களிடத்தில்ஆண்மையும்நான்விரிவானசலத்திலுரிசையும்நான்பிருதிவியிற்கெந்தமும்நான் அக்கினியில்வரப்பட்ட ஊஷ்ணமும்நான்ஆகாசத்திலெழும்புகிறசத்தமும்நான்-என்றவாறு. ௬

ஆன்றவறிவுடையோர்பாலறிவுநானடங்கினர்பால்
வான்றவநான்வளநன்மைபூண்டவர்பால்வான்புகழ்நான்
தோன்றுமிகுதிறலோர்பார்தாமமுறுத்தோள்வலிநா
நூன்றுபொருளனைத்திலுக்குமுயிராகியுள்ளேநான்

இ-ள், அமைந்தஅறிவுடையோரிடத்தில்அறிவுநான் துறவிகளிடத்திற்பெருமைபொருந்தியதவசுநான்வளமையானநன்மையைத்தரித்தவர்களிடத்தில்வளமையுள்ளகீர்த்திநான்மிகுந்தகாணப்பட்டபெலமுள்ளவர்களிடத்திலசையப்படாபுஜபெலம்நான இப்படிபிரபஞ்சத்தில் நிறுத்தப்பட்ட சகலபதார்த்தங்களுக்கும்சீவனாயிருக்கின்றவன்நான்-எ-று. ௭

மூன்றுகுணவகையாகிமுடிகின்றபொருண்முழுதுந்
தோன்றுவதுமென்னிடையே யெனைதொடர்ந்தேகிற்பகுவி
மான்றவவற்றவற்றினிடையான்றான்றேனவற்றினுக்குச்
சான்றெனநிற்குவனல்லால்வைசார்ந்துவாழேனுல்

இ-ள், மூன்றுகுணபேதமாகியழியப்பட்டபதார்த்தங்களெல்லாமுண்டாவதுமென்னிடத்திலேநிற்பதுவும் என்னைத்தொடர்ந்தே அல்லாமல்வேறிடத்துண்டாகவும்வேறொன்றுகிளைத்துடரவும என்னையல்லாமல்வேறொன்றுமில்லாததினலேகூடாதுஇப்படி என்னிடத்திலுண்டாய்நிறைந்தஅந்தப்பதார்த்தங்களிடத்தில்நான் பிறவேன்.அவைகளுக்குச் சாட்சிபென்றுநிற்பேனல்லாமல் அவைகளென்னைத்தொடர்ந்துவாழ்வதுபோலநான் அவைகளைக்கூடியிரேன்-எ-று.*[சகலமுமென்னிடத்திலுண்டாகியென்னைகூடியிருக்குமநான் அவைகளிற்பிறமேவன்அவைகளிற்கூடேன்எல்லாவற்றிற்குமநானேசாட்சியாய்நிறபேனென்றது) அ

மைகுணங்களினுமவற்றின்மயமாகிமமத்துவமா
யக்குணங்கண்மூன்றிலுமயக்கப்பட்டறிவிழந்து
தொகுணங்குகின்றது வுயிரிவையெல்லாஞ் சுடர்வேலோ
யக்குணங்கள்கடந்தவெனையறியுமோவறியாவால்

இ-ள், முக்குணங்களென்றுசொல்லப்பட்டஅந்தஅஞ்ஞானகுணமயமாகி அஞ்ஞான மனதுடையதுமாகிஇந்ததாமதராசதசாத்மீகமென்றகுணங்கள்மூன்றினலுமயக்கப்பட்டு அறிவுகெட்டுக்கூடிசரீரமறந்துகிடக்கிறசீவன் இந்தசீவனெல்லாம்அந்தக்குணங்களைக்கடந்தஎன்னையறியுமோபிரகாசமுள்ளவேலையுடையஅருச்சுனஅறியாய்-எ-று.*(குணங்கடந்தவனவதுகுணதீதன் ௬

இவ்வகைகுணமூன்றினியற்கைதாமாராலுஞ்
செய்வகையதல்லாவென் மாயையினிற்றிகைப் பொழிந்திங்
குய்வகையதரிதெவர்க்குமென்னையேயெப்பொழுது
மெய்வகையேடடைகின்றமனமிலநேல்வேல்வேந்தே

இ-ள், வேலையுடையராசாவேஎன்னைத்தானேஎந்நாளும்மெய்யன்போடு சரணமடைகிறமனதில்லாதவர்களாகில்இநதவிதமானமுக்குணத்தினுடையசுபாவமானதால்ஆராலுஞ்செய்யத்தக்கதல்லாத வென்மாயையினுடையமயக்கமொழிந்து இப்படிதப்பிப்பிழைக்கின்றவிதமெவர்களுக்குமரிது-எ-று* என்னையடைந்தவர்கள் மாயைக்கடப்பரென்பதருத்தாபத்தி யெப்பொழுதுவென்றதனல்ஒருநாள்வேறுசெயினும்யோகப்பிரஷ்டனவன் ௭

ஊழாலேவருமந்தமாயையினலேயுள்ளம்
மாழாகவரிவங்கேபறியுண்டுநெறிநின்றோர்
வீழாததீவினையேவினையாகவிளைகின்ற
கீழானேரெனையடையாரடைவாருஞ்சிலருளர்கேள்

[இ-ள்] பூருவவினையாலே தொடர்ந்து வரப்பட்ட அந்தமாயையினாலே மனதுமூடமாக அங்கே ஞானமானது மாயையினாலே பறியுண்டு அஞ்ஞானமார்க்கத்தில் நின்றபேர்கள் கொலைபாதகபாபமே காமமாக விளையப்பட்ட கீழானபேர்கள் என்னையடையார் என்னையடைகின்றபேருஞ் சிலருண்டு சொல்லுகின்றேன் கேள். ௰௧

கலிவிருத்தம்.

செல்லவிரும்பினர் செல்லடைந்தோ
ரல்லலிகழ்ந்தென்னையன்புசெய்வோர்க
ணல்லதறிந்தமெஞ்ஞானியினல்வரும்
வல்லதிதென்னைவணங்குதவத்தோர்

இ-ள். செல்லஇச்சித்தவர்கள் பிர்ம்மத்தைக்கூடுதலாக ஆத்மாசொரூபமறியவேணுமென்று ஆரம்பித்தவர்கள் மாயைவிட்டுப்பிரிந்துஎன்னையன்புசெய்கிறபக்தர்கள்நல்லதானசொரூபத்தையறிந்தசத்தியசானியிந்நாலுபேருந்தங்களாலே செய்யவல்லமட்டும் என்னைவணங்கினதவத்தினா-எ-று, ௰௨

இன்னவர்கதங்களிலென்னொடுவேறூர்
உன்னவிலாமையின்ஞானியுயர்ந்தோர்
னன்னவனல்லனெனக்கவனுக்கே
நன்னலம்வைப்பதுநானலத்தோய்

இ-ள். இந்நாலுபேர்களிலென்னோடுகூடின சித்தமுண்டானவனாகிதான்வேறு நான்வேறாகநினைப்பதில்லாததினாலே ஞானியதிகன் அந்தஞானியெனக்கு நல்லவன்நானும் அவனுக்காகநல்லசுகத்தைவைப்பதல்லாமல் வேறுள்ளவர்களுக்கு வைப்பதில்லைகண்டாய் நன்மையுள்ள அருச்சுனா-எ-று. ௰௩

ஓராரும்ஞானியென்னுண்மையினுள்ளே
ஏதவிலாமையின்யானெனலேயா
மாதவினாலவனேசிலவாய்
காதவினய்பவங்களிலெய்தா

இ-ள். சொல்லஅறிதானஞானியானவன்என்னுடையஉண்மையினுள்ளே கூடினவனாகலாலவனேநானென்று சொல்லலாம அல்லாமல்நான்வேறு அவனவேறல்லஆதலலாவனேகொஞ்சமான ஆசையிலுண்டாகிய பிறவியைக்கடந்து-எ-று. ௰௪
விரியவுணர்ந்தவிழுபபொருளெல்லா
முரியவனென்னையல்லாதவொழுக்கந்

தெரியவறிந்தென்னையேசெறிகிற்பா
னரியனவன்பெறுதற்கயில்யவலோய்

இ-ள். விஸ்தாரமாக அறிந்தசிறப்புள்ள பொருள்களெல்லாமுரிமையுள்ளவென்னையல்லாமலில்லாத செய்தியைத்தெரிய அறிந்தஎல்லாம் நானேயென்றுஎன்னையேகூடுகிறவன் ஆகையாற்கூர்மையுள்ளவேலையுடைய அருச்சுன, அப்படிக்கொத்த ஞானிகிடைக்கிறதற்கு அரிதானவன்-எ-று. * ஒதருஞானியென்றகவியும் விரியவுணர்ந்தவென்றகவியுமொருதொடர் அரியனென்றதனால்இப்படிக்கொத்தஞானமெல்லாருக்கும வராது எவனுக்கினுமொருவனுக்கு வருகிறதினாலே யவனைக்காண்கிறது அறிதென்றிறறிவது) ௰௫

மற்றவருந்தம்மனங்களில்வைத்த
பற்றதிலேபரியுண்டறிவெல்லா
முற்றவைதந்திடுதெய்வதொழுகக
னற்றவநின்றவைநண்ணுவர்நல்லோய்

இ ள், இந்தஞானியல்லாதமற்றவர்களுந் தங்களுடைய மனதுகளில் வைத்த இச்சையிலேஞானமெல்லாம பறிகொடுத்துத்தங்களுடையமனதுகளி லிச்சித்தபோகங்களைக்கொடுக்கிற அந்தந்ததேவதைகளுடையஒழுக்கததாலே நல்லதவசுகளில் நின்றுசெய்து அந்தயிச்சைகளை அந்தத்தேவதைகளாலே அடைவார்கள் நல்லவனான அருச்சுன-எ-று.* தெய்வவொழுக்கமாவது எந்தெந்தவிச்சைகளை யெந்தெந்தத்தெய்வங்கொடுக்குமோ அந்தத் தெய்வஙகளுக்குப் பூசை விதியெந்தெந்தபடியே அந்தந்தப்பூசாவிதியென்றறிவது) ௰௬

யாவனொருத்தனியாதொருதெய்வ
மேவவருச்சுனையன்பின்விளைப்பர்
னவல்சலிப்பறுமன்னவனுக்கே
நாவலமுற்றநளித்திடுவேனன்

இ-ள், எவனாகிலுமொருத்தனாகிலுமோர் தெய்வத்தையிச்சித்தைக்கூடி வேண்டியபத்தியினாலே யாராதனைபண்ணுவானோஅவனுக்குஆவதானசலிப்பற்று இச்சித்ததுபெருவன் அவனுக்குநாக்கினுடையபெலமும் அதிகமாகத் தோத்திரமபண்ணப்பட்ட பத்தியைநிறைவேறநான்கொடுப்பேன்-எ-று * பத்தியைநான்கொடுப்பேனென்றதனால் அந்தத்தேவதைகள் தங்களாலேகொடுக்கத்தக்க பலனைக்கொடுப்பதல்லாமல் தங்கள்மேலே பத்தியுங்கொடுக்கமாட்டாது அந்ததெய்வங்கள்மேலே பத்தியுங்கொடுத்து அந்ததெய்வருபமாகப்பலனையுங்கொடுக்கிறவன்நானேயென்றது] ௰௭

அளித்தனனன்பொடுமத்தெய்வநாளுங்
களித்துவணங்கினர்காதலவெல்லாம

வெளிப்படமுற்றவிளைக்கிடுவேனே
னொளிப்பரிதாமுருமஞ்சவுடன்றேய்

இ-ள். ஒளிக்க அரிதான இப்படியான துபயப்பட்சண்டைசெய்த அருச்சுனனே கேள் இப்படி நான் கொடுக்கதான் அந்தப்பக்தியுடனும் இச்சையுடனுங்கூட அந்தந்தத்தெய்வத்தைத் தினந்தினமும் மனதுசந்தோஷித்து வணங்கினவர்களி னிச்சையையெல்லாம் அந்தந்தத்தெய்வங்களுக்குள்ளேயிருந்துபெறும்படி குறையாமல் தெளிவாகவுண்டாக்குவேன் நான்-எ-று *[இச்சைகளை வெளியாகவுண்டாகருவனென்றதருத்தாபத்தி.] மஅ

சிந்தையிலத்தெய்வமெய்த்தெய்வமென்றே
முந்தவருச்சனையன்பின்முடிக்கு
மந்தமனததர்பெறும்பயன்வாறு
ளந்தமுடைத்ததனிற்றமுமையா

இ-ள், ஐயாகேள் மனதிலே யிச்சைகளைக்கொடுக்கிற தெய்வத்தையறியாதமெய்த்தெய்வமென்று நிச்சயித்து முதன்மையான பூசையைபத்தியினாலேமுடிக்கப்பட்ட அந்தமனதுடையவர்கள்பெறப்பட்டபலனும்ஆயுசும்நாசத்யைடைகிறது அந்தத்தெய்வமும்நாசமுடையது-எ-று. (இதனாலேஎன்னைப் பூசிக்கிறவர்கள்பெறும்பலனும்ஆயுசும்நாசமில்லாதவென்றருத்தாபத்தி.) மசு

கலிநிலைத்துறை.

தானந்தமிலியுவமைதலைநின்றுதாவறிய
வானந்தவுருவமௌனவெனையென்றுமறுவதிலா
கோனந்தமகனராசாகுலமைந்தனிவணியலா
வானந்தமிலிலொருவனிவனென்பாறிவிலிகேள்

இ-ள், ஆதிதான் அந்தந்தான் உவமைதான் இல்லாதவனிவன் அழியாதல்நின்று ஆராலுங்கொடுக்க அறிதான ஆனந்தசொரூபமென்று ஒன்றுமறிவதில்லாதவர்கள் இவன் இடையருக்குராசாவானநந்தகோபன் மகன் ராசவங்கிஷத்திற்பிறந்தராசகுமாரன் இந்தப் பூமியிலிருக்கிற மனிதவியத்கையானவன்-நம்மிலொருவனென்பார் அறிவில்லாதமூடர்கள்-எ-று. தாவரியாவது தன்னைத்தானேயாருக்சாகிலுங் கொடுப்பதல்லாமல்வேறொருவராலேதன்னையாருக்குங்கொடுக்க அறிதானவனென்றது ஆனந்தமாவதுபரமசுகம் அறிவுள்ளவர்கள் என்னை ஆதியும் அந்தமும் உவமையுமல்லாதசுகசொரூபமென்றறிவார்களென்பதருத்தாபத்தி. [உம]

மருவுற்றபிரகிருதியதிலுற்றமறைவன்மிக
வொருவற்குமறியும்வகைவெளிநிற்றிலையுலகில்
வெருவுற்றபெருமயரின்மனமுற்றுவிழிமறைய
வருவுற்றவெனையுலகமறிகிற்றதிலையடைய

இ-ள், நானென்னுடனேகூடின பிரகிருதியிலேகூடிக்காணப்படாமல்மிகவுமறைவேன் ஒருவருக்காகிலுமறியும்படி வெளியாகநிற்பதில்லையுலகத்திலேபயமுள்ளபெரியமாயையினது மயக்கத்தில்மனதுகூடி அதனாலேகண்மறைய அதினாலே அருவமான வென்னையுலகமெல்லாம அறியமாட்டாதில்லை-எ-று. *பிரகிருதியாவதுயோகமாயை. ௨௧

எழுசீரடியாசிரிய விருத்தம்.

போனவையினிமேற்புகுநின்றன விப்பொழுதுபோகின்றவனைத்தும், யானறிந்திருப்பன்யாவையுமுலகிலென்னைமற்றியாவருமறியார், மானவெனுசிலையாய்வேண்டல் வேண்டாமைதன்னிலேவருங்குணமயக்காற், றனயர்ந்துருவாய்ச்சனித்திடும்பொழுதேதந்த மெய்யறிவு சார்ந்திடலால்.

இ-ள், சொல்லுந் தொழிலாலேகொடுமையுஞ் செய்ததினாலேமேருவையுள்ளவில்லையுடைய அருச்சுனனே போனகாரியத்தையும இனிமேல்வருகிறதாகநின்றகாரியத்தையும்இப்பொழுதுநடக்கிறகாரியத்தையும் எல்லாவற்றையும்நானறிந்து நாசமில்லாமலிருப்பேனுலகத்திலுள்ளயாவருமென்றசரீரஜீவன்களும் விருப்புவெறுப்பானராகவேஷங்களினாலே வாப்பட்டதிரிகுணமயக்கத்தினாலேதானேமறந்துரூபமாய் கெற்பிக்கிறபோதேதங்கள்தங்களுடையசரீரஅறிவான அஞ்ஞானம அடைந்ததினாலேதிரிகாலங்களிலுமஎன்னையறியார்கள்-எ-று. (இதனைப்பொருளுக்கேறபமாறுக. மற்றவென்றது-என்னைநான் அறிவதல்லாமல்மற்றயாவருமயாவையும் அறியமாட்டாரென்பது மெய்யறிவாவதுசரீரத்தையேதானென்றறிகிற அஞ்ஞானம். ) ௨௨

வியக்கமேமுயன்றநல்வினைமாந்தர்விரும்பலாகி முன்செய்து,பயக்கமேவியதீவினையெலாமறவே பற்றறப்பரிந்துமுன்போனாற்,றயக்கமேபுரியுஞ்சோகமேமுதலாய்ந்து வந்துவக்குணங்களிற்றொடர்ந்த,மயக்கமேயலராவொழுக்கமேநிலைநின்றென்னையேமனத்திடைவைப்பார்,

இ-ள், எல்லாருமதிசயிக்கமேலாகச்செய்தபுண்ணியத்தைமனிதர்கள் இச்சியாதவர்களாகிப்பூருவத்திலேசெய்த அந்தப் புண்ணியம் பலனைக் கொடுக்க அவைகளாலேபூருவமேதொடர்ந்துவந்தபாவமெல்லாம் நாசமாகவேகருமபந்தமறப்பரிபக்குவமாகிபோனாற்றுன்பத்தையேசெய்யப்பட்டசோகமுதலானதொந்தக்குணங்களினாலே தொடர்ந்து மோகத்தைக்கூடாதவர்களாகின்ற திடபத்தியானவொழுக்கமேநிலைமையாகப்

பத்தியானவொழுக்கமே நிலமைபாகநின்று என்னையே மனதில்வைப்பார்கள்-எ-று,* (நல்வினையாலே தீவினையற்று ஒன்றுக்கொன்றீடாக இருவினைகட்டுமேற்றுப் பரிபக்குவமாகிப்போனதற்றுன்பகாரணமானசோகமுசலாகததோந்தமாக அநாதியிலே தொடர்ந்த குணமோகத்தைவிட்டுநிச்சயஞானபத்தியையொழியாமல்நின்றென்னையே தங்கள்மனதில்வைப்பார்களென்பது) (௨௩)

எறிவருநம்பிணிமூப்பிறப்பொடு பிறப்பென்றினவை கெடுத்திடம பொருட்டாகக், குறிவரும்பரிசுநினைந்து மற்றெனையேகூடுகின்மேவிநின்றறவர்க. ளறிவரும்பிரமந்தன்னையுமதனையறியுமெய்யறிவையுமறிவி, னெறிவருங்கருமமனைத்தையுமறிவாரறிந்த பின்னிகழ்வதுங்கேளாய்

(இ-ள்) விலங்கிப்போய்விட அரிதானவியாதிமூப்பிறப்புக்கழிந்த வுடனே பிறப்புமென்றறிந்தநாளையுங்கெடுத்திறநிமித்தமாக. ஆத்மஞானசொரூபமானகுறிவரும்படிநினைந்து என்னை கூடுகிறமுயற்சியையடைந்துநின்றவர்கள் அரியஅரிதானபிரமத்தையும்அந்தப்பிரமத்தையறியப்பட்டசத்தியஞானத்தையும் அந்தஞானமார்கத்திலேவரப்பட்ட சகலகருமத்தையும் அறிவார் அப்படியறிந்தபிறகு நடப்பதுங்கேட்பாய் அருச்சுனஎன்றவாறு. ௨௪

அறுசீரடியாசிரியவிருத்தம்

தேடும்பழையவதிபூதமதிதெய்வத்தோடதியெச்சங்
கூடும்பரிசுநின்றவெனையறிகாரிந்தப்புழுக்கூடு
வீடும்பொழுதுமனைமெய்யேயறிவாரென்றூர்யாம்வெல்வே
றூடும்பழையமாயக்கூத்தாட்டுகின்றவம்மாயன்

இ-ள்.எல்லாரும் விசாரிக்கப்பட்டபழைபதான அதிபூதத்துடனும் அதியெஞ்ஞத்துடனும். கூடும்படிநின்றவென்னையறிகிறவர்கள் அவர்களுடைய இந்தப்புழுவிருக்கிற கூடானதேகம்அழியும்போது என்னையே மெய்யாகஅறிவார்களென்றுசொன்னார் நாம்வேறுவேறாகஆடப்பட்ட பழையதான மாயக்கூத்தையாட்டுகின்ற அந்தப்பரவாசுதேவன் -எ-று. *(தேகமிருக்கையில்தானேசகலபூதங்களிலும். சகலதெய்வங்களிலும் சகலகருமங்களிலும் பரிபூரணமாகநின்றவென்னை இந்தப்படியறிகிறவர்கள் தேகம் போகின்ற போதும் என்னையே சதுகியமாக அறிவார்களென்றது இப்படியறியாதவர்கள் சாகிறபோதும் மறந்துபிறவித்தொந்தப்படுவாரென்றகருத்தாபத்தி. ௨௫

எ-வது-மாயாரூபஅத்தியாயம்முற்றுப்பெற்றது.

ஆக-அத்தியாயம்-எ-க்கு--கூடியசெய்யுள்-௨௨அ,

எட்டாவது,

# அட்சரயோக அத்தியாயம்,

*

கலிவிருத்தம்

அடையவுலகத்தையார்த்த விலார்ப்புறு
யிடையாதாம்பிடையார்ப்பவிருப்பதற்
குடையனுகமுனனேதினவேகொடந
கிடையனுனைவன்மீளவிளம்புவான்.

இ-ள். ஜெகத்தையெல்லாந்தனக்குள்ளேகட்டி அந்தஜெகத்திலேதான் கட்டுண்ணாமல் இந்தஅவதாரத்தில் இடையருடையகயிறுனதுகன்னிடையைகட்ட அதனாலே கட்டுண்டிருக்கிறஸ்ரீகிருஷ்ணசுவாமிக்கு தன்னைச்சிஷந்துவமுனையவனுகமுன்புசொன்னதையே சங்கையாகக்கொண்டு அப்போது பாண்டவர்களுடையமத்தியனானஅருச்சுனன்திரும்பச்சொல்லுவான எ-று, (க)

ஆயபிரமக்கோடாதியாகவமைகரும
மேயவதிபூதமதிதெய்வமதியெச்சங்
காயமதிலுள்ளபரிசுங்கெழுமுகாயம்
வீயலுறுபோதிலுனைமெய்தெளியுமாறு,

இ-ள் நீர்சொன்னதாகியபிரமத்துடனே ஆதியாக அமைந்தகருமம் இவைகளுடனேகூடின அதிபூதமஅதிதெய்வம் அதியெஞ்ஞமென்று சொல்லபபட்ட இந்தஆறும்தேகத்திலிருக்கின்றவிதமும்இந்தஆறுடனுஞ்சினேகமானதேகம் நாசமடைகிறபோதில் உம்மையுண்டாமையாகத்தெளியப்பட்டவழியும் இந்தவேழும்-எ-று (இந்தவேழையுங்கிரமமாகச்சொல்வதுபிரமம் அதியாகம்கருமம்அதிபூதம்அதிதெய்வம் அதியெஞ்ஞம் உம்மைதெளிவித்தல் ஆகவேழுஇவைகட்டுஎழுவகைவினவென்றுபெயர் மெய்யென்றும்உண்மையென்றுமசத்தியமென்றும் நித்தியமென்றும பிரமத்தைச்சொல்லுவார்கள் இதனாலேபொய்யென்றும் இன்மையென்றும் அசத்தியமென்றும் அநித்யமென்றும்மாயையைச்சொல்லுவார்கள் உனைமெய்தெளியமாறுவது உன்னையுண்மையாகத்தெளியும்படியென்றது இதனாலே இப்பொழுது உன்னைமாயாதேகியாய் மயக்கியதினாலே அநித்தியகாலத்தில் உன்னைப் பிரமாகத்தெளியும்படியென்றது [உ]

விரியவுரைசெய்தருளவேண்டுமெனமீண்டே
வரியரவிலேதுயிலுமாயவனுரைப்பா
னரியவழியாமதனைத்தினுமுரைக்கிற்
பெரியதுமொழிந்தபிரமம்பிறவையுங்கேள்

(இ-ள்,) தெரியும்படிவிரிவாகத்திருவாய்மலர்ந்தருளிச்செய்யவேண்டுமென்று அருச்சுனன் சொல்லப் பொறியுள்ள ஆதிசேஷன்மேலே யோகநித்திரைசெய்தருளுகிற ஸ்ரீகிருஷ்ணசுவாமி திரும்பச்சொல்லுவார்சொல்லுமிடத்தில் வாக்கு மனங்களுக்கெட்டாதது அழியாதது நித்தியமானதுபெரியதுக்கும் பெரியதாய்எதனைச்சொல்லப்படுமோ அவைகளுக்கெல்லாம்பெரிது அது முன்னாகச்சொன்னபிரமம் இனி பின்னாகச்சொன்னமற்ற ஆறையுங்கேள் அருச்சுனா-எ-று, *(ஆயபிரமமதென்றகவியும் விரியவுரையென்றகவியுமஒருதொடர்உரைசகிலரிய தென மாறாகமொழிந்தபிரமம்பிறவையுமென்றதனால்முன்னாக இனிப்பின்னாக வெனவிந்தது இன்னமுமொழிந்தபிரமமென்றதனாற்பிரணவ அட்சரமாகச்சொன்ன பிரமமென்றுஞ்சொல்லலாம்) (௩)

அறுசீரடியாசிரிய விருத்தம்

அந்தக்கரணங்களினின்றவறிவத்தியாகமாகின்ற
திந்தப்பிறவிதனையாக்குமியாகக்கருமமென்பதுதா
னைந்தற்கமைந்தவுடம்புதனைநானென்கின்றவதிபூதம்
பந்தப்படுமிவ்வுடற்கமைந்தபுருடன்றெய்வமெனப்படுவான்

(இ-ள்) அத்தியாகமாகின்றது அந்தக்கரணங்களிலேநின்ற அறிவு கருமமென்பது இந்தப்பிறவியையுண்டாக்கின்றயாகமான சிருட்டி அதிபூதமாகின்ற அழிகிறதற்கு அமைந்த உடம்பை நானென்கிறஆங்காரமும் அதிதெய்வமாகின்ற கட்டுப்பட்ட இந்தவுடம்புக்கமைந்தபுருடன் -எ-று- அத்தியாகமாகிறது அத்தியாத்மமென்னப்படும். [௪]

எஞ்சுதலையிலதியெச்சமாகின்றதுதானிறக்குங்கா
னெஞ்சுகவருநெறிகளெல்லாமடைந்துநினைப்படுவதுகா
னைஞ்சுபுலனும்பொறியைந்துமடக்கியறிவென்பாலதாய்த்
துஞ்சுமவர்களெனையடைவதெவ்வாறென்னிசொல்லக்கேள்

இ-ள், குறைவில்லாத அதியெஞ்ஞமாகின்றதுமனதைக்கிரிசிக்கிறவிந்திரியவிஷயாதிவழிகளையெல்லாம அடைத்துக்கான்சாகின்றபோது என்னுண்மையை நினைக்கப்படுவது பஞ்சேந்திரியத்தையும பஞ்சவிஷயத்தையும அடக்கி அறிவைஎன்னிடத்தில்வைத்துச்சாகின்றவர்கள்என்னையடைவதெப்படியென்றால் சொல்லக்கேள் அருச்சுனா-எ-று. ௫

இந்தவுடல்விடும்பொழுதினியாவனியாதென்றினைநினைந்தா
னந்தவதனையந்தப்பாவனையாலடையுமாதலினல்
எந்தனியல்லைவபொழுதுமிதயத்திடைகொண்டென்பாலாஞ்
சிந்தையொடுவாளமர்தொடங்கிலதனுலெனையேசேருதியால

இ-ள் எவனுகிலுமொருத்தனிந்ததேகம் விடுகிறபோது எந்தையாகிலும் ஒன்றைஎந்தப்பாவனையாகநினைத்தானே அவன் அதைஇந்தப்பாவனையாலடைவான் ஆகையாலே என்னுண்மையான சுபாவததை யெந்நாளுமுன்னிருதயத்தினிடத்தில் வைத்துக் கொண்டுஎன்னிடமாக வைக்கபட்ட மனதுடனே கீர்த்திப்பிரகாசமுள்ளசண்டையைததொடங்கிச் செய்தால் நானுனக்குள்ளும்நீயெனக்குள்ளுமானதினுலேஎன்னையேநிச்சயமாகச்சேருவாய்-எ-று.என்னையேயென்றதனுல்சந்தேகமில்லையென்றது ௬

நல்லகருமயோகத்துஞானயோகமதுதனினுஞ்
செல்லுமன்னைமிகச்செலுத்திப்பிறிதொன்றினையுஞ்சேராதான்
சொல்லவரியகதிரவன் மண்டலம்போற்றேன்றுந்தொல்லேனை
மல்லதடையானவனியற்கையடையும்பரிசையறையக்கேள்

இ-ள் நல்லகருமயோகத்திலும் ஞானயோகத்திலும் என்னைச்சேரத்தக்கதாக மனதைமிகவுஞ்சேர்த்துவேறென்றையுஞ்சேராதவன் இவ்வளவென்றுசொல்ல அரிதான் அளவற்றசூரியமண்டலம்போலவிளங்கப்பட்டபழையவனுன என்னையடைவானல்லாமல் வேறென்றையுஞ்சேரான் அவன்சுபாவத்தை யடையும்படியைச் சொல்லக்கேள் அருச்சுன என்றவாறு, ௭

எல்லாப்பொருளுமறிவானையெல்லாப்பொருட்குபழியானை
எல்லாமாயுந்தன்னிலைநிறுத்துவானயிறப்பச்செறிவானை
எல்லாப்பயனுமீவானையார்க்குநினைத்தற்கரியானை
எல்லாவிடத்தும்பொய்யிருடீர்த்திலக்குக்கதிர்போலெழுவானை

இ-ள் எல்லாப்பொருளையுமறிந்த சருவக்கியனை யெல்லாப்பொருளையுண்டாக்குகிறசிருஷ்டியினுலே யெல்லாப்பொருளுக்குப்பழையவனை யெல்லாமாயுந்தன்னிலையில் நிறுத்துவதானதிதிசெய்கிறவனை யெலலாஞ்சாசச்செய்து தான்சாகாமற்சங்காரஞ்செய்த கனவானைஎல்லாப் பிரயோசனத்தையுங்கொடுக்கிறதிரோபாவஞ்செய்கிறவனையாருக்கும்நினைக்கிறதற் கெட்டாதவனைஎல்லாவிடத்திலுமிருக்கிற பொய்யானயிருளைப்போக்கிப் பிரகாசிக்கிறஞானசொரூபமாகவெழுந்து அனுக்கிரகஞ்செய்கிறவனை-எ-று.* இதனுற்பிரமகவிரமற்றப்பொருள்களெல்லாம் அறிவில்லாததென்றும் புதிதென்றும் அநாதரவென்றும் அநித்தியரென்றும் அசுவதந்திரரென்று அடக்கினவரென்றும் மாயாமய

றென்றும் அறிவதுஇசனுள்சிருஷ்டிதிதிசங்காரந்திரோபவம்அனுக்கி
ரகமென்றபஞ்சகிருத்தியமுங்காண்க. அ

மருவற்குரியவன்புடையான்மயங்காவியோகமனத்தாலே
புருவத்திடையேதன்னுடையபுரைதீருயிரைப்புகநிறுத்தி
யுருவத்தினைவிட்டிடிலிந்தயோகத்தாலேயவனோடும்
பொருவப்படுமிப்பொருண்மேலேயின்னம்புகல்வன் பொருவேபோய்

இ-ள், இப்படிக்கொத்தவென்னைச்சேருகிறதற்குரித்தானபத்தியையு
டையவன்வேறொன்றிலுமடங்காதேயோகத்திடச்சித்தத்தினாலேசுத்தி
செய்துகுற்றந்தீர்த்ததன்பிராணவாயுவைப் புருவநடுவேசேரநிறுத்தித்
தேகத்தைவிட்டால் இந்தயோகத்தாலேஅந்தப்பிரமமானவென்னோடு
ங் கூடப்படுவான்இந்தப்பொருளின்மேலேஇன்னமுஞ்சொல்வேன்கே
ள்சண்டைபண்ணுகிறவேலையுடையஅருச்சுனா-எ-று*[எல்லாப்பொரு
ளுமென்ற கவியும்மருவற்குரியதென்ற கவியுமொருதொடர்.] சு

கொச்சகக்கலிப்பா.

யாதொன்றைமறைதெரிந்தோரழியாதென்றெடுத்துரைப்பா
ரியாதொன்றையவாவறுத்தயோகிகடாமெய்திவா
ரியாதொன்றையறவுணர்ந்தோர்காமமுதலியவிழ்ப்பா
ரியாதொன்றைப்பரம்பொருளைச்சுருக்கமாயியம்புவன்கேள்

இ-ள், வேதந்தெரிந்தவர்கள்எதையழியாதென்று துணிகிச்சொல்வார்
களோ ஆசையைக்கெடுத்தயோகிகள் எதை அடைவார்களோகாமக்கு
ரோதிலோபமோகமதமாச்சரியங்களையழித்தவர்கள்எதை யடையவே
ண்டுமென்று தெரிந்தார்களோ அந்தவொன்றானபரம்பொருளைச் சுரு
க்கமாய்ச் சொல்லுகிறேன்கேள்அருச்சுனா-எ-று. *எதையென்றதுஎந
தச்சொரூபத்தை. ய

கலிவிருத்தம்.

அஞ்சுபுலனவ்வழியடைத்தயலுறாமே
நெஞ்சுதனையிதயகமலத்தினினிறுத்தி
எஞ்சுதலிலுயர்வளியையுச்சியிலேற்றி
யுஞ்சுபுகுநெறியெனவியோகமோடிருந்தே,

இ-ள், பஞ்சவிஷயங்களையும் அன்னியமானவைகளிலேசேராமல்அ
ந்தந்தவிஷயங்களை அந்தந்தவிடமானவிந்திரியங்களிலே தானேயடைத்
துமனதை இருதயகமலத்தில்நிறுத்தி யிளைப்பில்லாதபிராணவாயுவை
பிரமமந்திரமானவுச்சியிலேற்றிக்கருமானுபாவத்துக்குச்சப்பிட்பிரமத்

இலே புகுக்கப்பட்டமார்க்கமிதுவென்றுயோகத்துடனிருத்து-எ-று * அயலென்றதனலே யொருவிஷயத்தைமற்றோரிந்திரியத்திலடைத்தாலும்வியாபாரப்படுமாதலால்விஷயங்களாகட்டும்மற்றோரிந்திரியங்களாகட்டுமிவைகளன்னியமாகையால்அன்னியத்திலடைத்து வியாபாரப்படுத்திக்கொள்ளாமல் அந்தவிஷயங்களை அந்தந்ததானத்திலேதானே அடைத்ததென்றார் இப்படியடைக்க வியாபாரமானகருமங்கெட்டுமனோசலன்மடங்கியோகங்கைதருமென்பது.) யக

ஓதலிலியற்கையினேடோமெனுமெழுத்தை
வாய்தனிலுரைக்கமனமானதுதனித்தே
யாவருமென்னைத்தெரியவாவியினைவிட்டா
னேதலினியற்கையினையேயடைவன்மிக்கோய்

இ-ள்,ஓதலில்லாதசுபாவமான மௌனத்துடனே ஓமென்கிற யேகாக்ஷரத்தைவாயிலேயுச்சரிக்கமனதானது வேறொருவியாபாரக்கூட்டமில்லாமல்ஏத்திடமனதாகி அந்தமந்திராத்மாவாகப்பெரியவர்கள்விசாரிக்கப்பட்டவென்னைத்தெளியத்தக்கதாகச்சீவனைவிட்டவன்தாழ்வில்லாதமேலான சுபாவதேகியையேயடைவன்எல்லாரிலும் அதிகமான அருச்சுனா-எ-று *(இயற்கையென்பதுபிரமம்செயற்கையாலதுமூர்த்தியாகிய சகலமும அஞ்சுபுலன்களொன்றகவியு ஓதலினொன்றகவியுமொருதொடர்

இப்பரிசிலெப்பொழுதுமென்னைநினைகிற்பார்க்
கப்படியொராண்டொராறுதிங்களளவுள்ளே
கைப்படுவன்யானெனியல்கைப்படவிருந்தோர்
பொய்ப்பிறவியானவைமறுத்தடைதல்பூணார்

இ-ள்,இப்படியோகத்திலெந்நாளுமென்னை நினைக்கிறவர்களுக்கு அப்படியேஒருவருஷத்திற்குள்ளேயாகிலுமஆறுமாதத்திற்குள்ளேயாகிலும் நான்அவன்கையில் அகப்படுவன்இப்படி என்சுபாவமானது கையிலகப்படவிருந்தவர்கள்பொய்ப்பிறவியானசென்மத்தை யினிமேலடைகிற கருமத்தைத் தரியார்கள்-எ-று,*மறுமத்தென்றதனால் இப்போதுள்ள தேகமேயல்லாமலிதுமறுத்து வேறுதேக மில்லையென்பதுஇப்பொழுதுள்ளதேகமும் பிராரத்தந்தொலையுமட்டுமேயிருக்குமல்லாமல் மேலிராது ஆகாமியமோராதபடியினலேயினியேல்பிறவியில்லையென்பதுபொய்யாவது அஸ்தமபூணுரென்றதனால் என்னியல்புகைப்படவிராதவர்கள் பொய்ப்பிறவிபூணுவார்களென்றும் கைப்படுவனென்றதனால் இப்படிநினையாதவர்களுக்குநான்கைப்படேனென்றகருத்தாபத்திவரும் இதனால்நான் அகப்பட்டால் பிறவிவிடும்நான் அகப்படாவிட்டால்பிறவி விடாதென்று நிச்சயமறிவது) (௧௫)

அறுசீரடியாசிரிய விருத்தம்.

செய்யார்முன்சார்ந்தவினை தீர்ந்தபோதே திசைமுகனுடனடைந்தாருந்திரும்பிமீள்வார், மெய்யாகவென்னையடையுமவரேகண்டாய் மீளாதநெறியடைந்தார்வேறுகூறில், ஐயாகேள்சதுர்யுகமீ ரைஞ்ஞூற்றிற்கோர்பகலா மாணடொருநூறவர்க்குமுள்ள, செய்யாதவவருக்கோர்பகலிற்றோன்றியிராவிறக்குந் தன்மைத்தாலியோனியெல்லாம்.

(இ-ள்) சகலலோகங்களுக்கு மேலானபிரமலோகத்திலடைவர்களும் முன்செய்து அதனால்வந்த புண்ணியமனுபவித்துத் தீர்ந்தபோதே இந்தலோகத்துக்குத் திரும்பவருவார்கள் மெய்யாகஎன்னையடைந்தவர்களே கண்டாயருச்சுனா, திரும்பி இந்தலோகத்துக்குவராத தேகியையடைந்தவர்கள் ஆனாற் பிரமலோகமுதலான லோகங்களிலேசேர்ந்தவர்களுந் திரும்பார்களென்று வேறுசொல்லில் ஐயா அதையுஞ்சொல்லுகிறேன்கேளிங்கேசதுர்யுகமாயிரமானால்அங்கேயொருபகலா, இந்தப்படியிங்கே நூறுவருஷமாய் சுப்பிரமானம்போலஅந்தப்பிர்மாவுக்குமந்தக்கணக்குப்படிக்கு நூறுவயசுள்ளதுயாராலுமறியாதஅந்தப்பிரமாவுக்கு ஒருபகலிலே சகலயோனிகளும்பிறந்துஅந்த யிராத்திரியிலேயிருக்கிற சுபாவத்தையுடையது - எ-று. ✻ [சதுர்யுக மீராயிரத்தொருபகலென்றதனால் இரவுமீராயிரஞ் சதுர்யுகமென்றும், இந்த இரண்டுங்கூடினது ஒருநாள் இந்நாள் முப்பதுகூடினதுமாதம், இந்தமாதம் பன்னிரண்டுங்கூடினது வருஷம் இந்தவருஷம் நூறுகூடினதுபிர்மாவுடைய ஆயசு, இந்தப்பிர்மாவுடையவொருபகலிற் சகலசீவனும், பிறந்து அந்தராத்திரியிலடங்குதலினாலேஇந்தப்படி பிர்மாவுக்கு நூறுவருடமென்றகாலஞ் சரியானாற்பிர்மாதிலோகங்களெல்லாம் நாசமடையும் அதனாலே பிரமலோகத்தைச்சேர்ந்தபேருந் திரும்புவாரென்றது] ௰௬

நெறியில்வருவியத்தமோ டவ்வியத்தங்கூடாதநிலைமையென்று
பொறியழியுமாக்கையினி லழியாதபுனளென்றும்புனிதமென்று
மறிவரியவுருவென்று மழியாதபொருளென்று மடைந்தோர்பின்னைப்
பிறிவரியகெதியென்றுபெரியோர்கள்பேசுமென்பெற்றிகண்டாய்.

(இ-ள்) பிரம்மாதிலோகங்கள் அநித்தியமென்று அதற்குள்ளசுபாவத்தைச்சொன்னீரோ உம்முடையநித்தியசுபாவமெப்படியென்றால்சொல்லுகிறேன்கேள் அருச்சுனா பிரகிருதிவழியில்வரப்பட்ட வியத்தத்துடனே அவியத்தம்இந்தவிரண்டுங்கூடாதநிலைமையென்றும்இந்திரியங்

கள்நாசமாகப்பட்ட தேகத்திலிருக்கிறகெடாதஞானமென்றுஞ்சுத்தமென்றும் யாருமறியவரிதான சொரூபமென்றும் கெடாதவஸ்துவென்றும் அதனையடைந்தவர்கள் பிறகு பிரியவரிதான கெதியென்றும், பெரியோர்கள்சொல்லுவது என்னுடைய சுபாவமேகண்டால் அருச்சுனா என்றவாறு.*(இதனாலே யென்னையடைந்தவர்கள் திரும்பார்களென்றது.

பரபொருளும்யாதொருவனுள்ளடங்கிற்றெங்குமாம்நிற்கின்றான்யா
எப்பரமப்பொருளாகியுள்ளவெனையன்பினாலடைவதையா
விபபரிசுவருங்காலத்திறந்தார்கள்பிறவாதர்பிரப்பதொன்னி
லப்பரிசுவருங்காலத்தினையறியவுரைக்கின்றேனதனைக்கேளாய்.

[இ-ள்] எவனொருவனுள்ளே எந்தப்பூதங்க ளடங்கினவோ எங்குந் தானாகிற்கிறவனாரோ அந்தப்பரம்பொருளாக விருக்கிறவென்னைப் பத்தியினாலே யடையத்தக்கது ஐயா இந்தசுபாவம் வருங்காலத்தில் மரணமானவர்கள் திரும்பிப்பிறவார்கள்-பிறப்பாரென்னில் அந்தச்சுபாவம் வருகிறகாலத்தையுனக்கு அறியச்சொல்லுகிறேன் அதைக்கேட்பாய் அருச்சுனா-எ-று. ௰௬

அங்கியொளி பகலவெண்மையாங்காலத்தேவதையாமவைகளோடு, தங்கியறுதிங்களுடையுத்தராயனஞ் சார்வார்மறித்துஞ்சாரார்கஙகுல்புகைகறுப்பென்னுங் காலத்தேவதையடைந்துபிறக்குங்கண்டா,யெங்கமறுதிங்களுடைத்தெட்சணாயனத்திறந்தயோகியென்பாம்.

[இ-ள்] அக்கினிப்பிரகாசம்பகல்சுக்கிலபக்ஷம் இவைகள் அதிதேவதையாகப்பட்ட அவைகளுடனேகூடி தைமாதமுதல் ஆனிமாதமட்டும் ஆறுமாதத்தையுடைய உத்தராயனத்தையடைந்த யோகிகள்பிரமத்தையடைவார் - திரும்பவுமிந்தச்சகத்திலேவாரார்கள் இராத்திரிபுகை அமரபட்சமிந்த அதிதேவதையையடைந்து எங்கும் ஆடிமாதமுதல் மார்கழிமாதமட்டும் ஆறுமாதத்தையுடைய தெக்ஷணாயனத்திலேமரணமானயோகியென்றும்பேருடையவன் திரும்பவுமிந்தச்சகத்திலேபிறப்பான்கண்டாய் அருச்சுனா-எ-று. ௰௭

ஏதமானதின்றியிவ் விரண்டுமோயும்யோகிதான்
வேதமோதிவேழ்விதான மெய்தவங்கள்செய்துரு
னேதுவாயநற்பலங்க ளெய்திவீடுமெய்துவா
னாதலானீயோகமேசெய் யென்றுமாயனோதினான்

(இ-ள்) குற்றமானதில்லாமல் இந்தவுத்தராயணம்தெக்ஷணாயனமெ ன்கிற விரண்டும்விசாரிக்கப்பட்டயோகியானவன்வேதங்களையோதியா கங்களைப்பண்ணித்தானங்களைக்கொடுத்துச்சகதியமானதவசுகளைச்செ ய்திருக்கின்றவன் அடைகின்றபடிக்கு நல்லபதவிகளையடைந்து பிறகு மோக்ஷத்தையுமடைவான் ஆகையால்அருச்சுனா நீயோகத்தையேசெ ய்யென்று ஸ்ரீகிருஷ்ணசுவாமிசொன்னார்-எ-று. (உஅ)

அ-வது அக்ஷரயோக அத்தியாயம்.

முற்றுப் பெற்றது.

ஆக அத்தியாயம்-அ-க்கு கூடியசெய்யுள் உசரு.

——[*]——

இந்தஅத்தியாயத்திற்குக்கிரந்தத்திலே அக்ஷரப்பிரமயோக

மென்றும்சத்தப்பிரஞ்ஞாதாரயோகமென்றும்பெயர்

தமிழில்எழுவகைவினைவென்றுபெயர்

———*———

௯

ஒன்பதாவது,

## மாயாவிகார அத்தியாயம்.

——(*——

கலிவிருத்தம்.

ஈர்வன்றுயர்களையும்பதமீகன்றுகொல்லெனவே
யார்வஞ்செய்துவிசையன்கொளுமாசங்கையையறியக்
கார்வந்தெனவவன்முன்புறுகளிகொண்டெழுவெளியே
தேர்வம்பரிகுசைகொண்டெழுபாகன்றிருமொழிவான்

(இ-ள்) இப்படிச்சொன்னதைக்கேட்டு அருச்சுனன் அன்புசெய்த மனதை அரம்போலஅறுக்கப்பட்ட வலுமையானதுக்கத்தைவேரோ டேபிடுங்கப்பட்டபதவியிதல்லவோ,ஆமோவென்றுசந்தேகமாகக்கொ ள்ளப்பட்ட பெரியசங்கையை அந்த அருச்சுனனுடையமனது மகிழ்ச் சிகொண்டெழும்ப வெளியிலே அவனுடையதேரிலேகட்டிய கொடிய

வேகமுள்ளகுதிரைச்சவுக்கைத்திருக்கையிலேபிடித்துக்கொண்டெழு
மபி நீருண்டமேகம்வந்ததுபோல அவன்முன்னேவந்திருக்கின்றசாரதி
யான ஸ்ரீகிருஷ்ணசுவாமியறிந்துதிருவாய்மலர்ந்தருளிச்செய்வார்-எ-று
வெளியே யென்றதனால் சகலபதார்த்தங்களுக்கு முன்னேயிருக்கிறவர்
வெளியிலேவந்து கண்காணவிருந்து சொல்லுவார். ௧

அறையும்பொருள்களின்முன்பனுபலமொன்றியவதனை
மறையும்பொருள்களின்முந்துறமறையும்பொருளினைமே
லிறையுந்துயரதுவின்றிமுன்னிலையகின்றதையசைவோ
டுறையுந்துகளறநின்றதைமொழிகின்றனனுணர்நீ

(இ-ள்)சொல்லப்பட்ட காட்சிப்பொருள்களிலே எல்லாவற்றிற்குமு
ந்தின அநுபவமாகக்கலந்தைக்காணாமல் மறையப்பட்டபொருள்களி
லெல்லாவற்றிற்கு முன்னாகமறையப்பட்டபொருள் இந்தப்பொருளை ய
றிந்ததற்குமேற் கொஞ்சமாகிலுந் துக்கமில்லாமல் சந்தேகமில்லாமல்
வெறுப்பில்லாமல் முன்னாகப்பொருந்தினதைச் சாத்தோடேயசரமாக
விருக்கப்பட்ட சராசரமானகுற்றங்களறநின்றதை இப்படிக்கொத்தஞா
னத்தைச் சொல்லுகிறேன் நீயறி-எ-று. * [அசைவோடுறையுந்துகளெ
ன்றதை அசைவோடே கூடியிருக்கப்பட்ட அணுவாமென்பாருமுளர் அ
துகூடாதுசனனத்தோடே யிருக்கப்பட்ட குற்றமறச் சலியாமல் நின்ற
ஞானமென்னலாம் சலித்தலாவது நிலைவிட்டசைதல். ௨

அழிவொன்றலதாவென்றியதரிதன்றிபகதன்மேல்
வழிவந்தவெய்பறிவின்பிலரெனையெங்கணுமாருவா
ரழிதந்திசெனனங்கொடுமரணங்கொடுமிகளே ன
யுழிதந்திகபரமொன்றியவுருவங்களினுழல்வார்

[இ-ள்]கெடாதது தருமங்கலந்தது என்னையறிய வரில்லாததுஇப்ப
டிக்கொத்தஞானமானதின்மேல் நல்லகதியாகவந்தமெஞ்ஞானவிசுவாச
மில்லாதவர்கள் எந்தலோகத்திலு மென்னைக்கூடாமல் இழிவுதரப்பட்
ட பிறவிகொண்டும் மரணங்கொண்டும்இங்கேதானேசுழன்றுசுழன்று
இந்தலோகத்திலும்மேலோகத்திலும்கூடிவரப்பட்டதேகங்களிலே யு
ழல்வார்கள்-எ-று.* [விசுவாசமுள்ளவர்களிப்படியுழலாமல் என்னைக்கூ
டுவார்களென்ற கருத்தாபத்தி] ௩

அறுசீரடியாசிரியவிருத்தம்.

யாருமறியப்படாமையேயெனக்குவடிவாயுமுடையவியா

னுருமுலகங்களையடையப்பரப்பிநிற்பனுதலினற்

சாருமுலகிற்சராசரங்களெனையேயவற்றிலநான்சாரேன்

சேரும்பரிசுநின்றாற்போற்றெளிதியாதார்க்குத்திகழுமால்

இ-ள், யாராலுமறியப்படாததுவே யெனக்குச்சொரூபமாகவுடைய நானெல்லாருமுலகங்களையண்டைய நிறையப்பரப்பிநிற்பேன் ஆகையாலே உலகங்களிலுள்ள சராசரங்களெல்லாமென்னுடைய ஆதீனமாகவிருக்கும் அந்தச்சராசரங்களினாதீனமாகநான்கூடேன்தெளியாதமூடருக்கு நான் அந்தச்சராசரங்களிலேகூட்டும்படி நின்றார்போலவிளங்கும்-எ-று தெளிந்தஞானிக்குநான்கூடேனென்று விளங்குமென்பதருத்தாபத்தி]

முன்னேயொன்றுங்கலவாதியானிற்பன்முழுதுமாய்நின்ற
வன்னேர்மையினாலுலகமென்னோடாகக்கலவாதாதலினா
லென்னேயென்பனிற்கையெனிற்பாராயிந்தச்சகமெல்லா
மன்னேயென்றன்மாயைபெறுமாங்காரமுநான்றருவன்காண்

இ-ள்-, எல்லாவற்றிற்குமுன்னேநானொன்றுங்கலவாமல் நிற்பேன்நான்சகலமுமாய்நின்ற அந்த நுண்மையினாலே என்னோடே யுலகமெல்லாஞ்சொரூபங்களாவது ஆகலால் என்சுபாவத்தைப்பாராய் அருச்சுனஎப்போதுஎன்மாயையுண்டோ அப்போதே யிந்தஉலகத்தையெல்லாம் மாயையுண்டாக்கும் இப்படி என்னிலுண்டானதுமாயையாகையால்ஆங்காரமுமநானுண்டாக்கினதுகண்டாய்-எ-று. ௫

கலிவிருத்தம்.

என்னிருவிற்புணராதேயென்னைவிடத்தோன்றாதே
மன்னுயிர்களையெங்குஞ்சார்ந்துவருதல்லைகேட்கி
னுன்னுமிடமெங்குநிறைந்தொளிர்கின்றவானெங்குந்
துன்னுமியற்செறிகாற்றின்றோற்றம்போல்சுடர்வேலோய்

இ-ள், என்னுடையசொரூபத்திலேபொருந்தாலும்என்னைவிடவுண்டாமலுமதின்மையானசகலசீவன்களும்எங்கும் என்னையேசார்ந்துவரும் அதுவரப்பட்டவகையைகேட்கின்றபிரகாசிக்கின்ற வேலாயுதத்தையுடைய அருச்சுனசொல்லுகிறேன்கேள் நினைக்கப்பட்டவிடமெங்கும் நிறைந்து பிரகாசிக்கின்ற ஆகாயமெங்கும்நெருங்கின சுபாவங்களமுமுள்ளகாற்றினுடையதோற்றம்போல்-எ-று *[வாயுவானதுஆகாசத்திலுண்டாய் அதிலேகூடாமல் அதுவுள்ளமட்டுந் தானுள்ளதாய் அதினுடைய விஸ்தாரமட்டும்நிறைந்ததாய் அதைவிடவேறிட மில்லாததாயிருக்கிறதுபோலச்சகலசீவனும்என்னிலுண்டாய் என்னிலேகூடாமல் நானுள்ளமட்டும்தானுமுள்ளதாய் என்னுடையவிஸ்காரமட்டும்நிறைந்ததாய் அதைவிடவேறிடமில்லாததாயிருக்குமென்றதுவிரிவு) ௬

ஈண்டுபொருளிவையனைத்துமிறக்குநானென்னிடையே
மாண்டுபுகும்பிறக்குநான்மற்றவைதன்வான்முறையே
மீண்டுபுரப்படுமெல்லாமாதலினைன்மெய்ப்பார்க்கில்
யாண்டுமுயர்படைத்துக்காத்தழிக்கின்றேயானேகாண்

இ-ள், இவ்விடத்திற்சொல்லப்பட்ட பூதங்களிவைசாலமும்நாசமாகிற நாளில் நாசமாகிஎன்னிடத்திலேபுகுந்தடங்கும் இவைதவிர்ப்பிறக்கிற நாளில் அவைகளொடுங்கினவரன்முறைப்படியேஎல்லாந்திரும்பிப்புறப்படும்ஆகையாலே சத்தியமாகவிசாரிக்கில்எந்தவிடங்களிலும் சகலஜீவனையும்சிருஷ்டித்துச் சங்கரிக்கிறவன்நானேயல்லாமல் வேறில்லைகாணென்றவாறு *(வரன்முறையாவதுயிருதிவுஅப்புவிலடங்கிஅப்புதேயுலடங்கிதேயுவாயுவிலடங்கிவாயுஆகாயத்திலடங்கி ஆகாயமாயையிலடங்கிமாயையென்னிலடங்கினவரன்முறையே என்னில்மாயையுண்டாய் மாயையிலாகாசாதப்பஞ்சபூதமொன்றிலொன்றுண்டாவது) எ

அறுசீரடியாசிரிய விருத்தம்

விலக்கலனையாய்பலங்களுடன்வேண்டல்வேண்டாமையைவிட்டுச்
சலங்கொள்வினைகளவைசெய்வேனதனுலென்னையாவைசாரா
வலண்டுதானே நூறந்தநூலாற்கண்டுண்டுலந்தாற்போல்
பலங்கணினைவாரவற்றுலேகட்டுண்டாங்கேபடருழப்பார்

இ-ள், மலையொப்பான அருச்சுன,பிரயோசனங்களுடனே விருப்புவெறுப்பைவிட்டு அழிக்கப்படாதவைரங்கொண்ட சிருஷ்டியாதிகருமங்களைச் செய்யவேண்டிப்பிரயோசனத்தில் விருப்புவெருபபில்லாததினுலே அந்தசிருஷ்டியாதிகருமங்கள் என்னைச்சேராவாமஉலண்டுஎன்றுபெயரையுடைய கொம்புப்புழுவானதுதானே நூலையுண்டாக்கிமந்தநூலாலேஎந்தக்காலத்திலும்எந்தஉபாதிக்குஅழியாதகூடுகட்டவேண்டுமென்று தன்னையுள்ளாக்கிக்கட்டித்தான்அந்தக்கூட்டுக்குள்ளேகட்டுண்டு வெளியிலேவரவழியில்லாமல்அந்தக்கூட்டுக்குள்ளே செத்தாற்போலப்பிரயோசனத்தையிச்சையாகநினைத்துக்கருமங்களைச்செய்தவர்கள் அந்தக்கருமபலத்தினுலேகட்டுண்டுஅந்தக்கருமத்திலேதானேதுக்கப்பட்டுழலுவார்கள்-எ-று. அ

கலிவிருத்தம்.

ஊர்வனநிற்பவாகவுலகையுண்டாக்குமென்னை
யோர்வுறவறியாதேயோர்மகனெனவிகழ்நிற்பா
வேரெனநெஞ்சத்தாசைவினைகளைமிடையச்செய்வா
ராரெனிலவர்கடாமுமரக்கரோடசுரராஞர்

இ-ள், ஊர்வதாகிய-சரமும், நிற்பனவாகிய அசரமும், இந்தச்சராசரரூபமாகச் சகத்தையுண்டாக்கப்பட்டவென்னைமனதிற்கிசையும்படியாகசகலத்துக்குங்கர்த்தனென்றறியாமலே ஒருமனிதனென்று அவமானம்பண்ணுவார்கள்மனதிலேவேர்விழுந்ததுபோலஎழும்பினஆசையினுலே கருமங்களை மிகுந்துசெய்வார்கள்அவர்களாரென்னில்ராக்ஷதருடனே அசுரரும்ஒப்பானவர்கள்என்றவாறு. கூ

அறிவினாலென்னையேயாகவறிந்துகொண்டவைதியாலே
பொறிவழியடைத்தெப்போதுமென்னையேபோற்றிசெய்து
நெறியினால்வழுத்திவாயாலென்னையேநினைந்துநெஞ்சாற்
செறிதருமவரேகண்டாய் தேவரிற்றெரியப்பட்டார்

இ-ள், அறிவினாலேஎன்னையேகர்த்தனாக அறிந்துகொணடு அடங்கினசுபாவத்தினாலேயிந்திரியங்கள்போகிற விஷயவழியையடைந்துஎப்போதும் என்னையே ஆசைபண்ணிப் பத்திமார்க்கத்தினாலேவாயினாலேகீர்த்தனம்பண்ணுவோரொருவனையும் வேறொன்றையும்நினையாத மனதினாலேயென்னை நினைந்துகொண்டிருக்கிற கனமானவர்களே கண்டாயருச்சுனா தேவர்களைப்போலேதெரியப்பட்டவர்கள்-எ-று. * (மனதொன்றை நினைந்து வாக்குவேறொன்றைச் சொல்லித்தேகம்முன்னிரண்டுமல்லாதனைச் செய்கின்றதுதேசகசுபாவமாகையால்என்னையே யறிந்துஎன்னையேபோற்றிசெய்துஎன்னையேவழுத்திஎன்னையேநினைந்துஎன்றுந்திடப்படுவதற்காகஎன்னையேயென்றுந்திரிகரணத்துக்கும் புத்திதிடப்படச்சொன்னார்தேவரீர்தெரியப் பட்டாரொன்றதனால் தேவர்களைப் போலத் தெரியப்பட்டார்களென்பது இதனால் முன்பாட்டில் அரக்கரோடசுரரானதற்கும் அவர்களைப்போலானவர்களென்பது தேவராசுரர்களைச்சொன்னதேதுக்கெனில்தன்னை அறிந்ததற்கும் அறியாததற்குந் திஷ்டாந்திரஞ்சொன்னது இந்ததிஷ்டாந்திரஞ்சகலசீவனுக்குஞ்சரியாகக்காட்டினது செறிதருமவர்களாவது கனமானவர்கள்கனமானவர்களாவது மகாதமாக்கள்-செறிவுகனமாகையால்கசறிதிருமவர்களேமகாத்மாக்களென்றதுமகாத்மாக்களென்பதுவட்சொல்கனவான்களென்பதுதமிழ்.

காலத்தானும்பொருளிடங்களானுங்கணித்தற்கரியவென்னை
ஞாலத்தார்கள்புகலரியஞானயோகங்களினாலே
சோலத்தால்வேறாகவுமெய்க்குறியாலொன்றாகவுங்கொண்டு
சாலத்தாழ்வாரவருடையதன்மையினையான்சாற்றுவன்கேள்

இ-ள், காலத்தினாலும் பஞ்சபூதவிஷயங்களினாலும் அளவிடுதற்கரிதான என்னையுலகத்திலுள்ளவர்களினாலேமாயாபதார்த்தபேதரூப அடையாளங்களினாலேவேறுவேறான அனேகமாகவுஞ் சத்தியமான அடையாளத்தினாலே யொன்றாகவுந்திடம்பண்ணிக்கொண்டுமெத்தவும் பூசைபண்ணிவணங்குவார்கள் அவர்கள்சுபாவத்தை நான்சொல்லுகிறேன்கேள் அருச்சுனா-எ-று.* என்னையனேகமாகவுமொன்றாகவுந் திடம்பண்ணிக்கொண்டு ஞானயோகத்தாலே பூசைபண்ணுகிறவர்களுடைய சுபாவத்தைச் சொல்லுகிறேனென்று பொழிப்புரைசொல்வது.

கலிவிருத்தம்.

வேதமொழிவேள்விவிதிவேள்விபிதிரர்க்கே
ஈதலுறுவேள்வியெரிநெய்சருவிலற்றும்

காதல்புரிவோர்கள்புரிகாரியமதெல்லா
நாதமுதலாயபொருளாயவையுநானே.

இ-ள். வேதவாக்கியப்படி செய்கிறயாகம் தினந்தினஞ்செய்யவிதித்த ஓமம்பிதுர்களுக்குக்கொடுக்கிறபிண்டதருப்பணவாகம அக்கினிநெயபிண்டம் இவைகளாலே ஆசையுடையவர்கள் செய்கிறகாரியங்களெல்லாம் நானேசத்தமுதலாகிய விஷயப்பொருளாகியதும் நானே-எ-று. * சத்தமுதலாவது, சத்தபரிசரூபரசகெந்தம்.] [௰௨]

ஆயிலுலகங்களையளித்தொளிவளர்க்குந்
தாயினொடுதந்தையவர்தந்தைதலைகளுள்
போயினைவினைப்பயனளிக்தல்புரிவேனே
னேயுமறைநான்கினுடனேயொனுமெழுத்தியான்

இ-ள், விசாரிக்கில் உலகங்களைப்பெற்றுப்பிரகாசிக்கவளர்க்கப்பட்ட தாயும் அவளுடனேதகப்பனும் அவர்களிருவருடையதகப்பனாகியபாட்டன்மாரும் அந்த இரண்டுபாட்டன் பாட்டன்மாருடையதகப்பன்மாராகிய முப்பாட்டன்மாரும் இப்படிப்பரம்பரையாகப் போகப்பட்டமுதல்களும் நானேமுன்செய்து மறந்துபோனகருமபலனைமறவாமற்கொடுக்கிறதைச் செய்கிறவனும் நானேஇசையப்பட்ட நாலுவேதங்களும் நானேஇந்தவேதங்களுடனே ஓமென்றபிறணவயெழுத்தும்நானேஎன்றவாறு. (௰௩)

கலிவிருத்தம்.

எல்லார்க்குங்கதியுநானிருவினைப்பாரகனுநா
னெல்லார்க்குந்தலைவனெனப்பொருட்குஞ்சான்றுநா
னெல்லார்ககுமுறைவிடநானியார்க்குமிடர்தீர்ப்போனே
னெல்லார்க்குநல்லோனெனப்பொருட்கும்வித்துநான்

இ-ள், எல்லாருக்குமடைகிறகதியும் நானேபுண்ணியபாவத்தைநடத்துகிறவனும்நானேஎல்லாருக்கும்கர்த்தனும்நானேஎல்லார்க்குந்துக்கந்தீர்க்கிறவனும்நானேயெல்லாருக்கும் நல்லவனும்நானே எல்லாப்பொருளுக்கும்விதையும்நானே-எ-று. (௰௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

தாங்கியநீரையெல்லாமிரவியின்றலத்தினின்று
வாங்குகின்றேனு மீண்டுமழைகளாய்க்கொடுக்கின்றேனு
மீங்குமெய்யுணரினேயாதலாலியகொன்றேனு
மாஙகருச்சனைசெய்கின்றனொன்னையேயரிச்சிக்கின்றார்

[இ-ள்) பூமிதாங்கிய நீரையெல்லாஞ் சூரியனிடத்தில் நின்றுவாங்குகிறவனும் திரும்பிமழைகளாகக் கொடுக்கிறவனு மிட்போதுமெ

ய்பாகவிசாரிக்கில் யானேயெல்லாமாகையால் என்னமாகிலும்ஒன்றை அங்கேபூசைபண்ணுகிறவர்கள் என்னையே அருச்சனைபண்ணுகிறார்கள் என்றவாறு. (௧௫)

ஞானமாயொன்றாய்நின்ற வென்னையேநானாவாகப்
போனதீவினையின்மாந்தர் வேழ்வியாற்பூசித்தத்தால்
வானமாமுலகமேறி வாழ்ந்துமண்ணிடையேவீழ்ந்திட்
டூனமாமாசையாலே யிறப்பதுபிறப்பதாவார்.

(இ-ள்) ஞானமாகியொன்றாகிச் சலியாமல்நின்றவென்னைத்தானே ஊனமான ஆசையினாலே அஞ்ஞானசொரூபமாய் பலவாகச்சலனமுள்ள தேவர்களாகப்பாவித்து அந்ததேவபோகத்துக்குஇச்சைப்பட்டு அந்தந்தத்தேவதாபிரியாகச்செய்தயாகங்களினாலும் பூசைகளினாலும்பாவங்களைப்போக்கினமனிதர்தேவலோகத்திலேறிப்புண்ணியந்திருமட்டும் திவ்யபோகத்தையனுபவித்துப்பிறகு மண்ணிடமாகவிழுந்து சாகிறதும்பிறக்கிறதுமாகத்தேவலோகத்துக்கும் பூலோகத்துக்கும்போக்குவருத்தாய்திரிவார்கள்-எ-று. ஞானமாயொன்றாய்நின்றவென்னையேஊனமாமிச்சையாலே நானாவாகவேழ்வியாற்பூசித்தாற்போனதீவினையின்மாந்தர்வானமாமுலகமேறி வாழ்ந்துமண்ணிடையேவீழ்ந்திடபிறப்பதுபிறப்பதாவாரென மாறுகநானாவாக வென்றவிடத்திற்செய்தவன்வருவிக்க.( ]

மின்னையேயனையவேலா மேவுவார்வேண்டிற்றெல்லாம்
பின்னையேயென்னாதன்றே யளித்தவர்க்காப்பனானோர்
மன்னையேமுதலாந்தெய்வம்வணங்குகின்றாருமற்றென
றன்னையேவணங்குகின்றார் தாமறியாததேகாண்

(இ-ள்) மின்னையேயொப்பாகபிரகாசிக்கும் வேலையுடையஅருச்சுனா அன்னியசிந்தையில்லாமல் என்னைக் கூடுகின்றவர்களுக்குவேண்டியதெல்லாம் பிறகு கொடுக்கிறேனென்னாமல்அப்போதேகொடுத்து அவர்களைக் காத்துக்கொள்ளுவேன் தேவர்களுக்குராஜாவான இந்திரனைமுதலானதெய்வங்களைவணங்குகின்றவர்களுக்கும் நானந்தத் தேவரூபமானதினாலே என்னையே வணங்குகின்றார்கள்அது அவர்கள்என்னை அறியாமற்செய்ததல்லால் அறிந்துசெய்த தல்லகண்டாய் எ-று, (௧௭)

தேவரையடைந்தார்தேவ ராவர்கள்பிதிரர்தம்மை
மேவரவடைந்தாரந்தப் பிதிரராய்விளங்காநிற்ப
ரியாவர்களியாவர்பாலா ரவர்களேயாவரொன்று
லாவவென்னடைந்தாரியானே யாவதற்கையமுண்டோ

(இ-ள்) தேவர்களைபடைந்தவர்கள் தேவர்களாவார்கள் பிதிர்களைமனதுபொருந்திவரும்படியடைந்தவர்கள் அந்தப்பிதிர்களாய்விளங்கிநிற்பார்கள் யாராலும் யாரிடமாக அடைந்தார்களோ அவர்களேயாவரொன்று

ல்என்னையடைந்தவர்கள் நானேயாகிறதற்கு ஆஆ சந்தேகமுண்டோ இ
ல்லை-எ-று-* [ஆ ஆ வென்றது இம்மானவாளை யடைந்தவர்களு மவர்க
ளேயாவராகில் மேலானவென்னையடைந்தவர்கள் நானாகிறதற்குச்சந்
தேகமுண்டோ ஆஆ இதுவென்ன ஆச்சரியம்நான்தேவர்களிலு மின்
னுரென்று காட்டின ஆச்சரியக்குறிப்பு (௰௮)

போதிலைகனிகாய்நீரோ பெற்றவைகொண்டுபோற்றி
காதலாற்றாயவன்பாற் றந்தவேகளித் தாக்கொள்வே
னுதலாலிவனேற்ப வுண்பமற்றவைகளேசொன்
னதலாமெனக்காய்தந்தா லென்னையேயெய்தலாமால்.

(இ-ள்) பத்தியினாலே சுத்தமான அன்புடையவர்கள் பூ இலைபழக்கா
ய்சலம் இவைகளிலே கிடைத்தவைக்கொண்டென்னைப்பூசைபண்ணிக்
கொடுத்ததையே மிகுந்தசந்தோஷமாக அங்கீகரிப்பேன் ஆகையால்கொ
டுக்கின்றது விரதம்நோக்குகிறது பொசிக்கிறது மற்றுமுள்ளவைக்கொ
ண்டு இவையெல்லாமெனக்காகக்கொடுத்தால்என்னையேயடையலாம்
அன்னியகெதிவாராது-எ-று. ௧௯

எப்பொருட்னுக்குமியானொத் திருத்தலாலெனக்கியாரு
மொப்பவரினியரின்னா காரெனவொருவரில்லை
இப்படியறியுமன்பர் பக்கலேயானுநிற்ப
னெப்படியவருமென்பா லங்ஙனேயமர்ந்துநிற்பார்.

[இ-ள்] எந்தப்பொருள்களுக்கும்நான் சும்மாயிருக்கிறதினாலேஎனக்
குவப்பானவர்களும்பிரியமானவர்களும் விரோதமானவர்களும்யாரொ
ருவருமில்லை இப்படியறியப்பட்டஅன்பரிடத்திலேநானும்நிற்பேன் அ
ந்தஅன்பர்களும் அப்படியேஎன்னிடத்தில் அமர்ந்து அங்கேநிற்பார்க
ள்-எ-று. ௨௰

ஊனையேமுதலாவென்பா லூக்கியவுணர்வோர்நாளு
நானையேவிட்டுத்தீமை புரியினுமவர்களல்லோ
ரேனையேபுயத்தாயென்றுங் கேடிலாவின்பமல்லா
தானையேயொருகோடில்லை யவர்களுக்கெங்குமென்றும்.

இ.ள் உண்பதுவேதமுதலாக உள்ளமெல்லாமென்னிடமாகசெலுத்
தின அறிவுடையவர்கள் தினந்தினமும் லச்சையைவிட்டுப்பொல்லாங்
குசெய்தாலும் அவர்கள்நல்லவர்களே எக்காலமுங்கெடாதநிலையுடைய
மகிமையும் அழகுமுள்ளதோளையுடைய அருச்சுனா அவர்களுக்குஎன்
றைக்குங்கேடில்லாதசுகமேயல்லாமல் ஆனப்படிக்குஎங்கேயாகிலும்எ
ன்றைக்கேயாகிலும்ஒருகேடுமில்லை-எ-று. * [எனக்குச்செலுத்தாதமூ
டருக்குஎன்றைக்கும்எங்கும் ஆனைப்படிக்குக் கேடுண்டென்பது அரு
த்தாபத்தி) ௨௧

வணிகருமற்றைவேளாண் மாந்தருமகளீர்தாமும்
பணிவொடுமென்னைப்பேணிற் பற்றறுத்திடுவரென்று
லணிமுடியரசர்மேன்மை யந்தணரடைவராகிற்
றணிவரும்பிறவிதீரச் சாற்றவேண்டுமஃதுமுண்டோ

(இ-ள்) மற்ற வைசியருஞ் சூத்திரரும் பெண்களும்இவர்கள்வணக்கத்துடனும் அன்புடனும்என்னையாசரித்தாற் கருமபந்தத்தையறுத்து மேலானகதியை யடைவார்களென்றால் அழகியகிரீடந்தரித்தராஜாக்கள் எல்லாருக்குமேலான சாதியுடையபிராமணர்கள் இவர்கள் என்னையடைவாராகில் அவர்களுக்கு யாகாதிமாகாதானுதிவிரதாதீ முதலானபுண்ணியங்களினலே அரிதானபிறவி தீருகின்றதற்குச் சொல்லவேணுமேவது முண்டோ இல்லைநிச்சயமாகப் பிரவிதீரும்-எ-று. ௨௨

மின்னையேயனையவாள்வி னிற்றனீவிருப்பினேடு
மென்னையேவணங்கியென்று மென்னையேயிசைவாயாகி
லென்னையேயடைதியீதென் றியம்பினனிலங்குவாட்கட்
பின்னையேமுறுவலோடும் பேய்முலையுண்டமெம்மான்

(இ-ள்) ஆகையாலருச்சுன மின்னையொப்மான அநித்தியவாழ்விலே யாதுநிலையென்று நின்றநீ இதைமறந்து என்னிடத்தில் ஆசையுடனும் என்றைக்குமென்னையே பூசைபண்ணிவணங்கி என்னையேபரமகதியென்று உன்மனதுக்கு இசைந்திருந்தாயானல் என்னையேயடைவாய் இதுநிட்சயமென்று சொன்னர்பிரகாசிக்கின்றவாளையொப்பானகண்களையுடைய மகாலட்சுமிதேவியின் நாயகனான அழகிய புன்சிரிப்புடனுங் கூடப் பூதகியென்னும் பெயரையுடையபேயினுடைய முலையையுண்டகருத்தனான ஸ்ரீகிருஷ்ணசுவாமி-எ-று. ௨௩

௯-வது-மாயாவிகார அத்தியாயம்.

முற்றுப் பெற்றது.

ஆக அத்தியாயம்-௯-க்கு-கூடியசெய்யுள்-௨௯௰.

---*---

உ

பத்தாவது.

# விபூதிவிஸ்தாரயோக அத்தியாயம்.

—[*]—

அறுசீரடியாசிரிய விருத்தம்.

அரியவெனதுநிலைமையைமுன் படவேசொன்னேனதுகேட்டே
யுரியமனனிற்களிகூர வொவ்வாதினறவுனக்கதனை
விரியமொழிவன்கேளென்று வேததலையின்வீற்றிருக்குங்
கரியமுகிறன்செவ்வாயாற் காதல்கூறக்கட்டுரைப்பான்

[இ-ள்] யாராகிலும்அறிய அரிதானஎன்னுடைய சத்தியமானஉண்மையைமுன்பு பிரமாணமாய்ச்சொன்னேன் அந்தப்பிரமாணத்தைக் கேட்டேயுனக்குரித்தான மனதிலேகளிப்புச்சிறப்பாகச் சந்தோஷப்படாநின்ற உனக்கு அந்தப்பிரமாணத்தைப் பிரத்தியட்சமாக விஸ்தாரமாகச்சொல்லுகிறேன்கேள் அருச்சுனனென்று வேதச்சிரசிலே யிருமாந்திருக்கப்பட்ட கரியமேகத்தையொப்பான திருமேனியையுடையஸ்ரீகிருஷ்ணசுவாமிதம்முடையசிவந்ததிருவாயினாலே அருச்சுனனுக்குஅன்புமிகுதியாகச்சொல்லுவார்-எ-று. ௧

தேவரொடுமுனிவரர்கள் சித்தர்வித்தியாதரர்கள்
யாவர்களுமறியாரென் பெருமையைமுன்பழமையினாற்
சாவதுவும்பிறப்புமில்லா வென்னையறியத்தகுவாரேற்
பாவவினையறவிட்டுப் பரகதியடைகிற்பார்

(இ-ள்) தேவர்கள் அவர்களுடனே மகாமுனிகள்சித்தர் வித்தியாதரர்இவர்கள்முதல்எல்லாரும்என்னுடையபெருமையையறியார்கள் அது அவர்களுக்கெல்லாம் நான் ஆதியாய்அநாதியானதினாலே யாருமறியார்கள செனனமரணமுமில்லாதவென்னை யின்னானென்றறியத்தக்கவர்களாகி லவர்கள்பாவகருமங்கள்யறத்தக்கதாகவிட்டுபரகதியையடையமாட்டுவார்கள்-எ-று. ௨

புத்திபொறைதவஞானம் புகழ்பழிதிற்கொலைதெளிவு
சத்தியமற்சமைமைகவரிதவிந்தனஞ்சாவுபிறப்
பத்திகொடுநிறைவின்பமிடரஞ்சலஞ்சாமை
யித்தனையுந்தோன்றுவலென் னிடைநின்றேசெனத்தெளிவாய்

இ-ள்,புத்திபொறுமைகலக்கஞானம் கீர்த்தி அபகீர்த்திசொல்லுகிறத ற்கரிய தெளிவுசத்தியம்நல்லசமைதிஇந்திரியநிக்கிறகமுதலானவிரதம் தானஞ் சாவுபிறப்பு ஆசைகொடுமைநிறைவுசுகந் துக்கம்பயப்படுதல் ப யப்படாமைஇத்தனையுமென்னிடத்தில்நின்றேயுண்டான வொன்றுதெ ளிவா-எ-று.*[வேறொருவிடமுண்டென்று மயங்காதே யென்றதருத் தாபத்தி] ௫

கலி விருத்தம்.

இனைத்துவிதித்த தக்கெழுநரும்
அனைத்தையுநிற்பநடப்பனவாக
அனைத்துமனுக்கள்பன்னலவருமற்றேன்
நினைப்பிலுதித்தனரெனபதுநோவாய்

இ-ள்' அதுதவிரசகலத்தையும்நிற்கிறதுநடக்கிறதாகியசராசரங்களை மனதிலேகூட்டங்கூட்டமாகச் சிருஷ்டித் தவரையுடையசத்தரிஷிகளு ம்இவைகளை அரசாண்டபதினாலுமனுக்களுமஎன்னுடைய நினைப்பிலே பிறந்தார்களென்று உன்மனதிலேதிடமாகச்சம்மதிபடாயருச்சுன-எ-று.

இப்பரிசென்னையறிந்ததற்கன்பால்
வைப்பர்கள்சிந்தையைய மன்னுயிரோடு
மப்பரிசேயறி வாரையுமங்கே
யுய்ப்பருரைப்பர்க ளிப்பருவைப்பார்.

(இ-ள்) இந்தப்படி சகலதுக்கங்காரணமாகச்சகலமுமென்னிடத்தில் நானேவாதிக்கிறதாக என்னை நன்றாயறிந்தவர்கள் தங்களுடையசிவனோ டேகூட மனதைஎன்னிடத்தில் வைப்பார்கள்என்னையே பேசுவார்கள் ஆனந்தமடைவார்கள் சந்தோஷிப்பார்கள்-எ-று. ௬

நிரந்தரமிப்பரி சென்னை நினைப்பார்க்
கரந்தைகெடுக்கெனை யாயுமனத்தைப்
புரந்துகொடுத்தவர் தேர்பொருளாயே
வரங்களுமுற்ற வளித்தவரத்தால்

[இ-ள்] இந்தப்படிநிரந்தரம் என்னைநினைக்கிறவர்களுக்குத் துன்பத் தைபோக்கிக்காத்து என்னைவிசாரிக்கிறமனதைக்கொடுத்து அந்தம னதாலே விசாரிக்கிறவஸ்துவாயே பிரசன்னமாகவந்து முன்கொடுத்த துமல்லாமற் பின்புவரங்களும்குறையாமற்கொடுத்து அந்தவரத்தினா லே-எ-று. ௭

மற்றவர்நெஞ்சின் மயககிருளெல்லா
முற்றறிஞான விளக்கொளியாலே
பற்றறிவிப்ப னெனப்பழையோன்முன்
கொற்றவன்யற்றிவை கூறவலித்தான்

இ-ள், அந்தவரத்தினாலே யுற்றறியப்பட்டஞானமாகியவிளக்கொளியாலே அவர்களுடையமனதிலிருந்துமயக்கப்பட்ட அஞ்ஞானமாகியவிருளெல்லாம்புற்றறச்செய்வேனென்றுசொல்லஅந்தஅனாதியானஸ்ரீகிருஷ்ணசுவாமிமுன்னே அருச்சுனனாகியராசன்அந்தவசனஞ்சொல்லஉத்தியோகப்பட்டான்-எ-று,(மற்றவர்களென்றது என்னைத்தவிர அவர்களென்பது மற்றிவையென்பது முன்சொன்னதைத்தவிரவென்றேயிது வென்பது) எ

அறுசீரடியாசிரிய விருத்தம்.

பேதமுடையப்பிறப்பிறப்புப் பிரமாநின்றபெருஞ்செல்வ
மாதிவேன்பரப்பிரம மழிவிலாதானுநணங்க
ளோதவரியவுத்தமனிங்கெல்லாமுயிர்ப்பானெனவின்னே
நீதிமுனிவருரைத்ததெலாநீயேயருளிச்செய்தனையால்

இ-ள்,எண்பத்துநாலுநூறாயிரம் அச்சுப்பேதமுடையபிறப்புச்சாவு இவைகளாலேதவறாபூரணமபெரியசெல்வம்ஆதிதேவன்பரப்பிரமம்அழித்தியமில்லாதநித்தியன் வேதங்களோதவரிதானஉத்தமன் இந்தப்பிரபஞ்சமெல்லாம்பெற்றவன்என்றுஉன்னைநீதியுள்ள மஹாரிஷிகள் முன்எனக்குச்சொன்னதெல்லாம்அப்படிக்கொத்தநீதியேயிப்போது எனக்குஅருளிச்செய்தாய்-எ-று. அ

எல்லாப்பொருட்குந்தனிவித்தேயெல்லாப்பொருட்குமீசனே
நல்லோர்புகழுந்தேவருக்கு மூலகங்களுக்குநாயகனே
யல்லாவரிவாரியாரென்னை யானேயறிவனெனவருளாற் [ன்
சொல்லாடினிவப்பொருளெல்லா மெய்யேயானுந்துணிந்தொருத்தே

இ-ள்.அளவற்ற பேதங்களுள்ள சகலவஸ்துக்களும் அந்தந்தப்பேதங்களாக முளைக்கிறதான ஒருவித்தையே சகலவஸ்துக்களுக்கும்சுவாமியேபெரியோர்கள் புகழப்பட்டவனேதேவர்களுக்கும்லோகங்களுக்கும்கர்த்தனே உன்னையல்லாமலுன்னை யறிகிறவர்களார்யாருமில்லைஎன்னைநானேயறிவனென்று கிருபையினாலேசொல்லிக்கொண்டுவந்த அந்தஅருத்தமெல்லாஞ் சத்தியமேஅல்லாமற்சந்தேகமில்லை ஒன்றுமறியாதநானும் நீயேயெல்லாமென்று நிச்சயமாகத்தெளிந்துஉன்னையல்லாதமற்றவிகற்பமெல்லாம்விட்டேன்-எ-று. *[கனி] ௯

விஸ்தாவது எந்தவஸ்துவிதையானாலும் அந்தவிதை அந்தவஸ்துவாக முளைக்கிறதல்லாமல்ஒருவஸ்துவினுடைய விதைவேறொருவஸ்துவாக முளையாது ஒருவஸ்துவின்விதை அனேகம் வஸ்துவாகமுளையாது அந்தந்தவிதை யந்தந்தவஸ்துவாகவருகிறதாகையால்நீ அனேகபேதவஸ்துவாக முளைகிற ஒரேவிதையன்றது எல்லாப்பொருளுக்குமாசனுவதுசகலத்துவங்களுக்குஞ் சுவாமியென்றது) ௩௯

கொச்சககலிப்பா.

மெய்வகையிவ்வுலகிடை நீவேறுவேறாய்நிற்ப
தெய்வகையெவ்வுருச் சார்ந்ததெனவேதுமறிகிலே
னவ்வகையேயொரு பொருளுமொழியாமலடியேனு
குய்வகையாநெறி யாகவுரைத்தருளென்றேயுரைப்பான்.

[இ-ள்) இந்தப்பிரபஞ்சத்தினிடத்தில்மெய்யாகவேறுவேறானபேதமாகநீநிற்கிறதெந்தவிதம் எந்தரூபமடைந்ததுஎன்று நான்ஒன்றுமறியேன்நீயெந்தரூபமானாயோ எந்தெந்தப்பேதவஸ்துவாகநின்றாயோ அந்தப்படியே ஒருவஸ்துவும்விடாமல் அடியேனுக்குப்பிழைக்கிறவிதமான மார்க்கமாகத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று சொல்லுவான் எ-று, ௰

கலிவிருத்தம்.

பருகாநின்றோர்க்குனது திருவாக்காகின்றபாலமுத
மொருகாலமுமார்க்கின்றதில்லையின்னமடியேற்குறையென்ன
வருகாலமுஞ்செல்காலநிகழ்காலமென்றுமூன்றுவற்றிற்
பெருகாகுறையாதவனும் பெருமாயன்றான்பேசுவான்

[இ-ள்] இந்தப்பாட்டைப்பருகாநின்றோர்க்குனது வாக்காய்பாலமுதமொருகாலுமார்க்கின்றதில்லையாஉரையென்ன வருகாலஞ்செல்காலங்கழிகால மென்னுமிவற்றிற்பெருகாதசிறுகாத பெருமாயன் பேசுவனென்பது பாடமோதுவாருளர் என்றது உம்முடையதிருவாக்கினலருளிச்செய்கின்றதிருவார்த்தையாகிய பாலமிர்தத்தைக்காதிரண்டாகிய வாயினாலே குடிக்கிறயெனக்கு ஒருகாலமுநிறைந்து திருத்தியாகியதில்லையாகையால் இன்னமுமடியேனுக்கு அருளிச்செய்யுமென்று சொல்லஇனிமேல் வருங்காலமிப்போதுநடக்கிறகாலம் முன்போலகாலமென்று சொல்லப்பட்ட இந்தமூன்றுகாலத்திலும் பெருகாதசிறுகாதசமகனவிக்கின்றபெருமையுள்ள ஸ்ரீகிருஷ்ணசுவாமிசொல்லுவார்-எ-று.(பாட்டிரண்டுபேதமானாலும் உரையொன்றேயல்லாமற் பேதமில்லை.) ௰௧

கலிவிருத்தம்.

இறந்தவென்விபூதிக்கோரெல்லையின்மையிற்
பிறந்தனமுடிவுறப் பேசமொன்றுமே

லறந்தருமனத்தினாய் வற்றிலேசில
சிறந்தனகூறுவனென்றுசெப்புவான்

[இ-ள்) சொல்லும்பொருளுமிறந்தவென்னுடைய ஐசுவரியத்துக்கும் ஒரு பிரமாணமில்லாதபடியினாலே என்னிடத்திலுண்டானஐசுவரியத்தைமுடியுமட்டுஞ் சொல்லக்கூடுமோ கூடாது ஆகையாலேகருமத்தாலுண்டானமனதையுடைய அருச்சுனா அந்தஐசுவரித்தினாலேசிலஐசுவரியஞ் சிறப்பாயிருக்கிறதைசொல்லுவேன் கேளென்றுசொல்லுவார் எ-று. * கூடாதாவது, கேட்கின்றவனுக்குகாலங்கொஞ்சமானதினாலே இந்தக காலத்துக்குள்ளேசொல்லிமுடியாதென்பது) ௰௨

அறுசீரடியாசிரியவிருத்தம்.

ஓதிற்பெருகும்பூதங்கட்கெல்லாமிதயத்துள்ளவனான
பேதித்திடுமிப்பொருட்கெல்லாபிறப்புநிலைகேடாவேனா
னாதித்தியரில்விஷ்ணுநான்மருத்தேவாகளில்மரிசுநான்
சோதிக்கதிரிலிரவியஞ்சுவென்றுசொல்லப்படுவேனான்.

[இ-ள்] என்னுடையஜசுவரியத்தைச்சொல்லியஅளவற்றஅச்சுப்பேதங்களாகப் பெருக்கப்பட்ட சகலபூதசீவராசிகளுக்கெல்லாமிருதயத்திலிருக்கின்றவன்நான் அனேகபேதமாகப்பட்ட இந்தச்சீவன்களுக்கெல்லாம்பிறப்பும் நிலைமையும் நாசமுமாகின்றவனான ஆதித்தரில்விஷ்ணு நான் வாய்வுதேவரில்மரிச்சிநான் பிரகாசமுள்ளசோதிகளிற்சூரியனென்று சொல்லப்பட்டவனான்-எ-று. ௰௩

கலிநிலைத்துறை.

சந்திரனானாமீனிற்சாமநானான்மறையி
னிந்திரனான்தேவர்களிந்திரியங்களின்மனநா
னேந்திரமாமுருவுகளிற்சேதனநானுறத்திறரின்
மந்திரிமாஞ்சங்கரனியக்கரில்லைவைச்சிரவனான்

(இ-ள்) நக்ஷத்திரங்களிற்சந்திரனனாலுவேதங்களிற்சாமவேதம்நான்தேவர்களினிந்திரனான இந்திரியஙகளில்மனதுநான்பிறந்திருந்துசுழலப்பட்டரூபங்களில் அறிவு நான்ருத்திரரில் மந்திரியானசங்கரனான்யியக்கரிற்குபேரனான்-எ-று. ௰௪
மலைகளின்மாமேருநான் வசுக்களிற்பாகனான்போர்த்
தலைவர்களிலறுமுகனான் சலநிலையிற்சாகரனா
நிலையதுலாயாகதநிற் செய்யாகவானே
நிலையுடையவெனுமவற்றி லீமவர்னாய்நிற்பேன்.

(இ-ள்) மலைகளில்மகாமேருநான் வசுக்களிலேபாவதவசுநான் சேனாபதிகளிற் சுப்பிரமணியனான் தண்ணீர்நிற்கிறவிடங்களில்சமுத்திரம்நான் அழிவில்லாதயாகத்திற் செய்யாகமாகின்றவன்நான் நிலையாய்நிற்கிறதாபரங்களிலும் பந்தமாகநிற்கிறவனான்-எ-று. ௨௫

பெருமுனியிற்பிருகுநான்புரோகிதரிற்பீதகனான்
மருவியவாக்காந்தோநான்மரங்களிலச்சுவந்தநான்
பொருவரியநாரதனான்புத்தெண்மாமுனிவரரிற்
றிருவியல்கந்தருவர்களிற்சித்திரத்தேரவனுநான்

[இ-ள்] மகாரிஷிகளிற்பிருகுமுனிநான் புரோகிதரிற் பிரகஸ்பதிநான் சகலத்திலுங்கலந்தவசனங்களில் ஓம்நான் மரங்களில்அரசுநான்தேவமகாரிஷிகளில் ஒப்பில்லாதநாரதமுனிநான் அழகிசைந்தருவர்களில் சித்திராதனான்-எ-று. ௨௬

சித்தர்களிற்கபிலமுனிதிரைகடவிலேசெனித்த
வுத்தமமாங்குதிரையினையானென்றேயுணர்கண்டா
யத்தமுடைவிலங்குகளின்யானையிராவதமாவேன்
வித்தகமானிடப்பிறப்பில்வேல்வேந்தரானுவேன்

(இ-ள்) சித்தர்களில்கபிலமுனிநான் குதிரைகளில் அலையையுடைய திருப்பாற்கடலிலேபிறந்த உத்தமமான உச்சைசிரவமென்றுபெயரையுடையகுதிரை நானென்றேயறிகண்டா யருச்சுனா கையையுடையமிருகமானயானைகளில் அயிராவதமாகிறவனான் திறமையுள்ள மனிதப்பிறப்பிலேவேலையுடையராசாவாகிறவன்நான்-எ-று. ௨௭

கலிவிருத்தம்,

படைகளில்வச்சிரம்பாம்பில்வாசுகி
நடைதருமனந்தனு,கர்தங்களிற்
கொடைபயில்சுரபிகோகுலத்திற்கூறிய
வடைவொடுமிவையெலாம்யானென்றேயறி

(இ-ள்) ஆயுதங்களில்வச்சிரம்நான் பாம்பில்வாசுகிநான்நாகங்களிலே நடக்கப்பட்ட ஆதிசேஷனான் பசுக்களிற்கொடுக்கின்ற கொடைபொருந்தியகாமதேனுநானென்றேயறி அருச்சுனா-எ-று. * (கூறியவடைவோடும் இவையெல்லாம்யானென்றவற்றிற்கு உரையையுள்ளேகாண்க)

வருணனுமியமனுமலைவிலாளியும்
பெருமைசெய்யசுரரிற்பிரகலாதனு
மிருமையிலெண்ணுவாரெண்ணும்யானெனச
செருமலிதோளினாய்தெளியத்தேறுவாய்

இ-ள், சலவாசிகளில்வருணனும்தெண்டிக்கிறவர்களில்யமனும் கொல்லுகின்றவர்களில் மகாமேருவைவில்லாகவுடையசிவனும் உலகத்தார் பெருமைசெய்யப்பட்ட அசுரர்களில் பிரகலாதனும்இம்மைமறுமையிரண்டிலுமெண்ணுகின்றவர்களுடைய இலக்கமும் நானென்றுதெளியத்தக்கதாக நன்றாகததேறுவாயசண்டைமிகுந்துசெய்யப்பட்டதோளையுடைய அருச்சுனா-எ-று. ௰௯

பொராவருகருடன்யான்புள்ளிமாக்களில்
விராவருமடங்கனன்வாயுவேகநா
னிராமனென்றிபடைவீரர்தங்களிற
கராவுநான்மீன்களிலாற்றிற்கங்கைநான்

இ-ள், பட்சிகளிலொப்பில்லாதகருடனான் மிருகங்களிற்கிட்டப்போகக் கூடாதசிங்கம்நான் வேகத்தில்வாயுவேகம்நான் வீசப்பட்ட ஆயுதவீரர்களில்ரகுராமனான் மீன்களில்முதலைநான நதிகளிலேகங்காநதிநான்-எ-று. ௨௰

அறுசீரடியாசிரிய விருத்தம்.

மிக்கசொற்றொகையனைத்துநானரிய விச்சையிற்பிரமவிச்சா
னக்கரங்களிலகாரநானழிவில்காலநானதுவுமன்றியே
தக்கதொத்துவபாசநானிருவினைப் பயன்கடருவோனுநா (ன்
னுக்கமன்னுயிர்களைக்கொல் வோனுமவையுற்பவஞ்செய்திடுவோனுநா

இ-ள். மிகுந்தசொல்லுடைய தொகையெல்லாம்நான்வித்தையிற்பிரமவித்தைநான் அட்சரஙகளில் அகாரம்நான்காலங்களில்அழிவில்லாதகாலமான அட்சயகாலம்நான் அதுவுமல்லாமல்மயக்கஙகளிலேதகுமானதொந்தமுள்ளவசப்பட்ட பாசம்நான் புண்ணியபாவத்தினுடையபலன்களைத்தருகின்றவனும்நான் நிலைமையானசீவன்களைநிலைமைகெடக்கொல்லுகிறவனும் அந்தச்சீவர்களைப்பிறக்கச்செய்கிறவனும்நான்-எ-று. ௨௧

பெண்களிற்புகழ்திருச்சொன்மேதைபொறைதின்மை பேசுமறமென்னவே, யெண்பகுத்தவெழுவோருநானிருதுவாறில்வந்தவிளவேனிலிவா, னண்பனற்பெரியசாம்பனானுரியசாம மேழினுநலத்தினன், மணகளிற்பெரியதிங்களிற்புகழநின்றமார்கழியுமற்றுநான்,

இ-ள், பெண்களிலேகீர்த்திலட்சுமிவாக்குதெளிவுபொறுமைதிடச்சித்தம எல்லாருமசொல்லப்பட்ட தருமமஇப்படியென்றுஎண்ணப்பட்ட வகுப்புள்ளஎழுபேரும்நான் ஆறுருதுவில் வந்தவசந்தருதுநான்சாமவேதத்திலுள்ளஎழு உபநிஷத்திலேசாந்தோக்கியஉபநிஷத்துநான்பூமியில்பெருமையுள்ளமாதங்களிலேநன்மையானமார்கழிமாதமும் மற்றமாதங்களும்நான்-எ று. ௨௧

கலிவிருத்தம்,

கல்லாருந்தோளிணைய்கவிகளிற்காயத்திரிநான்
றொல்லாயங்களிற்சூது துணிவோர்பாற்றுணிவுநான்
வெல்வார்பால்வென்றிநான்மிகுதிறலோர்பாற்றிறனு
னல்லான்பானன்மைநான்ஞானிகள்பான்ஞானமுநான்

இ-ள், மலையையொப்பானதோளையுடைய அருச்சுன கலைகளிலேகாயத்திரிநான்பழைய ஆயங்களிற்சூதுநான் துணிகிறவர்களிடத்தில் துணிவுநான் செயிக்கிறவர்களிடத்திலே செயம்நான் மிகுந்ததிறமையுடையவர்களிடத்தில்திறமைநானல்லவர்களிடத்தினன்மை நான் ஞானிகளிடத்தில்ஞானம்நான்-எ-று, ௨௩

கண்ணனுநானியாதவரிற்கவிகளில்வைத்துவசனான்
றண்ணளிசேர்பாண்டவரிற்றனஞ்சயனாகின்றேனான்
விண்ணவர்கோமுனிவரரில்வேதவியாசனுநானே
யெண்ணரியமறைவுகளிலியம்பாவையாதேனான்

இ-ள், யாதவர்களில் ஸ்ரீகிருஷ்ணனும்நான்கவிகளிலேசுக்கிரனுங்குளிர்ந்ததயவுசேர்ந்தபாண்டவர்களில்அருச்சுனனாகிறவனான் தேவரிஷிகளில்வேதவியாசனும்நான் எண்ண அரிதான அளவற்றரகசியங்களிலே மௌனமாகின்றவனும்நான்-எ-று. ௨௪

அறுசீரடியாசிரிய விருத்தம்

இரும்புனமனைத்தினுக்கும்வித்துநானெனைப் போக்கிலியாதுமில்லை
வருந்தினுமென் பெருமைக்கும் வரம் புரைக்க முடியாமை வகுத்துச்
சொன்னேன்,பெருந்திருவையுடையனமெய்ப்பெருமுயற்சியினவென்
றுபேசுமிந்த,வருமபொருள்களனைத்துமெனதொளியினால் வருனவெ
ன்றறிகநீயும்.

இ-ள், பெரியபிரபஞ்சத்துளெல்லாவற்றுக்கும் பீசம்நான்என்னைத்தவிரவொன்றுமில்லை என்னுடையபெருமைக்கு எல்லைசொல்லவருந்தித்தவசுயோகஞ்சாதித்தாலு முடியாததைத்தொகையாகக்கூட்டிச் சொன்னேன்பெரியசிரப்புடையநிச்சயமான பெரியமுயர்ச்சியையுடையது என்றுசொல்லப்பட்ட இந்தஅரியபொருள்களெல்லாமென்னுடைய பிரகாசத்தினாலேபிறந்தனவென்றுநீயறியக்கடவை-எ-று. (நீயுமென்றது என்னைப் போலேநீயுமறியென்பது) ௨௫

பலவினியுரைக்கேனிங்கிப்பல்லுயிரனைத்துமெல்லா
வுலக [illegible] தன்னிலோரிடத்தினுள்ளே
கலைவல [illegible] டென்றான்கஞ்சனாருயிர்போய்த்துஞ்ச
வலைந [illegible] தேபோந்தாயர்பா [illegible] ந்தபெம்மான்

இ-ள், இப்படிப்பலகாஞ்சொல்லியென்னபிரயோசனமிந்தப்பலசீவன்களும் சகலபிரபஞ்சமுமிந்தசண்டைக்குவந்துநிற்கிறவர்களுடனேன ளளளாளேயோரிடத்திலேஒடுங்கிநிற்பதுசாஸ்திரவல்லபமுடையஅருச்சுனனென்றுசொன்னார்கஞ்சனுடைய சீவன் போயவன்சாகவேண்டிஅலையையுடையதிருப்பாற்கடலிலேதிருக்கண்வளர்ந்தருளாமற் பூமியிலேபோய் இடையரிடத்தில்வளர்ந்தருளிய ஸ்ரீகிருஷ்ணசுவாமி-எ-று. இவரோடிந்தப்பல்லுயிரெனமாறுக) உசு

——(*)——

௰-வது விபூதிவித்தாரயோக அத்தியாயம்

முற்றுப்பெற்றது.

ஆக அத்தியாயம்-௰-க்குக்கூடியசெய்யுள்-உகூச

——(*)——

உ

பதினோராவது

# விசுவரூபஅத்தியாயம்.

——(*)——

அருசீரடி ஆசிரியவிருத்தம்,

சுருளார்கின்றதுழாய்முடியாய் சொல்லுமனமுந்தொடர்வரியா
யுருளார்சகடமிறவுதைத்தாயுயிர்கட்கெல்லாமுள்ளுயிரே
யிருளார்பககதேகிடந்துழைக்குமென்பாலிரங்கிநீயிசைத்த
வருளாரமுதென்செவிகளாலாரப்பருகியறவொழிந்தேன்.

இ-ள், அருச்சுனன்சொல்லுவதுசுழியாகக்கொண்டையிலமர்ந்திருந்ததிருத்துழாய்மாலைமுடியையுடையவரேசொல்லுவனதுந்தொடரவெட்டாதவரே உருள் அமைந்தசகடாசுரனேமச்சாகஉதைத்தவரே சகலசீவன்களுக்கெல்லா முள்ளாகவிருக்கிறசிவனே அஞ்ஞானமென்னுமிருளையுடையபிறவியிலே கிடந்துஉழைத்துக்கொள்ளப்பட்டஎன்னிடத்திற்கிருபைசெய்தருளிநீருபதேசித்தகிருபைநிறைந்தஅமுதத்தையென்னுடைய காதுகளாகிய வாய்நிறையக்குடித்துக் கிலேசந்தீர்ந்தேன்-எ-று, க

தெரியாவகைநீயேயெங்குமாகின்றதிருக்கோல
மரியாமெய்யேயடியேற்குக் காணலாமோவெனவன்பாற்
பரியாநின்றசிந்தையொடுபார்த்தன்வினவப்பழமறைதேர்
கரியானவனுக்கப்பரிசேகாட்டவேண்டிக்கட்டுரைப்பான்

இ-ள், இடைத்ததற்கரிகாணசுவாமி யாருக்குந்தெரியாதபடி எங்கும் பரிபூர்ணமாகிநீயேநின்றதிருக்கோலத்தை மெய்யாக அடியேன் பார்க்கலாமென்று அன்பினாலே யுருகப்பட்டமனதுடனே அருச்சுனன்கேட்கஅவனுக்கந்தபடியேகாட்டவேண்டிப்பழையவேதங்கள்தேடப்பட்ட பிரபஞ்சசாட்சியானஸ்ரீகிருஷ்ணசுவாமிசொல்லுவார்-எ-று. ௨

எண்ணினியற்கையதென்னிறைந்தது
பண்ணியொருக்தர்படைத்தறியாதது
விண்ணினியகைசுருங்கவிரிந்தது
கண்ணினளப்பரிதாயதுகாணாய்,

இ-ள்' இலக்கத்தினுடையசுபாவத்தினாலேஎண்ணிலக்கணமிறந்தது அப்பாற்பட்டதுஒருக்தர்பண்ணிப்படைத்தறியாதது பிருதிவி அப்புதேயுவாயுவென்னுநாலுபூதங்களையுமடக்கின ஆகாயத்தினுடையசுபாவமானவிஸ்தாரமானதுகொஞ்சமாய்ச்சுருங்கத்தக்கதாகவிஸ்தாரமான கண்ணாலேபார்த்து அளவிட அரிதானது இப்படிக்கொத்ததெய்வ சொரூபத்தைப்பார்ப்பாய்-எ-று, [௩]

மருத்துவர்சூரியரட்டவசுக்க
ளுருத்திரரென்னிடையேயுளரியாரு
மருத்திசெய்யற்புதமாயவனேகங்
கருத்துறவென்னிடையேயுளகாணாய்

இ-ள், அசுவனிதேவர்கள்சூரியரஷ்டவசுக்களுருத்திரரிவர்கள்முதலானசரசீவன்கள் என்னிடத்திலிருக்கிறார்கள்எல்லாரும்மனதுபொருந்த அன்புசெய்யப்பட்டஆச்சரியமானஅனேகமாகியஅசரசீவன்கள் என்னிடத்திலே யிருகின்றன காணுயருச்சுனா-எ-று, (௪]

என்றருளிச்செய்தவன்கணிரண்டு
நன்றறிகிற்கெனஞானமளித்திட
வன்றவனுக்கருள்செய்வகையாயே
நின்றவருக்கறியாவகைநின்றான்

இ-ள், இப்படிசராசரங்களுமென்னிடத்திலே யிருக்கின்றவையானருளிச்செய்தஅந்தஅருச்சுனனுடைய கண்களிரண்டும் நன்றாகப்பார்த்தறியமாட்டாதென்று ஞானக்கண்களைக்கொடுத்தப்போதந்தஅருச்சுனற்கருளிச்செய்தபடியேசொரூபமாக அருச்சுனனல்லாமல்நின்றபாண்ட

வர் கௌரவராயிருக்கிறவர்களுக்குமறியாதபடிக்கு நின்றூர்-எ-று.*) அன்றருளிச்செய்வதையென்றதனுலே சாஸ்திரபுராணங்களினுல் முன்சொன்னதிவ்வியரூபங்கள் அரூபமல்லாமல் அப்போதுசொன்ன பிரமசொரூபமாகிநின்றூரென்பதுஇன்னமுமனேகவிதங்களில் அன்றருளிச்செய்தவிதப்படியென்றுமாம்] (௯)

கலிவிருத்தம்.

பரிந்தினிதுரைப்பதெனவப்படிவமேலாய்
விரிந்துலகமெங்கனும்விளங்கொளியினுலே
யெரிந்தனதிசைப்புறமதின்னவெனவேதுந்
தெரிந்திலர்கள்வானவர்கடானவர்திகைத்தார்

இ-ள்,கேளுந்திருதராட்டிரமகாராசாவே அந்தவிசுவரூபத்தைப்பற்றிநன்றாகச்சொல்வதென்னஉலகமெங்குமவருடையசொரூபமேயாய்ப்பிறந்தது அந்தச்சொரூபம்விளங்கப்பட்டசோதியினுலேபத்துதிக்குமிகுந்துபிரகாசித்தது அந்தப்பிரகாசத்தைப்பார்க்கமாட்டாமற்றேவர்களானவர்கள் திகைத்து அந்தச் சோதியானது இன்னதென்றதுஒன்றுந்தெரியாமல்வெளிச்சப்பட்டு நின்றூர்கள்எ-று.*[தேவர்கள்திகைக்குந்திக்குகளைச்சோதி கம்மிக்கொண்டதுவுஞ் சஞ்சயனுக்குகதெரிந்ததுவியாசமகாமுனி வரத்தினுலேயும் அருச்சுனனுக்குத்தெரிந்ததுகிருஷ்சுவாமிகொடுத்ததிவ்வியதிருட்டினுலுமென்றது அருத்தாபத்தி [௯)

கலிவிருத்தம்.

அங்குமால்கொள்கோலமிங்களந்துகூறலாகுமே
கொங்குமாலையாடைசாந்துகொண்டகோலமேவியே
யெங்குமாகியெல்லையின்றியெண்ணில்கோடிபல்கதிர்
மங்குல்வானில்வந்துதித்ததொக்குமற்றதன்கணே

இ,ள்,கேளுந்திருதராட்டிமகாராசாவே அந்தகுருபூமியிலேஸ்ரீகிருஷ்ணசுவாமிகொண்ட விசுவரூபத்தையிங்கே யளவிட்டுச்சொல்லாகுமோ ஆகாது பூங்காதுக்கள்நிறைந்த திவ்வியமாலைபீதாம்பரம்திவ்வியசந்தனமிவைகள் தரித்துக்கொண்ட சொரூபத்தைக்கூடி யெங்குந்தானுகியிம் மட்டென்று மட்டில்லாமல் அளவில்லாத கோடி யனேகசூரியர்கள் மேகஙகள் சஞ்சரிக்கப்பட்டஆகாயத்தில்வந்து உதையமானதையொப்பான சோதியுள்ளதாகும்அந்தச்சொரூபத்தினிடத்தில்-எ—று,)

கலிவிருத்தம்.

ஏய்வகையதாள்களொடுதோள்களுமனேகம்
காய்பெறவணிந்தவணிதானுமுனனேகம்
வாய்களுமனேகமொளிர்வான்முகமனேக
மாயுதமனேகமெழுமற்புதமனேகம்.

இ-ள், அந்தவிசுவரூபத்தினிடத்திலிசைந்தபடி அனேகந்திருவடிகள் அதனுடனேதோள்களுமனேகம்சாயைபெற முன்னேதரித்ததிவ்வியாபரணங்களுமனேகம திருவாய்களுமனேகம் பிரகாசிக்கப்பட்டதிருமுகமுமனேகம் ஆயுதமனேகமனெழும்புகிறஆச்சரியமனேகம்-எ-று. ()

அவ்வகையாமாயவமர்கோலமதனுள்ளே
யெவ்வகையவாய்ப்பொருள்யாவுமெதிர்காணு
வுய்வகையதுயினனெனவுவகைகூறச்
செய்வதறியாவிசயனிவ்வகைசெய்தானல்

இ-ள், ஸ்ரீகிருஷ்ணசுவாமியமர்ந்தசொரூபமிப்படிக்கொத்ததுகேளுந்திருதராட்டிரமகாராசாவே அந்தச்சொரூபத்துக்குள்ளேஎந்தவிதங்களாகிய சகலபொருள்களுமெதிராகக்கண்டுதப்பிப்பிழைக்கின்ற விதத்தையுடையவனுமென்று சந்தோஷமிகுதியாக அதனாலேசெய்வதொன்றுமறியாத அருச்சுனனிந்தப்படிசெய்தான் என்றவாறு. ௯

தொழும்புகழுமெய்ம்மயிர் துளக்குமுயிர்சோரு
மெழும்புவனமெழுவனன்றியெதிர்காணுன்
விழுங்கயலுமானென விரும்புமெய்மயங்கா
அழும்பரியுமென்செய்தனனென்றறியலாமால்

இ-ள், தெண்டனிடுவான்தோத்திரம்பண்ணுவான்சரீரத்துமயிர்புளகமாகிநடுங்குவானேங்குவான்சோருவானெழும்புவான்சகல பிரபஞ்சமும் அந்தகிருஷ்ணசுவாமியையல்லாமல்வேறொன்றையு மெதிராகக்காணுன் அந்தச்சொரூபத்தை விழுங்கப்படுகிறவனென்னத்தக்கதாக ஆசைப்படுவான் சரீரந்தெளியாமல்மயங்கி அழுவான் இரங்குவான்இவைகளிலென்னசெய்தானென்றறியாமல்எல்லாஞ்செய்தான்-எ-று. ௰

அஞ்சிமெய்நடுங்கமிகவன்பெனுமனத்தே
நெஞ்சுமறிவுங்குழையநின்றுதொழுநேரே
யுஞ்சுகரைகண்டனனெனவுவகைகூறும்
வெஞ்சுடர்கொலென்றனன்வெயர்க்கும்வெயரெய்தான்

இ-ள், பயந்துவெயர்வையடைந்து அருச்சுனனிந்த சொரூபத்துக்குப்பயந்துசரீரமநடுங்கமிகுந்தஅன்பைமனதிலேயடைவான் இருதயமுமறிவுங்குழைந்துருக எதிரேநின்றுகைகூப்புவான்பிறவிக்கடலுக்குத்தப்பிப்பிழைத்துக்கரைகண்டேனென்றுசந்தோஷமிகுதியாவான்உஷ்ணமுள்ளசோதியோவென்றுஞ்சரீரம்வியர்வையுண்டாகும்-எ-று. ௰௧

மண்ணுறவணங்குமயிர்க்குச்செறிநிறைக்கும்
கண்ணுமனமுங்கரையநின்றுகைக்குவித்தே

யென்னுமுலகங்களையுமியாவரையுமேனுட்
பண்ணுமவன்முன்புசிலநின்றுபகர்வுற்றான்

இ-ள், தன்னுடையசரீரம்பூமியிலேபடத்தெண்டனிடுவான்மயிர்க்குச்செறிந்துநிறையாசநிற்கப்புளகிப்பான் கரையாதகண்ணுங்கரைந்துஆநந்தகண்ணீரோடக்கரையாதமனதுங்கரைந்துருகநின்றுகைகூப்பியெண்ணப்பட்டசசலபிரபஞ்சத்தையும்சகலசீவராசிகளையுமபூர்வகாலத்திலேசிருஷடிக்கபபட்ட அந்தகிருஷ்ணசுவாமிமுன்னேநின்றுசிலவசனஞ்சொல்லுவான்-எ-று. ௧௨

அறுசீரடியாசிரியவிருத்தம்.

தேவரும்வணங்குந்தேவனின்றிருக்கோலத்துள்ளே
யாவருமெல்லைகாணுப்பொருளெல்லாமிசையக்கண்டேன்
மூவரின்முதற்புத்தேளைமுனிவரரோடுங்கண்டேன்
மேவருநாகங்கண்டேன்விண்ணவர்குழாமுங்கண்டேன்

இ-ள, மனிதர்வணங்கப்பட்டதேவர்களும் உம்முடைய அழகியசொரூபத்திற்குள்ளேஎல்லாருமெல்லைகாணுதபொருள்களெல்லா மிசையக்கண்டேன்திரிமூர்த்திகளில்முதலானதெய்வத்தைமகாமுனிகளுடனுங்கண்டேன்சேரஅரிதான பாதாளத்துப் பாம்புகளைக்கண்டேன் தேவலோகத்துத்தேவர்களுடையகூட்டங்களைக்கண்டேன்-எ-று. ௧௩

கண்களுவயிறுந்தோளுமுகங்களுங்கருதிநோக்கி
லெண்பலவுடையவாயுவுருவுகளனேகங்கண்டேன்
றண்கதிர்முடியுந்தண்டுஞ்சக்கரப்படையுமேந்தி
யொண்கதிரனலோடொன்றாயனையநின்னுருவினுள்ளே

இ-ள், குளிர்ந்தபிரகாசமுடைய கிரீடமுந்தெண்டாயுதமுஞ்சக்கராயுதமும்தாங்கிஅழகியசூரியர் அக்கினிகளுடனே யொன்றாய்க்கலந்ததையொப்பானஉம்முடையசொரூபத்தினுள்ளேகணகளும்வயிர்களும்தோள்களும்முகங்களும்விசாரித்துப்பார்க்கிலிலக்க மனேகமுண்டானதாகியரூபங்களனேகமகண்டேன்-எ-று. ௧௪

கலிவிருத்தம்.

இந்தவுருவெந்தவுருவென்றறிகிலேனு
னந்தமறியேனடுவுமாதியுமனைத்து
நந்தலறியாததனைநான்மறையுநாடித்
தந்தபொருளாயதனைமாயைதருசார்வை

(இ-ள், )இந்தச்சொரூபத்தையெந்த சொரூபமென்றறியமாட்டேன் ஆதியுநடுவுமந்தமுமெல்லாமறியேன் நாசத்தையறியாததை நாலுவேதமுந்தேடித்தரப்பட்டவேதாந்தபொருளாகியதை மாயையைத் தரப்பட்டசார்பானதை-எ-று. ௧௫

என்றுமுளதாயதையியற்றருமமெல்லா
நின்றுபிறழாவகைநிறுத்துநெறிவாழ்வைச்
சென்றுகுறையாததனையென்பழையசேர்வை
கன்றுதொடராபரிசுநின்றனெதிர்கண்டேன்

இ-ள், என்றைக்குமிருக்கிறதாகியதை இயல்பானதருமமெல்லாந தப்பாதபடிக்குநின்றுநிறுத்தப்பட்ட தருமமார்க்கமானசெல்வத்தைக் காலஞ்சென்றுகுறையாத நிறைவை இப்படிக்கொத்த சொரூபத்தை நான்சேவிக்கப்பட்ட வென்னுடையபழையசேர்வையைக் கன்றைத்தொடர்ந்தபசுவைப்போல நீயென்னைத்தொடருகின்றதையும்முடையமுன்னேகண்டேன்-எ-று. ※ (இந்தவுருவென்றபாட்டு, மென்றுமுளதிதென்றபாட்டும் ஒருதொடர்பு] ௰௬

வலந்தருநிறத்தொடுவருங்கதிரிரண்டே
யலர்ந்தெழவிருப்பதையடுங்கனெருப்பை
மலர்ந்தெழுமுகத்தையயங்கவுலகெங்கும
கலந்துசுடருற்றதைவியந்தனெதிர்கண்டேன்

இ-ள், பராக்கிரமத்தையுடைய திருமார்புடன்உலகத்தில்வரப்பட்ட சூரியசந்திரர்பரந்தெழும்ப விழிக்கின்றகண்களைச் சுடப்பட்ட உஷ்ணத்தையுடைய அக்கினியைப் பரந்தெழும்புகின்றதிருமுகத்தையுடையதை வெளிச்சப்பட்டுபிரபஞ்சமெங்கும்தெரியாமல்மயக்கங்கந்துசோதியாயெரிகிறதை இப்படிக்கொத்தசொரூபத்தை யெதிரேகண்டேன் அதிசயித்தேன்-எ-று. ※ (திருமார்புடனே திருக்கண்ணைத் திருமுகக்துறசோதியைக் கண்டேனென்பது] ௰௭

நிலத்தினொடுவானுறநிமிர்ந்துதிசைநேர்போய்
விலக்கமறநீயுனதுமேனியைவிரித்தா
லலக்கணடையாதவர்களாரடையவையா
கலக்கமுறுகின்றவுலகங்களிவைகாணாய்

இ-ள், பூமியினுடனே ஆகாயமெங்கும்நிறைந்து திக்குகளிலேசெவ்வையாய்ப்போய் விலக்கப்பட இடமில்லாமல் உம்முடையதிருமேனியை நீவிரித்தால் துன்பமடைந்தவர்களாரையா எல்லாருந்துன்பமடைந்தவர்களே அதினாலேதிருலோகங்களும் கலக்கப்படுகின்றது இதைப் பாரும்-எ-று, ௰௮

வணங்கியிமையோர்களொடுமாதவர்வழுத்திக்
கணங்கொளவியந்துபுகழ்சிந்தாதுகண்டே
னுணங்கவுயிர்தானவர்கள்திருவருள்ளோ
ரிணங்கியினதென்றறிகிலாரையெதிர்கண்டேன்

[இ-ள்] தேவர்களுடனேபெரிய தவமுனிகள் உம்மை வணங்கவேண்டிந் தோத்திரப்பண்ணிகொண்டு கூட்டங்கூடி அதிசயித்துத்தோத்

திரம்பண்ணுகிற சித்தர்கள்ஒன்றுந்தெரியாமல் மயங்கிப்பெருமூச்சுவி டுகிற அசுரர்களகந்தருவர்கள் முதலாயுள்ளவர்கள்கூடி இன்னதென்ற றிய மாட்டாதவர்களை எதிரேகண்டேன்-எ-று. ௰௯

வானடையவிம்மிவருணம்பலவுரித்தாய்
பேயினடையாயபிறைபோலெயிறுபேழ்வாய்
தானுடையவாய்மனமுகமபலத்தழைக்குமம
யானடையலாமவகையதன்றியுருவெந்தாய

[இ-ள்] ஆகாயமெல்லாம்நெருங்கிநிறைந்தது அனேக வானங்களையு டைய தாயப்பேயினுடைய சுபாவம்போலவாகிய பிறையிரண்டொத்த கோரைப்பல்லுகளும் பெரியஆழமுள்ள முழைகளும் தனக்குடையதான அனேகவாய்களும் அனேகமனதுகளும் அனேகமுகங்களும் அகோர மாகவாழுகின்ற அந்த சொரூபம்நான்சேரலாகாதபடியானதல்லசுவாமி-எ

அறுசீரடியாசிரிய விருத்தம்.

தஞ்சமிவ்வுலகுக்கெல்லாமாயனின்றன்மைகண்டே
னஞ்சனனென்றுமாயவுறவுறக்காணககாண
நெஞ்சமுநடுங்கிநிற்கலையிலேன்றிசையுங்காணே
னஞ்சலென்றருளவேணுமெகிலமுமாயவெந்தாய்.

(இ-ள்) சஞ்சலமுநீயாகியசுவாமி இந்தப்பிரபஞ்சத்துக்கெல்லாமாகார மாய்நின்ற சுபாவத்தைக்கண்டேன் பிழைக்கேனென்றுமாயாதேகத்தி லுள்ள மனதிலே தங்கத்தக்ககாய் பார்க்கப்பார்க்கமனது நடுங்குகின்ற து நிற்கநிலையில்லை ஓடஒருதிக்கையுங் காணேன் ஆகையாலே பயப்ப டாதேயென்றருளிச செய்யவேண்டும்-எ-று. ௨௧

நூம்றுவர்தாமுந்தங்கள்சேனையுமவர்கட்காகி
யேற்றெதிராசர்தாமுமென்படைதானுமுந்தன்
கூற்றுறழெயிற்றிற்பட்டுக்குறையுடலாகநின்றன்
காறறுடன்றீயினன்னமுகஙகளில்வீழக்கண்டேன்

(இ-ள்) கௌரவர்கள் நூறுபேரும் அவர்கள்சேனையும் அவர்களுட த்தி யெதிராகநின்று எதிரதராசாக்களும் எங்கள்சேனையுமமமுடை ய யமனையொப்பான தந்தங்களிலேபட்டு நறுச்குண்டுகுறையுடலாகிற தற்குக காற்றிலிருக்கிற அக்கினியையொப்பானஉம்முடைய முகங்களி லே விழக்கண்டேன்-எ-று. * (அவர்கட்காவேற்றெதிராசரொன்றுபாட மோதில் அவர்களுக்காக வெதிராகவெதிராகவெதிர்த்தஅரசரொன்பது ம் என்படையென்பதனு லெங்களைத்தவிரவென்றதருத்தாபத்தி) ௨௨

ஓதருநதிகளெல்லாமொன்கடத்தடைந்தாற்போலப்
போதருமபொருள்களெல்லாமுன்னுளேபுகுதக் கண்டேன்
தீதனில்விட்டிற்பாய்ந்தாற்போற்றிருமுகங்களுள்ளே
மாதவவுயிர்களெல்லாம்விழுந்துமாய்தலுங்கண்டேன்

இ-ள் இந்தனையென்று சொல்ல அரிதானநதிகளெல்லாம் அழகியக டலைக்கூட்டினாற்போலப் போகப்பட்டபொருள்களெல்லாம்உமக்குள் ளேபுகுதக்கண்டேன நெருப்பில்விட்டிற்பூச்சியாய்ந்தாற்போல உமமு டைய திருமுகங்களுக்குள்ளே சகலசீவனகளும்வீழ்ந்துசாகிறதுங்கண் டேன்மாதவாசுவாமி-எ-று, [௨௩]

ஒளியினிலுலகமெல்லாமொழிந்தவையூண்போதாமல்
வெளியினைனீட்டிநீட்டிவெறுஞ்சுவைகொள்ளாநின்றாய்
தெளிகிலேலுன்னையுந்தன்செய்கையுந்தெரிக்கமாட்டே
னளியினாலடியேற்குன்னையுள்ளவாறருளிச்செய்வாய்

இ-ள் சோதியிலேசகலபிரபஞ்சத்தையும்விழுங்கிப்பசிப்புப்போதா மல்வெளியிலே நாக்குகளைநீட்டிநீட்டி வெறுஞ்சுவையைநக்கிக்கொண் டிருக்கிறாய் உன்னை யின்னா னென்று தெரிய மாட்டேன் உன் செய்கையையுமின்னதென்றுதெரிந்துக்கொள்ளமாட்டேன் இப்படிக் கொத்த அடியேனுக்குக்கிருபையினாலேயுன்னையுள்ளபடியருளிச் செய் வாய் [௨௪]

என்றடிவணங்கிக்கேட்கயாவுமாயெல்லையின்றி
நின்றவனுரைப்பானும்மையொழிய நின்றவரையெல்லாம்
கொன்றுயிர்ப்பருகலுற்றேன்கடையுகங்குருகலுற்ற
வன்றுலகடையமாய்க்குமவனியானறிநீயையா

இ-ள் என்றுதிருவடிகளில்வணங்கிக்கேட்கஎல்லாமாகி யெல்லையில் லாமல் நின்றஸ்ரீகிருஷ்ணசுவாமிசொல்லுகிறார் ஐயா உங்களைத்தவிர நி ன்றவர்களையெல்லாங்கொன்றுசீவனைக்குடிக்கிறகாரியத்தை இப்போது செய்கிறேன் இதுநான்பண்ணுகிறகாரியமல்ல உகாந்தமுடிகிறஅன்றைக்குச் சகலபிரபஞ்சத்தையுங் கொல்லுகிறகால சொரூபனநானென்னையின்ன னென்றும்நான்செய்கிறகாரியமின்னதென்றுஞ் சொல்லவேண்டு மென் றுகேட்டையேயபங்கஇரண்டையும்சொன்னேன் அதைகேட்பறி அருச்சுனா -எ-று*(அன்றுஎன்றதனாலின்றென்றதருத்தாபத்தி இப்போதுசெய்கி றகாரியத்திலும்மைத்தவிரவென்றதனால்உங்களைந்துபேரையுந்தவிர ம ற்றைப்பேரையென்றுமருத்தாபத்திவரும் (௨௫)

கொச்சகக் கலிப்பா.

இரந்தாரேயெனக்கருதிங்கிவர்களெல்லாமென்னுமேல
யுமந்தானுமதுநீயேயாங்கவனாக்கொன்றாயார்

சிறந்தாரவ்வரசினையுஞ்செகத்தினில்வாழ்திருவினையும்
பிறந்தார்கள்பெறாதபெரும்புகழினையுமபேணென்றார்

இ-ள் இங்கேநின்றவிவர்களெல்லாரையும்நீகொல்லாவிட்டாலும்என்னாலேசெத்தவர்களென்றேநினை தருமமுமதுதான்நீயேயவர்களைக்கொன்றாயாகில்சிறந்தராசாக்களுடைய அந்த அரசையும்பிரபஞ்சத்தில்வாழப்பட்டசெல்வத்தையும் பிறந்தவர்கள்பேறாகியபெரியகீர்த்தியும்ஆதரியென்றார்-எ-று-இறந்தாரெனவெனறஏகாரத்தினாலேநீகொல்லாவிட்டால்சாகாம லிருந்தவர்களென்றுநினையாதே என்னாலேசெத்தவர்களென்றேநினையென்றல்லேகற்றேகாரம்நான்கொன்றதனாற்பிரயோசனமென்னவென்றுகேட்கில்நீகொன்றாற்சகலசெல்வமுங்கீர்த்தியு முனக்கேவருமென்பது) ௨௬

அறுசீரடி ஆசிரியவிருத்தம்

இவ்வகைமொழியக்கேட்டவிசையனென்செய்தானென்னிர்
கைதலமிசையலாகக்கட்டுணை குளரக்கண்ணீர்
பையவேமார்பிற்சோரப்பபத்தொடும்பரிவினோடும்
மைவரையெடுத்தவள்ளல்பெருமைவழுத்தலுற்றான்

(இ-ள்)இந்தப்படிகிருஷ்ணசுவாமிசொல்லக்கேட்ட அருச்சுனன் என்னசெய்தானென்றுகேட்கில்கேளுந்திருதராட்டிரமகாராசாவே என்று சஞ்சயன்சொல்லுகிறான் அருச்சுனன்கைகளைத்தலைமேலேகூப்பிக்கொண்டவனாகவார்தலைதகுளாககண்ணீர்மெள்ளமார்பிலேயுதிரப்பயத்துடனும்பத்தியுடனும்மேகஞ்சூழ்ந்தகோவர்த்தனமலையைக்குடையாகவெடுத்தஸ்ரீகிருஷ்ணசுவாமியினுடையபெருமையைத்தோத்திரம்பண்ணவத்தியோகபபட்டான்-எ-று- ௨௭

கலி விருத்தம்.

சாயாவிடையோசனகாதிகடாபதரானோர்
சேயாயணியாயுனைவேற்றியார் தெளியாதார்
மாயாமனனேமதுசூதனனேதிருமாலே
யாயாவரசேயுனைவேறறியேனடியேனே

இ-ள்-சாயாமலிருக்கிற தேவர்களுக்குஞ்சனகாதியர்களுக்கும்முனிவர்களுக்கும் தூரமானவனென்றும்சமீபமானவனென்றும் உமையேவேறொருவர்களறியாரென்றும் மாயாமன முடையவனே யென்றும்மதுசூதனனேயென்றும்திருமாலேயென்றும்ஆயனேயென்றும்அரசனேயென்றும்உம்மையல்லாமல் வேறொருதெய்வத்தையறியேன் அடியேனென்று தோத்திரஞ்செய்தான் அருச்சுனன்-எ-று, ௨௮

ஏகாவழகேயிகழாவுறவேயெனதாழிப்
பாகாவிமையோர்பருகாவமுதேபழையோனே
தீகானில்நீருளவேறெவையுந்தெரிகலலா
வாகாயமுமேயுனைவேறறியேனடியேனே

(இ-ள்) ஏகமானவனே அழகனே இகழப்படாவுருவேஎனக்குத் துணையானவனேபாகனே தேவர்பருகாத அமிர்தமே பழமையானவனே ஐம்பூதனே உன்னையறியாமல்வேறொன்றையுமறியேனென்றும் சொன்னான் அருச்சுனன்-எ-று. ௨௯

சாதீவினையாழியிலேவிழுநாடமியேனைப்
போதீதழியாநெறியன்றருளும்புனையாளா
சோதியருவேயுருவேசுருதித்தொகைகூறு
மாதீமுடிவேயுனைவேறறியேனடியேனே

(இ-ள்) தீவினையென்கிறசமுத்திரத்தில்விழுந்திறக்கின்றஅடியேனையழியாதமார்க்கமாய் இப்பொழுதுநின்று இரட்சித்தென்னை யாளாயென்றும் சோதியேஅருவேயுருவேசுருதியினுடைய தொகைசொல்லுகிறவனே. ஆதிமுடிவேயும்மையல்லாமலடியேனுக்குவேறேயொன்றுமில்லையென்றுசொன்னான் அருச்சுனன்-எ-று, ௩௧

இருவேறுயிரேயெனவேயுலகாமெவையாவுந்
தருவேமுதலேயவையோயழிநாடமியேனே
யருவேயுருவேயுயிரேயெனமற்றவைசேரா
வுருவேயுறவேயுனைவேறறியேனடியேனே

இ-ள். இருவகையுயிரான உலகையெல்லாமுண்டாக்கின கற்பகத்தருவிற்குவேரானமுதலானவனேயென்றும் உலகத்தையழிக்கிறநாளைக்குஉச்சாகமானவனேயென்றும் அருவையுருவை யுயிரைச்சேராத உருவேயென்றும் உறவேயென்றும் உன்னையல்லால்வேறொருவரையறியேனடியேனென்றுஞ்சொன்னான் அருச்சுனன்-எ-று. ௩௧

மயலேவடிவாய்தருமாயையினான்மறையாவு
மியலேவிசையேயெழின்மாசுவைபோலினியானே
செயலேயுளாயேமனமேயெனமற்றவைசேரா
வயலேயறிவேயுனைவேறறியேனடியேனே

இ-ள், மயக்கமேவடிவாகத்தரு மாயையினாலேமறையாவுமானவனே இலக்கணமானவனே இசையானவனே அழகானவனே மகத்தாகியசட்சுவைபோலும் இனிமையானவனேசெயலானவனேஉளாயானவனே ம

னமானவனே அயலானவனே அறிவானவனே உன்னையல்லாமல்வேறொ
ன்றும் அறியேனென்றான் அருச்சுனன்-எ-று. ௩௨

ஒருநாகநாடாவொருநாகமளாவுயரோதங்
கரநாண்மலராலமுதாயெழவேகடைவோனே
வரநாகமுகனேமறைகேட்டரியேமழுமான்சே
ராளுமகனேயுனைவேறறியேனடியேனே

இ-ள், திருப்பாற்கடலிலே மேருவைநாட்டி ஒருநாகமேலாகவும் ஒருநாகவுங்கீழாகவுநாணைப்பூட்டி உயர்ந்தபேலைக்கூட்டிக்கமலம்போன்ற கைகளினாலேயமிர்தமுண்டாகவேண்டுமென்று இழுத்துக்கடைந்தவனேயென்றும வரந்தருகிறபிரமாவேயென்றுமவேதங்கேட்கிறவிஷ்ணுவேயென்றும் மழுவையும்மானையுந்தரித்த அரனானவனேயென்றும உன்னையல்லாமல் வேறொன்றையு மறியேனென்றுசொன்னான் அருச்சுனன்-எ-று. ௩௩

அறுசீரடியாசிரியவிருத்தம்

ஞானமுதலிந்திரியமனைத்தினுக்குநாயகனே
யூனவினைதனையறுப்பாயுன்னுடையசழ்கேட்கில்
வானவருமுனிவருமனங்களித்துமகிழ்வெய்தத்
தானவருமரக்கர்களுஞ்சாதுயரப்படுவர்களால்

இ-ள், ஞானமுதலானவிந்திரியமெல்லாவற்றிற்குங் கர்த்தனேகுற்றமுள்ள தீவினையானபவத்தையறுக்கிறவனே உன்னுடையகீர்த்தியைக்கேட்கிறவர்களுக்கும்மனக்களிப்புண்டாய்ச் சந்தோஷத்தையடையஅசுரரும் ராட்சதரும் மரணதுக்கப்படுவார்கள்-எ-று. ௩௪

கையும்பதமுந்திருவாயுங்கண்ணுஞ்செய்யகருமுகிலே
யையம்பொருளுமறிவறியாயயனார்தாயேயந்தமிலாய்
மெய்யும்பொய்யுமில்லாதாயெல்லாமாகிவிரிந்தாயே
உய்யும்பரிசுநினைந்தவர்களுன்னைவணங்காதவருளரோ

இ-ள். திருக்கைகளுந்திருவடிகளுந்திருவாயுந் திருக்கண்களுஞ்சிவந்தநிறத்தையுடையநீலமேகம்போலுந்திருமேனியையுடையவரே ஆத்துமதத்துவமிருபத்துநாலுஞ் சீவாத்துமாவென்றுமகாவிருபத்தைந்துபொருளும் அறியவரியவனேபிரமாவின்தாயேமுடிவில்லாத அனந்தனேமெய்யும்பொய்யுமில்லாதவனேமெய்யும்பொய்யுமானவெல்லாந்தானாகிப்பரந்தவனே பிழைக்கிறவிதத்தைநினைந்தவர்கள்உன்னைவணங்காதவர்களுண்டோஎல்லாரும்வணங்குகிறவர்களே-எ-று. ௩௫

ஆதிதேவனாவாய்நீயாக்கைக்கமைந்தவாருயிர்நீ
யாதுமறியப்படாமையுநீயெல்லாங்கடைகாற்புகலிடநீ
யோதியுணர்வாருணர்வுநீயுணர்வாலுணரப்படுபொருணீ
நீதியமனாயழிப்பானீ நீருங்காற்றுமாவாய்நீ

(இ-ள்)சகலதேவர்களுக்கு முந்தினதேவனான ஆதிதேவனானவன்நீ
தேகங்களுக்கமைந்தஆத்மசிவன்நீ ஒன்றாலுமறியப்படாமையும்எல்லா
வற்றையுமஅறியப்பட்டவனும்நீமுடிவுகாலத்தில்எல்லாம்புகுதுமிடம்
நீவேதங்களையோதி வேதாந்தத்தைத்தெளிகிறவர்களிடத்துத்தெளிவு
ம்நீஅந்தத்தெளிவாலேதெளியப்பட்டபொருள்நீ நீதியேயடையயமனா
ய்க்கொல்லுகின்றவனும்நீதண்ணீருங்காற்றுமாகின்றவன்நீ-,எ,று.௩௬

ஏயும்பரிசிவ்வுலகெல்லாமென்றும்பிறப்பித்திடுகின்ற
தாயும்பிதாவுமாவாய்நீதாய்தாய்தந்தைதந்தையுநீ
யாயும்படியையல்லாதவையாவுன்னையடியேனென்
மாயும்பிறவித்துயர்தீரநூறாயிரங்கால்வணங்கினேனே

இ-ள்.இசையும்படிக்குஇந்தபிரபஞ்சத்தை யெல்லாமென்றைக்கும்
பிறப்பிக்கிறதாயும்தகப்பனுமாகிறவனீதாயினுடைய தாயானபாட்டியு
ம்தகப்பனுடையதகப்பனானபாட்டனும்நீவிசாரித்துத் தேடியறியப்ப
ட்டசுபாவத்தையல்லாதவிசாரித்துத்தேடியுமறியப்படாதசுபாவத்தை
யுடையசுவாமியென்பிறவித்துன்பந்தீரவேண்டிஅடியேன்நூறாயிரங்கா
ரம்வணங்கினேன்-எ-று- ௩௭

என்பேரிடும்பைகெடும்வண்ணமின்னந்தொழுதேனென்தாயு
முன்பேதொழுதேனுன்னுடையபின்பேமுறையால்வணங்கினே
நன்பேரறியேனாமுதேயகலாவிந்தப்பெரும்பிறவி, வன்பேகெட
வுன்றன்னையெங்குமறிந்துமறித்துவணங்கினேன்,

இ-ள்,என்பெரியதுக்கங்கெடுகின்றநிமித்தியமாகஇன்னம்வணங்கினே
ன்சுவாமிஉன்னுடையமுன்னேவணங்கினேன்உன்னுடைய பின்னேமு
றமையாலேவணங்கினேன்என்அன்பேயடியேன்குடிக்கிற அமிர்தமே
என்னைவிட்டுநீங்காதஇந்தப்பெரியபிரவியினுடைய வலிமையையறிய
வேண்டி யுன்னை யெங்கெங்குந்திரும்பியுந் திரும்பியும் வணங்கினே
ன்-எ-று. ௩௮

தேவதேவனின்னில்வேறுதேவரோதுதெய்வமேது
பாவமேதறங்களேதுபற்றியாகிவீடியாது
சாவதேதுவாழ்வதேதனைத்துமாயதன்மைநீ
யாவதேதுமொன்றுநானறிந்திலேனென்மாயனே
இ-ள்,தேவதேவாஉனக்குள்ளேஉன்னைத்தவிரவேறு தேவர்களேதுதெ
ய்வமேதுபாவமேதுபுண்ணியமேதுபாசபந்தமேது மோட்சமேதுசாவ

தேதுவாழ்வதேது இவைமுதலானசகலமுமாகியசுபாவம்நீயாவதுயிதை யேதாகிலும்ஒன்றுகிலும முன்னேநானறிந்ததில்லை அதென்னசுவாமி யென்றான்-எ-று. ௩௯

நீதிவேதம்வானுளோர் நிலத்துளோர் நினைந்துனைக்
கோதியோதியுட்கசிந்துணர்ந்தவுன்னை முன்னெலாஞ்
சாதிபேதமாகிவாழ்சராசரங்களுக்கெல்லாஞ்
மாதிமூலமென்றுநானறிந்திலேனென்மாயனே

இ-ள். மேலுலகத்திலுள்ளதேவர்கள் பூமியிலுள்ளமனிதர்கள் தெய்வ மாரோவெனவினைக்குமனதுணைந்துநீதியுள்ளவேதத்தை யோதியோதி மனதுகனிந்துருகிநீயெனநிச்சயமாகத்தேறித்தெளிந்த உன்னையிந்தவிசு வரூபங்காணுதமுன்னெல்லாம்அளவற்றசாதிபேதமாகிவாழப்பட்டசரா சரங்களுக்கெல்லாம் முந்தினபீசமென நானறிநதேனில்லை அதென்னசு வாமி-எ-று* ஆதிமூலமாவதுமுதற்பீசம் ௪௰

சாயைபோலும்வாழ்வுநாடுவீடுதந்தைதாயெனும்
பேயையேமிமாறிமாறிபிறந்திருக்குமீதெலாந்
தூயையாகியாதுமோர்தொடக்கிலாதுநின்றநின்
மாயையாவதென்றுநானறிந்திலேனென்மாயனே

இ.ள்-நிழலையொப்பானவாழ்வுநாடுவீடுதகப்பன்தாயெனச்சொல்லப் பட்டபேயைநிச்சயமெனமேன்மேலும் அதுவே முபறசியாகவறிமாறி மாறிப்பிறந்துசெத்துச்செத்துவருகிறவிதங்களெல்லாம்பரிசுத்தமாகிஒ ன்றுகிலும்ஒருபற்றில்லாமல்நின்றஉம்முடையமாயையாகிறதெனமுன னேநானறிந்தேதில்லைஅதென்னசுவாமி-எ,று- ௪௧

யாதவாவென்மைத்துனாவடாவசோதையின்னுயிர்க்
காதலாயகாலியாயகண்ணகண்ணவென்றுநா
னேதலாவதன்றியேயுரைத்ததீமைபாவையு
மாதகாதவென்றுநானறிந்திலேனென்மாயனே

இ-ள். அடாயாதவா அடாவென்மைத்துனா அடா அசோதையினுடை யஇனியசிவனையொப்பானகுமாரா அடா பசுமேய்க்கிறவிடையா அடாகி ருஷ்ணவென்றுசொல்லலாகாதசொல்லைநான்சொன்னபொல்லாங்குசக லத்தையும்தகாதசொல்லென்று முன்னேநானறிந்தேனில்லைஅது வென் னஆச்சரியம்-எ-று, ௪௨

ஏறுமல்லவென்றுகுன்றெடுத்தவண்ணமெண்ணியே
கூறுமல்லநீரவும்பர்கூறுகின்றகொண்டலே
வேறுமல்லையென்றுமல்லைமெய்மைகூறுமப்பொரு
ளாறுமல்லையென்றுநானறிந்திலேனென்மாயனே

(இ-ள்) கோசலராஜாவினுடைய பெண்ணைக் கல்யாணம்பண்ணுகிறதற்காக ஏழுரிஷபத்தையுங் கஞ்சன்விட்ட மல்லரையுஞ்ஜெயித்துஇந்திரன்வருஷிப்பித்த மழையைத்தடுத்து பசுக்களையுமிடையரையுங் காக்கவேண்டிக்கோவர்த்தனமலையைக் குடையாகவெடுத்துத் தடுத்ததை நினைத்துச்சொல்லப்பட்ட துன்பந்தீர்ந்ததேவர்கள் கொண்டாடப்பட்ட நீலமேகத்தை யொப்பானஸ்வாமி நீவேறுவேறான அநேகமுமல்ல ஒன்றுமல்ல சத்தியத்தைச்சொல்லப்பட்ட பொருள்மார்க்கமுமல்லவென்று நான்முன்னறிந்தேனில்லை அதென்ன ஆச்சரியம் சுவாமி-எ-று.

கலிவிருத்தம்.

என்னுடையதோழனெனவே கருதியானு
முன்னுடையமெய்மையினை யொன்றுமுணராதே
வன்மையினினின்மொழி மறுத்தெதிருரைத்த
புன்மொழிகளானவை பொறுத்தருளவேண்டும்.

(இ-ள்) நானும் என்னுடையதோழனென்றே யுன்னைநினைத்துஉன்னுடையசத்தியத்தை யொன்றுமறியாமல் என்னுடையவலுமையினாலே உன்வசனத்தைத்தடுத்து எதிர்வசனஞ்சொன்ன அற்பவசனங்களானவைகளைப்பொறுத்தருளவேணடும்-எ-று ௪௪

உண்ணல்விளையாடுத லுறங்குதல்சிரித்தல்
பண்ணவுறுமோதுக ளினும்பழமையானு
மெண்ணலரியாமையினில் வந்தபிழையெல்லாங்
கண்ண கருணாகர பொறுத்தருளுகண்டாய்.

[இ-ள்] ஸ்ரீகிருஷ்ணா, கிருபாசொரூபா.பொசிக்கிறபோதும், விளையாடுகிறபோதும் நித்திரைபண்ணுகிறபோதும்சிரிக்கிறபோதும் இருவருக்குமுள்ள பாரம்பரிய உறவுபழமையினாலும், மைத்துனன்முறையினாலும, உன்னை சுவாமியென்றெண்ண அறியாமையினாலே ஏறினபிழையெல்லாம்பொறுத்தளருவேண்டுங்கண்டாய்-எ-று. ௪௫

எண்சீரடியாசிரிய விருத்தம்.

உண்டானவுலகனைத்து மீன்றாய்நீயே
பெவராலுமுன்னுண்மை யுணர்ந்துகூறிற்
கொண்டாடப்பரிவாய்நீ மேன்மைநல்கிக்
குருவாகிக்குற்றங்க டீர்க்கின்றாய்நீ
எண்டாலுமறையனைத்து மின்னின்மிக்கா
ரில்லையெனநின்றெடுத்து மெடுத்துக்காட்டக்

கண்டாருநின்பெருமைகாணமாட்டா
　　கண்ணில்லாதவர்வேறு காண்பதுண்டோ

[இ-ள்] உண்டாகியசகலபிரபஞ்சத்தையும் நீயேபெற்றாய் எவராகிலும் உன்னுடைய வுண்மையையறிந்துசொன்னால் அவர்களைநீகொண்டாடி யன்புசெய்வாய் அவர்களுக்குமேன்மையைக்கொடுத்துக்குருவாகி யுபதேசித்துக் கீழ்மையான குற்றங்களைநீதீர்க்கிறாய், அளவைப்பிரமாணமுஞ் சகலவேதமும் உன்னிலும் அதிகமானவர்கள் இல்லையில்லையென்று துணிந்துநின்றுசொல்லி எதுவுமெடுத்துக்காட்ட அதனாலே கண்டவர்களும் உன்னுடையபெருமையைக் காணமாட்டார்கள் ஆகையாலே ஞானமென்கிறகண்ணில்லாதவர்கள்காண்பதுவேறேயுண்டோ அஞ்ஞானியான குருடன் ஒன்றுங்காண்பதில்லை-எ-று. ௪௬

அறியாதபருவத்துமகன்செய்குற்ற
　　மருந்தாதைபொறுத்தனவு மாவிபோலப்
பிரியாததோழன்செய் குற்றநட்பிற
　　பெரியோர்கள்பொறுத்தனவும் பேதையேநான்
குறியாதுசெய்துவருகுற்றமெல்லாங்
　　குணமாகக்கொண்டருள வேண்டுமென்றே
வெறியாருமலர்ப்பதங்க ளிடையேவீழ்ந்து
　　வேண்டிக்கோடிவையின்னம் விளம்பலுற்றான்.

(இ-ள்) அறிவாத குழந்தைப்பருவத்துமகன்செய்தகுற்றத்தை அருமையான தகப்பன்பொறுத்தார்போலவும்தேகசீவனைப்போலப்பிரியாததோழன்செய்த குற்றத்தைச் சிநேகத்தினாலேபெரியோர்கள்பொறுத்தாற்போல மூடனான நான்உமமைமதியாமல நாள்தோறுஞ்செய்துவந்த குற்றத்தையெல்லாங் குணமாகக்கொண்டருளவேண்டுமென்றுதேன்நிறைந்தசெங்காமரைப் பூவையொப்பான திருவடிகளி னிடத்திலே தெண்டனாக வீழ்ந்துவேண்டிக்கொண்டு இன்னமிதைச்சொல்லஉதகியோகப்பட்டான-எ-று, ௪௭

கலிவிருத்தம்.

பண்டுகண்டறியாப் பழங்கோலத்தை
கண்டுநெஞ்சங் கலங்குகளிக்குமாற
றண்டுநீண்முடி சங்கொடுசக்கரம்
கொண்டகோலத்தையேகொண்டருளுவாய்.

இ-ள், முன்னேயொருவராலுங் கண்டறியாத பழையசொரூபத்தையிப்போதுகண்டுமனதுகலங்கிறது, ஆனந்தங்கொள்ளுகிறது ஆகையாலேதண்டாயுதம்நீண்டகிரீடமுஞ்சங்கும்அதனுடனேசக்கரமுந்தரித்து

க்கொண்டபுதியஸ்ரீகிஷ்ணசுரூபத்தையேகொண்டருள்வாய்-எ-று ௪௮

என்றவனுரைத்திடலு மெவ்வுருவுமொன்றாய்
நின்றவனுரைத்தருளு வானிறைபொளித்தாய்
முன்றருமுகற்பொருளு மாய்முழுதுமாய்
வென்றனுருவத்தினை முன் னியாவரறிகிற்பார்

இ-ள். என்று அருச்சுனன்சொல்லவும் எக்கரூபமுமொன்றாகி நின்ற ஸ்ரீகிருஷ்ணசுவாமிதிருவாய்மலர்ந்தருளுவார் நிறைந்தசோதியையுடையதாக முன்னெல்லாவற்றையுந் தரப்பட்ட முந்தினபொருளுமான ஆதிமூலமுமாகி எல்லாம்நானாகியஎன்சொரூபத்தை இப்போதுநீயறிந்தாற்போலமுன்யாரறியமாட்டுவார்கள் யாருமறியார்-எ-று. ௪௯

வேதநெறியாமிகு வேள்விகளினாலும்
மாதவமையாலுமகா தானவகையாலுங்
காதலர்கள்காணமுடி யாவடிவுகண்டாய்
யேதமறியாதவெளி யோகவலியாலே

இ-ள். வேதமார்க்கமான வைதீகக்கிரமங்களினாலும் மிகுந்துசெய்த யாகங்களினாலும்மஹாதபசுகளினாலும் ஏற்கிறவர்கள் மனதுசந்தோஷப்படகொடுத்ததானவிதங்களினாலும் இவைகளின்பிரயோசனத்தைஇச்சித்தஆசையுடையவர்களாலேகாணமுடியாதசொரூபத்தைப்பிரயோசனத்தை இச்சிக்கிறதாகிய குற்றத்தையறியாதவென்மேலேவைத்த மனதுள்ளயோகமான ஆத்மயோகவலுமையினாலே நீகண்டாயருச்சுனா எ-று. ௫௰

இப்பரிசுரைத்தருளி யிரிருகையேயா
யப்பழையகோலமது வாயருளியங்கே
மெப்பயமகற்றிவிசை யர்க்கிவைகள்வேறே
யொப்பவரின்மிக்கவரி லாதவனுரைப்பான்.

இ-ள், இந்தப்படி திருவாய்மலர்ந்தருளிநாலுகைகளையுடையதாகிப் பழையமனிதசொரூபமாயருளிச்செய்து அப்போது அருச்சுனனுக்குச்சரீரபயத்தைத்தீர்த்துத் தனக்குச்சானேஒப்பல்லாமல்வேறேயொப்பானவரும், அதிகமானவருமில்லாத ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி இவைசொல்லுவார்-எ-று. ௫௧

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

கண்டவரில்லைநீமுன் கண்டவிக்கோலங்காண

அண்டருமறியாநின்ற ராதலாலன்புகூறுங்

சொன்னடருமாகியென்னை யன்றியோர்கொடக்கில்லாமை
கொண்டவரடைவரென்றான் கோக்குலமேய்த்தகோமன்

இ-ள். நீமுன்கண்டவிசுவரூபத்தை யுன்னைத்தவிரக்கண்டவர்களில்லை, தேவர்களுங்காண அறியாமல் நின்றார்களாகையாலென்மேல் அன்புமிகுதியாகப்பட்ட அடியானுமாகிஎன்னையல்லாமலவேறொருநினைவு கொடாதுகுவதில்லாமல் என்னைத் தன்சித்தமாகக்கொண்டவர்களிந்தச் சுரூபத்தையடைவார்களென்று பசுக்கூட்டங்களைமேய்த்தஸ்ரீகிருஷ்ணஸ்வாமி சொன்னார்-எ-று. ௫௨

௰௧-வது-விசுவரூப அத்தியாயம்.

முற்றுப்பெற்றது.

ஆ. அத்தியாயம் ௰௧-க்கு கூடியசெய்யுள்-௩௪௬.

—*—

௨

பன்னிரண்டாவது.

# பத்தியோக அத்தியாயம்.

——[*]——

அறுசீரடியாசிரிய விருத்தம்

ஏயனுனெதிரேகண்ட வுருவமோயிசைகிற்பாரே
தூயநான்மறைக்குமெட்டாபொருளையேதொடகிற்பாரோ
தாயனுய்பெரியோரென்று தனஞ்சயன்வினவத்தானே
ராயனுய்நிறைகளைமேய்க்கு மாயன்வேறருளிச்செய்வான்.

இ-ள், தாயையொப்பான அன்புள்ளவரோபெரியோர்கள் எல்லாமுன்னிலேபொருந்த நான்கண்முன்னேகண்ட இந்தவிசுவரூபத்தையேமனதிலேபொருந்திச்சேவிப்பார்களோ அல்லதுசுத்தமானநாலுவேதங்களுமெட்டாதபொருளாகியபிரமத்தையேதொடர்ந்துசேவிப்பார்களோ இந்தவிரண்டிலெதைநிச்சயங்கொள்ளுவார்களென்று அருச்சுனன்கேட்கத் தானொருயிடையனாகிப்பசுக்களைமுன்மேய்க்கப்பட்ட ஸ்ரீகிருஷ்ணஸ்வாமிவேறேயருளிச்செய்வார்-எ-று. * )வேறேயென்னுல்முன்தபகாட்டினதும்போதாமல்வேறும் அருளிச்செய்வாரென்றதருத்தாபத்தி

மன்னா நீகாண நான்காட்டியவடிவை நெஞ்சா
லுன்னல்வாய்மொழிகளாலேயு மாதரஞ்செய்பவர்களெல்லா
மென்னவாற்பிறிதொன்றெய்தாரியாரினுநல்லாரிங்குச்
சொன்னவரன்றிமற்றையவர்கடந் துணையுங்கேளாய்

இ-ள். இராசாவே நீகண்ணாலேகாண நான் முன்காட்டின விசுவரூபத்தைமனதிலே தியானித்தல்வாய்வார்த்தைகளாலே தோத்திரம்பண்ணுதல் இவ்விரண்டுஞ்செயபவர்களெல்லாரும் என்னைச்சேருவார்களல்லாமல் வேறொன்றைச்சேரார்கள் இவர்களாரிலுமநல்லவர்களிப்போது விசுவரூபநிஷ்டைகளெல்லாமல் மற்றப்பிரமநிஷ்டர்களுடைய துணையுங்கேட்டாய்-எ-று. வேறொன்றாவது பிரமாவினுடையபதவி இந்திரபதவிமுதலானவை இவைகளுக்குமேலானவென்னைச்சேருவதினாலே தாழ்ந்தபதவிகளை விசுவரூபநிஷ்டர்கள் தங்களைச்சேர்ந்தவர்களுக்குகொடுப்பாரென்றதுகுறிப்பு- ௨

உரைசெயற்கரிதாய்நெஞ்சினுணர்விடப்படாதேயெங்கும்
புரைவாக்கலந்துபேர்கருவரவின்றிப்போலிந்தவொன்றைக்
கரைசெயற்கரியவாய்புலன்களைக்கடந்துகாண்பா
வரசமறியானேயென்னிவன்னியமென்னலாமே

(இ-ள்) இப்படியப்படியென்றுசொல்லப்படாததாய் மனதிலுண்டாகியபிவினிடக்ககப்படாமல்எங்குமிடையக்கலந்து போகவரவில்லாதபொலிவினையுடைத்தாகியவொன்றானபிரமத்தைஅனேகவழியாகப்புரண்டோடிக்கரைகட்டக்கூடாதாகியவெள்ளத்தையொப்பாய்மட்டுப்படாததாய்பலவழியாகச்சிகரியோடுகின்றதாகிய பஞ்சேந்திரியங்களைக் கடந்துகாண்கின்றவன்நானேயென்றுவிராசாவேஎன்னைத்தவிர அன் அன்னியமென்று அவனைச் சொல்லாகுமோ ஆகாது-எ-று*புணர்தல் என்பது குற்றமறவென்பதாம்குற்றமாவது எஙகெங்குங்கலத்தலுக்கு அணுவத்தனைகலவாவிட்டாலும்எங்கெங்குங்கலந்ததல்லாமல் எங்கெங்குங்கலந்ததென்றசொல்லுங்குற்றமாகையால இடையறக்கலந்ததென்றதுபோக்குவரலாறுசலனம். ௩

காரணமிறந்தோன்றிற்குங் காட்சியிற்படாதவொன்றைச்
சேர்பவர்வருத்தம்வென்றென் செப்பிடவாவதென்று
லேசர்வரிதிதான்வாழ முயிர்களாலாவதென்று
லாரவர்பெருமைதன்னை யளவருப்பவர்களையா

இ-ள். காணக்கேட்டு ஒன்றிற்குங்காண்பதற்கு அகப்படாத ஒன்றானபிரமத்தைச் சேருவார்களுடைய பிரயாசத்தைவேறே என்னசொல்

லாவது என்னாலேயறியப்பட்டது இந்தப்பிரயாசமான பிரமநிஷ்டையானது உலகத்திலவாழப்பட்ட உயிர்களால் ஆவதாலால் அந்தவுயிர்களுடையபெருமையைப் பிரமாணமாக அளவருக்கின்றவர்கள்யார்யாருமில்லை ஐயா-எ-று,(பிரயாசமாவது காணப்பட்டதேகிக்குக் காணாதஆத்மாவைத தியானிக்கின்றது பிரயாசமென்க. ௬

யாவர்கள்சிலர்களெல்லா வினையுமென்கண்ணேவிட்டிட்
டாவர்தமமறிவென்பாலே யாக்குவாரவர்கடம்மைச்
சாவதுமுதலாயுள்ள துயர்களினின்றுந்தாங்கி
ஏவர்களொன்னுங்காலஞ்சிறிதிலேயெடுக்கின்றேனான்

இ-ள்,எவர்களோசிலபேர்களெல்லாவற்றையு மென்னிடத்திலேவிட்டுவிட்டு அவர்கள்தங்களுடைய அறிவையென்னிடத்திலேயாகப்பண்ணுவார்களோ அவர்களை எவர்களாலும்சாகின்றதுமுதலாயுள்ள துக்கசமுத்திரத்திலேநின்றுந்தாங்கிச் சீக்கிறத்திலேஎடுக்கமாட்டுவேன்-எ-று

எழுசீரடி ஆசிரிய விருத்தம்,

மெய்யுரஉன்னையென்னிலேவைத்தா
லென்னில்வேறன்றியொன்றாதற்
கையுறவில்லையதுமுடியாதே
லாயினுமதனையேபயில்வாய்
பொய்யுரவதுவுமபுரிகிலாதெனிலுன்
வினைகளென்பொருட்டினாற்செய்வாய்
செய்யும்வினைகளப்படிச்செயாயேல்
வினைப்பயன்றமிரவேசெய்வாய்

இ-ள்,மெய்யாகவென்னிடத்திலேயுன்னைவைத்தால்நீநானென்றுவேறுபடாமல் என்னிலொன்றுவதற்குச்சந்தேகமில்லைஎன்னிலுன்னைமெய்யாகவைக்கமுடியாயாகில் ஆனாலும் அப்படிவைக்கின்றதையே அப்பியாசம்பண்ணுவாய் அந்த அப்பியாசம்பொய்யாச்செய்யமாட்டாயென்று உன்கருமங்களை எனக்காகசசெய்வாய் அப்படிஎனக்காகச்செய்யப்பட்ட கருமங்களை அப்படிசெய்யமாட்டாயாகின்றகருமபலனையிச்சியாமற்செய்வாய்-எ-று,(இதனால் ஆத்மஞானஞ்சித்திக்குமென்பதுகுறிப்பு] ௬ா

கலிவிருத்தம்.

அத்திஞானவினைபினதனினு
மெத்தியானமிகுமதன்மேலதாம்
வித்திறுயவினைப்பயன்வீடுதல்
சித்தசாந்தியதனினுஞ்சீரிதால்

[இ-ள்) கருமமாகிய அப்பியாசத்திலும் ஞானமதிகமாகியது அந்த ஞானத்திலும் மெய்யானதியானமதிகம் அந்தத்தியானத்[illegible]லும் பிரவிதையையொப்பாகியகாமப்பலனேயிச்சியாத தியாகமதிகமாம[illegible]ந்தத்தியாகத்திலுஞ் சித்தசாந்தி சிறப்புடையது-எ-று. ✻ (ஆஆல் அ[illegible]

எழுசீரடியாசிரிய விருத்தம்.

இருவகையுயிர்க்கு மினியனுயின்ப
துன்பங்களி யானெனதறிய
ஒருபொருளகலுங் குறைவுபாடன்றி
யுள்ளமுமொருவழிப்பாடாய்ப்
பொருவருந் துணியுங் கருணையும்புரிந்து
புலன்றெறி யுணர்வையென்பாலே
மருவுநின்றொருகுமி யோகியென்பவன்காண்
மன்னவ மற்றெனக்கினியான்.

இ-ள், சரம்அசரம்என்கிற இரண்டுவகையான சீவன்களுக்குநல்லனுய்சுகதுக்கங்கள்நான்என்கிற அகங்காரசுதந்திரங்கள் இவைகளையறியாமல்கிடைத்தபதார்த்தமென்றது இவைகளிலொருபதார்த்தங்களாலுவகுறைபாடல்லாமல் கிடைத்ததையனுபவியிலேநடக்க ஒப்பில்லாததுணிவுந்தயவுஞ்செய்துபஞ்சேந்திரியங்களாலேதெரியப்பட்டஅறிவைஎன்னிடத்திலே சேரநின்றஇந்தப்படியெப்போதும்நடக்கின்றயோகியென்கிறவன்கண்டாயிராஜாவே எனக்குப்பிரியன்-எ-று.✻(சுக்துக்கங்களையும் அகங்காரசுதந்தரங்களையும் அறியாமலென்பதி அறியப்படுவதெல்லாம்என்னையேஎன்று அறிந்ததினுலேசுகதுக்கங்களென்றும் அகங்காரசுதந்தரங்களென்றும் நாமரூபகிரிகையைப்பகுப்பு அறியவராதுஎன்றதுகுறைபாடில்லாமல்என்பது இச்சையில்லாமல்அநிச்சையாகவந்ததையனுபவிக்கையாலேஒருபதார்த்தங்களையும்அந்தக்குறைவில்லாமலென்பது உள்ளவென்றதனுற் பலவழியோடுகிறமனதும் ஒருவழியாகநடக்கவென்றது இன்னமுஞ் சகலசீவனுக்குமினியனுய் சுகதுக்கங்கள் அகங்காரசுதந்தரங்களறியாதவனுய் இச்சையில்லாதவனுய் இப்படியிருந்தாலும்மனது ஒருவழிபடவேண்டுமென்றுமாம் துணிவாவதுஎத்தனையாபத்துவந்தாலும்ஒன்றுஞ்செய்யமாட்டாதென்று ஆத்மசொரூபம் அறிந்ததனுல்வந்ததுணிவுகருணையாவது தெய்வமொன்றுண்டு அதுசெய்கிறதின்னதென்றுபகுக்கவு மித்தனைகாலஞ்செல்வதென்றுசணிக்கவுங்கூடாது அவனுடையவிதியை யாராலுங்கடக்கக்கூடாது என்றறிந்தும் இதில் அகப்பட்ட எல்லாருமநானேநானே யெல்லாருமென்று தன்

யின்

மேல்வைத்தபயவைத்தனக்கு நன்மைதுன்மைசெய்வார்கள்மேலும்செ
ய்வதுதயவு ...ணிவிலின்னமு மொருவிதமுந்தெய்வத்தின்விதிசகுஜழி
வில்லை ...கையாலேதேகமெத்தனை வந்தாலும அந்ததேகங்களுக்குள்
...ங்கங்களெத்தனைவந்தாலும் விதிப்படிக்கல்லாமல் விசாரத்தின
...வில்லையே நடந்ததெல்லாம் நடக்கட்டும நடக்கிறதெல்லாந் தே
...கேயல்லாமல் நமக்கொன்றுமில்லையேயென்கிற துணிவுமாம்அ
...வதுவிஷயவறிவு. ௮

உலகமுந்தானு வேறிலாமையினு
லுனொரு பொட்குமஞ்சாதே
யலகிலாவுயிர்கட்கினியனுதலினு
லவைகளுந் தன்னையஞ்சாதே
புலவரானவர்கள் புகழுவேநிகழ்வான்
பொறுமையு மயக்கமுங்களிப்பு
மிலகிடாநெஞ்சத்தியோகியென்பவன்கா
ணியாரினு மெனக்குவேறினியான்

இ-ள், உலகமுந்தானும வேறல்லாததினாலே ஒருபதார்த்தத்துக்கும்
இச்சியாமல்உலகமெல்லாந்தானாகவும்தானே உலகமாகவுமிருக்கிறதினா
லே உலகத்துக்குப்பபப்படாமல் அளவில்லாத சீவன்களுக்குமநல்லவ
னானதினாலே எந்தசீவன்களுந்தனக்குப்பயப்படாமல்தேவர்களானமே
லுலகத்தார்களுந் தோத்திரம்பண்ணத் தக்கதாக நடக்கிறவன் பொறு
மையும் மயக்கமுஞ்செருக்குமுண்டாகாத மனதையுடைய யோகியெ
ன்கிறவன்கண்டா யருச்சுனாஎவர்களிலுமெனக்குப்பிரியம்-எ-று. ௯

ஒன்றினுமாசை யிந்திரியங்க
டன்வழியொழுகிடாதொறுக்கி
நன்றியினொடுதீங்கெலாமொத்து
நல்வினை தீவினை துறந்து
பொன்றினுநோயுற்றழிதல்செய்யாமற்
பூரித்தல்வாடுதலின்றி
யென்றுமுன்பிறைக்தபொருட்கிரங்காமல்
வரும்பொருட்கிச்சைசெய்யாதே

இ-ள், ஆத்மஞானமாகியபிரமத்தைத்தவிரவேறொன்றினு மாசையி
ல்லாமல் பஞ்சேந்திரியங்களுடையவழிபோகாமல் அதைப்போக்கிநன்
மையினுடனே பொல்லாஙகெல்லாஞ்சமமாகிப்புண்ணியபாவங்களை வி
ட்டுச் செத்தாலும் வருத்தப்பட்டுத்தாழ்வுசெய்யாமல் நிறைதல்குறை
தலில்லாமல் முன்புபோனபொருளுக்குஎன்றைக்குந் துக்கப்படாமல்
இனிமேல்வருகிற பொருளுக்குஇப்போதே ஆசைப்படாமல்-எ-று. ௰

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இகழ்பரநட்டாரொன்பதின்றியேயின்பதுன்பம்
புகழ்வமானமானஞ்சீதமோடழலின்றீமை
புகழ்பழியிவற்றினோடேபொருந்திவாழிடமொன்றின்றி
நிகழ்தருமியோகிகண்டாய்மற்றெனக்குரியனீரான்.

இ-ள், சத்துருமித்துரு வென்பதில்லாமல் சுகதுக்கம்விளங்காநின்ற அவமானம் மானம் குளிர்மை அக்கினியின்சுடுதலானஊஷ்ணங்கீர்த்தி பழி இவைகளிலே சமமாகி யாருடனுங்கூடி இன்பமாக விருக்கிறவிட மொன்றில்லாமல் இந்தப்படி நடக்கிறயோகி கண்டாயருச்சுனா எனக்கு உரித்தான சுபாவகுணவான்-என்றவாறு ✻ (ஒன்றினுமாசையின்றி என்றகவியும் இகழ்பவர் நட்டாரென்றகவியுமொருதொடர், அப்படியென்னில் ஆத்மஞானத்தைத்தவிர மற்றொன்றிலுமாசை யில்லாமல்பஞ்சேந்திரியங்களின்வழியேபோகாமல் அந்தவழியை அடைத்துநல்லது பொல்லாதெல்லாஞ்சமமாய் புண்ணியபாவங்களைவிட்டுவருத்தம்வந்த போது தாழ்ந்தகாரியத்தைச் செய்யாவிட்டாற்றீராமல்சொல்லுகிறதானசாவுவந்தாலுந் தாழ்வுசெய்யாமற்சுகம்வந்தபோது சந்தோஷிக்கிறதுந் துக்கம் வந்தபோது கிலேசிக்கிறதுமில்லாமல்முன்போனபொருளுக்கென்றைக்குந்துக்கியாமல்இனிமேல்வரப்பட்ட பொருளுக்குஇப்போது வரவேணுமென்றாசைப் படாமற்பகைக்காரற் சினேகிதரென்கிற பேதமான ராகத்துவிஷமில்லாமல் சுகம் துக்கம் அவமானம் மானம் சீதள ஊஷ்ணம் கீர்த்தி பழி இவைகளிலே சமமாகி ஒன்றுடனுங்கூடி வாழ்கின்றதான சங்க மில்லாமல் இப்படி நடக்கிற யோகிதான்கண்டாயருச்சுனா எனக்குபிரியகுணன் ✻ மற்றமென்பதுசகல சீவனும்ஒன்றானலும்அவர்களைத்தவிர இப்படிக்கொத்தவன்பிரியனென்றது யிதனாலேமற்றசீவன்களெல்லாம் பிரிய ப்பிரியமல்லாதவர்களென்பதாயிற்றுராகமாவது ஆசைதுவேஷமாவதுகோபம் கூடிவாழ்கிறதாவதுமனதிலே என்னைத்தவிர வேறொன்றைக்கூடுவதெல்லாஞ் சங்கமெனபது ஆகையால்சங்கவார்சிதம் பண்ணிநிர்ச்சங்கனாயிருக்கவேண்டுமென்றது, இனிவிரிக்கில் வெகுவரம். ௰௧

செயத்தகுவதுவுமாகிச்சேர்ந்தவர்க்கல்லறீற
வயத்தொடுபோவதானபொருளையாஞரைத்தவண்ண
மியப்படவுணர்ந்திப்பாருக்கியமிகவினியனென்றுன்
மயக்கரவொருவராலுமறவரிதாயமாயோன்

இ-ள், அப்பியாசஞ்செய்யத்தக்கது சேர்ந்தவர்களுடைய துக்கந்திர த்தக்கதாகத்தப்பிப்பிழைக்கக்கொண்டுபோகிறதான ஆத்மஞானமான பத்தியை நான்சொன்னபடி இந்தப்பத்தியேசுபாவமாகஉண்டாக அறி யமாட்டுகிறவர்களுக்குநான்மிகவும்பிரியனென்றுசொன்னார் ஒருவராலு ம் மயக்கந்தீர அறியப்படாதஸ்ரீகிருஷ்ணசுவாமி-எ-று. ௰௨

௰௨-வது பத்தியோக அத்தியாயம்.

முற்றுப் பெற்றது.

ஆக அத்தியாயம் ௰௨-இ-கூடியசெய்யுள்-௩௱௮

—————(*)—————

௨

பதிமூன்றுவது.

# பிரகிருதிபுருடயோக அத்தியாயம்.

——(*)——

கலிவிருத்தம்.

விடம்படுபேணுமுடியரங்கின்மிசையேறி
நடம்பயலுநாயகன்மறித்துமிகுஞானன்
சடம்படுபிணிப்பிறவியென்றிவைதரித்த
முடம்பொடுவிரானவையுரைத்தருளலுற்றான்

இ-ள், விஷமுண்டாகியபட்முள்ளசிரசாகிய நாடகசாலையிலேறியாடு கின்றகூத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணசுவாமிதிரும்பவும்மிகுந்தஞானமும் மிகுந்த அஞ்ஞானமுமுண்டாகியநோயையுடையபிறவியென்றுசொல் லபபட்ட இவைகளைதரிக்கப் பட்டவுடம்புடனே ஆத்மாவானதைஉப தேசித்தருளுவதானார்-எ-று. ௧

உடம்பெனவுரைப்பதுயிருண்டறைகளெல்லா
மிடம்படவிளைப்பதெதிர்காணலுறுமீதார்
திடம்படவுமற்றிவைதெரிந்துணருமெய்யைக்
களம்படுமுயிர்ப்பொருளெனப்பகர்வர்கற்றோர்

(இ-ள்]உடம்பென்றுசொல்வது ஆத்மா பொசிக்கின்றவர்களுக்கெல்லாம் விசாலமுண்டாகவிளையப்பண்ணுவதுகளை முன்னே காணப்படும் இந்த சரீரம ஆகலால் நிச்சயமாகவும சந்தோஷ மாகவும் இவைகளைத் தெரிந்து உறியப்பட்டசத்தியத்தை ஆதரிக்கப்பட்ட ஆத்மாவாகியபொருளென்று ஆத்மசொரூப மரியததக்கபெரியோர்கள் சொல்லுவார்கள் எ-று, உ

மன்னவுடலியானவயினுமன்னியறிவாகி
யுன்னமுயிர்நானிவையிரண்டினையுமோர்காற்
றன்மையினிலியாதறியின்மற்றதனை ஞான
மென்னவுணர்வாயிஃதெனக்குமிசையாமல்

(இ-ள்]இராஜாவேசகலசரீரங்களும நிலைமையாகநின்று அறிவாகிநினைக்கப்பட்டஆத்மாவானதுநான்இந்தச்சரீரம்ஆத்மாவென்றவிரண்டையுமயங்காமற்றெளிந்தசுபாவத்தினலேயறிவது யாதொன்றுண்டோ அதை ஞானமென்றறிவாய்யிந்தஞானம்எனக்குஞ்சம்மதமாம் எல்லாருக்குஞ்சம்மதமாம்-எ-று. ௩

மற்றிவுடறன்னின்வரவுங்குணனும்வந்தாங்
குற்றமைவிகாரமுமுயிர்க்குருதிதானு
நற்றவர்கள்வேறுபடவோதினர்களுனுஞ்
சொற்றொகையினலிவைசுருங்கமொழிவன்கேள்

(இ-ள்)ஆதமாவைத் தவிரமற்ற இந்தசரீரத்துடன் வரவுங்குணமுஞ்சரீரமவந்தஅவ்விடத்தி லுண்டாயமைந்த விகாரமுமிந்தச சரீரத்தினலேஆதமாவுக் குள்ளபிரயோசனமும் இவைகளெல்லாம் நல்லதவம் பண்ணினரிஷிகள் வேறுவேறாக முன்விரித்துச் சொன்னர்கள் இப்போதுநானும்இதைச் சொல்லினுடைய தொகையினலேசுருங்கச்சொல்லுவேன்கேள் அருச்சுன-எ-று. ௪

எப்பொருளினும்பரவியெங்குமுளவாகும்
அப்பெரியபூதமவையைந்துமவையினு
மொப்பரியநானுமவைவந்துமுனிதிக்கும்
பொய்ப்பகையில்பித்திமகானென்றபொருடானும்

(இ-ள்)எந்தப்பொருள்களிலும் அதிகமாகப் பரவிஎங்குமுண்டாயிருக்கப்பட்டஅந்தப்பூதமானவைகளைந்தும அந்தப் பஞ்ச பூதத்தை யுண்டாக்கப்பட்ட ஒப்பில்லாத அகங்காரமும்அந்த அகங்காரம்வநதுமுன்னே உண்டாக்கப்பட்ட பொய்ப்பகையில்லாமல் மெய்ப்பகை யாயுள்ள புத்தியும் அந்தப்புத்தி யுண்டாக்கப்பட்ட மகானென்றதத்துவமும்-எ-று*(இவ்விடத்தில்நானென்ற தகங்காரம் அகங்காரத்தில்ஆகாசாதிபூதமொன்றி லொன்றுண்டாகின்றதுஎப்பொருளினும்பெருகுமெங்கு முளவாகுமென்று பாட மோதில் பெருகின பொருளெந்தபபொருளினும் அதிகமாகப் பெருக்கக்கூடாது எங்கு முண்டாக்கப்பட்டதென்பது) ௫

காதலில்லெட்டு வினைகாரணமுமொன்று
மோதவரிதாய்புலனைந்துமவைபுன்னு
மாதவரியாதபொறியைந்துமவையாலே
யேதவினைசெய்கரணமூன்றினொடிரண்டாம்

(இ-ள்) ஆசையில்லாதவெட்டுக்காரியமுமூண்டாக்கப்பட்டகாரணமுமொன்றாகச்சொல்லப்படாத பஞ்சேந்திரியங்களும் அவைகள்நினைக்கப்பட்ட தாவகைஅஞ்சுபொறிகளும் அவைகளாலே குற்றமுள்ள தருமத்தைச்செய்யப்பட்டஅந்தக்கரணமஞ்சும்-எ-று. ௧

இற்றிவையனைத்துமிடரின்பமுதல்யாவுந்
துற்றமைவிகாரமதைதொடர்ந்ததொகைகண்டாய்
நற்றவுடம்பெனவியம்புவதுநல்லோ
குற்றவுடலுக்குறியஞானமுறைப்பாம்

(இ-ள்) இவைகளெல்லாம் துக்கசுக முதலான வெல்லாம் நெருங்கியமைந்த விகாரந்தொடர்ந்த தொகையைத்தான்கண்டாய்நல்லதவம்பண்ணின அருச்சுனதேகமென்று பெரியோர்கள் சொல்வது இத்தனையுமுள்ள விகாரக்கூட்டமாக விருந்த யிந்தச்சரீரத்துக்கு உரித்தான ஞானமும்சொல்லுவோம்-எ-று *[எப்பொருளென்ற கவியும்காதலி லென்றகவியும் இற்றிவையென்ற கவியும் ஒருதொடர்நற்றவ கண்டாயெனவும்நல்லோரியம்புவதெனவுமாறுக துக்க சுகமுதலானவென்றவையுந்தேகவிரிவையும் விரிக்கில்வெகுவிரிவாம்ஆகையால்சுருக்கினது [௨]

கலி விருத்தம்.

மானமும்பிறர்மனைமதிக்கப்பண்ணலு
மூனமிம்பிறவுயிர்க்குறுகண்செய்கையு
மியானெனுஞ்செருக்குமிவ்விகபரங்களி
லானபேராசையோடறுக்குமாற்றலும்

(இ-ள்) மானமும் அன்னியர்தன்னை துதிசெய்யவேண்டிமதிக்கப்பண்ணுகின்றதும் பிறரையூனமாகநிந்திக்கின்றதும் அன்னிய சீவனுக்குத்துன்பஞ்செய்கிறதும் நானென்கிற அகங்காரமும் இந்தஇகலோக அந்தப்பரலோகங்களில வைக்கின்றதான ஆசையுடனேஇவைகளையெல்லாமறுக்கப்பட்டபலமும்.எ.று, மானமாவது எனதென்கிற சுதந்தரம்வெகுமான அவமானமென்பாருமுளர் அதாவதுதனக்குடபகாரனைவெகுமானத்தினாலும் அபகாரனை அவமானத்தாலுமாமஇவ்விகபரமென்பதுஇதவு பதேசமிருந்துசொல்லுமூலசமிதினாலே அந்தபரலோகமென்றுவந்தது

பெற்றமனையொடு பெண்டிர்மக்கள்பா
லுற்றெழுமவாவுட னுடம்பின்றூய்மையு
மற்றவைம்பொறிகளின்வாயின்வாழ்க்கையுஞ்
செற்றமுஞ்சிறியவர் குழுவுந்தீர்தலும்.

(இ-ள்) தானசஞ்சிதத்தினாலேபெற்றவீடுடனே மனையாள்பிள்ளை இவர்களிடத்தில் வைத்தெழும்பப்பட்ட ஆசையுடனேசரீரசுத்தமுமற்ற அஞ்சுபொறிகளினாலும் பஞ்சேந்திரியங்களினாலுமவருகின்றவிஷயங்களை யனுபவிக்கிறதுங் கோபமுடைய கூட்டமுமிவைகளெல்லாமவிடுதலும்-எ-று. * இதனால்மனசுத்தமும்பெரியவர்களினுடைய வுறவும் வேண்டுமென்றதருத்தாபத்தி) ௯

ஒருபெரும்பொருளையே யுளத்துவைத்தலு
மிருவினைகெட்டவ ரிடங்களெய்தலுங்
குருவினைவழிபடு குணமுங்குற்றமென்
றுருவினையுள்ளவா றுணருமுண்மையும்.

(இ-ள்) ஒப்பில்லாத பெரியஆத்மாவையேமனதில்வைக்கிறதும் புண்ணியபாவங்களைக் கடக்கின்றபெரியவர்களிடத்திலேசேருகின்றதுங் குருவைபூசைபண்ணுகின்ற குணமுந் தேகத்தைக்குற்றமென்று உள்ளபடியறிகின்றவுண்மையும்வேண்டும்-எ-று *(பொருளையேயுளத்துவைத்தலென்ற வேகாரத்தாலே வேறொன்றையும் நினையாதேயென்றது பெரியவர்களைச்சேருதலாலே ஞானம்வளரும் குருவேதெய்வமாகையால்பூசிக்கவேண்டு மென்றது தேகத்துக்குக் குற்றமாவதுசெனனமரணம்பாலயவ்மனகவுமாரவியார்த்திபம்வியாதி துக்கமிவைமுதலானவைகள். ௰

முன்றிகழ்பிறப்பொடு மூப்பிகப்பிணற்
சென்றிடையிடும்பையைச் சிந்தைசெய்கையு
மென்றிவையனைத்துமற் றிவற்றினாலினிற்
சென்றடைபொருளினை தெரிந்துகேளென

(இ-ள்)முன்னேவிளங்கப்பட்டபிறப்புடனே மூப்புச்சாவினாலேவந்தடைகின்ற துக்கத்தை நினைக்கின்றதுமென்று சொல்லப்பட்ட இவைசகலமும் நீங்கினவிதுஞான இங்க ஞானத்தினாலேஇனிமேற்போய்ச்சேருகின்ற ஆத்மாவைச் சொல்லுகின்றோம்தெரிந்துகேள்-எ-று. * (ஞானமுமென்றகவியும்பெற்றனவென்றகவியும்ஒருபெருமென்றகவியுமமுன்றிகழென்றகவியும் ஒருதொடர்) ௰௧

ஆதியந்தமிலதழியாது நின்றபெருமையை
சோதிலுண்டதிலையெனு மூனமீளறியொழிவது

நீதியின்கணை இலமு மாகியெங்குநிறைதலி
ஞேகருங்கைகதலைசெவி கால்களெங்குமுடையது

(இ-ள்) முதலுமுடிவுமில்லாதது அழியாமல் நித்தியமாகச்சலியாமல் நிலறபெருமையையுடையது சொல்லுமிடத்தில் என்றுமுள்ளது இல்லையெனகிறகுற்றமில்லாமம் நீர்வதுநியமிக்குமிடத்தில் எல்லாமாகியெங்கும் நிறைதலினலேசொல்ல அரிதாகியகைகள்தலைகள் காதுகள்கால்களிவைகளெங்குமுடையது-எ-று. ௰௨

### அறுசீரடி யாசிரியவிருத்தம்.

காணப்புலன்களெல்லாத்திற்குங் கண்ணாய்நின்றுகாட்டுவது
பேணுமபுலனகடனக்கொன்று மில்லாதியென்றபெற்றியது
பூணுமபற்றுந்தனக்கின்றி யெல்லாந்தானேபொறுக்கின்ற
தாணும்பெண்ணுமலிகுலமு மன்றியேநின்ருகியது

(இ-ள்) காணப்பட்டகண்களெல்லாவற்றிற்குங்கண்ணாகநின்றுகாட்டுவது மதிக்கப்பட்ட விந்திரியங்களொன்றுந் தனககில்லாததுஎல்லாம் வல்லசுபாவமுடையது சுமக்கிறபிடிப்புத்தனக்கில்லாமல்எல்லாவற்றையுந்தானே சுமக்கிறதுதான் ஆணும்பெண்ணும அலியுமில்லாமலேநின்று அந்தமூன்றுமான-எ-று. ※ (காணப்பட்ட விந்திரியங்களென்றுமாம் அதெப்படியெனனில் அந்தந்தவிஷயத்தை அந்தந்தவிந்திரியங்களால் அறிவதேசாட்சியாதலால். ௰௩

### கலிவிருத்தம்.

பூதமைந்தினகத்திஞேடு புறத்திநும்பொலிகின்றதிந்
கேதமின்றிநடப்பநிற்பன் வாயிருப்பதினின்னதென்
றேசரும்படிநுண்ணிதாகிய தொன்றதாகியிருந்துமெய்ப்
பேதம்வந்ததுபோலநின்று பிணங்கவும்படுகின்றதே

(இ-ள்) பஞ்சபூதங்களினுடைய வுள்ளிலும்புறத்திலும்பொலியப்பட்டது இவ்விடத்திலேற்றமில்லாமல்நடக்கிறது நிற்கிறதாயிருப்பதான சராசரங்களில் இன்னதென்றுசொல்லக்கூடாதபடி நுண்ணியதாகியது இப்படி அளவற்றபேதங்களில் நுண்மையாகவிருந்தாலும்அநேகமாகாமல் ஒன்ருயிருந்து சரீரபேதங்களைப்போலத்தானும அனேகபேதங்களாகநின்று ஒன்றுக்கொன்றுசமாதானமில்லாமற் புணங்கவுமிதைநிச்சயமாகவறிந்தபோதுஎல்லாம்நானேயென்றுசமாதானமாகவும்வுண்டாகின்றது-எ-று. பிணங்கவுமென்றவும்மையால் இணங்கவுமென்றதிர் தழுவும் இதைவிரிக்கில் வெகுமாம். ௰௪

அருவமாயதிதூரமாய் தனித்துமாயதனைத்துமா
யருவமயாவுமளித்துமீள வொழிக்குநாளிலொழிப்பது
பொருவிலாவொளிகட்குமுள்ளொளி யாகியேபொலிகின்றதிங்
கிருமைநீடியஞானமோடதுமேயமாவிசைந்தது

இ-ள், உருவமில்லாததாய் அஞ்ஞானிகளுக்கு வெகுதூரமாய்ஞானிகளுக்கு வெகுதிட்டமானது சகலமுந்தானாய் உருவங்களெல்லாம் உணடாக்கிததிரும்பப்போகிற காலத்திலேபோக்குவது ஒப்பில்லாதசோதிகளுககு உள்ளேநின்ற சோதியாகியேபொலிகின்றது இவ்விடத்திலேஇம்மைமறுமையிலேபெருகியஞானமும் அதினுடனேநேயமுமாகப்பொருந்தின-எ-று. * ஆதியந்தமென்றகவியும்காணும்பலனென்றகவியும்பூதமைந்தென்றகவியும அருவமாயதென்றகவியும ஆத்மசொரூபத்தைச்சொன்னதினாலேயொருதொடர். ௰௫

ஆனவிப்பொருண்முன்புரைத்தவவற்றினாலறியும்பெரு
ஞானமற்றமனத்தனுயநல்லுடம்புமற்றவ்வுடம்புசேர்
ஞானமுற்றுமவற்றினாலறியப்படும்பொருணன்மையு
மீனமற்றதிறத்தினேடுசுருக்கமாகவியம்பினேன்

இ-ள், இப்படியானஇந்த ஆத்மாவானது முன்சொன்னசரீரஞானங்களினாலறியப்பட்டபொருள் குற்றந்தீர்த்தமனதுடைய அருச்சுனாநல்லவுடம்பு மற்றஅந்தவுடம்பைசொந்தஞானமுதிர்ச்சிஇந்தவுடம்புஞானமென்ற விரண்டினாலறியப்பட்ட ஆத்மலாபமுங்குற்றமற்றவிதத்துடனே சுருக்கமாகச்சொன்னேன்-எ-று. ௰௬

எள்ளலானதிகழ்ந்தியான்முன்னுரைத்தவிப்பொருளீதெலா
முள்ளவாறுதெரிந்தெனன்பர்தமக்குணர்ந்திடவோதினர்
கள்ளமாதருமாயவேலைகடந்துகாதலசையின்பமாம்
வெள்ளமாமெனயெய்துவாறென வேறுகூறவிரும்பினன்

இ-ள். இழிவானதைநீக்கிநான்முன்சொன்ன இந்தஅர்த்தங்களிவையெல்லாமஉள்ளபடிதெரிந்து என்னுடையபரதர் தங்களுக்குத்தெரிவிக்கஓதினபேர்கள் வஞ்சனையான மயக்கத்தைக்கொடுக்கப்பட்ட மாயாசமுத்திரத்தைக்கடந்து ஆசையுண்டாககப்பட்ட சுகமானவெள்ளத்தையொப்பாகியவென்னையடையவர்களென்றுசொல்லிமேல் வேறேசொல்லவிச்சையானார்-எ-று * இப்பொருளிதெலாமெள்ளலானதிகழ்ந்துள்ளவாறு தெரிந்தெனப்பொருளுக்கேற்ப மாறுக. ௰௭

கலிவிருத்தம்

ஓதியவுடம்புக்கு முயிர்க்குமுன்மையா
யாதியகண்டறிபவ ராருமிலலையாற்
றீதிலிவ்விரண்டுமுன் செய்வதேதெளி
னீதியின்வற்றினை நிகழக்கூறுவாம்

(இ-ள்) நாம்முன்சொன்னவுடம்புக்கும்ஆத்மாவுககுஞ்சத்தியமாகஆதியைக்கண்டு அறிகிறவர்களாருமில்லையாகையால்இவையிரண்டும்அநா

திகுற்றமற்ற விந்துவிவ்விரண்டும் முன்செய்கிறதேதென்பாயாகில் நிய மத்தினாலேஅவைகளைவிளங்கச்சொல்லுவோம்-எ-று ✳ தேகத்தைப்பி ரகிருதியென்றுஉயிரைப்புருஷனென்றுஞ் சொல்லுவாருமுளர் ஆதி யை யறியப்படாததினாலேஅநாதியென்றது. ௰௮

நண்ணியகுணத்தின் வேறின்மைநாட்டலாற்
கண்ணியவினைகளுக் குடம்பகாரணம்
எண்ணியதுன்பமோ டின்னமென்றிவை
புண்ணியகாரணமுயிரென்கின்றதே

இ-ள்,சொந்தகுணத்தினுடைய செயலேயல்லாமல்வேறில்லாததைநிறு த்துகிறதினாலே நினைத்தகருமங்களாகியபுண்ணியபாவங்களுக்குஉடம் புகாரணமஇந்தப்பிரகிருதிகுணத்தால்வந்தபுண்ணியபாவங்களைக்கொ டுக்கப்பட்டதாகநிச்சயித்துசுகதுக்கமென்றஇவைகளையனுபவிக்கிறகா ரணமானது உயிரென்றுசொல்லபபட்ட புருஷன்-எ-று ✳ இதனாலுட ம்புசெய்துஉயிரனுபவிக்கமென்றது. ௰௯

இவ்வுயிரிவ்வுட றன்னிலேயிருந்
தவ்வுடல்பயிற்றிடுங் குணங்களானவை
துவ்விடுமிறந்திடுந் தோன்றுமிக்குண
மெவ்வநானுடையன வென்றிருத்தலால்

(இ-ள் இந்தப்பிரகிருதியைக்குற்றமுடையநானென்றும்என்னுடை யதென்றும், அகங்கரித்திருக்கிறதினாலேஇந்தபுருஷனாகிறசீவன்இந்த உடம்பிலிருந்து அந்தஉடம்பைநடத்தப்பட்டபிரகிருதிகுணங்களான புண்ணியபாணங்களால்வந்த சுகதுக்கங்களையனுபவிக்கும்ரணமாஞ் ச னனமாம்-எ-று ✳ அகங்கரியாமலனுபவிக்கிறஆத்மானுபாவத்தைவிட் டு அகங்கரித்ததினாலே சுகதுக்கங்களையனுபவித்துச் சனன மரணப்ப டுமென்றது. ௨௰

உண்பனயாவையுமுண்கின்றானுமெய்க்
கண்கொடப்பொருளையுங் காண்கின்றானுநா
னண்பவப்பொருட்குமொத் திருக்குநாதனி
மெண்செய்திவ்வுடம்பிலே நின்றவீசனே

(இ-ள்) தோழா அநுபவிக்கப்பட்டசகலத்தையுமனுபவிக்கிறவனும் உடம்பிலிருக்கிற கண்ணைக்கொண்டு எந்தப்பதார்த்தங்களையுங்காண்கி ன்றவனு எந்தப்பதார்த்தஙகளுக்கும்சமமாயிருக்கின்றகர்த்தனும்இந்த வுடமபிலேகர்த்தனென்று சங்காரஞ்செய்துநின்றசீவனான்-எ-று.(ஈ சனே-சீவன்) ௨௧

இப்படியாயிரையு மியாக்கைதன்னையு
மெய்ப்படவறிந்தவன் வேட்டைவைதுகார்ந

தொப்புனவன்றியேயொழிகிவாளினும்
பொய்ப்படுபிரிவின்மறுததும்யோகிலான்

[இ-ள்] இப்படிசிவனையும் உடம்பையும் நிசசயமாக அறிந்தவன்வேண்டியவைகளைத தனக்கென்றெருப்புகிற தல்லாமல் அனுபவிதது நித்தியமாய்க் கூடிச்சுகித்தாலும் பொய்யாகவுடைய பிறவிலேதிரும்பவும் போய்பிறவான் மோட்சத்தையடைவான் -எ,று- (அறிந்தவன் சுகியானென்பது கருத்து ஆதலால் அப்பிரகிருதியால் அநுபவம் வந்தனுபவித்தாலும் தனதென்று அகங்கரியான் அதனாலே மோட்ச முண்டென்பது ௨௨

செரியுமிப்பொருளையேசிலர்தியானமாங்
குறியினூற்றமமுளேகண்டுகொள்வார்க
ளறிவரும்சாங்கியயோகமாகிய
நெறியினூலெங்குமாய்நிற்பக்காண்பரால்

இ.ள்,கனமான விந்த ஆத்மசொரூபத்தைச் சிலர்தியானமானகுறியினாலே தங்களுடைய மனதிலே கண்டுகொள்வார்கள்சிலர்அறியப்படாத சாங்கியோகமாகிய மார்க்கத்தினாலே உள்ளும் புறம்பும் எங்கும்பூரணமாய் நிற்பக்காண்பார்கள்-எ-று. ௨௩

இருமையுமறிவதற்கிடமிலாதவர்
ஒருமகன்றெய்வமென்றுரைத்தவொன்றையே
யருமையிலருச்சனைசெய்வராதலான்
பெருமையினவர்களும்பிறவிமேவுடார்

இ-ள். இப்படித்தியானமென்றும் சாங்கிய யோகமென்றும் சொல்லப்பட்ட இரணடையும் அறிகின்றதற் கிடமில்லாதவர்கள் ஒரு குருவானவர் தெய்வமென்றுசொன்ன ஒன்றைத்தானேயருமையினாலேபூசை செய்வார்கள் அந்தப்பூசையினுடைய பெருமையினாலே அவர்களும பிறவுயைச்சேரார்கள் ஆத்மாவைக் காண்பார்கள்-எ-று. * [பூசிக்கவரும் தெய்வம்காட்டுவதினாலே ஆத்மாவைக்காண்பார்கள் என்பதாம ௨௪

போவானநீர்பனயாக்கைபூண்டுகொண்
டியாவருந்துயர்படுகின்றவிதெலாம
மேவருமுயிருடல்வேறுபாட்டினை
யாவர்கண்டறிவதோராறிவிலாமையே

(இ-ள்)நடத்துகின்றது நிற்கிறதுமான சராசரமாகிய தேகத்தைத்தரித்துக்கொண்ட யாருந்துககபபடுகின்ற இவையெல்லாம் மனம்பொருந்துதலாக வரப்பட்டசிவனும்உடம்புமானபிறகிருதிபுருஷக்கூட்டம்

இந்தப்பிரகிருதி புருஷர்களுடைய வேறுபாட்டை ஒப்பில்லாஞானமி ல்லாத அஞ்ஞானத்யுடையவர்கள்யார் கண்டறிகின்றவர்கள் காணமா ட்டார்கள்-எ-று,      உரு

கெடுகின்றபூதங்கடோருங்கெடாத
வடுவின்றிநின்றமறைப்பொருடன்னை
நடுவென்றுகண்டவனல்லனவெல்லாங்
கடுகின்றனையொழியாவகைகண்டான்

(இ-ள்) கெடுகின்ற பஞ்சபூதாத்துமாக்கள்தோறும் பிறந்து கெடாப ல்குற்றமில்லாமல் நிறைந்திருக்கின்ற வேதப்பொருளான வஸ்துவான தைப் பொதுவென்று தண்டபேரெல்லாம் நல்லவர்களென்று அப்படி க்கொத்த பேரணுவுக்காணுவா யெங்கும் நீங்காமல்இருக்கின்றவகையை க் கண்டவர்களென்றுஞ் சொன்னார் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று.

ஒத்தெங்குமாயவொருமைப்பொருளினை
யத்தன்மையினலறியுமவனே
செத்தும்புறந்ததுந்திரியாவகைதனை
மெத்தன்மையிதேபுகவிடுகின்றான்

(இ-ள்) சமமாகியெங்குமாகிய ஒப்பில்லாமையுடையஆத்மாவையெ ல்லாந் தானகச்சமமாக்கியெங்குந்தானகியஒருமையானசுபாவத்தினலறி யப்பட்டவனேசெத்தும்பிறந்துந்திரியாதபடிக்குத்தன்னேச்சத்தியசுபா வத்தினலே புகுதவிடுகின்றவன் -எ-று. * [சமமாவது அணுவுக்கு அ ணுவாய் மகத்துக்கு மகத்தாயிருப்பது சத்தியசுபாவமாவது பிரமசுபா வம் பிரமமொன்று தவிரமற்றவெல்லாம் சத்தியமாதலால்பிரமத்த சத் தியமென்றது சுபாவமாவது எல்லாந்தானாய் ஒன்றிலுங்கூடாததாய் அ சையாததாய் சைதன்னியமாய் நின்மலமாயிருப்பது இன்னஞ்சொல்லி ல் விரிவாம் பிரமத்தையே ஆத்மாவென்பது      உள

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

உணரவிகாரியென்றும்வினையெலாமுடம்பினோடே
புணர்வனவென்றுங்கண்டான் பொய்யிலாமெய்யைக்கண்டா
னிணர்மலர்முடியாயெல்லா வினைகளுஞ்செய்துமீசன்
குணமிலியாதலாலேயவற்றெருடுங்கூடிநில்லான்

இ-ள். சைதன்னியமான ஆத்மாவை விகாரங்களில்லாத அவிகாரி யென்றும் கருமங்களெல்லாமுடம்போடே பொருந்துவதென்றுங்கண் டவன் பூங்கொத்துக்களைத்தரித்த கிரீடத்தையுடைய அருச்சுனநிப்ப

டி அவிகாரியான ஆத்மாவுடம்போடேகூடியந்தவுடம்பாலேகருமங்களைச்செய்தாலுங் குணமில்லாத நிற்குணனானபடியினாலே அந்த வுடம்போடுங்கருமத்தோடுங்கூடிநில்லாதுஎ-று *உணர்வு இவ்விடத்தில் ஆத்மா இதனாலே ஆத்மா உடம்போடுங்கருமத்தோடுங்கூடாமல் நிற்பனென்றும் அந்தவுடம்புங்கருமமும் ஆத்மாவைக்கூடிநிற்குமென்றும் அறிவது

உன்னியவானமெங்குமொழிவறநிறைந்தவேனுந்
தன்னுடைநுண்மையாலேபிறரொடுஞ்சார்வதுண்டோ
பன்னியவதுபோலெங்குப்பரந்துளனேனுமங்கு
மன்னியவீசனந்தவுடம்பொடுமருவமாட்டான்

இ-ள்-எல்லாரும்நினைத்த ஆகாயமானது அணுவத்தனை யிடமானாலுமில்லையென்பது தீரவெங்கும்நிறைந்ததானாலும் தன்னுடைய சூட்சுமமத்தினாலேமற்றவாய்வு அக்கினி அப்பிரிதிவு என்றநாலுபூதங்களோடும் கூடுவதுண்டோ அந்தநாலும்இந்த ஆகாசத்தைக் கூடாமையுண்டோ இரண்டுமில்லையே இப்படிவேதங்கள் முறையிட்டனபோல ஆத்மாவெங்கும்பரந்திருக்கின்றவனானாலும் உடம்பான அந்தவிடத்திலிருக்கின்ற ஆத்மா அந்தவுடம்போடுங்கூடமாட்டான்-எ-று,ஒழிவாயெங்கும்நிறைந்தவெனமாறுக ஆகாசம்வந்தவிடத்திற்பிறவென்றதனாலே மற்ற நாலுபூதமுமாயின் ஆகாசத்தை நாலுபூதமுமாதாரமாகவுடையதுபோல ஆத்மாவையாதாரமாகவுடையது உடம்பென்பதருத்தாபத்தி ஈசனிடத்தில் ஆத்மாவென்பது) ௨௯

இரவிதானொருவனேயாய்நின்றிந்தவுலகத்தோங்கும்
விரவியவிருளைநீக்கிவிளக்குறுமாறுபோலத
தரவியாவருமுன்னில்லாசராசரருடம்புதோறும்
பரவியானாத்தமாயொருவனேபரந்துநிற்பான்

இ-ள்.சூரியனானவன் தனக்கிரண்டாவதில்லாமற் றானொருவனேயாகி நின்று இந்தவுலகத்திலெங்குங்கலந்த விருளைப்போக்கிப்பிரகாசிக்கிற படிபோலமுன்னேதன்னை யுண்டாக்கயாருமில்லாதவனாய்இப்போது நான்விரித்துச்சொன்னமாயனான் ஆத்மாவானவன் தனக்கிரண்டாவ தில்லாமல் தானொருவனுமே சராசரங்களுடைய வுடம்புகள்தோறும் பரந்துநிற்பான்-எ-று.*தரவியாவருமில்லாமாயனெனமாறுக இன்னமுமமுன்றரவியாருமில்லா மற்றனேதங்க சராசரருடம்புதோறுந தானொருவனேபரந்துநிற்பானென்றுஞ்சொல்லலாம்) ௩௰

ஓரின்மேலாகிநின்றவுயிரினோடுடம்புக்குள்ள
பேரினைச்சிறப்புமூப்புப்பிறப்பெனுமிவற்றைநேராய்

பாரின்மேலறிவார்வீடுபெற்றினரென்றான்பார்த்தான்
தேரின்மேனின்றுவேதச்சிரத்தின்மேலிருக்குஞ்சீரோன்

இ-ள்,விசாரித்தறிவில்எல்லாவற்றிற்குமேலாகின்ற ஆத்மாவை அது வுடனேஉடம்புகளுள்ள பேருடனேபிறப்பு சாவுமூப்புயவ்வனமென்று சொல்லப்பட்டவிந்தனாலுஞ்சாவு மூப்புபிறப்பாகிய விவைகளை வேறாகப் பகுத்துப்பூமியினிடத்திலறிகின்றவர்களே மோட்சத்தையடைந்த வர்க ளென்றார் அருச்சுனனுடையதேரின்மேலே நின்று வேதச்சிரசின் மே லிருக்கப்பட்ட சிறப்பையுடையஸ்ரீகிருஷ்ணசுவாமி- ௩௪

௰௩-வது-பிரகிருதிபருட-அத்தியாயம்.

முற்றுப்பெற்றது.

ஆ அத்தியாயம்-௰௩-க்கு-கூடியசெய்யுள்-௩௮௬

——(-)——

உ

பதினான்காவது.

# குணத்திரயயோக அத்தியாயம்.

——[*]——

கலிவிருத்தம்.

செய்யமாமலர்மேலுறைசெல்வியும்
வையமாமடவாளுமகிழ்ந்ததோ
ளையன்மைய்யையன்பாலடியோமெலா
முய்யமீளவுரைக்கத்தொடங்கினான்

இ-ள்,சிவந்தபெரியதாமரைப்பூவின்மேலிருக்கின்ற லட்சுமியும் அறி யாமையுடைய பெரியபூமிதேவியும் கூடிமகிழ்ந்ததிருத்தோள்களுடை யஸ்ரீகிருஷ்ணஸ்வாமிகிருபையினாலேஅடிமையானநாமெல்லாம்பிழை க்கும்பொருட்டாகத் திரும்பவும் அந்தச்சத்தியமானஆத்மாவை சொல லத்தொடங்கினான்-எ-று *லட்சுமியும் பூமிதேவியும் ருக்குமணியென் றுஞ் சத்தியபாமை என்றுஞ்சொல்லலாம் [க]

நல்லகாமறிவித்யா திலுநல்லது
டீலல்கவந்தோர்ககறிவாயது

மல்லவாவியதொண் முடிமன்னியான்
சொல்லமேயவதன் றுனிவாவதே

(இ-ள்.)முன்சொன்ன ஞானத்திலும் நல்லதான ஞானமெல்லாவற்றிலுநல்லதாங் குற்றந்தீர்ந்ததவம்பண்ணுகிறரிஷிகளுககு அறிவாகியது மற்றபேரையிச்சித்த தோளையுங் கிரீடத்தையு முடையராசாவே அந்த ஞானத்தையுடைய உறுதியானதை இப்போதுநானுனக்குச்சொல்லப் பட்டது-எ-று. ௨

இன்னதன்மையிஞ்ஞானத்தியகையா
லென்னைவந்தடைந்தாரிவ்வுலகினில்
பின்னைவந்தடைந்தாரிறவாறதன
றன்மையாசிதனிலாங்கதுசாறறுவோம்.

இ-ள், இந்தசுபாவமான இந்தஞானசுபாவத்திலேவந்துஎன்னையடைந்தபேர்கள் பிறகு சிருஷ்டிகாலத்தில் இந்தப் பிறபஞ்சத்திலே வந்து பிறவார்கள் பிறளயகாலததிலே சங்காரத்துக்குங் கூடார்கள் அந்தஞானத்தினுடைய சுபாவ மென்ன வென்றாலது சொல்லுவோம் -எ-று.※ ஆங்கு அசை பின்னரிவுலகெனமாறுககாலந்தோன்றே வெழுவாய் வந்தடைதலாவது அஞ்ஞானத்தைநீங்கிஞானத்தில்வந்தென்னையடைதல்

மூதவாவென்குணமவைமூன்றினும்
பேதமாகபபிரகிருதிதன்னிலே
காதலால்வைப்பனியான்கருவைகருப்
பூதமியாவம்புலப்படுகின்றதே.

(இ,ள்)பழைய தவசையுடைய அருச்சுனா யென்னுடையகுண மூன்று அந்தமூன்றிலும்பேதமாகப்பிரகிருதியிலேநான்விசுவாசமாகக்கருவைப்பேன் அந்தகருவைசகலபூதங்களும் கெற்பிக்கிறது-எ-று. ௪

இந்தவண்ணத்தினாலிவ்வுலகிடை
வந்துயோனியெல்லாம்வருவித்திடுந்
தந்தையாயிவையீன்றளிகின்றதா
யந்தமாமலர்மேலயனுமென்றே.

(இ-ள்)இந்தவிதத்தினாலேஇந்தப் பிறபஞ்சத்தினிடத்திற் பிறகிருதி வந்துசகலயோனிகளையும் வறப்பண்ணுகிற தகப்பனாகி அந்தயோனிகளைப்பெற்றுரட்சிக்கிறதாகிய அந்தப்பெரியதாமறைப்பூவின் மேலிருக்கிறபிரமதேவனாகும்-எ-று. (௫)

என்றுமுன்னங்குணமென்றியம்பிய
மூன்றுமூலப்பிரகிருதிதன்னிலே

தோன்றியுள்ளனதொல்லொருவைப்பற்றி
யூன்றிநிற்பவவற்றையுணாத்துவாம்

(இ-ள்) முன்பொருந்தின குணமென்று சொன்ன மூன்றுமூலப்பிர கிருதியிலே தோன்றியுள்ளது அந்தகுணங்களானவை பழைய ஆத்துமாவைசனனமரணத்துக்கு ஏதுவாகப்பிடித்து ஊன்றிநிற்பது அந்தமூன்றுகுணத்தையும் அறிவிப்போம்-எ-று. (௬)

சத்துவம்மிராசத் தாமதமென்
வுய்த்துவந்தபெயரை யுடையன
பெத்துவந்து வளர்ந்தருகிற்பன
மெய்த்துவந்தவற்றின் செயல்வேறுகேள்.

இ-ள். சத்துவகுணமென்றும் இராஜஸகுணமென்றும் தாமதகுணமென்றும் வைத்துவந்தபெயரை யுடையது எந்தத் தத்துவங்துவங்களையுந் தராமட்டுவது நிச்சயித்துவந்த அந்தமூன்று குணத்தினுடைய தொழில்களை வேறுவேறாகச்சொல்லுவோம் கேள் அருச்சுனா-எ-று,* துவந்துமென்கிறதைதொந்தமென்றுவழக்கமாகச்சொல்லுவார்கள்) எ

பற்றுமாசின்மையாப்பளிங்கொப்பன
வுற்றநல்லதுண்டாக்குவ
தெற்றுமின்பமலர் துன்பமென்பது
சற்றமில்லதுசற்றுவமாவதே.

(இ-ள்)பற்றப்பட்டஆசையாகியகளங்கமில்லாமையினாலேபளிங்கை ஒப்பாக நின்மலமானது உறுதியானஞானத்தை யுண்டாக்குவது எதுவந்தாலுஞ் சுகமில்லாமல் துக்கமென்பது சற்றாகிலுமில்லாதது சத்துவகுணமாவது-எ-று. ௮

ஓதுமாசையிலேபிறந்துள்ளது
தாதுகற்புரையுன்னிறஞ்சார்ந்தது
போதுசெய்வினையோடறிவாய்பின்னர்க்
கேதுவாய்விராசதமென்றதே.

(இ-ள்) சொல்லப்பட்ட ஆசையினாலே பிறந்திருக்கிறது தாதுகற்புரையுன்னிறஞ்சார்ந்ததுமயக்கமுஞ்சொல்லப்பட்டகாமத்தோடுஅறிவாய்பிறகுவரப்பட்டமரணஜனனத்துக்குஏதுவாகியதுராஜஸமென்கிறகுணம்-எ-று. ௯

குறிகொளாதமயக்கமுங்கோதிலா
நெறிகளானகிழ்கலுகித்திரை
செறிதலானதுமென்றிவற்றுறதின்ண
மதிவைமாய்கருமதுதமமாவதே.

(இ-ள்) கேட்டுங்கேட்டதைக்கண்டும்மெய்யென்று ஒப்புக்கொள்ளாதமயக்கமுங்குற்றங்குடியாயிருக்கின்ற மார்க்கங்களானதைநடத்துகின்றதும் நித்திரை மிகுதலானதுமென்று சொல்லப்பட்ட இவைகளினலே நிச்சயமாக ஞானத்தையழிக்கு மதுதமோகுணமாவது-எ-று, ௰

கலிநிலைத்துறை.

வாழுஞ்சத்துவமற்றவில் விரண்டையுமறுத்துத்
தாழுமற்றவவ்விரண்டுமேதமோகுணந்தனைபபின்
வீழுசத்துவகங்களவ் விரர்சதம்வினையி
னூழிமற்றிவையிரண்டுதாழ்ந் தொன்றுமிக்குளவாம்

(இ-ள்) சத்துவகுணமானதுஒருவேளை அந்தராஜாத்தாமதமானவிரண்டையுமாததுக்தானே பிரசலமாகவாழும் அந்தத்தமோகுணமானதொருவேளையு பிரபலமாக எழும்பினல் அந்தசத்துவராசதமிரண்டுமடங்கும் அந்தராஜகுணமொருவேளை மிகுந்ததுண்டானற் சத்துவகுணமுந்தமோகுணமுமிரண்டும்விழுவைகள் இரண்டுந்தாழ்ந்து ஒன்று அதிகமாகிஇருக்கிறது பழையவிதியினல்-எ-று. ＊(மற்றஅசை.) ௰௧

கலிவிருத்தம்.

உணர்செறிந்தத்துவ முன்பகுதுய்த்திடு
மிரசதவினைகளோ டிவையார்த்திடும்
புணர்செய்திவ்வழுக்கையே பொருந்திப்போர்த்திடும்
தணர்செறிபுகழினய் தம்மெனமின்றதே

இ-ள். பூமியெங்கும்நெருங்கிய கீர்த்தியையுடையஅருச்சுனசொல்லப்பட்ட சத்துவகுணமானது சுகத்தையனுபவிக்கப்பண்ணும்ராஜஸகுணமானது குற்றத்தைச்செய்து இந்த அஞ்ஞானத்தைமூடும்-எ-று.

அறுசீரடியாசிரிய விருத்தம்

ஒத்துநல்லறிவுமிக்க யாதொருபொழுதப்போது
சத்துவந்தழைத்துபோதாந்தாங்கரும் வினைகளேகொண்
டுய்த்தவக்தாசைகூற வுலோபம்வந்துய்த்தபோது
மத்திமகுணமேசால வளர்ந்ததென்றறிநீமன்ன

இ-ள், ராஜாவேசகலஇந்திரிய அந்தக்கரணங்களிலுஞ்சமமாகவொத்துஞானமிகுந்தபொழுதெப்பொழுதோ அப்பொழுதுசத்துவகுணமிகுந்ததுவளர்ந்தபொழுதாம்செய்துமுடிக்கஅரிதானகருமங்களையேசெய்துமுடிப்போமென்றுட்கொண்டுவைத்துஅதிலாசைமிகுதியாகலோபம்வந்து கூடியிருந்தபோது சத்துவதமோகுணங்களுக்குநடுவானராசதகுணமேமிகுந்துவளர்ந்ததென்றறிவாய்நீ-எ-று. ＊ லோபமும்சஞ்ச
யிகூ

லகருமமும் காமியகருமமும் விஷயவிச்சையும் வந்தபோது ராசதகு
ணமென்றறிவது. ௰௩

தக்கதுதகாதென்றைத் தானறியாதபோது
லக்கருமங்கண்மாட்டு மிகழ்ச்சியோடிருக்கும்போது
மோகமுமெய்ம்மயக்கத்தோடு முறக்கம்வந்துற்றபோது
மிக்கதுதம்மேயென்று விசயநீயறியவேண்டும்

இ-ள், அருச்சுனனொருபதார்த்தத்தை இதுதகுமானது இதுதகாதது
என்றுதான் பகுத்தறியாத போதும் எந்தக்கருமங்களிடத்திலும் வெறு
ப்புடனே யிருக்கும்போது உடம்பிலொத் திருக்கப்பட்ட மயக்கத்துட
னும் நித்திரைவந்தடுத்தபோதுந் தமோகுணமே அதிகமானதென்று நீ
யறியவேண்டியது-எ-று, ௰௪

எழுசீரடியாசிரிய விருத்தம்,

தக்கசத்துவமேநிகழ்ந்தபோதிறந்தோர்
தெய்வயோனிகளிலேசாவார்
மக்களிற்பிறப்பாரிராசம்வந்து
விளைந்தபோதுடம்பினைத்துத்துறந்தோர்
மிகதெழுதவமேவிளைந்தபோதிறந்தோர்
விலங்குசாதிகளிலேவீழ்வார்
ஒக்கமற்றிவற்றின்பலன்களுந்தெரிய
வுரைக்கின்றேனிவற்றைமுணர்வாய்

இ-ள், தக்கதானசத்துவகுணமேநடக்கிறபோது செத்தவர்கள்மேலா
னதெய்வயோனிகளேயடையவர்கள் இராசகுணமேவந்துண்டானபோ
து தேகத்தைவிட்டவர்கள் மனிதயோனிகளிலேபிறப்பார்கள் மிகுந்து
எழும்புகிறதமோகுணமோ யுண்டானபோதுசெத்தவர்கள் மிருகஜாதி
களில் விழ்வார்கள் இதனுடனேகூடி இந்தத்திரிகுணத்தினுடையபல
ன்களுந்தெரியச்சொல்லுகிறேன்இதையுமறிவாய் அர்ச்சுனா-எ-று. *சத்
துவமேதம்மேயென்றதனால்இராஜஸமேயென்றுவருவித்ததுஏகாரமே
துக்கென்னில் ஒவ்வொன்றில்மூன்றுகுணமுங்கலந்தென்பதுகுணமாத
லாலே எங்கேதனிக்குணத்தைச்சொன்னதுகலந்து நிற்கதுதிரும்பத்
தனியாகவுமிருக்குமோவென்னில் தக்கசத்துவமென்றதனாலும் மிக்கெ
ழுதம்மென்றதனாலும் கலந்தகுணத்திலும் மூன்றிலொன்று எதுமிகுந்
ததே அதுவே முதலாகமற்றவிரண்டுதாழுகையால்மிகுதைக்கொண்டு
ஏகாரம்வந்தது விழவாரொன்றதனால் மேலோகத்திலேறித் தெய்வயோ
னியிற பரம்பரையாகவே பிறப்பாரொன்றும் மத்தியலோகமான பூமியி
லேமனிதயோனியிலேதானே பரம்பரையாகப் பிறந்துசுழலுவானென்
றும்கீழானமிருகயோனிகளில்வீழ்ந்துமேலானமனிதயோனிக்கும்வரா

மம் பரம்பரையாகத் தாழ்ந்து வீழ்வாரென்றது இன்னம் விரிக்கில் வெகுவாம். ௰௬

அருங்குணமாயசத்துவபலமா மழுக்கறவிரசத பலமாம்
பெருந்துயருழற்றல்தமோபலமாகும் பேதைமைபேசிய முறையே
பொருந்தியவிந்தக்குணங்கள்மூன்றாலும பூதகாலங்களுக்கெல்லாம்
வருந்திபவாயஞானமோடுலோப மயக்கமென்றின்னணம்வருமால்.

இ-ள், அரிதானகுணமாகிய சத்துவத்தினுடைய பலமாகும்அழுக்கறலான நிர்மலமாயிருப்பது ராசதகுணத்தினுடையபலமாகும் பெரியதுக்கத்தையனுபவித்தல் தமோகுணத்தினுடைய பலமாகும்மூடத்துவம் இப்படிசொன்ன வரிசைப்படியே இந்தமூன்றுகுணங்களினாலும் பொருந்தின சிவசரீர கூட்டங்களுக் கெல்லாம் வரப்பட்டதென்னவெனில் சாத்துவிக்குணத்தினாலேசிறப்பாகிய ஞானம்வரும்இராசதகுணத்தினாலேலோபம்தரும்தாமதகுணத்தினாலே அஞ்ஞானம்வரும்-எ-று

சத்துமவர்ந்தர்பரகதியடைவார் தமத்துளோரதேகதி சார்வார்
மத்திமகுணத்தோராயினோர்நடுவின் மானிடப்பிறவியாய்வாழ்வா
ரித்திறமாயவுருவமேவிகாரியானவிகாரியென்றவற்றைமெய்த்
திறனுகவறிந்தவனறிந்த பொழுதிலே வீட்டின்பமடைந்தான்.

இ-ள்.சத்துவகுணமுடையமனிதரானசாத்துவீர்கள்மேலானமோக்ஷத்தையடைவார்கள்ராசதகுணத்தோரானவர்கள்மத்தியலோகத்திலேமனிதப்பிறவியாயிருப்பார்கள்தமோகுணமுடையவர்களோ மேல்நடுவென்றஇரண்டுகதியும்அடையார்கள்இந்தவிதமானதேகமேவிகாரிநான்அவிகாரியென்றுதன்னையுந்தன்னுடம்பையுமான இந்தவிரண்டையும் நிச்சயப்படியாகஅறிந்தவன் அறிந்தபொழுதேமோக்ஷசுகத்தையடைந்தான்-எ-று. ※ (சாத்துவீரர்கள்மோக்ஷத்தையடைந்தார்களெனவேஇனித்திரும்பார்களென்றும் ராசதகுணத்தராய் மனிதராயிருப்பாரெனவே சொற்காதிபலன்களுக்குப்போகின்றதும்பூமிக்குமனிதராகவந்து சுகிப்பதுமாகத்திரிவரல்லது தெய்வயோனியுமோக்ஷமும் பெறார்களென்றும் மிருகயோனியும் அதேகதியும் அடைவார்களென்று மற்றுளோருங்கதிசாராரெனவே மிருகயோனியும் அதேகதியும்அடையுமென்பது அருத்தாபத்தி) ௰௭

உடம்புடனிருந்தே யுரைத்தவிக்குணங்கள்
மூன்றையுமுள்ளவாறறிந்து
கடந்தவன்பிறப்பு மூப்பிறப்பாதி
யாகவேகட்டுரைகின்ற

விடம்புணாயிடும்மை யாவையுங்கடந்து
வீட்டின்பம் விளைபவனென்றான்
றடங்கடலிடையே வளர்ந்தவர்தமக்கு
வேறிதுதனஞ்சய னுரைத்தான்.

இ-ள், ஆத்மாதேகத்தோடிருந்த நான்சொன்ன இந்தமூன்றுகுணங்களையு முள்ளபடியறிந்து நடந்தவன்பிறப்புமுப்புச்சாவுமுதலாகச்சொல்லுகின்ற நஞ்சையொப்பான எல்லாத் துக்கத்தையுங்கடந்து மோக்ஷசுகம் விளைக்கின்றவனென்று பெரியதிருப்பாற்கடலின்மேலே திருக்கண்வளர்ந்தருளிய ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமிசொன்னார் அவருக்குவேறேயிந்தச்சொல்லை அருச்சுனன்சொன்னான்-எ-று, ௰௮

கண்ணியவுலகிற்கடப்பரிதாயகுணங்கள்மூன்றையுங் கடந்துயர்ந்த
புண்ணியரியல்புமவர்களையறியுங்குறியையும்புகன்றருளென்ன
வெண்ணியவுலகுமுலகில்வாழுயிரு மிருவினையாக்கையுமாகப்
பண்ணியுமழித்துமேவிளையாய் இரவன்வேறிவ்வகைபணித்தான்

இ-ள், இடமேசுபாவமானவுலகத்திலே யாராலும் கடக்கப்படாதமூன்றுகுணங்களையுங்கடந்து மேலான நல்லவர்களுடையசுபாவமும்அவர்களையறியப்பட்ட குறியையுந்திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்றுஅருச்சுனன்சொல்ல அதற்குப்பெரியவர்களாலே யெண்ணப்பட்டவுலகமும உலகத்தில்வாழப்பட்ட சீவனும்நல்வினை தீவினையான கருமமுமுடைய தேகமும் இப்படியாக வுண்டாக்கியும் அழித்து மிதுவேபொழுதுபோக்குதலாக விளையாடப்பட்டமேலான ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியானவர் வேறேயிந்தப்படிசொன்னார்-எ-று. ௰௯

வாய்மையவல்லாற்குணமவைமூன்றின்
வருகின்றகாரியமாய
தூய்மையுந்தொழிலுமயக்கமுமென்று
சொல்லியதுறையிவைமூன்றன்
சேய்மையவென்று பெறாதபோதிரங்கல்
பெற்றபோர்நிகழ்தல் செய்யாதான்
தாமயலாகாக்குணங்களோடிருந்தே
யவமறிவுல்சவிப்பிக்கம்படாதான்

(இ-ள்,)குணமான அந்தக்கரணமூன்றில் வருகின்ற காரியமாகிய பரிசுத்தமுங் கருமமு மறியாமையு மென்று சொல்லப்பட்ட இந்தமூன்றுவிதமும பெறக்கிடையாதபோது தூரத்திலிருக் கின்றது கிட்டவில்லை யென்று விசாரப் படுதல் பெறக்கிட்டக் கிடைத்தபோதுவிட்டுப் போகாததைப் போல அவமானஞ் செய்தால்இந்த யிரண்டும் வாயிறு லேசெய் யாமலிருக்கிறது மல்லாம மனதிற

லுஞ் செய்யாதவன்தாங்களன்னிய மாகாமல்ஆத்மாவோநீயோவானென்றிருந்த குணங்களோகூடியிருந்தேயநதக்குணங்களாலேசவிக்கப்படாதவன்-எ-று, ௨௰

## கலி விருத்தம்.

மானமவமானம்வருமின்பமிடர்மண்பொன்
ஞன மகிழ்வப்பிரியமன்பர்பகையானே
ரூனவுரையோடுபுகழுற்றபொழுதுப்பா
னீனமொருகின்றகுணமானவையிகழ்ந்தோன்

(இ-ள்) வரப்பட்டதானவெகுமானமவமானஞ்சுகதுக்கம்மண்பொன்சந்தோஷமகோபம்தோழர்பகையர்நிந்தைகீர்த்திஇவைகளடைந்தபொழுதுசமமானவன்குற்றமடைகிறகுணமானதைவெறுத்தவன்-எ-று. *சந்தோஷங்கோபத்தைபிரியமப்பிரியமென்றுந் தோழர் பகைஞரைச் சத்துருமித்துருவென்றும் நிந்தையை அபகீர்த்தியென்றுஞ்சொல்லுவார்கள் என்னமன்னேடென்றுஞ்சொல்லலாம்) ௨௧

இப்பரிசினல்வருகுணங்களையிகழ்ந்தே
மெப்பருவமாயபெரு வீடுபெருகிற்பா
ரொப்பரிசினுலுமிடையின்றியெருமன்ப
லொற்பவரிலாதவெனையுன்னுமவர்கண்டாய்

இ-ள், இந்தவிதத்தினலே வரப்பட்டகுணங்களைக்கடந்தேகுணாதீதனகிச்சத்யமானபருவமாகியபெரியமோட்சத்தைப் பெறமாட்டுவார்களொந்தவிதத்தினலுமிடைவிடாமலெழும்பினஅன்பிலே ஒப்பானவர்களில்லாத என்னை நினைக்கிறவர்கள்கண்டாயருச்சுன-எ-று;*(உணாக்குப்பின்னிரண்டுபாதத்தையு முன்னாகவு முன்னிரண்டு பாதத்தையும் பின்னாகவு மாறுக) ௨௨

## அறுசீரடியாசிரியவிருத்தம்

ஒழியாதென்றுமியாவர்க்கு மியானேயுணர்த்திவருகிலா
வழியாவறியுநகெடாவீடுங் கோடியின்பமானதுவு
மழியாவரமுமென்னுள்ளே யளவாகாநின்றனவென்றான்
சுழியாவரமுமென்னுள்ளத் திடையேபண்டுதுயிர்கொண்டான்

(இ-ள்) எல்லாருக்கும் நானே விடாமலென்னைக்கு முபதேசம்பண்ணிவருவதினலே கெடாதஞானமுங்கெடாதமோட்சமுங்கேடில்லாதசுகமானதுங்கெடாதகருமும் என்னுள்ளே யுண்டாகிறதென்று சொன்னான்முறகாலத்திலே சுழிதநந்தைபிரளயாநந்தப்பெரியவெள்ளத்திலே

ஆலிலைமேலேபள்ளிக்கொண்டருளிய ஸ்ரீகிருஷ்ணசுவாமி-எ-று. *(எல்லாமுமடைகிற தென்னுள்ளேயாகையாலெல்லாவற்றிற்கு நானே ஆதாரமுங்காரணமுமென்றது ௨௬

௰௪-வது குணத்திரயயோக அத்தியாயம்.

முற்றுப்பெற்றது.

ஆக அத்தியாயம் ௰௪-க்கு-கூடியசெய்யுள்-௪௰௨.

௨

பதினைந்தாவது.

# புருஷோத்தமயோக அத்தியாயம்.

——————(*)——————

கலிநிலைத்துறை.

சாயையன்னவெவ்விணைத்தளையறுக்கவோதகவில்
பேயையின்னுயிர்செகுக்கவோபிள்ளையாய்வளர்ந்தான்
வேயையென்றியவறிசிலைவிசையற்குமீள
மாயைதன்னையோர்மரமொக்கவருணிககலுற்றான்

[இ-ள்) நிழல்போலத்தொடர்ந்த கொடுமையுள்ளகருமத்தையறுக்கவோகொல்லத்தக்க பூதகியென்றபேயின் இனியசீவனைக்கொல்லவேகுழந்தையாய் இடையர்சேரியிலேவளர்ந்த ஸ்ரீகிருஷ்ணசுவாமி மூங்கிலைப்பொருந்திய கட்டுதலையையுடைய காண்டிபமென்றவில்லையுடைய அருச்சுனனுக்குமாயையை ஒருமரத்தையொப்பாக வருணிக்கத்துவக்கினார்-எ-று. ௧

கலிவிருத்தம்.

வேர்மேலதுதலைகீழதுவீவில்லதுவேதத்
தேர்மேவியிலைமேவியதியாரும்புகறலினா
லார்மேவியவச்சுவத்தமதெனவேயரசதனின்
பேர்மேவியபெருமாயைசேயபிறவிப்பெருமாமே

இ-ள், மேலேவேருள்ளது கீழேகிளையுள்ளது அழிவில்லாததுவேதமாகிய அழகுபொருந்திய இலை கூடியுள்ளதுயாருஞ் சொல்லுகிறதினாலேநிறைவுபொருந்திய அசுவத்தமென்றே சொல்லப்பட்ட அரசமரத்தின் பெயரையடைந்து பெரியமாயைசெய்யப்பட்ட பெரியசனன விருட்சமாகியபிறவிமரம்-எ-று. * (பெருமாயைசெய்கிறவிபெருமரமா,

னதுவோ, மேலதுதலைகீழதுவீவில்லதுவேதத்தேர்மேவிய விலைமேவியதியாரும்புகலலினுலார் மேவியவசுத்மதெனவே யரசதனின் போமேயதெனமுடிக்க. ௨

இவ்வாறிதனியல்பாகிய வகையாதெனிலியாதும்
ஒவ்வாவகைபெரிதாகிய பிரமத்தொருவிடையே
வைவாள்வலியுழலாதவன் முறையேவரன்முறையே
மெய்வான்முதல்வருமாதலின மேலாதுவேரே.

இ-ள். இந்தப்படி இதினுடைய சுபாவமாகிய விதமென்னவென்றுகேட்கிற கூரையுடைய ஆயுதவலுமையினுலே பகைஞரைச்செயிக்கிற அருச்சுனுகேள்ஒன்றுமொவ்வாதபடி பெரிதாகிய பிரமத்திலொருவிடத்திலே அந்தப்பிரமத்தினுடைய விதிப்படியேவரத்தக்கிரமப்படி யே சிதாகாசமுதலாக வெல்லாம்வரும் ஆதலாற்பிரமத்தினிடத்திலுண்டானசித்திலே வேர்க்கொண்ட மாயையாகையால் வேரமேலானது-எ-று. (மெய்யானசிதாகாசம்) ௩

ஊழால்வருமுலகாகியு முயிராகியுமேழலாற்
கிழானதலையாய்வரு முவலீறிடைகிழாய்ச்
சூழாகியபிறவித்தொட ரொருகாலமுமடையப்
பாழாமவகையழியாமை லழியாததோர்படியே.

இ-ள், இனிமாயையில் நின்றும் வியாதியில் உலகங்களாகியும்உயிராகியும்வரப்பட்ட அழகினுலே தலைகீழானதாய் வரப்பட்ட முதல்நடுகடை மூன்றுமாயைக்கு மேலில்லாமல அதோமுகமாய்ச்சுழல்வதாகிய பிரவித்தொடர்ச்சியெல்லாம் பாழாகும்படியொருகாலமு மழியாமையினுலே இந்தச்சனனவிருக்ஷம் அழியாததுஒப்பில்லாத சுபாவமுடையது-எ-று. ௪

கருநான்முதல்வினையாவது வளர்காதல்செய்தலினு
லருநான்மறையிலையேயிவை யவையாமெனவறிநீ
வருநாள்களிலொருநாள்பேறு வகையின்மையினுலே
பெருநாடறியவசுத்தம தெனலாயதுபேரோ.

இ-ள், கருப்பற்றுநாள்முதலாகக் கருமமானது வளரப்பட்ட ஆசையைச்செய்தலினுலே அறியநாலுவேதங்களுமேயிலைகள் இவையந்தப்பிறவிமரமாகுமென்று நீயறியவருகிறநாள்களிலொருநாள்பெரும் படியில்லாததினுலே பெரியயுகம் அறியப்பட்ட அந்தப்பிரவிமரமான மாயையானது அசுவத்தமென்று பெயருடையதாகியது-எ-று. * (கருநாண்முதல் வினையானதென்று பாடமோதிற்கருப்பற்று காண்முதல் வினைவானதுவரப்பட்டதென்றும் பெருநாடியவென்றுபாடமோதிற் பெருமையையடைந்தவென்றும். ௫

மற்றிப்படிநிகழ்கின்றவிம்மாயாமரமதனின்
பெற்றிறதிறமிதுவல்லது பிறிதின்மையினாலே
யுற்றிப்படியறிவாய்பொரு ளெல்லாவுமுணர்ந்தா
ரிற்றிப்பெருமானின்றிற மின்னுஞ்சிலவுளகேள்.

இ-ள், இந்தப்படிவிளங்குகின்றஇந்தமாயா மரத்தினுடையசுபாவவிதம்இதல்லாமல்வேறில்லாததினாலேஇப்படியுறுதியாகஅறிவால்எல்லாப்பொருள்களையுமறிந்தபேர்களில்லைஇந்தப்பெரியபிறவிமரத்தினுடையவகையின்னுஞ் சிலவுண்டுகேள் அருச்சுனா-எ-று, ௬

கண்ணேயெனவனையாய்பல பிறவிக்கதிவழியே
மண்ணேமுதல்கீழாமுல கிடையேவளவனவும்
விண்ணேமுதன்மேலாமுல கிடையேயிடைவனவு
மெண்ணேறியபவமாகிய பனையாலிசைதருமே.

இ-ள், இவன்என்கண்ணேயென்றுசொல்ல ஒப்பான அருச்சுனா பல பிறவிகளினுடைய கெதிவழியே பூலோகமுதலாகக் கீழானவுலகங்களினிடத்தில் வளருகிறதும்ஆகாசமுதலால்மேலானவுலகங்களினிடத்தில் நெருங்கினதுமாகலக்கம் எண்ணினஎண்பத்துநாலுலட்சம் அச்சுப்பேதப்பட்ட பிறவியாகியபனைமரத்தாலே பொருந்து-எ-று, ௭

நெறியால்வருவினையோபல நிலமாமுலடையே
யறியாமையோடுறவீழ்தவி வேர்கீழினுமுளதாம்
பிறியாதெழுகுணமாகிய பெருநீர்மையின்வளரும்
பொறியாகியவிவையேதளிர் போன்மேயதுபொலிவே.

இ-ள், செய்கின்றமார்க்கத்தினாலே வரப்பட்டகருமமேவேர் பலநிலங்களான லோகங்களினிடத்தில் அறியாமையாகிய அஞ்ஞானத்துடனே தங்கவிழுதலினாலே கீழிலும்வேருள்ளதாம்ஒருகாலமும்பிறியாமலெழும்பப்பட்ட குணங்களாகியபெரிய நீரிருந்ததினாலேவளரும்பொறியாகிய சத்தபரிசரூப ரசகந்தமானயிந்த விஷயங்களே தளிர்போலப்பூரிப்பையடைந்தது-எ-று. ௮

கனவுந்திகழ்கழுதாழியின் மிருகந்திருநகரு
மெனவந்தழிதலினாலுருவதுவின்றிமுன்யாது
முனவந்திடுமுதனாளோடு முடிவின்மையினாலே
தனதந்தமுமுதலுந்தெரி தாவில்லதுதானே.

(இ-ள்) சொற்பனமுந் தோன்றப்பட்ட கானலில்மிருந்த நீரைக்காட்டுவது போலவந்து அழிதலினாலே முன்னொன்றும் உருவமில்லாமல் முன்னே யுண்டான முதல்நாளும் அதனுடனே முடிவுநாளுமில்லாததினாலே தன்னுடையமுதலும் முடிவுந்தெரிவதில்லாத -தென்றவாறு.

ஆழியத்தேரொன்றதாகுபெயர் கழுதுயெய்தஆழியன்டிபெய்ததேர் கானல்-) ௯

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மந்திரமாயவிர்தமாந்தினைத்துறவென்கின்ற
தந்திரவாளால்வெட்டிகதற்றரமாகிநின்றே
இந்திரசாலமென்னயாவுமென்னிடையேகட்டும்
அந்திரமிலாதவென்னையடைகியேயடுப்பதையா

(இ-ள்)மாயையாகியஇந்தப்பிறவிமரக்கைதஅசங்கமென்கிறவுபாயவாளினாலேவெட்டி அந்தப்பிரவி மரத்தைப்பிரமமாக்கி நிஷ்டையில்நின்று இந்திரசாலம்போலவெல்லாம் என்னிடத்திலே காட்டுகின்றநிரந்தரமானவென்னைச்சேருதலே அடுத்ததென்றவாறு என்னைச்சேராதது அடுக்காதென்பதருககாபத்திதுறவாவது கூட்டத்தைவிட்டதகூட்டமாவது அந்தக்கரணவியாபாரம உபாயவாளாவது குருவினுடபேசசானைப்பிடித்தவாள் அந்தாமில்லாதது நிரந்தரம் துறவைஞான மெனினும்பொருந்தும்) ௰

துன்னிபவாசைகாமக்கடந்தவர்காணத்தோன்று
மென்னுருவியர்கைகேட்கிலியாவையுங்காட்டுகின்ற
மன்னியவொளிகள்காணுவகையதாய்வந்துசேர்ந்தார்
பின்னியில்வேறொன்றாகாப்பெற்றியாய்நின்றுபேசும்

(இ-ள்]கலந்தஆசைகாமம் இவைகளைக்கடந்தவர்கள்காணத்தோன்றப்பட்ட என்னுடையசொருபசுபாவத்தைக்கேட்கில் எல்லாவற்றையுங்காட்டுகின்றநிலைமையான பிரகாசங்களாகிய சந்திர சூரியாக்கினிகளுங்காணுதபடியாய் அன்னை வந்து சேர்ந்தவர்கள்பிறகு அவர்களுடையசுபாவம்வேறொன்றாகாமல்என்னுடைய சுபாவமேயாவதாய்முன்னின்றுபேசும்அருவமாகவும்பேசுமென்றவாறு ௰௧

குடங்கொருந்தோன்றுகின்றவாகாசங்கொலைதர்கொப்பத்
தடம்புனறோறுந்தோறுஞ்சந்திரனுமென்ன
வுடம்புகடோறுமவேறாயுயிரெனநின்றேயந்த
விடம்படுபுலன்கடோறுமியம்பற்றியற்றுவேனான்

(இ-ள்]குடங்கள்தோறுங்காணுகின்ற ஆகாசம்போலவுங்குளத்துத்தண்ணீர்கள் தோறும்வெவ்வேறாய்ச் சீவனென்றுநின்றே அந்தவிடங்களிலுண்டாகியஇந்திரியங்கள்தோறும் நடத்துகின்றவன்சொல்லுமிடத்தில்நானென்றவாறு*(இரம்புழிகுடந்தோறுமெனமாறுக ௰௨

பூக்கமழ்நாற்றங்கொண்டுபொருமலிபோருமாபோற்
றீக்கனலகின்றவேகோய்சிவனென்கின்றசீரோன்
யாக்கையையெய்தும்போதுமகனைவிட்டேகும்போது
போக்கரிதாயவாறுபுலன்களைக்கொண்டேபோமால்

(இ-ள்)நெருப்புசுடுகின்றவேலையுடைய அருச்சுனைவண்டானதுவரும்போதும் பூவில்மணக்கின்ற பரிமளத்துக்காகவந்து பொருந்தும்போகின்றபோது பரிமளத்தைக் கொண்டுபோகும் அப்படி போலச்சீவனென்றுசொல்லப்பட்டசிறப்புடையவன் சரீரத்தைசேரும்போது இந்திரியங்களைக்கொண்டேசேரும் அந்தச் சரீரத்தைவிட்டுப் போகின்றபோதும் அந்திரியங்களைப் போக்கப்படாத படியினாலே இந்திரியங்களைக் கொண்டேபோமென்றவாறு*பொரியளியென்பாருமுளர் ௰௩

இதுவும்-அறுசீரடியாசிரியவிருத்தம்.

மின்னேயனையவுடம்பதனைவிடுவதடைவதாய்விடயந்
தன்னேரில்லாதான்பலவுந்தானுகின்றதன்மையினை
யென்னேகாணாரறியாதாரறிவார்யோகத்தாலேதம்
முன்னேகாண்பாரிதனியற்கையாதோவின்னமொழிவன்கே

(இ-ள்)தனக்கு ஒப்பில்லாதசீவனானவன் மின்னையொப்பான சரீரத்தைவிடுகின்றது சேருகின்றதாக விஷயங்களனேகமுந்தானுக அநுபவிக்கின்ற சுபாவத்தையறியாத மூடர்களென்னமோ காணார்கள் அறிவுடையவர்கள்யோகதிருஷ்டியினாலே தங்களுடைய கண்முன்னேகாண்பார்கள் இதனுடையசுபாவமென்னமோ அதையின்னஞ்சொல்லுகிறேன்கேள் அருச்சுனா-எ-று *தன்னேரில்லாதானமின்னேயனையவென்றும்விஷயம்பலவுமென்று மாறுகதம் முன்னேயென்பது-சரீரதிலாத்மாவிருக்கச்சேதானே ஆத்மாவேறு.சரீரம்வேறெனக்காணுதல் அறிவில்லாதவர்கள் செத்துங்காணார்களென்பதருத்தாபத்தி) ௰௪

இந்தியங்களுக்குங்கண்ணு யிரவிதியிந்து வின்பால்
வந்தெழுங்கதிருநானே மாநிலமாகி நின்று
தந்தியேறனையதோமூசாமமேமுதலாந்தன்மை
தந்திரந்தவிர்ந்துமெல்லாந்தாங்குகின்றேனுநானே

[இ-ள்)களிற்றானையையொப்பானசோமா பஞ்சேந்திரியங்களுக்கும் விஷயங்களைக்காட்டுகின்றகண் நான் சூரியன்சந்திரன் அக்கினிஇவர்களிடத்திலுண்டாகியெழும்புகின்ற பிரகாசமுநானேசாமமுதலான சுபாவதந்திரங்களைவிட்டுப் பெரியபூமியாகிநின்று எல்லாந்தாங்குகின்றவனும்நானே-எ-று. ௰௫

கலிநிலைத்துறை.

முந்துவானசுவைமுற்றுமாகியே
இந்துவாகிநின்றன்பனையாவையுந்
தந்துசேர்வையகத்திலேதக
நந்திடாவகைவளர்க்கின்றேனுநான்

(இ-ள்) முதன்மையான பெருமையுள்ள அறுசுவைமுழுதுமாகிச்சந்திரனாகிநின்றுபொசிக்கின்றதெல்லாங்கொடுத்து ஆறொன்றுதொகைசேர்ந்த சுவையினிடத்திலேயிருந்து அந்தச்சுவைகளுக்குத்தக்கதாகக்கெடாதபடிவளர்க்கின்றவனும்நான்-எ-று. * வான்சுவையென்றதனால் ஒருசுவையிலனேகபேதமுண்டு ஆகையால் அனேகவிகற்பங்கூடியதொருசுவையாகப்போட்டு அறுசுவையென்றுதொகைப்படுத்தினதினாலே வான்சுவையென்றார் ௰௬

தின்பநக்குவதீஞ்சுவையுண்பவா
நன்பயன்செயுநால்வகையுண்டியு
மின்பமாம்வகையாக்கைடோறுநின்
றன்பவங்கியாயறுக்கின்றேனுநான்

[இ-ள்] தோமூறாதின்கின்றதும்நக்குகின்றதும் மதுரமுண்டாகச்சுவைக்கின்றதும் உண்கின்றதும் ஒன்றாகநல்லபலனைச்செய்யப்பட்டாலு விதப்பொசிப்பும் இன்பமாகின்றபடிக்குச்சரீரங்கள்தோறும் அக்கினியாய்நின்று பாகமாக்கிச்சீரணஞ் செய்கின்றவனும்நான்-எ-று. ௰௭

நல்லமாந்தர்நல்லறிவுநன்கிலாப்
பல்லர்தங்கள்புல்லறிவும்போர்திகழ்
வில்லமைந்ததோள்வீரர்வீரவியா
னல்லதில்லையென்றறியவேண்டுமால்

[இ-ள்] போர்செய்துவிளங்கிய வில்லிருந்த தோளையுடையவர்களுக்குவீரனான அருச்சுனா நல்லமனிதர்களுடையஞானமும் நலமில்லாச்சிறியவர்களுடைய புல்லறிவாகிய அஞ்ஞானமும்நானேயல்லாமல்வேறில்லையென்றறியவேண்டும்-எ-று, ௰௮

அசைவில்லாமறைக்கறிவுநானதன்
வசையில்லாதமெய்ப் பொருளும்வாய்மைசே
ரிசையினாலெடுத்தேதுவெனுமியான்
விசையகேளின்னம்வேறுமொன்மையே

(இ-ள்) சகலமில்லாதவேதத்துக்கு அறிவுநான்அந்தவேதத்தினுடைய குற்றமில்லாத சத்தியமானபொருளும் என்னுடையவாக்கிலேசொந்த

விச்சையினாலேயெடுத்துச்சொல்லுகின்றவன்நான் இதுவல்லாமல்வேறு மொன்றை இன்னஞ்சொல்லக்கேளருச்சுனா-எ-று. ௰௯

மருவுகின்றதவ்வுலகின்மாய்தலே
யுருவமாகமுன்புடையதொன்மையே
யருவமொன்றிலாதழிவதின்மையே
குருவகின்றதோர்குறியிலின்பமே

(இ-ள்) குருகுலத்தவனே இந்தவுலகத்தில் முன்பே உருவம் அருவ மென்றிரண்டுகளானு .அவற்றில் உருவமொன்றே நாசத்தையடைகின்ற ஒப்புங்குறிப்புமில்லாததாய் ஆனந்தம-எ-று. குருவென்றது குருகுலத் தவனேயென்பது அருவமாய் ஒப்புங்குறியுமில்லாதாய்ஆனந்த சொரு பமாய்அழிவில்லாததாய் யென்றுமுள்ளதாய்நின்றது எனமூடிக [உ௰]

மொழிசெய்கின்றவிவ்விரண்டுமுற்றவே
விழியினாலுறநோக்கின்மெய்மையே
யழிவதுயாக்கையுங்கழிவுபாடிலா
தொழிவதென்னெனிலுயிரொன்கின்றதே

(இ-ள்) சொல்லுகின்றஇந்தவிரண்டுமுடியக்கண்ணாலே யுற்றுப்பார்க் கில் இந்தவுலகத்தில்உருவானசரீரமே அழிகின்றதுநிச்சயம்அழிவுபா டில்லாமல் ஒழிந்திருப்பதென்ன வென்றுகேட்கில் அருவமான ஆதமா வென்கிறதே நாசமில்லாதது-எ-று. உக

இவையிரண்டையுங்கடந்துயாதுமோர்
நவையுமின்றியேநாசமின்றியே
யெவையுமின்றியேயாவுமின்றியே
குவையினின்றதோர்குறியிலின்பமே

(இ-ள்) இந்தவிரண்டையுங்கடந்துயாதுமொருகுற்றமில்லாமல் நாச மில்லாமல்எந்தக் கூட்டமுமில்லாமல் ஒருகருமமில்லாமல்திரண்டுநின் றதுஒப்புங்குறிப்புமில்லாதஆனந்தம்-எ-று. உஉ

இந்தவின்பமியானென்னையுள்ளவா
சிந்தையின்கணேதெளிதன்மேயினார்
பந்தமொன்றிலார்பழயவிப்பொருட்
கந்தமாதிவேரறியவெண்ணுமோ

[இ-ள்] இந்தவுருவம் அருவம்இரண்டையுங்கடந்தஆனந்தமாவதுநா ன் என்னையுள்ளபடி மனதினிடத்திலேதெளிவை யடைந்தவர்கள்பாசபு

ந்தமொன்று மில்லாதவர்கள் பழையதான இந்தப்பொருளுக்கு ஆதிய ந்தம் வேறேயறியப்படாதது-எ-று. ௨௩

வேதநாலுநின் றுரைசெய்தாலுமுன்
றோதலாவதென் றுலகறிந்ததோ
காதலாலெனக் கினியதோழனி
யாதலாலுனக் கறியவோதினேன்.

இ-ள், நாலுவேதத்தையும் ஒழியாமல்நின்றுசொனனாலும்ஒன்றென் றுசொல்லுதலினால் அறிதென்று உலகமறிந்ததுவோ அல்ல ஆகையி னாலே எனக்குநீ இனிதான தோழனுதலாலுனக்கு அறியச்சொன்னே ன்-எ-று. ௨௪

அறுசீரடியாசிரிய விருத்தம்.

கண்ணையோரிடத்துமின்றியதனிலேவைக்கிற்காதல்
பண்ணையேயாக்கிநின்ற வினையெலாம்பயக்குமென்றான்
வெண்ணையோவிதுரனிட்ட விருந்தையோவேலைசூழ்ந்த
மண்ணையேரிண்டுமுன்னாள்வரும்பசிதீர்ந்தமாயோன்.

இ-ள். வேறோரிடத்திலுமல்லாமல் அந்த ஆனந்தத்திலே மனக்கண் ணைவைக்கில் ஆசைக்கூட்டங்களோடேகூடிநின்ற கருமமெல்லாம் பலிக குமென்றுசொன்னார் இடையர்வீட்டுபெண்ணையயோ விதுரனிட்ட விருந்தையோ கடல்சூழ்ந்தபூமியையோ பொசித்து முற்காலத்திலேவ ரப்பட்ட பசிதீர்ந்தஸ்ரீகிருஷ்ணஸ்வாமி-எ-று. ௨௫

——※——

௰௫-வது-புருஷோத்தமயோக அத்தியாயம்.

முற்றுப்பெற்றது.

ஆ அத்தியாயம்-௰௫-க்கு கூடியசெய்யுள்-௩௱௭.

௨

பதினாறுவது.

# தெய்வசம்பத்துவிபாகயோக

## அத்தியாயம்.

——(※)——

கலிவிருத்தம்

மறந்திருந்த மனத்திருணீக்கிநிற்
திறந்திடப்படச் செப்புதன்மேயினு
னறந்திறந்தெறிந் தாக்குதற்காகவே
பிறந்திறந்துழல் கின்றபேராளனே.

இ-ள். (இதனைப் பன்னிரண்டடியும் முன்னுகைவைத்து உரைகொள்ளுவது) தருமத்தினுடைய வகையைத்தெரிந்து உழலுகிற பேராளனாகிய ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியானவர் ஞானத்தைப்பறந்து கெட்டமனதிலுள்ள அஞ்ஞானத்தைப்போக்கப்பட்ட விதத்தைநன்றாகத்தெரியச்சொல்லத்துவக்கினார்-எ-று; * (தருமத்தையாகவே பாபமழியுமென்பதருத்தாபத்தி அஞ்ஞானத்தை நீக்குகிறவிதமாவது-எ-று. ௧

தெய்வவசுரரென் றிக்கிறத்தோராகாய்
வையகமாந்தரெல் லார்களும்வாழ்வதிங்
கைகளேவற் றின்றிரமென்றுதன்
செய்யவாய்திறந் திவ்வண்ணஞ்செப்பினன்

இ-ள். ஐயா, இந்தப் பூமியிலுள்ள மனிதரெல்லாரும் தேவர் அசுரரென்றுசொல்லப்பட்ட இந்தயிரண்டுவிதமுடையவராயிருப்பது அந்தயிரண்டினுடைய விதத்தைக்கேளென்று தம்முடையசிவந்திருவாயைத்திறந்து இந்தப்படிசொன்னார்-எ-று, ௨

இதுவுங்கலிவிருத்தம்.

அஞ்சுதலின்மையு மறிவையாக்கலும்
நெஞ்சினியடக்கலு நிலைகெடாமையும்
வெஞ்சினமன்மையு மெய்மைகூறலுந
தஞ்செனவேள்வியுந் தவமுமாக்கலும்

இ-ள். பயப்படுதலில்லாத தைரியமும் அறிவை யுண்டாக்குகிறதும் மனதையடக்குகிறதும் நிலைமையழியாததும், கொடுமையுள்ளகோபமில்லாமையும், சத்தியமானமெய்சொல்லுகிறதும். அடக்கலமென்றுயாகமும்தவமுஞ் செய்கிறதும்-எ-று. ௩

மறைபயிலறந்தனை மறந்திராமையுங்
குறளைகடவிர்தலுங்கொள்கைமாறலும்
பிறர்பிழைபொறுத்தலும் பேரொழுக்கமே
லறன்வழிதானமோ டருளையாக்கலும்.

(இ-ள்) வேதங்களிடைவிடாமலோதப்பட்டதருமத்தை மறந்திராமலும், கோட்சொல்லுகிறதை விடுதலும், விஷயங்கொள்ளுகிறதை விலக்கலும, அன்னியர்செய்தகுற்றத்தைப்பொறுத்தலும்பெரிய ஒழுக்கத்தருமத்தை இச்சித்ததானமும் அவற்றுடனேதயவுண்டாக்கலும்-எ-று. (மறைபயிற்றலுந்தனை மதித்தராமையுமென்று பாடமோதில் வேதமோதலும் தன்னைப்பெரியவனாக மதித்திராமலு மென்றுரைகொள்ளுமீதுபொருந்தாது) ௪

இருவகைத்து தூய்மையு மிந்திரியங்களை
யொருவகைப்படுத்தரு முள்ளிட்டென்னவே
செருவருஞ்சிலையினாய்தெய்வதத்தன்மையோர்
மருவியதொழிலென மதிக்கவேண்டுமே

(இ-ள்) சுகம்வந்தபோது சந்தோஷப்படாமலும் துக்கம்வந்தபோது கிலேசப்படாமலும் இந்தச்சுகதுக்கமிரண்டினுஞ்சத்தமுமிந்திரியங்களை நானாவழியிலே போகாமல் ஒருவிதமாக்குகிறதுமிவைகளையுள்ளிட்ட அந்தநன்மைகளானவை சண்டைசெய்துவருகிறகாண்டிபமாகிய வில்லையுடைய அருச்சுனா தெய்வதத்தன்மையையுடையவர்கள் பொருந்தின தொழிலென்று மதிக்கவேண்டுமெ-று. * அஞ்சுதலின்மையென்ற பாட்டுமுறையிலறமென்றபாட்டுமிந்தமூன்றுமொருதொடர், ௮

அறுசீரடியாசிரியவிருத்தம்.

தீமைசெய்யசுரானோர் செய்தியைத்தெரிக்கிலொன்றை
யாம்வகையெனமற்றாகா வனவெனவறிதலில்லார்
தூய்மையுந்தூயவாய வொழுக்கமுந்துடக்குவிட்டார்
வாய்மையொன்றாலுமில்லார் மயக்கமேமருவிநின்றார்

(இ-ள்) பொல்லாங்குசெய்யப்பட்ட அரசரானவர்களுடையசெய்தியைத் தெரியப்பண்ணில் புண்ணியபாவமென்ற விரண்டில்புண்ணியமாகியவொன்றை ஆகிறவிதமென்றுசொல்ல மற்றபாவமாகிய ஒன்றை யாகாதென்றுசொல்ல அறியத்தக்கவல்லாதவர்கள் சுத்தமுஞ்சுத்தமான ஆசாரமுந்துடக்குவதைவிட்டவர்கள் ஒருவிதத்தினாலுஞ் சத்தியமில்லாதவர்கள் அஞ்ஞானமே சுபாவமாகப்பொருந்திநின்றவர்கள்- எ-று, (துடக்குவதையேவிட்டவர்களெனவே செய்யாரியாரதனால் அந்தசுசுகமு மறியாதவர்களென்றது கருத்து) ௯

கலிவிருத்தம்.

எண்ணியவுலகமுமுலகுக்கீசனும்
புண்ணியபாவமும்பொய்யென்றேகொள்வார்
பெண்ணோடாண்புணர்கின்றபெற்றியார்
நண்ணியயாவையுமெடுத்துநாட்டுவார்

இ-ள் எல்லாருக்கும் நினைக்கப்பட்டபிரபஞ்சமும் பிரபஞ்சத்துக்குக்கர்த்தனானதெய்வமும் பிரபஞ்சகருமமான புண்ணியமும்பாவமும் பொய்யென்றேகொள்வார்களல்லாமல் மெய்யென்றுகொள்ளார்கள் பெண்ணோடே அணகிரீடிக்கிறதே சுபாவமாகவுடையவர்கள் தங்களுக்கு

க்கிடைத்தசலத்தையும்எல்லாருமறியவெடுத்துநாட்டுவோர்களெ-று. ௭

எழுசீரடியாசிரியவிருத்தம்

விழும்பலவாகியொழுக்கங்குறைந்தார்மெய்ம்மையுஞ்செம்மையும்வி
ட்டார் - பிரும்பயனுயவுரிவுமாய்ந்துள்ளரிடம்படா மனத்தினேடிசை
ந்தார்,பெரும்பழியாயதொழில்களேபயில்வார்பிழைப்புவாய்ப்பொன்ற
றியாதா,ரரும்பகையாயிவ்வுலகினையெல்லாமழிப்பதன்பொருட்டவதரி
த்தார்'

இ-ள். ஆசாரங்களை இச்சியாததுராசர்களாகி யாசாரங்களை விட்டவர்
கள்மெய்ம்மையுமஒபபறவையும்விட்டவர்கள்மெய்யையும்விட்டவர்கள்
பெரியபிரயோசனமாகிய அறிவுகெட்டுமூடராயுள்ளவர்கள் விசாலமாக
ப்பரந்தமனதோடேபொருந்தினவர்கள்தொழில்களேபழக்கமானவர்கள்
தவறுதல்கிடைத்தல்என்ற விரண்டிலொன்று மறியாதவர் இந்தவுலக
த்தையெல்லாம அழிக்கிறநிமித்தியமாகவிலகக அறியப்பகையாய்ப்பிற
ந்தவர்கள்-எ-று. ௮

அறுசீரடியாசிரியவிருத்தம்

நிறைவிலாக்காமபோகந் தன்னையேநிரைக்கவேண்டி
மறைவிலாமானத்தோடு மதங்களைமருவிநின்று
குறைவிலாமயக்கத்தானே கோபத்தையடைந்துநின்று
பொறையிலாவிரதம்பூண்டு பொய்த்தவம்புரியாநிற்பார்

இ-ள், அளவில்லாதகாலம் அனுபவித்தாலும்நிறைவில்லாதவிஷய
போகத்தையேநிறையப் பொசிக்கவேண்டிமறைவானமானத்தைக்கெடு
த்தும மறைவில்லாத மானத்துடனே கெர்வங்களையடைந்துநின்றுகு
றைவில்லாதமயக்கத்தினுலேகோபத்தையடைந்துநின்றுபொறுமையி
ல்லாதவிரதத்தைதரிசிததப்பொய்யாகத்தவசுசெய்வார்கள்-எ-று. ௯

இறந்துபோமளவுமெய்தப்பொருளையே யெய்தநிற்பார்
மறந்துமோர்பொருள்வேறில்லைவரும்பயனன்றியென்பார்
பிறந்துபேராசையாய்பாசத்தாற்பிணிக்கப்பட்டார்
சிறந்தபோகங்கட்காகத்தீமையாம்பொருளேசெய்வார்

இ-ள், செத்துப்போகின்றபரியந்தமும்எட்டாத பொருளையேயெட்
டவேணுமென்று வருந்திநிற்பார்வருகின்றவிஷயப்பிரயோசனத்தைய
ல்லாமலமறந்துமொருபொருள்வேறேயில்லையென்பார்கள் தங்களிடத்
திலுண்டானபேராசையாகியபாசத்தினுலேகட்டப்பட்டார்கள்சிறப்பா
னவிஷபயோகங்களுக்காகப் பொல்லாங்கானகாரியமே செய்வார்கள்
-எ-று.

இப்பொருளடைந்தோம்மேலிப்பொருளினையடைவோமென்று
மிப்பகைசெகுத்தோம்வேறிப்பகையினைச்செயிப்போமென்றுந்
துய்ப்பவரெமையிற்றுய்க்கவல்லவரில்லையென்று
மொய்ப்பவரெமையின்மிக்காருளர்கொலைவென்றுநிற்பார்.

(இ-ள்) இந்தப்பொருளையடைந்தோம்வேறேயிருக்கின்றவிந்தப்பொருளையடைவோமென்றும் இந்தப்பகையாளியைக் கொன்றோமவேறே யிருக்கின்ற விந்தப்பகையாளியைச் செயிப்போமென்றும போகங்களனுபவிக்கின்றவர்களிலெங்களைப்போல அனுபவிக்கவல்ல வர்களில்லையென்றும் எங்களுக்குச்சமானம் எவர்கள்யாவருமில்லை எங்களிலும் அதிகமானவர்களுண்டோ இல்லையென்று இறுமாந்துநிற்பார்கள்-எ-று. ௰௧

இனம்வலியின்பம்பெற்றோமெம்மின்மிக்கார்களில்லை
தனமிகவுடையோமென்றுந்தம்மையேவியவநிற்பார்
மனதினில்யாகஞ்செய்வோமழையெனக்கொடுப்போமென்று
தினமவைதோறுஞ்சிந்திப்பதுவலார்செய்வதில்லார்

(இ-ள்) உறவுபலம்சுகமிவைகளை யுடைந்தோமிதனாலெங்களிலும் அதிகமானவர்களில்லையென்றும மிகுந்ததிரவியமுடையோ மென்றுந் தங்களைத்தாங்களே அதிசயப்பட்டுநிற்பார்கள் யாகஞ்செய்வோம் மோசத்தைப்போ லத்தானங்கொடுப்போ மென்று தினந்தோறுமனதிலேநினைக்கின்றதல்லாமற் செய்வதில்லாதவர்கள்-எ-று. ௰௨

## எழுசீரடியாசிரிய விருத்தம்.

துடக்கறவில்லநினைவெனப்பட்டசூழலைப்பற்றியேசுழல்வ
ரடற்கரிதாயமயக்கமென்கிறவலையிலேயகப்பட்டுநின்றா
ருடற்குடில்வாழ்வாம்புன்னுனிப் பனிநீருலர்ந்திடுலுயிர்நடுச்செய்திக்
கடப்பரிதாயநரகமென்கிறகடல்களில்விழுவேகடவார்.

இ-ள், துடற்சியரவில்லாதநினைவென்றுசொல்லப்பட்டசுழலிடத்தைப் பிடித்துச்சுழலுவார்கள் அறுக்கப்படாதமயக்கமென்றுசொல்லப்பட்டவலையிலேயகப்பட்டுக் கடக்கமாட்டாமல்நின்றார்கள்உடம்பாகியசிறுவீட்டுவாழ்வானது புல்லினுனியிலிருக்கின்றபனிநீரளவுஅப்பழக்கொத்ததேகமபோனால்உயிரானதுநடுங்கிக்கடக்கப்படாதநரகமென்றுசொல்லப்பட்டகடல்களில்விழக்கடவர்களேயல்லாமல்கடக்கக்கடவர்களல்ல எ-று. ௰௩

## கலிநிலைத்துறை

வியந்துதங்களையேமேலாய்ப்பார்த்துமென்மாந்தர்தம்மை
நயந்துகொண்டாடவில்லார் நல்லவைசெய்தாரென்று

பயன்றொடர்ந்துரைத்தாற்காகப் பாடியபழைய நூல்க
ளியம்பியபடிசெய்யாதேயாகங்களியற்றுகிற்பார்

இ-ள், தங்களைப்பெரியவர்கள் நயஞ்சொல்லிக்கொண்டாடத்தக்க ஒழுக்கமில்லாதவர்கள் தங்களைத்தாங்களேமேலாகப்பார்த்து அதிசயித்து யாசகாரணவர்கள்பிரயோசனத்தையிச்சித்து இந்தச்சோமாசிக்கிலவற்றச்செய்தானென்றுசொல்லுகின்றதற்காகஎல்லாரும்ஓதியபழையவேதங்கள் சொன்னபடிசெய்யாமல் யாகங்களைத்தாறுமாறாகச்செய்வார்கள் எ-று-*பயன்றொடர்தலாவதுபிரயோசனத்தை மனது தொடருதல்அதுஇச்சித்தல்] ௰௪

வன்னியகளிப்பொடுவேலியுங்காகமுந்
துன்னியானென்னுபெருமயக்கஞ்சூழ்ந்துளோ
ரென்னியல்பதனினும்யாவர்மாட்டினு
மன்னியமெனக்கொடுபொருமையாக்குவார்

(இ-ள்) நிலைமையானமனச்செருக்குடனேவலுமையும்ஆசையுமிகுந்துகூடினுனென்றுசொல்லப்பட்டபெரியமயக்கஞ் சுற்றிக்கொண்டிருக்கின்றவர்கள்என்னுடைய சுபாவத்திலும் யாரிடத்திலும் அன்னியமென்றெண்ணிக்கொண்டு பொருமையுண்டாக்குவார்கள்-எ-று. ௰௫

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மறறவர்தம்மையிந்தமானிடராளுரியர்க்குக்
கொற்றவகீழானரைக்கொடுமையாலரவொப்பாரை
பற்றிமிலிடும்பைசேருமசுரர்கள்யோனியாய
புற்றரைதோறுயானே புகப்புகவீழ்த்துகின்றேன்

இ-ள்-இந்தமனிதரானவர்கள்எல்லாருக்குமரசனான அருச்சுனஇப்படிக்கீழானவர்களைக்கொடுமையாலேபாம்பையொப்பானவர்களைச்சேருதலில்லாதபூரித்ததுக்கஞ் சேரப்பட்ட அசுரயோனிகளாகியபுற்றுகள்தோறும் புகுதப்புகுத அவர்களைநானேவிழத்தள்ளுகிறேன்-எ-று ௰௬

கலிவிருத்தம்.

இவ்வகையசுரயோனியடைந்தோர்
மெய்வகைகாய்மறிவின்மையினுலே
நைவர்கடீதரகக்கதிதோறு
முய்வகையின்றியுழன்றுதிரிந்தே

(இ-ள)இப்படிஅசுர யோனியடைந்தவர்கள்மெய்வகையானஅறிவில்லாமையினுலேதப்பிபபிழைக்கின்ற வகையில்லாமற்பொல்

லாதநாகவழிதோறும்உழன்றுதிரிந்துவருவார்கள்-எ-று.*(உய்வகையின்றி நிரகக்கதிதோறு முழன்றுதிரிந்து நைவார்களெனமாறுக.)சஎ

ஒருவன்சிக்க வியற்றலதேனு
பருநரகத்தி லடைப்பதுதானும்
வருவகைமூன்றுள மற்றவைதன்னை
யொருமுறைகூறி யுணர்த்திடுவன்கேள்

(இ-ள்) ஒருவன்கேட்கச் செய்வதானலுங் கடக்கரியநரகத்திலடையப்பண்ணுகின்றதும் காணும்வருகின்றவிதமூன்றுண்டு அந்தமூன்றையுமொருகாஞ்சொல்லித் தெரிவிக்கிறேன்கேள் அருச்சுனு. கஅ

காதலினுகிய காமமுலோபங்
கோதரவேசுடு திகிகாகோப
மாதவினலவை மூன்றுமகன்றோர்
வேதனைதீரபெரு வீடுவிளைத்தார்

(இ-ள்) ஆசையினுலுண்டாகிய காமலோபங்களங்கமறச் சுடப்பட்ட நெருப்பையொப்பான கோபமாகையினலே அந்தகாமக்குரோதலோபமாக மூன்றையும் நீக்கினவர்கள் பிறவிவேதனையில்லாமற் போக்கப்பட்டபெரியமோட்சத்தையுண்டானவர்கள்-எ-று. ககூ

கூறின நூல்வழி சேர்குறிபேணு
தேறினவாறுசெய் வாரிகலோகம்
வேறியலாபர லோகம்விளைக்கும்
பேறினவானவை பேறுபெருரால்

(இ-ள்) வேதஞ்சொன்னவழியே சேரப்பட்டகுறியையமதியாமல்விட்டுக் காமகருமங்களில் மனதேறினபடி செய்கின்றவர்கள் இகலோகமும் வேறுசுபாவமுள்ள பரலோகமு முண்டாக்குகின்றபேரான விந்தவிதமான பேறுபெருர்கள்-எ-று. உ௰

இதுவுங்கலிவிருத்தம்,

ஆதலிடாதவரி கைக்குவழியான
வேதமுதனூலவை விதித்தநெறியாலே
யேதமினையாதுன்வினை யேயிசைதவென்றுன்
பூதகுத்தானவை பொருத்தருளுகின்றுன்

(இ-ள்) ஆகையால் அடாதகாரியத்தை யறிகைக்குவழியானவேதமுதலான சாஸ்திரங்கள் அவைகள் விதித்த மார்க்கத்தினலே குற்றமானகாரியத்தையுங் குணமான காரியத்தையும் அறிந்து குற்றமானகாரியத்

தைநினையாமல் குணமானமானவுன்னுடைய சருமத்தைையேபொருந்து வாயென்றுசொன்னார் பூதமுதலானதத்துவங்களையெல்லாஞ் சுமந்தருளிச்செய்கின்ற ஸ்ரீகிருஷ்ணசுவாமி-எ-று. உக

௰௬-வது-தெய்வசம்பத்துவிபாகயோக-அத்தியாயம்.

முற்றுப்பெற்றது.

——(-)——

ஆக அத்தியாயம்-௰௬-க்கு-கூடியசெய்யுள்-௪௩௭

உ

பதினேழாவது.

# சிரத்தாத்திரவியவிபாகயோக அத்தியாயம்.

——[*]——

கலிவிருத்தம்.

உண்டுமீள வொளித்துலகியாவையுங்
கண்டுகாப்பவன் கட்டுரைத்திட்டதே
கொண்டுபார்த்தனக் கொண்டல்வண்ணன்றனைத்
தொண்டுகூறப் பணிந்திவைசொல்லுவான்

[இ-ள்] சகலலோகத்தையும் உண்டாக்கித்திரும்பஒளித்துக்கொண்டுகாக்கின்ற ஸ்ரீகிருஷ்ணசுவாமி யுபதேசித்ததையே சனகையாகக்கொண்டு அருச்சுனனென்பவன் அந்தமேகநிறமான ஸ்ரீகிருஷ்ணசுவாமியை அடிமைசிறக்கவணங்கி இதுசொல்லுவார்-எ-று. க

வேதமேமுத னூல்விதியன்றியே
காதலானுல கோர்செயுங்காரிய
மேதமாங்குண மூன்றினுமியாதென
வோதமாகடல் வண்ணனுமோதுவான்.

(இ-ள்) வேதமேமுதலான சாஸ்திரவிதியல்லாமல் ஆசையாலேஉலகத்தார்செய்யப்பட்ட கருமமானதுகுற்றமாகும் மூன்றுகுணத்திலுமெந்தகுணமென்றுகேட்க அலையுள்ளகறுத்தகடல்போலும் நிறமுடைய ஸ்ரீகிருஷ்ணசுவாமியுஞ்சொல்லுவார்-எ-று. உ

அறுசீரடி ஆசிரியவிருத்தம்

யாவர்களாசைப்பாடு மியம்பிடினியமைப்பட்ட
மூவகைக்குண மாகி பல்லது முழுந்துமி ல்லா

மேவருமவற்றினுபவேறுபாடுகளையெல்லாங்
காவாதெரியக்கூறக்கேளெனக்கழறலுற்றான்

இ-ள், எல்லாருடைய ஆசைப்பாடுஞ் சொல்லில்எல்லாஞ்சொல்லப் பட்ட மூன்றுவிதகுணமாவது அந்தமுக்குணத்தையுமல்லாமலவேறே முடித்துநில்லாதுமனதுபொருந்தவரப்பட்ட அந்தமூன்றுகுணத்திலு ண்டாகிய வேறுபாடுகளையெல்லாந்தெரியச்சொல்லக்கேளாய்ராஜாவே யென்றுசொல்லத்தொடங்கினார்-எ-று. ௩

கொச்சகக்கலிப்பா.

சாத்துவிகர்தேவரையேசரண்புகுவர்தாமதர்கள்
காத்தல்புரிவன்பேயும்பூதமுமாய்க்கடைப்பிடிப்ப
ரோத்தரியகுணமவற்றினிராசதமாங்குணமுடையோர்
காததனைவரக்கரையுமியக்கரையுமடைவர்களால்

இ-ள், சாத்துவிகம்ராஜஸம்தாமதமென்றுசொல்லப்பட்டகுணமூன் று இந்தகுணமூன்றில்சாத்துவிகமானகுணத்தையுடையவர்கள் தேவர் களைச் சரணமடைவார்கள்தாமதமான குணத்தை யுடையவர்கள் தங்க ளைக்காத்து ரட்சிப்பதுபேயும்பூதமென்று நிச்சயமாகியவைகளை மறவா மற் பூசிப்பார்கள் புகழ் அரிதாகிய ராஜசகுணத்தையுடையவர்கள் ளா பத்தவொன்றுராட்சதரையும் யட்சதரையுஞ்சரணமடைவார்கள்-எ-று. (

கலிவிருத்தம்.

அடங்கியபொறியினாலறிவுமன்றியே
இடம்படுநூல்களினியமமுமன்றியே
யுடம்பையுமுயிரையுமொருக்குமாதவத்
தொடங்குவாசுரயோனிகளிற்றோன்றினார்

இ-ள். ஐந்துபொறிகளுமடங்கினவிடத்திலுண்டாகிய அறிவுமல்லா மலே விரிவுண்டானசாஸ்திரங் களினுடைய விதியுமல்லாமலே உடம் பையுமுயிரையும்வருத்தப்பட்ட பெரியதவத்தைத்தொடங்கிச்செய்வா ர்கள் அசுரயோனிகளிலே பிறந்தவர்கள்-எ-று. ௫

உண்பர்யோகம்யாருமுறுதவந்தானமென்ன
வெண்படுமத்தனைக்குமோரொன்றுமூன்றாய்நின்ற
பண்படுகுணங்களாலேகேளெனப்பற்றும்வீடு
நண்பொடுபகையுமில்லான்முறைமையினவலனுற்றான்

இ-ள். எல்லாரும் அடையப்பட்ட ஆகாரயாகந்தானமென்றெண்ண ப்படச்சொன்னதாலும் பண்ணப்பட்டகுணங்களாலே ஒவ்வொன்றுமூ

ன்றாய்நின்றது அதைகேளென்று சங்காரமுமோட்சமுமுறவும்பகையு மில்லாத ஸ்ரீகிருஷ்ணசுவாமி ஆகாரமுதலாகச்சொன்னமுறையினாலே சொல்லத்தொடங்கினார்கள்-எ-று. ௬

சத்துவகுணத்தாருண துணைத்திடலழகுசார்ந்த
தித்திக்கசுவையவாகித்தேகஞ்சிக்கெனவுஞ்சேர்ந்த
வத்தித்தவலிரோயின்மயறிவுநல்லாயுவின்பம்
மத்திக்கச்செய்தவிர்தவுணவுகண்மடங்கலன்னாய்

இ-ள். சிங்கத்தையொப்பான அருச்சுனா சாத்துவிக் குணமுடையவர்களுடைய ஆகாரத்தைச்சொல்லில அழகுடையதாகித் தித்திக்கருசியுடையதாகி யுடம்புசிக்கெனவுஞ்சேர்ந்ததாகிச் செம்மையானதாகிவயிற்றுநோயில்லாத ஆரோக்கியம் அறிவுநல்லஆயிசுசுகம்இவைகள் அதிகமாகச்செய்தஇந்த ஆகாரங்கள்தான்சாத்துவிக போஜனம்-எ-று.*தேகஞ்சிக்கெனவாவதுபெலம்) ௭

இப்படியன்றிவேறாமிராஜஸகுணவுகேட்கிற்
கைப்பனபுளிப்புவர்ப்புக்கூர்ப்பனகடியவெய்து
நெய்ப்பயினெருப்புப்போலச்சுடுவனவிவற்றினாலே
மெய்ப்பயினோயிநெஞ்சந்திடும்பையும்விளைவவேலோய்

இ-ள். வேலாயுதத்தைத்தரித்த அருச்சுனா இந்தப்படியல்லாமல்வேறானராஜஸகுணத்தாருடைய ஆகாரத்தைக்கேட்கிறசுசிக்கிறதுபுளிக்கிறது உபபுகரிக்கிறது உறைக்கிறதுநெய்வார்த்தகடுமையுடைய நெருப்புப்போலச்சுடுவது இவைதான்ராஜஸகுணததாருடைய ஆகாரமிந்த ஆகாரத்தினாலே உடம்பிலேபழகப்பட்டவியாதியும மனதிலேதுக்கமுண்டாவது-எ-று. ௮

ஆசினையடைந்தநெஞ்சிற்றாமதருணவுகேட்கி
லூசினபழஞ்சோறெச்சிலும்பர்பூசனைக்காகாத
பேசினவெந்திலாதவினையனவிவற்றினாலே
காசினமுதலாயுள்ளமுயலொலாம்விளைவுகண்டாய்

இ-ள், குற்றத்தையடைந்தமனதையுடைய தாமதகுணத்தோருடைய ஆகாரத்தைக்கேட்கில் ஊசியபழஞ்சோறு எச்சில்தேவர்களுடைய பூசைக்காகாது நிந்தித்ததுவெந்த தில்லாதது இவைகள்தாமதருடைய போசனமிதினாலேகாயப்பட்ட. கோபமுதலாயுள்ள துக்கமெல்லாமுண்டானவை கண்டாயருச்சுனா-எ-று. ௯

செயத்தகுவன்வென்றல்லாமற்சேர்ப்பயன்சிந்தியாதே
தயக்கநூன்முறைசெய்யாகஞ்சாத்துவீகன்செய்தயாகம்
பயத்தையேவேண்டியாதல்பலர்புகழ்வேண்டியாத
லியற்றுறுகின்றயாகமிராஜஸரியாகமாதே

(இ-ள்) செய்யத்தக்கதென்றுசெய்வதல்லாமல் அதனாலுண்டாகிற பிரயோசனத்தை இச்சையாக நினையாமலே மந்திரதிரவிய கிரியைகள் குறையாமல் விளங்கச்சாஸ்திரத்தில் விதித்தபடிசெய்யப்பட்டயாகமானது சாத்துவிககுணமுடையவன்செய்கிறயாகமென்று சொல்லப்படும் பிரயோசனத்தையே வேண்டியாகுதல்பலரும்புகழவேண்டியாகுதல்செய்யப்பட்டயாகம் ராஜஸகுணமுடையவன்செய்கிறயாகமாம்-எ-று ௰

நூற்படுநெறியுமன்றி நுனித்தவர் முதலாயுள்ள
தாற்பரியமுமவேறன்றித்தக்கமந்திரமுமன்றி
யேற்பவர்க்கீதலன்றியியற்று றுகின்றயாகந்
தார்பொலிகின்றமார்பதாமதரியாகமாமே.

(இ-ள்) சாஸ்திரத்திலுண்டாகிய வழியுமல்லாமல் கூர்மையான தவமுடையவர் முதலாகவுள்ள பெரியோர்களுடைய தாற்பரியமுமல்லாமல் செய்கிறதற்கு மந்திரமுமல்லாமல யாசகருக்கு கொடுக்கிறதுமல்லாமற்செய்கிற யாகமானது பூமாலை விளங்குகின்ற மார்பையுடைய அருச்சுனதாமதர்கள்யாகம்-எ-று. ௧௧

கலிவிருத்தம்

தீக்குலாவேலினாய்தவத்தின்செய்கைதான்
வாக்கினாற்பேசுதன்மனத்தினாக்குத
லாக்கையாலியற்றுதலாயிருப்பது
நோக்கினானிவற்றினை நுனித்துக்கூறவே

இ-ள், நெருப்புகுலாவப்பட்ட வேலையுடைய அருச்சுனா தவத்தினுடையசெய்கையானது வாக்கினாலேபேசுதல்மனதிலேயுண்டாக்குதல்சரீரத்தினாலேசெய்தல்யென்றுமூன்றுவிதமாயிருப்பதுஇந்தத்தபத்தை தான்நினைத்துக் கூர்மையாக்கிச் சொல்லநீகேள்யென்றவாறு. ௰௨

இதுவுங்கலிவிருத்தம்

தீர்த்தயார்க்குஞ்செவிக்கினிதாயின
வார்த்தைமாமருந்தேயெனலாயின்
வோர்த்துமென்மொழிகூறுதலோதுதல்
வார்த்தையாற்பண்ணுமாதவமென்பதே

இ-ள். சந்தேகந்தீர்ந்தது எல்லாருக்குங்காதுக்குஇன்பமானதுவார்த்தையேபொருமையுள்ள அமிர்தசஞ்சீவிநீயென்றுசொல்லலாவது வேதசாஸ்திரம் அப்பியாசிக்கிறவேலானசொல்லைச்சொல்லுகிறதுவேதசாஸ்திரங்களையோதுகிறதுயிப்படியிருக்கிறதுவார்த்தையார்பண்ணப்பட்ட பெரியதவமென்றது-எ-று, ௰௩

தெளியநெஞ்சைச்செறியப்பிணித்தலுங்
களிசெயைம்புலனைக்களிமாற்றலுங்
குளிர்வுநெஞ்சினுணர்வுகோணமையு
மெளிதன்மானதமாதவமென்பதே

இ-ள், மனதை விஷயங்களாகிய மயக்கமடையாமல் ஞானமாகியதெளிவுநெருங்கக்கட்டுதலுங் களிப்புசெய்யப்பட்ட பஞ்சேந்திரியங்களைக்களிப்புப்போகலும்பகைஞரென்றும் உதவினரொன்றும்பாராமல் எல்லாரிடத்திலுஞ் சமமாகவைத்தகுளிர்ச்சியும மனதிலும்வார்த்தைகள் கொடாதமௌனமுமிவைகள் எளிதினாலே வந்தபெரியமானசதபஞ் சென்றது எ-று,* ,மனதிலேதெளிவைநெருங்கக்கட்டினால் மயக்கத்துக்கு நுழையவுமிடமில்லையாதலான்நிர்மல மென்பது களிப்பைப் போக்கவேயிந்திரியஞ் செடமானதென்பது எளிதலென்றது காயக்கிலேசப்படுத்தாமல்எளிதில்வந்ததென்பது] ௰௪

தலைமையந்தணர்தேவர்குரவர்பால்
மலைகலின்றிவழிபடுவாழ்க்கையுங்
கொலைநூறககலுங்காமக்குறைத்தலுந்
தலைவகாயத்தவமென்றிசைப்பதே

இ-ள். இராஜவேமுதன்மையுடைய பிராமணர்கள தேவர்கள் பெரியவர்கள் இவர்களிடத்தில்மாறுபட்டு எதிர்ப்பதில்லாமற்பூசிக்கின்றவாழ்வுங் கொல்லுகின்றதை விடுகின்றதும்ஆசையைக் கொடுக்கின்றதும் இவைகளைச்சரீரதவசென்றும் சொல்லுவதுயென்றவாறு. ௰௫

கொச்சகக்கலிப்பா.

தீத்துவளும்வடிவேலோய்செப்பியவிம்மூன்றுலுந்
தீர்த்துலகமகிழ்வெய்தச்செரிகின்றநெடுந்தவத்தி
லார்த்துவருபயன்வேண்டாதாற்றுகின்றவருந்தவந்தான்
சாத்துவிகத்தவமென்றுசாற்றுவதுத்கோரே

இ-ள், நெருப்பைப்போலத்துவளப்பட்டநீண்டவேலையுடைய அருச்சுனனேப்போதுசொன்ன இந்தமனவாக்குககாயமென்றமூன்றுலுங்குற்றந்தீர்ந்து உலகத்தார்மகிழ்ச்சியையடையச்செய்யப்பட்ட பெரியதவத்திலேகட்டப்பட்டுவரப்பட்ட பிரயோசனத்தைஇச்சியாமற்செய்கின்றஅரியதவத்தைதான் சாத்துவிகத்தவ யென்று பெரியோர்கள்சொல்லுவது-எ-று. ௰௬

வசையிரவுமுடையனமானிடர்கொண்டாடுகைக்கு
தசையினுடுபொருள்பெறவுஞ்செய்கின்றநற்றவத்தை

விசையவுனக்குரைசெய்தேன்மிசப்பெரியோர்செய்திடினு
மிசையவறிமறறிகளையிராசதமாந்தவமென்றே

இ-ள், அருச்சுனகுற்றமில்லாத தவசுடையவரென்றுமனிதர் கொண்
டாடுகின்றதற்கும ஆசையுடனேதிரவியம்பெறவுஞ்செய்கின்றநல்லதவ
த்தையுனக்குவிரித்துச்சொல்லி என்னபிரயோசனம் மெத்தவும் பெரி
யோரானவர்கள் செய்தாலும் இந்தத்தவத்தைஇராஜஸகுணதபமென்
றுஉன்மனதுபொருந்த அறிவாய் -எ, று- ௰எ

பேதமயைமிகவுடைத்தாய்கண்ணுயிர்க்கும்பிரவுயிர்க்கு
பேதமுறுபெருந்துயருங்கேடுமேவியற்றுவதா
யாதபமும்பிணியுமுழின்றூற்றுகின்றவருந்தவத்தான்
தாதலருநெடுமுடியாய்தாமதமாந்தவங்காணே

இ-ள், பூந்தாதுகளுதிரமலர்ந்தமாலையைத்தரித்தநீண்டகிரீடமுடை
ய அருச்சுனமிருந்த அறியாமையையுடையதாய்த்தன்னுயிர்க்கும்அன்
னியசீவனுக்குங் குற்றமுள்ள பெரிய துக்கமுங்கேடுஞ்செய்வதாய்வெய்
யலிலுமவியாதியிலும உழன்றுசெய்கின்ற அரியதவமானதுதான்சண்
டாய் தாமததவமானது-எ-று. ௰அ

முன்செய்காரியப்பொருட்டுமென்றியேமுடிந்திதனைற்
பின்பொருநற்பயன்விளக்குமென்பதுவும்பேணுதே
நன்குடைநற்காலததேநல்விடத்தேநல்லவர்க்குந்
தன்பொருளைக்கொடுக்குமதுசாத்துவிசத்தானமே

(இ-ள்)முன்பொருவன் செய்தகாரிய நிமித்தமல்லாமலே முடிந்தவி
தனாலே பின்புஒருநல்லபிரயோசனத்தை விளைக்குமென்கின்ற.ஆசையு
மதியாமலேநன்மையுடைய காலத்திலே நல்லவிடத்திலே நல்லவர்களு
க்குத் தன்னுடையதிரவியத்தைக் கொடுக்கின்றது சாத்துவிகத்தானம்
-எ-று.⁕நல்லவிடமாவதுதேசம் நல்லவர்களாவதுபாத்திரம்தன்பொரு
ளென்கிறது குலாசாரத்தால்வந்த திரவியமென்றாலும் அல்லாமலும்த
ன்னிடத்திலிருந்த அன்னியனுடமையைக் கொடுக்கலாகா தென்றுமா
ம்ஆகையால்முன்பெற்ற உபகாரநிமித்தமும்பின்பலனையிச்சித்துஞ்செ
யயாமல்தேசகாலபாத்திரமறிந்துதன்பொருளைக்கொடுக்கவேண்டுமெ
ன்பது ௰௯

கொண்டுசெயத்தகுங்கருமெனுங்குறிப்பொன்றின்றியே
பண்டுசிலர்செய்தற்காய்ப்பரிவினொடுபண்ணினவும்
உண்டிகளுல்மேல்விளைவென்றுணர்வோடிகொடுத்தனவு
மெண்டிசையுநிறைபுகழாயிராஜஸமாந்தானமே.

(இ-ள்)உபகாரங்கொண்டு செய்பத்தக்கது காரியமென்று சொல்லப்
பட்டதினைப்பொன்றில்லாயலே முன்னுளிலேசிலரேர் செய்தஉபகார

த்துக்காக அன்புடனேபண்ணினகொடையும் இப்போது கொடுக்கின் றவிதனால் இனிமேற்பலனுண்டென்று நினைவோடிக்கொடுத்ததுவுமெ ட்டுத்திக்கு நிறைந்த கீர்த்தியையுடைய அருச்சுனா இராஜஸ்தானமாம் எ-று. ௨௰

வாயாதவொருபொருளைவழங்காதகாலத்தே
வே யாதநிலத்திடையேயிழிந்தகுலத்தவர்களுக்கே
யாயாதவறிவினொடுமெப்பிரியத்தொடுங்கொடுத்தல்
காயாதபெருந்திறலாய்தாமதமாந்தானமே

இ-ள்,பாராலுஞ்சாயாத பெரியதிறமையையுடையஅருச்சுனாகிடையா தொருவ்செல்வத்தைக் கொடுக்காதகாலத்திலே இசையாத நிலத்திலே இழிகுலத்தவர்க்கு விசாரியாத அறிவுடனே பிரியமில்லாத உதாசினத் தோடுங்கொடுக்கிறதானந் தாமததானம்-எ-று,*கிடையாததிரவியமாவ து வார்த்தைவருமென்று பொய்சொல்லி அவைகளை நீவாங்கிக்கொள் ளென்றால் ஆபாதவறிவுமுடம் ௨௧

எழுசீரடியாசிரிய விருத்தம்.

ஒப்பரிதாயவுண்டியோடியாகமுறுதவந்தானமென்றுரைத்த
வப்படியெல்லாமறுவகையுனக்குமுறைத்தன்னடையமற்றையா
வெப்படியாகுமிவற்றினைச்செய்தால்வீடுபெற்றுயர்நெறியாவ
தெப்படியென்னில்தனையுமுனக்குத்தெரிவகையியம்புவனகேணீ

இ-ள்.ஒப்பில்லாத ஆகாரத்தோடும்யாகம் உருதியானதவந்தானமென் ன்றுசொன்ன அந்தநாலுவிதசுபாவமெல்லாம் அறிகின்றபடிக்குஉனக் குச்சொன்னேன்இவைகளெல்லாம்எப்படியாகும்இவைகளைச்செய்தால் மோட்சம்பெற்றுயர்ந்த வழியாவதெப்படியென்னில் அதனையுமுனக்கு தெரியும்படி சொல்லுவேன் நீகேளையா-எ-று. ௨௨

ஓமென்கின்றதனியெழுத்து முரைத்தற்கரியதற்பதமுந்
தாமங்கமழுமதற்குமேற்சதென்கிறதனிப்பதமு
மாமென்கின்றவிவைமூன்றுமறிவன்பெற்றியிவற்றாலே
யாமுன்புணருமறையோரியாவத்தேயோன்றிற்றெனவறியாய்

இ-ள் ஓமென்று சொல்லுகின்றதனியெழுத்தும் சொல்லுதற்கரிதா னதத்துவென்கின்றசொல்லும்இதற்குமேலசத்துஎன்று சொல்லுகின் றதனிச்சொல்லும் ஆமென்றுசொல்லுகின்றஇவைமூன்றும்அறிவினு டையசுபாவம் ஒளியுமமனமு முடைய பூமாலையைத்தரித்தமார்பையு டைய அருச்சுனா இந்தமூன்றினாலேநாம்முன்புஅறியப்பட்ட ஓத்வரிய வேதபாராயணரான பிராமணனுடைய யாகத்திலேபொருந்திற்றென் றிவாய்-எ-று*பதமாவதுசொல். ௨௩

ஓமென்றுரைத்தேவினைசெய்வார்வீடுற்றவர்வீடுறுமவர்க
டாமுன்புரைத்ததற்பதக்கையுரைத்தேசெய்வாரசத்தென்றே
யாமென்றிருந்தேவினையாகுமிவைமற்றழகாயினவெல்லாங்
காமபலத்தின்மேலின்றிச்செய்வாரறிஞர்கதிர்வேலாய்

(இ-ள்)பிரகாசமுள்ள வேலைத்தரித்த அருச்சுனா மோட்சம்பெற்றபி ரமஞானிகள் ஓமென்றுபிரணவத்தைச் சொல்லியே கருமத்தைச்செய் வார்கள் மோட்சத்தைப் பெருகிறவர்கள் தாங்கள்முன்பு சொன்ன.தத் தென்றுசொல்லியே கருமத்தைச்செய்வார்கள் சத்தென்றுசொல்லியே நாமென்றிருந்த கருவமாகும்இது அழகானது எல்லாம் விஷயபலத்தி ன்மேலில்லாமற் கருத்தையறிவுடையவர்கள் செய்வார்கள்-எ-று,*[ஓம் ஆவதுபிரமசொரூபம் தத்தாவது அதென்றுபேர் அதுவென்றந்தப்பி ரமத்தையேசொன்னதுசத்தென்றது நல்லதென்றுபேர் உலகத்தாரும் நல்லகாரியம்பண்ணினவனைச் சற்கருமம்பண்ணினனென்பார்கள்ஆகை யாற்சற்குணமேபிரதானமென்பது கருத்து அல்லாதுசெய்தால் அசத் தாமென்றருக்தாபத்தி. ௨௪

அருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

காதலாலிந்தப்பதங்கண்மூன்றினையுங்கற்றுணர்ந்தவரொலாங்கருத்தா
லோதலாமவகையாலுரைத்தலாற்றவமுந்தானமுமுதலியவயர்ந்தா
ராதலாலிந்தப்பதங்களைவிரும்பிவினைசெயத்தகுவதென்றளித்தான்
நீதலாதுலகந்தன்னுளேயுதித்ததேவகிதிருவயிற்றுதித்தோன்

(இ-ள்)ஆசையினாலேயிந்த ஓம்தத்து சத்துயென்ற சொல்லுக்கண்மூ ன்றையுங்கற்றறிந்த பெரியவர்களெல்லாங்கருத்தினாலேயோதலாகும்ப டியான வாக்கினால்சொல்லுதலினாலே தவந்தானமுதலானவைகளாலே மேலானார்கள்ஆதலால் இந்தமூன்றுசொல்லையும்இச்சித்துக்கருமத்தை ச்செய்யத்தக்கதென்றருளிச்செய்தார் தீங்கில்லா மனுலகமானது தன் னுக்குள்ளேபிறக்கத்தாம் இந்தஉலகத்திலுள்ளவர்களிலொருதேவகியி னுடைய திருவயிற்றிலே திருவவதாரஞ் செய்தருளிய ஸ்ரீகிருஷ்ணஸ் வாமி.எ-று,

௰௭-வது-சிரத்தாதிரவியவிபாகயோக- அத்தியாயம்.

முற்றுப்பெற்றது

ஆக அத்தியாயம் ௰௭-க்கு கூடியசெய்யுள்-௪௮௨.

உ

## பதினெட்டாவது

## உபநிஷத்துப்பிரதிபந்தனமோட்சயோக அத்தியாயம்.

( * )

### கலிவிருத்தம்

ஏகமேகருதுவாரிதயமேவிளைவதோர்
யோகமேயுலகிலோர்பொரிவிலாவொருவனே
நாகமேயமளியாலநளினமேமாள்வதோர்
மேகமேபணியெனாவிசையன்மேல்வினவுவான்.

[இ.ள்)ஒன்றானபிரமத்தையே தியானிக்கிறவர்களுடைய யிருதயத்திலே விளையாடப்பட்ட ஒபபில்லாதகர்த்தனேசேஷனாகியபாம்பேசயனமாகியதாமனாகளே மலரப்பட்டதொருநீலமேகத்தையொப்பானவரே அனுக்கிரகம்பண்ணுமென்று சொல்லி அருச்சுனன்மேற் கேட்கின்றான்-எ-று, [௧

### இதுவுங் கலிவிருத்தம்

சன்னியாசமாவதுந்தகுந்தியாகமாவது
மென்னியாயமாகவெம்பிதிரானியம்புதென்னவே
வன்னிவாயுவானமாகிமண்ணுநீருமாயொன்
றன்னியபொருட்டொகைதந்திறஞ்சொலத்தொடங்கினான்

-இ.ள்-நீர்சொன்னசத்தியுடைய நியாயமான சன்னியாசமாவதும் அதற்குத்தக்கதியாகமாவதும் எநதநியாயமாக இருக்கும் யெங்கள்சுவாமியே சொல்லுமென்ன ஆகாசம்வாயு அக்கினியாகிய பின்பு நீருமண்ணுமாகிநின்றஸ்ரீகிருஷ்ணஸ்வாமி பழையநியமமுள்ள பொருளினுடைய தொகையின் வகையைச் சொல்லததொடங்கினார்-எ-று, (௨]

காமமென்றிரும்பயன்செய்கன்மமானயாவையுந்
தாமடங்கவேயிருத்தல்சன்னியாசமாவதெங்
கேமமின்றியேவினைப்பயன்களானயாவையுந்
தீமையென்றறத்துடைத்திருத்தரியாகமாவதே

இ-ள், இந்தப்பிரபஞ்சத்தில் இச்சைபொருந்தியபிரயோசனத்தைச்செய்யப்பட்ட கருமமான சகலமுமடங்கித் தாம் ஏகமாகவிருக் கிறதுசன்னியாசமாவது இன்பமில்லாமலே கருமபலன்களானவை சகலமும்பொல்லாதென்று அறத்துடைத்திருக்கின்ற கதியதுமாவது-எ-று, ௩

தீங்கியற்றுகின்றதீவினைத்திரங்கள்போலவே
ஈங்கியற்றுநல்வினைத்திரங்களானயாவையு
மாங்கியற்றலின்றிவிட்டிருக்கதலேயுருத்தமாஞ்
சாங்கியத்தையோதிநுந்தவத்துளோருரைப்பரால்

இ-ள். தியாகமாவதுபொல்லாங்கு செய்கிறபாவவிதங்களை விட்டாற்போலவே இங்கேசெய்யப்பட்ட புண்ணியவிதங்களானசகலகருமமுஞ் செய்வதில்லாமல் விட்டிருந்ததேதியாகமென்று அர்த்தமாகப்பட்டசாங்கியத்தைச் சொல்லாநின்ற தவத்தையுடையவர்கள் சொல்லுவார்கள் எ-று, ௪

ஞானகாரணங்களாத லியாகமோடுநற்றவ
தானமோடிகாத்தலைத் தகாமைகூறுவாருளா
ராணகாரணத்தினு லறிந்தடங்கினர்க்கலா
லீனமாமிவற்றைவிட் டிருத்தமென்றிருத்தலே.

இ-ள். ஞானத்துக்குக் காரணங்களாகையால் யாகத்துடனேநல்லதபசு தானமிவைகளை விடுகிறதைக் தகாதென்று சொல்லுவார்களுண்டு யாகந்தவந்தான மென்கிற விவைகளை விட்டிருக்கிறதென்றிருத்தல் இவைகளாலே ஞானமுண்டான காரணத்தினு லிதையறிந்து அடங்கினவர்களுக்கல்லாமல் அறியாதவர்களுக்குவிடக் கூடாது-எ-று, ௫

கலிவிருத்தம்,

தியாகமூன்றுவகைப்படுஞ்செப்பக்கேள்
யாகமுந்தவந்தானமுமென்றிவை
மயலறுக்குமனத்தினையாதலா
லயர்வுறைத்தல்விடுகையடாதலால்

இ-ள், இந்தத்தியாக மூன்றுவிதப்படும் அதைச்சொல்லக்கேள் அந்தயாகமுந்தவமுந்தானமுமென்ற விந்தக்கருமமானமனதிலுள்ள மயக்கத்தையறுக்குமாகையால்விடுதலென்றுசொல்லுதல் மறந்துசொல்லுதல் ஆகையால் அந்தக்கருமத்தைவிடுவது அடாதது-எ-று, ௬

என்னசெய்வதெனவிவ்வினைகளாற்
பின்னையெய்துபெரும்பயனுவது
தன்னைவிட்டுச்செயத்தகுமென்பது
முன்னையொருவெனக்குமுடிவரோ

இ-ள். இந்தக்கருமமானதுஞானகாரண மாகையால் விடப்படாதாகில் மேலதிகமாவது என்னசெய்வதென்று கேட்கில் இந்தக்கருமங்களாலே பிறகுவரப் பட்டபெரியதான பிரயோசனமாவதை இச்சியாமல்வி

ட்டுக்கருமத்தைச்செய்யத்தகுமென்று சொல்வதுபழையவர்களான பெரியவர்களுக்கும் எனக்குச்சந்தேகந்தீர்ந்த நிச்சயம்-எ-று ௭

நித்தமாயநெறியின்வினையினை
மத்தர்போலவொருவன்மயக்கினாற்
பித்தனாய்விடுகின்றலண்பெற்றிசெய்
சித்தமாமத்தியாகமென்கின்றதே

[இ-ள்] சித்திரையை யுடைய அருச்சுனா அழியாத நித்திய விதியினையுடைய கருமத்தை (உன்மனத்தைப்போலே) ஒருவன்மயக்கத்தினாலே பித்தனாகிவிடுகிற அந்தத்தியாகத்தைத்தாமதத்தியாகமென்று சொல்லுவது எ-று, ௮

மெய்வருத்தமுண்டென்றுவிடுவதுக்
கையமில்லையிராசத்தியாகமாங்
கைவரும்பலமாசைகைமாரவே
செய்வசெய்வதுசத்துவத்தியாகமே

(இ-ள்) இப்படிஞானகாரணமென்றுகருமம்பண்ணும்போது சரீரவருத்தமுண்டென்றுவிடப்பட்ட அந்தத்தியாகத்துக்கும் சந்தேகமில்லை அதுராஜாத்தியாகமாகச்செய்த கருமததுக்குக்கையில் இருக்கின்றபலனில்லாத ஆசைகைவிடவேசெய்யவேண்டியது செய்வதென்றிருக்கில் அவைஞானகாரணமான சாத்துவிகத்தியாகம்-எ-று, ௯

யாதின்மாட்டினுமையமென்றின்றியே
தீதினஞானியுந்தியாகியுமானவன்
கோதிலின்பமுந்துன்பமுகூர்வினை
மீதில்வேண்டல்வேண்டாமையும்வீடுமால்

(இ-ள்) எந்தத்தத்துவத்தினிடத்திலும்சந்தேகமொன்றில்லாமல்தெளிந்தகுற்றமில்லாஞானியுந்தியாகியுமான ஒருவனுக்குக் குற்றமில்லாத சுகமுங்குற்றமுள்ள துக்கமுஞ் சிறக்கக்கொடுக்கப்பட்ட கருமத்தின்மேலே ஆசையும்வெறுப் புங்கெடும்-எ-று. (சுகங்கொடுக்கின்ற கருமமாவது புண்ணியமான-நல்வினை துக்கங் கொடுக்கின்ற கருமமாவது பாவமான தீவினை வேண்டலாவதுவிருப்பு வேண்டாமையாவது வெறுப்புவேண்டுதல் வேண்டாமை யில்லாதவனைநானே அவன் அவனேநான் ஆகையாலே அவனேபிறமமென்பது கருத்து) ௰

யாக்கையோடு மிசையுமிருவினை
நீக்கலாவனதல்ல நில்லத்திடை

நீக்கமாய்வினைப்பயன்விட்டினார்
போக்கலாவினையானவையும்போக்கினார்.

இ-ள். உலகத்தினிடத்திலே சரீரத்தோடும் பொருந்திநல்வினை தீவினையென் றிரண்டாக விருந்தகருமத்தைச் சரீரமிருக்கையில்விலக்கலாவதல்லஆகையாலேவளர்ந்ததாகிய கருமபலனைப்போக்கினவர்களேதிரிமூர்த்தி முதலானவர் களாலும் போக்குதற்கு ஆகாதகருமமெல்லாவற்றையும் போக்கினவர்கள்-எ-று. * (இவையேகருமத்தியாகமென்பது.)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இன்னாதனவுமினியனவுமிரண்டுங்கூடியிசைந்தவுமாய்
முன்னாநின்றவினைமூன்றுமவற்றால்வந்தமுடிபொருளும்
பொன்னானதுவுந் தொழிலும்போ லிருக்குமந்தபொய்மெயை
யுன்னாதவர்க்கேயுள்ளதிவையுணர்ந்தோர்க்குளவாயுதியாவால்.

இ-ள், ஆகாதான அனுஷ்டமும் இனிதான இஷ்டமும்அவையிரண்டுங்கூடி இசைந்ததாகியமிசிரமுமாகி நினைக்கப்பட்ட கருமமும் அந்த மூன்றுகருமத்தாலும்வந்த அவற்றுக்குமுடிந்தபொருளானது அநிஷ்ட கருமத்துக்குநரகமும் இஷ்டகருமத்துக்குச்சொர்க்கமு மிசிர கருமத்துக்குப் பாரியாபுத்திராதிசம்பத்துமென்னுந்தொழிற்பட்ட பூஷணமும்போலவிருக்கும் அந்தப் பொய்யாகியமெய்யைநினைத்துவிசாரித்து இதுமெய்போல்கண்ட பொய்யென்றறியாதவர்களுக்கே இந்தக்கருமபலமானதுநரகசொர்க்கசம்பத்தாகிய அனுபவமுள்ளது இதுகானற்சலம்போலக்கண்டுபொய்யென்று தெளிந்தவர்களுக்கு உண்டாய்த்தோன்றாது-எ-று. ௰௨

ஓங்கியவுலகினிலுயர்ந்தநன்மையைத்
தீங்கினையகம்வினையாவுஞ்செய்தற்குச்
சாங்கியநூலிலேசமைந்தசாதன
மீங்குளவைந்தவையெடுத்துக்கூறுவாம்.

இ-ள், உன்னதமான உலகத்தில் உயர்ந்ததானநன்மையைத்தன்மையை யுண்டாக்கப்பட்ட கருமமெல்லாஞ் செய்வதற்குச்சாங்கிய சாஸ்திரத்திலே உண்டானசாதனம் ஐந்துண்டு அந்தசாதனமான காரணத்தை இப்போது யெடுத்துச் சொல்லும்-எ-று, * (இங்கவையெடுத்துக்கூறுவாமெனவும்ஐந்துளவெனவுமாறுக) ௰௩

இருப்பிடமாமுடம்பியற்றுமாருயிர்க்
கருத்தினைமுதலியகாணங்காற்றினால்
விருப்பொடுவருந்தொழிலிவெற்றின்மைத்தொழிர்
கருத்தீமாமொழி[illegible]யெனவாகவந்தரோ.

இ-ள், ஆதாரமாவது ஆகவாரமானவுடம்பு நடத்தப்பட்டஜீவன்மனது முதலான அந்தக்கரணம் பிராணாபானாதிவாயுக்களினாலே ஆசையுடனேவரப்பட்டதொழில் இந்தவுடம்பு சீவன்கரணத்தொழிலென்றநாவினுடைய உண்மைத் தொழிலுக்கு அருக்தமாகப்பட்ட சோதியான தெய்வமென்பதென்று முன்சொன்ன நாவினுடனேதெய்வமென்றுகூடஆ அஞ்சு-எ-று, ௰௪

வாக்கினாலாதன்மெய்மனத்தினாகுக
லாக்கையாலாதவிவ்வுலகில்யாவரும்
வீக்குவாரிலேயினையவினையிரண்டிலொன்
றாக்குநாளிங்கிவையைந்துமதேண்டுமோம்

இ-ள், வாராவிருக்கக்கட்டின வில்லையுடைய அருச்சுனவாக்குமனங்காக்காலாகுதல்இவ்வுலகில்எல்லாருநல்வினை தீவினை இரண்டிலொன்றுசெய்யும்போது இப்போதுசொன்ன இந்தவுடம்புசீவன்கரணத்தொழில்தெய்வமென்ற அஞ்சகுமவேண்டும்-எ-று, ௰௫

இவ்வகையேவருவினையிரண்டையு
மெய்வகையேயானன்றிவேறிலேச்
செய்வகையானெனச்சிந்தைமேயினு
னுய்வகைவேறிலானுணர்வுமாய்ந்துளான்

இ-ள், இந்தப்படி யேவரப்பட்ட கருமமிரண்டையு மெய்யான படி பொருந்தினவனானல்லாமல் வேறில்லை இந்தகருமத்தைச் செய்யப்பட்டவித்தையுடையவனும் நானென்றுமனதிலே அகங்காரமடைந்தவனே அந்த அகங்காரமே கெதியல்லாமல்வேறேதப் பிப்பிழைக்கின்றவகையில்லாதவனும அறிவுகெட்டவன்-எ-று, ௰௬

## அறுசீரடியாசிரிய விருத்தம்.

யாவனொருவன்றன் னுடம்பையா னென்றிருக்கு மியல்பொழிந்தா
னியாவனொருவன் கரணங்களியா தென்றேமேவிளைந்திரா
னியாவனவனிவ்வுலகத்தையடையக்கொன்றானாயிடினும்
பாவமில்லையவன்கொன்றபழியுமில்லைபார்மன்னா.

இ-ள், எவனாகிலும் ஒருவன்தன்னுடைய சரீரத்தை நானென்றிருக்கப்பட்ட சுபாவத்தைபொழிந்தானோ அவன் எவனாகிலும் ஒருவன்அந்தக்கரணங்களானவை ஏதாகிலும் ஒருவிஷையங்களிலிச்சையாகவிரானோ அவனெவனோ அவனிந்தவுலகத்தாரையெல்லாங்கொன்றானாகிலும் பாவமில்லை அவன்கொன்றபழியுமில்லைகண்டாய்ராஜாவே-எ-று, (பாவமும்பழியுமில்லையெனவே அவன் செய்தகருமம் விதிப்படி முடிந்தாயிற்று:) ௰௭

அறிவுமறியப்படும்பொருளு மறிவானு மூன்றுமாய்
நெறியில்வினைகள்விதிக்கின்ற விதியினிலைமைநிற்பதுதான்
செறியுந்தொழிலுஞ்செய்வானுஞ்செய்தற்குரியவறிவுமாங்
குறியில்வினைகண்முடிப்பதுவு மின்னுஞ்சிலவுங்கூறக்கேள்

(இ-ள்) எல்லாவற்றையுமறிகின்ற அறிவும் அந்த அறிவினலறியப்படுகின்றபொருளும் இவைகளிரண்டையுமறிகின்றவனும் ஆகிக்கருக்கை விதிக்கின்றவிதியினுடைய நிலைமைகெடாமல்நிற்பது அதுதானன்றிக்கியகருமமுங்கருமத்தைச்செய்கிறவனும் அந்தக்கருமத்தைச்செய்வதற்கு உரித்தான அறிவுமென்று மூன்றாகப்பட்ட குறியிலேகருமங்கள்முடிந்திருப்பது இன்னுஞ்சில சொல்லக்கேள-அருச்சுனா-எ-று. ௰௮

ஆன்றவறிவுங்கருமமுமக் கருமங்களையாக்கிடுவானு
மூன்றவுணருமபுத்தியொடு திருத்தியெனவேறுரைத்தனவு
தோன்றவினையுமின்பமுமுன் சொன்னகுணத்தின்றொடர்பாலே
மூன்றுவகையாமோரென்றேயவற்றின்திறநான்மொழியக்கேள்

(இ-ள்) நிறைந்த அறிவாகியஞானமும் அந்தஞானத்தில்செய்கின்ற கருமமும் அந்தக்கருமங்களைச் செய்கின்றவனுமென்றமூன்றையுமூர்த்தியாக அவையறியப்பட்டபுத்தியுடனே திருத்தியென்றுவேறேசொன்ன தைரியமுங் கண்காணவுண்டாக்கப்பட்டசுகமுமாகஞானங்கருமங்கர்த்தன்புத்திதயிரியம்சுகமென்றஆறுமொவ்வொன்றே முன்சொன்ன முக்குணத்தொடர்ச்சியினலே மூன்றுவிதமாம் அவைகளினுடைய விதத்தை நான்சொல்லக்கேள் அருச்சுனா-எ-று. ௰௯

நன்றாய்ஞானத்திரளாகி நானாவிதமாய்விரித்தெங்கும்
பொன்றுநிலைமபூதங்க டோறும்பொன்றாப்பொருளாகி
யொன்றாய்நிற்பதொன்றினைப் படியேயுணவுமுணர்வதனை
யன்றுமென்னுஞ்சாத்துவிக ஞானமெனவேயமைப்பார்களால்

(இ-ள்) நன்றாகிஞானத்திரட்சியாகிப்பலவிதமாயெங்கும்வியாபித்து அறியப்பட்டசகலபூதங்களிலும்அழியாதபொருளாகிஏகமாகிநிற்பதாகிய ஆத்மாவானவொன்றை அப்படியேயறிகின்றஅறிவைச்சாத்துவிஞானமென்றே விதிப்பார்கள் அல்லவென்றுசொல்லார்-எ-று. ௨௰

ஊனப்படுமிவ்வுடற்றோறுமுள்ளபொருளையுணராதே
ஈனப்பட்டகாண்கின்ற விராசதமாஞானமேயாகு
ஞானத்திரளாய்நின்றதை யோருடம்பினிடையுநாட்டிடையோ
தானத்திடையுமடங்கக்காண்பதுதாமதமாஞானமே

(இ-ள்) நாசமாகிறகுற்றமுண்டாகிய இந்தச்சரீரங்கள் தோறுமுள்ள ஆத்மாவையொன்றென்றறியாமலே பிரமணுதிவர்ணபேதங்களிலும்பிரமசாரியாதியாசிரமபேதங்களிலும்பேதப்படவிருக்கிறதாகவெண்ணியினமுண்டாகக்காணுகிற ஞானமிராஜசமானஞானமேயாகும்ஞானம்திரண்டதாகியபூரணமாகிநித்தியமாகின்றஆத்மாவையோருடம்பினிடத்திலும்நாட்டலொருஸ்தலத்தினிடத்திலுமடங்கமற்றவிடங்களெல்லாம் பாழாகக்காண்பதுதாமதமாகியஞானம-எ-று ✻ஆத்மாவாவதுபிரமமஇந்தஆத்மாவைவர்ணுசிரம்பேதங்களிலும் பேதமாகஇருக்கிறதாகநினைத்து ஈனதிக்கங்களாலேபலமீனுதிக்கமாமென்று ஆதிக்கமாகவருகிறபலனைஇச்சித்து வர்ணுசிரமஙகளிலாதிகமுள்ளவாணுசிரம்கருமம அனுஷானம்பண்ணுகிறதினலேஇனமாகக்காணுகிற விராஜசஞானமென்ருர் இப்பால்தாமதகுணத்துக்கு ஒருடம்புஒருதானமும்மென்றது கல்லுநவலோகங்களினலேசெய்தவிககிறகங்களே ஒருடம்புநாட்டிலொரு தானமாவது மலைநதிகுளம்மரம்இவைமுதலானவனேகதானங்கள்இவைகளை விரிக்கில்வெகுவாம்-எ-று. உக

அறுசீரடியாசிரிய விருத்தம்.

வியதலும்பற்றுமேலாவினைப்பயன்வேண்டல்வேண்டாக்
காய்தலொன்றின்றிச் செய்யுங்கருமஞ்சாத்துவிகக்கன்ம
மாய்கரும்மலத்தினேடும் வருங்காரணத்தினேடு
மெய்தருங்கருமமெல்லா மிசர்சதகருமமேயாம

இ-ள், சாசிறதுஞ்சமுசாரத்திலேகட்டுப்படுகிறதும் வேதந்தக்கதாக கருமபலனை ஆசைப்படுதலும் வெறுப்பாய்கோபிக்தலுமிவற்றிலொன்றுமல்லாமற்செய்யப்பட்டகன்மஞ்சாத்துவிகக்கன்மம்அந்தக்கருமத்தாலுண்டாய் அழியப்பட்டபலத்துடனும் அந்தப்பலத்தி லிச்சையாய்ப்பொருந்திவாப்பட்ட அந்தக்காரணத்துடனுங்கூடி இசைந்துசெய்யப்பட்ட கருமமெல்லாம் இராஜஸகருமமேயாகும்-எ-று, உஉ

கொலைபெறும்பற்றுமேலோர் கூறியநீதியோடுங்
கலைதெரிந்துணர்ந்துமென்மை கடைப்பிடியாமையார்க்கு
மலைதருங்கேடுசூழ்தலனைத்தினுமொன்றிச்செய்யத்
தலைவருங்கரும்மெல்லாந் தாமதகருமமேயாம

(இ-ள்) கொல்லுகிறது பேராசையாகிய கட்டுபெரியவர்கள் சொன்ன நீதியோடுஞ்சாஸ்திரத்தை யோதித்தெளித்து மேலானகாரியத்தை மறவாதேகபடனைகைப்பிடியாமல் எவர்களுக்கும் அலையச்செய்யப்பட்ட கேடுமூடச் செய்கிறதுமுதலான பொல்லாதகருமமெ

ல்லாவற்றிலும மனதுஒருமையாகச்செய்ய அதுவே முந்தினதாக்வரப் பட்டகாரியமெல்லாமதாமதகருமம்-எ-று. ௨௩

பற்றுமாங்காரந்தானும் பழுகறத்துறந்துயாவு
முற்றெழுமுபசியோடு நிலையிஞேடுமையுமொனறி
பெற்றமோரிழிவுபெற்றி துன்பமோடின்பமென்னுஞ்
சறறுமோர்சலிப்பில்லாத தலைவன்சாத்துவிகனென்பான்

(இ-ள்) கருமபலத்திலிச்சையு மாங்காரமுங்கெடஎல்லாம் விட்டுத்தன்னிடத்திலிருந்தெழும்புகின்ற வுச்சாகத்தோடும் நிலையோடும் வசனமுமொருமித்து யாதாகிலுமொரு போக்குவருத்துளன்றலாபநஷ்டங்கள் துக்கம் அவற்றுடனே சுகமென்றவிவை முதலாகியனவந்தாலென்றைக்கும் சற்றுகிலுமொருசலிப்பில்லாதகர்த்தன் சாத்துவிகனென்றுசொல்லப்படுவான்-எ-று ௨௪

கலிவிருக்கம்'

வினைப்பயன்றனை வேண்டலும்வேட்கையு
மெனைத்துமியார்க்கு மிடாமையுந்துய்மையு
நினைப்பினீடலு நெஞ்சின்மகிழ்தலு
மினைப்பவாழ்ப வரிராசதமாந்தரோ

(இ-ள்) செய்கிறகருமத்தின்பலனையிச்சித்தலும்சகலசுகமுந்தனக்கே வேணுமென்கிற ஆசையுமெவ் வளவாகிலும் யாருக்குங்கெடாதலோபமுஞ் சுற்றமும் பலசித்தியாகிறதற்கு முன்னே நினைக்கிற நினைப் பிலே ஆமோ ஆகாதோவென்று அனேகநீளமாக நினைக்கிறதும் பலசித்தியானபோக்கு மனதிலேசந்தோஷப்படுகிறதும் இந்தவிதமாகவாழ்கிறமனிதர்-எ-று. ௨௫

மனமொருக்காலும் வான்களை நூல்களைத்
தனமொருக்கொடு கற்றலுந்தக்கவ
ரினமகிழ்த்தலு மின்றியுண்டாக்கிய
சினமவிடுக்கிலார் தாமதஞ்சேர்ந்துளார்.

இ-ள், மனதுபலவழியோடாமல் கொடுக்கிறதும் பெருமையுள்ளகலை சாஸ்திரங்களைத் திரவியசெலவுபண்ணிக்கொண்டாகிலும் கற்கிறதுபெரியவர்களின் கூட்டத்தைசந்தோஷிப்பிக்கிறதுமல்லாமல் உண்டாகின கோபத்தைவிடமாட்டாதவர்கள் தாமதகுணஞ்சேர்ந்தவர்கள்-எ-று.

ஈனமற்றதுறவறமல்லற
ஞானம்பெற்றுறுநல்வினை தீவினை

யானதஞ்சுவ தஞ்சங்ககாரிதனை
தானறிந்தது சாத்விகபுத்தியே

இ-ள். ஒருகாரியத்தை நினைக்கிறபோது இதுதுறவறமோ இல்லறமோஞானமோ பந்தமோ இதுபுண்ணியமோபாவமோவென்று விசாரிக்காலது இது சாஸ்திரவிதியல்லாததினாலேபயப்படுவது இது சாஸ்திரவிதியாகையாற் பயப்படத்தக்கதல்லவென்று தானநிச்சயமாக வறிந்து சாத்விகபுத்தி-எ-று. ௨௭

தருமம்பாவந்தனக்குச்செயத்தகுங
கருமஞ்செய்யத்தகாதகருமங்க
ளருமையாலறியாதவரிவரோ
விருமையாய்தவிராஜஸபுத்தியே

இ-ள், தர்மம்பாவந்தனக்குச் செய்யத்தக்ககாரியஞ் செய்யத்தகாதகாரியங்கள் இவைகளையருமையிலறியாத அறிவுசாத்விகதாமதமானவிரண்டுவிதமுங் கலந்ததாகிய இராஜஸபுத்தி-எ-று, ※ (தனக்கென்று அவரவருக்குவிதித்தகுலாசாரப்படியேதனக்குச்செய்யத்தக்கதென்றூர்)

பாவமாகத்தருமத்தைப்பார்க்கிலு
மாவதாமென்றடாததுநோக்கலுந்
தீமைசெய்கின்றசிந்தனை தீங்கிலே
போவதாமதுதாமதபுத்தியே

இ-ள், தருமத்தைப் பாவமாகப்பார்க்கிறதும் ஆகாதபாவத்தை ஆவதானதருமமாகப்பார்க்கிறதும் பொல்லாததைச்செய்யென்றமனதுபொல்லாததிலே போவதாகியதுதாமதபுத்தி-எ-று, ௨௯

மனஞ்செயுந்தொழின்மன் னுயிரின்றொழி
லினஞ்செயதிங்கரியஞ்செய்தொழிலென்றிவை
கனஞ்செய்தேறினுங்கண்டுபொறுத்தலுஞ்
சினஞ்செயாமையுஞ் சாத்துவதிருத்தியே

இ-ள், மனதுசெய்கிறதொழில்நிலையானபிராணவாயுவினுடையதொழில் ஐந்தென்று கூட்டஞ்செய்த இந்திரியங்கள்செய்கின்றதொழிலென்று சொல்லப்பட்ட கருமங்கள் கனமாகச்செய்து அதிகமானாலும் அவைகளைவெல்றேயாகக் கொண்டுபொறுமையுங் கோபமுஞ் செய்யாதபொறுமையுஞ் சாத்துவிகத்தர்மம்-எ-று. ௩௰

பண்ணிக்காமந்தருபயனைக்கொள்வா
னெண்ணித்தாங்குந்திருததிஇராசதங்

கண்ணி சோகங் களிப்புமக்கம்பய
நண்ணித்தாங்கும் தமப்பொறைநாளுமே

(இ-ள்) கருமத்தைப் பண்ணியுந்த யிச்சையானது தாப்பட்டப
யங்களைக்கைகொள்ளவேண்டி நினைத்து மனது பிராணவாய்வு இந்திரிய
மிவைகளுடைய தொழிலைத்தாங்குகின்ற திருத்தியானது இராஜஸத்
தயிரியம; தயிரியம் பொருமை திருத்தி இவைமூன்று மொன்று இப்
பால் விசாரிக்கிற சுகம்மகம் நித்திரை பயமிவைகளுண்டாகிற விஷய
ங்களை இச்சித்து மனது பிராணவாய்வு யிந்திரியங்களின் தொழிலைக்
கூடித் தினந்தினமுந் தாங்கப்பட்ட தயிரியத தாமதத்தயிரியம். எ-று.

துன்பமாவதுபொன்று துடக்கற
வின்பமாகிவிளை விடையாவர்க்கு
மன்பமாரமுதேயெனலாவதா
மென்பசாத்துவிதச்சுருமின்பமே,

இ-ள், தோழா கேள் ஒருசுகத்தை முதல் பழகுகையில் துன்பமாவ
தை யொப்பாகியிருந்து பழக்கந்தீர்ந்தபிறகு சகலக்ருமந் துடக்கும அ
றத்தக்கதாகச் சுகமாகவிளைகிற விடத்திலே யெல்லாருக்குங் கிடையாத
அமிர்தமென்று சொல்லாவதாகுமென்பது சாத்துவிகக் கொடுக்கிற
சுகம. எ-று. ௯௨

பொருத்தமாய்புல னோடுபொறியிலே
யருத்தமாறெழுந் தாரமுதென்னலாய்
விருத்தமாய்விளைத் தாவிடமாகியே
யிருத்தலாகு முராசதவின்பமே.

இ-ள். இந்திரியங்களுடனே பொருத்தமாகிய விஷயங்களிலே விசு
வாசமா யெழுந்தால் அமிர்தமென்ற சொல்லாகி வெறுப்பாயெழுந்தா
ல் விஷயமாகி யிருக்கிறது விராஜஸசுகமாகும். எ-று. ௯௩

துடருறக்கமயக்கொடுசோமபுமேற்
படவுதித்தவைபண்ணும்பொழுதினுங்
கடன்விளைத்துமுடிந்தகாலத்தனு
மிடர்விளைப்பதுதாமதவின்பமே

இ-ள், எந்நாளுந்தொடர்ந்துவருகிற நித்திரை மயக்கம் ஆகுனுடை
ய சோம்பு இது அதிகப்படவுண்டாகி அவைகள்செய்யும்போது அது
முறைமைபாகவுண்டாக்கி முடிந்தபோதும ஆத்மஞான சுகம்பிறக்க
வொட்டாமல் துக்கத்தையுண்டாக்குவது தாமதசுகம். எ-று. ௯௪

## அறுசீரடியாசிரிய விருத்தம்.

இந்தவியற்கையினலிக் குணங்களைவிட்டவரில்லை
அந்தணர்க்கும்வணிகருக்கு மரசர்க்குஞ்சூத்திரற்குந்
தந்தமியற்கையினற் குணமூன்றின்றன்மையினல்
வந்தவினைகதிரமவற்றை யுணர்ததக்கேண்முடிமன்ன.

இ-ள், இந்தசுபாவத்தினலே யிந்தக்குணங்களை விட்டவர்களில்லை பிராமணருக்கும் இராஜாக்களுககும வைசியருக்குஞ் சூத்திரற்குந் தங்கள் தங்கள் சுபாவததினலே வந்த கருமவிதஙகள் அவைகளை யுனக்குந் தெரியச்சொல்லக்கேள கிரீடந்தரித்த ராஜாவே. எ-று, ௪௫

## கலிவிருத்தம்.

கரைசெயம்புலன்களைப் கரணநான்குடன்
துறைதுறையடக்கலுந் தவமுந்தூமையுந்
பொறையொடுகல்வியும் பொருந்துஞானமு
மறையவர்தொழிலென வகுக்கவேணடுமே’

இ-ள், குற்றத்தை செய்கின்ற பஞ்சேந்திரியங்களை அந்தக் கரணநாலுடனே அவையவங்களை அந்தந்த துறைகளிலும் அடக்கிறதும் தேகமும் போகங்களைவிட்ட தபசுசாஸ்திர விதியாசாரமான சவுசாதிசுததமும் படித்தவர்களிடத்தில் விகாரமில்லாத பொறுமையும் அவற்றுடனே பரத்தையறிகிற கல்வியும் வேதசாஸ்திரார்த்தமும் பரதத்துவ நிச்சயமும பொருந்தின ஞானமும் பிராமணர்களின் கருமமென்று சொல்லவேணும். எ-று. ௪௬

தலைமையுங்கொடையொடு தறுகணுண்மையும்
நிலைமையுங்கீழ்ப்பாரை நெஞ்சினிட்டமுங்
கொலைப்பவில்போர்களிற் புறங்கொடாமையுஞ்
சிலைமலிதோளின[ரயரசர்செய்கையே.

இ-ள், வில்லுச்சண்டை மிகுந்த தோளையுடைய அருச்சுன கூர்த்தத்துவமும் தானமும்அதினுடனே ஆக்கிரமான ஆண்மையுஞ்சலியாத நிலைமையான தயிரியமுங் கீழ்ப்படாத மனதுடையமேன்மையுங்கொல்லுகின்றதைச் செய்யப்பட்ட சண்டைகளிலே ஓடாமலெதிர் நடக்கிறதும் அரசர்களின் தொழில், எ-று, ௪௭

உழுதொழில்பசுக்களை யோம்பல்வாணிபம்
வழுவறச்செய்கையே வணிகர்வாழ்க்கையாம்
பழுதறவிவர்களைப பாதுகாத்தலே
விழுமியதொழிகள் வேளாளர்க்கென்பவே,

(இ-ள்) உழவுதொழில்பசுக்களைக்காக்கிறது வாணிபம் குற்றமறச்செய்கிறது இவைகள்பழமையான வைசியருடைய தொழிலாகும் இந்தமூவரையுங்குற்றமற இடைவிடாமல்காக்கிறது மேலாகியவோர்தொழில்கள்செய்கிறது இந்தொழில்கள் சூத்திரரானவேளாளருக்கென்று சொல்லுவது. எ-று. ரு அ

கலிவிருத்தம்

திராவகைதஞ் செயலேசெயவே
நாராயண னாமுதனாயகனாக
காராதனையா மதனாலவரோ
வாராவழியா மவரோதருமால்

(இ-ள்) இந்தநாலுவருணத்தாலும் தங்கள் தங்களின் தொழிலைச்செய்யவே அவை (நாராயணனாகிய தலைமையானகர்த்தனுக்குப்பூசையாம்அதனாலே அந்தநாராயணரே இவர்கள்திரும்பவாராதவழியாகியமோக்ஷமாகப்பட்ட வரத்தைத்தருவார். எ-று. ✻ (அன்னியவருணசாரத்தைச் செய்தவர்கள்நரகில் வீழ்வாரென்பது தருக்தாபத்தி. ருகூ

அல்லாவினைதா னழகாலரினுஞ்
சொல்லார்பெரியோ ரவைசெய்வதனிற்
றொல்லாகுலமே தொடருந்தொழிலே
பொல்லாவெனினுஞ் செயலேபொருளே

(இ-ள்) சுத்தமல்லாத அன்னியவருணத் தாருடைய தொழிலழகாய்வந்தாலும் பெரியோர்கள் தங்கள் கருமங்களைவிட்டு அன்னியகருமங்களிலேபோகார்கள் அன்னிய வருணத்தாருடைய கருமம் நல்லதென்று அந்தக்கருமத்தைச்செய்வதிலும் பழையதானதங்களுடைய குலத்துக்கு அன்றுமுதலாகத் தொடர்ந்ததொழில் பொல்லாதானாலும் தங்களுடைய குலாசாரம்செய்கின்றதே நல்லதிரவியம்-எ-று. சம

அறுசீரடியாசிரிய விருத்தம்

கனலெறிபுகையோடன்றிக் காணமுன்படாமைபோல
வினைகளுங்குற்றந்தன்னை விட்டிராதலாலே
யனையதென்றிகழ்தலாத வடுத்தகாரியங்கடமை
நினைவருந்தருமமென்றே செய்கையே நீதியெல்லாம்

(இ-ள்) சுத்தமுடைய நெருப்புப் புகையுடனேகாண்பதல்லாமல் புகையில்லாமல் நெருப்பைமாத்திரம்காண்பதற்கு எதிர்ப்படாததுபோலக்கருமங்களும் குற்றத்தைவிட்டுநிர்மலமாயிராது ஆகையாலே அப்படிகுற்றமுடையதென்று செய்யாமல்வெறுத்து விடுவதாவது தங்கள்தங்கள் குலத்துக்கு அடுத்தகருமங்களை நினைக்கப்படாதபிரமமாகிய தத

மமென்று எல்லாஞ்செய்வதேவிதி. எ-று. * எல்லாமென்பதே னென்னில் ஒருகுலத்துக்கு விதிக்ககருமம் அநேகத்தில் வெகுகருமம் நல்லதாயிருக்குஞ் சிலகருமங்குற்றம்போலத்தோன்றும் அக்குற்றமாகக்கண்டதைவிடாமலெல்லமலஞ்செய்வதே நியமமென்று விதியாவதுசிருஷ்டிக்குமுன்னியமமானது. ௪௧

இதுவுமது.

வெல்லப்பட்டமனதினனாய் வேறொன்றினையும்வேண்டாதே
யல்லற்பற்றுமு மபற்று மறவேயறுக்கான்வினையாவுஞ்
செல்லச்செல்லவெறுத்தவனு யதனுற்சித்தமுடிவாகச்
சொல்லப்பட்டகரணங்களுக்குந்தூயதாய்விடுமென்றே

இ-ள். செயிக்கப்பட்டமனதையுடையவனாய் என்னைத்தவிரவேறொன்றையும் இச்சைப்படாமல்துக்கத்தொடர்ச்சியான ஆசைபற்றுந்தேகத்தொடர்ச்சியான ஆசைப்பற்றும் ஒருக்காலுமில்லாமலறவே வெறுத்தவனால் கருமங்களெல்லாம் நடக்க நடக்க அந்தப்பலன்களைவெறுத்தவனாய் அதிலேமனமுழுதலாகச்சித்தமுடியாகச் சொல்லப்பட்ட நாலுகளுஞ் சுத்தபவுத்திரமாகிவிடுவன். எ-று, ௪௨

சொன்னகரணமவைநான்குந் தூய்தாய்விடுமத்தூய்மையினு
லுன்னவரியாப்பெரும்பொறுமை யுடையனுகுமப்பொறையா
லின்னல்செய்யும்பொறியைந்து மிராகத்துவேஷமெனுமிரண்டு
மன்னதன்னைநலியாம லாற்றுமதனைமாற்றினன்

இ-ள். என்னைத்தவிர வேறொன்றையும் இச்சியாமலறவிட்டால்மனம் புத்தியாங்காரஞ் சித்தமென்றுசொன்னகரணமான நாலும்நிருமலமாகிவிடும் அந்தக்கரணசுத்தியினாலே நினைக்கவரியாதபெரியபொறுமையாகிய தயிரியத்தையுடையவனாகும் அந்தப்பொறுமையினாலே துக்கத்தைச்செய்யப்பட்ட அஞ்சுவிஷயமும் விளிப்புவெறுப்பென்கிற விரண்டு அந்தவேழுந் தன்னைவருத்தாமல் அவைகள்செய்யப்பட்டதொழிலைப்போக்கினவன். எ-று, * ராகமாவது ஆசை துவேஷமாவதும் பிணக்குறாயதாய்விடுமென்றது நிருமலமாய் முன்னிருந்தமலம்விடுமென்பது

காடுமலையுமலைமுழையுங்கடுநாமுதலைநசிவில்லா
வோடுமதன்லாற்றுள்ளிட்ட விடமேயுறையுளாக்கொண்டு
தேடும்பொருளொன்றின்றியே சிறிதேயுண்டுசென்றெங்கு
மாடுமனவாய்மொழியாக்கையடக்கப்பெறுமாலவனேயால்

இ-ள். காடும்மலையும் முழையுங்கடினமான நரகையுடைய நோலையினலைவருத்தமில்லாமல்ஓடப்பட்ட சலத்தையுடையமுண்டுமிவைகளுள்ளிட்ட விடமே யிருக்கிற விடமாக விருநதுகொண்டு

தேடப்பட்டபண்டமொன்றுமில்லாமலேகொஞ்சமாகஆகாரம்பண்ணி
யெங்குந்திரிந்தகூத்தாடப்பட்ட மனதுவாய் வசனஞ்சரீரமிந்தமூன்று
கரணங்களையுமடக்கப்பெறுவானந்தநிருமலன்-எ-று (கடுமாமுதலைநகல்
வில்லாவென்று பாடமாயிற கடினமிருகமுதலான உபத்திரவமில்லாத
காடென்றுரைப்பது.) ௪௪

சொன்னவிவையோவடங்கிடவே தோன்றுகளிப்புங்காமமுருன்
பென்னதியாவெனை கின்றதுவு மெரிபோல்வெகுளியோடுவலியு
முன்றவிர்ந்துசாந்திபெறுஞ சாந்திபெறவேபோரிடத்தும்
மின்னமடையாதொன்றுகி நின்றபொருளின்பேருருவாம்

(இ-ள்) மனம்வாக்கு காயமென்றுசொன்ன இந்தத்திரிவித கரணங்க
ளும்அடங்கிப்போகவே முன்னமேயுண்டாக்கப்பட்டகெர்வமும்ஆசை
யும்எனதென்கிறசுதந்திரமுநான் திரிந்தனென்கிறஆங்காரமும் நெருப்
பையொப்பானகோபமும் இவைகளுடனேபலமும் இவைகளைநினைப்ப
தைவிட்டுச்சாந்திபெறுவன்இந்தச்சாந்தியைப் பெறவே ஓரிடத்திலும்
பின்னமாகவிடை விடாமல் பூரணமானவேகமாகிச் சலியாமல்நின்றபிர
மத்தினுடைய பெரியசொரூபனானவன்-எ-று. ௪௫

அந்தவுருவானவன்புன்னையாதேவரினு மழிவுறா
னிந்தவுலகத்துயிர்க்கெல்லா மொக்தேயிருக்குமிங்கேவனும்
பந்தமலவிட்டென்னையுமறிபததிபெறுமப்பததியினாற்
சிந்தையிடையேயெனதெதளியுமகனுலென்னையேசேறுமால்

(இ-ள்) அந்தப்பிரபசொரூபமானவன்பிறகுளன்னவந்தாலும்அதில்
யிச்சையாய்க்கெடான் இந்தப்பிரபஞ்சத்திலுள்ள சீவனுக்கெல்லாமதி
வனுஞ்சமனுயிருப்பன் பாசபந்தமறவிட்டு என்னையுமறியப்பட்ட பத
திபெறுவன் அந்தபததியினாலே பனதிலிடத்திலே என்னைத் தெளிவா
ன் அந்தத்தெளிவினாலே என்னையேசேறுவான்-எ-று- ௪௬

என்னைப்பற்றிக்கொண்டிறவே யெல்லாவினையுமியற்றினும்
பின்னைப்பிறவாய்பெருமபதமென் னருளினாலேபெறுக கண்டாய்
நின்னைத்தொடரும்வினையெல்லாமென்னை நினைததேசெயின்வினை
டன்னைக்கடத்தற்கருந்துன்ப மெல்லாங்கடக்கத்தகுதியால்

(இ-ள்) உறுதியாக வென்னை இச்சித்துக்கொண்டு எல்லாக் கருமத்
தையுஞ்செய்தாற் பிறகுபிறவாத பெரியமோட்சத்தைஎன்னுடைய கி
ருபையினாலேபெறுவன்கண்டாய் அருச்சுனா ஆகையால்உன்னைத்தொ
டரப்பட்டகருமத்தையெல்லா மென்னையே நினைத்துச்செய்தல் அந்த
வினைகளை அவைகளால்வரப்பட்டகடக்கிறதற்கரிதான துக்கமெல்லாங்
கடக்கத்தக்கவனாய்-எ-று * என்னையேநினைப்பதாவதுகருமபயனை

விக்கின்றவனும்பதத்தையடைகிறவனும்நானேயென்றென்னை நினைத்துச்செய்யென்றதனால் நீ வினையைத் தொடரா திரும்என்பது குறிப்பு.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

ஒன்றியமனத்தினாலே யானுரைக்கின்றவுண்மை
நன்றிதென் றுணராயாகி னாசமேயடையுமற்றீ
தன்றியுமரசர்க்கெல்லா மடுத்தகாரியமாயுள்ள
வென்றியையுடையாயேனும் வேறுநீவிளைவகேளாய்

இ-ள், ஒருமையானமனதினாலேநான்சொல்லுகின்றவுண்மை இதுநல்லதன்றறிந்து கொள்ளாயாகில் நாசத்தையேயடைவாய் இதுவல்லாமலும் இராசாக்களுக்கெல்லாம் அடுத்தகாரியமாயிருக்கின்ற வெற்றியை நீயடையாயாகிலும் இனிவேறொன்று விளைவதுண்டோ அதைச்சொல்லுகிறோம்கேள் அருச்சுனா-எ-று. ௪அ

கலிவிருத்தம்.

விரைசெய்தார்மன்ன வேண்டலையாயினுங்
கரைசெய்துன்றனைக் காலுறவார்த்திடு
மரசர்தங்குண மாகியவான்மையே
புரைசெய்வாளமர்க் கேபுகுவிக்குமால்

இ-ள், பரிமளிக்கின்றமாலையைத்தரித்தராஜாவே நீ என்வசனத்தையுந்தவளிச்சண்டையை வேண்டாதவனானாலும்வலக்கிஷக்கிறமமாகக் கட்டுப்பட்ட ராஜாக்களுடைய சுபாவ குணமாகிய ஆண்மையான சேவகமே அஞ்ஞானமென்கிற வகையினாலே உன்னைச்சேர்த்து நான் சொல்லப்பட்ட பெரியசண்டைக்கே புகுதப்பண்ணும்-எ-று. ௪௯

பொறிகளுண்ணின் றவற்றின்புணர்ப்பெலா
மறியவாட்டினன் போலவராக்கைகள்
வறிதுநின் றுதன் மாயையினால்வினைக்
குறிகள்செய்விப்ப னீசனென்றேகொள்வாய்

இ-ள், சகல சீவன்களுடையவிஷையங்களுக்குள்ளே நின்றுஅந்தவிஷயங்களுடைய பொருத்தமெல்லாமறிய ஆட்டுகின்றவனைப்போலத்தன்னுடைய மாயையினாலே அவர்களுடைய சரீரங்களானவை விருதாவாகநின்று கருமத்தினுடைய குறிகளைச் செய்யப்பண்ணுகின்றவன் ஈஸ்பரனென்றே யறிந்துகொள்வாய் எ-று * இவ்வ சேவகம் வேண்டாமென்றிருந்தால் ஈஸ்வரனுடைய ஆக்கியாசக்கரந் திருப்பாமல விடாதென்பது கருத்து.] ௫0

வேறுபட்டொரு வற்குவிளம்புவ
மாறுபட்ட பொருளின்வகையெலாங்

கூறப்பட்டதுனக்குக்குறிகளை
யேறப்பார்த்துனக்கேரியவைசெய்வாய்

இ-ள், வேறுவசப்பட்டஒருவருக்குச்சொல்லாமல்விலக்கப்பட்டரகசியமான பொருளினுடையவகையெல்லாம்உனக்குச்சொல்லப்பட்ட இந்தக்குறிகளையுனக்கேறப்பார்த்துப்பொருந்தினபடிசெய்வாய்-எ-று, ஏறப்பார்த்தலாவது துமனங்கொள்ளவிசாரித்தல் ௫௧

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்,

தீதலாதனவுளவோவினவேண்டிலெனத்தேரி
யோதலினுனினைத்தலினுலெனைப்போக்கியொன்றறியா
யாதலினுலியாவர்களுமறியாததொருபொருளைக்
காதலினு லுனக்கின்னமுறைக்கின்றேன்கடைப்பிடிநீ

இ-ள், இவன்வேண்டினுற்போகாதபொல்லாங்குண்டோவென்றுமனதுதேறிழதுகிறதினுலுமநினைக்கிறதினுலும் யென்னைத்தவிரவேறொன்றையறியானுகையினுலே யெல்லாருமறியாத ஒருபொருளை ஆசையினுலேஇன்னமுனக்குச்சொல்லுகிறேன்அருச்சுனுமறவாதகடனுக்கொள்ளுவாய். எ-று. ௫௨

யென்னையேநினைந்தெழுவுன் மனத்தினைஎன்னிடையேவைத்
தென்னையேநினைந்திருமற் றென்றனக்கேபூசனைசெய்
என்னையேகுருவாக்கொள்ளுதி செய்யிலெப்பொழுது
மென்னையேவந்தடைவரிது மெய்யென்றுணர்நீயே,

இ-ள் என்னையே நினைந்தெழும்புஉன்மனதைஎன்னிடத்திலேவைத்து என்னையே நினைந்திரு எனக்கே பூசனைசெய் என்னையே குருவாகக்கொள்ளு இதை வேருகிலுஞ்செய்தாலெப்போதும் வந்துஎன்னையேசேருவார் இது மெய்யென்றறி அருச்சுனு நீ, எ-று, ௫௩

இருவேறுவகையாய வெவ்வேறுவினைகளையு
மருவேனென்றறவிட்டு மாயையினுன்மறைப்பரிய
வொருவனையேபற்றுதியேல் பற்றினைக்காலுனைபபிறவிக்
கருவேரைக்களைந்தேறக் கைதருவேன்சதிர்வேலோய்

இ-ள். இரண்டுவிதமாய் வேறுபட்டதாகிய பலவான் எந்தக் கருமங்களையும் கூடேனென்று அறிவிட்டு மாயையினுலே மறைக்க அரிதாகிய வேகமான என்னையே சரணமடைந்தால் உன்னை பலையப்பண்ணுகின்ற பிறவியினுடைய கெற்பவேரைப் பிடுங்கி மோட்சக் கரையிலேற நான் கைகொடுப்பேன் பிரகாச ''ள்ள வேலைத்தரித்த அருச்சுனு.எ-று

மற்றுனக்குச்சொல்லினவிம்மறைப்பொருண்மா தவமிலர்க்குங்
குற்றமறுத்தறிவருளுங்குருவழிபாடிலாதவர்க்குஞ்
செற்றமனச்சுழக்கினர்க்குமென்னை நினையாத்திரத்தவிர்க்கும்
பற்றமதத்தெரிந்துரைக்கவையடாதென்றேயரிகண்டாய்.

இ-ள் மற்றப்படி யுனக்குச்சொன்ன இந்தரகசியப் பொருளைப் பெரியதவமில்லாதவருக்குங்குற்றமான அஞ்ஞானத்தைதீர்த்துஞானத்தை கொடுக்கப்பட்ட குருவைப் பூசைப்பண்ணவில்லாதவருக்குங் கோபமுடைய மனதுள்ள பாவிகளுக்கும் என்னை நினையாத சாமியகருமிகளுக்குஞ் சமயமறத்தெரிந்து சொல்லுகின்றது ஆகாதென்றறிவாய் கண்டாயருச்சுனா, எ-று * (சமையமாவது அவர்களுடைய குற்றந்தீர்ந்தசமையம்) ௫௫

எல்லாப்பொருட்கும்பரமாமிப்பொருளையென்னப்பகர்க்கிசையச்
சொல்லாற்றெரிவிப்பார்தம்மையறியச்சொல்லவேண்டுமோ
நல்லார்களின்மறறெனக்கினியநன்மைசெய்கின்றாருமவ
ரல்லாதவரிப்பொழுதிலலைமேலுமுவருமுளராகார்

இ-ள். எல்லாப்பொருளுக்கு மேலான இந்த அருத்தத்தை என்னுடைய பக்தருடைய மனதுக்கிசையச் சொல்லினாலே தெரியப்பண்ணுகிறவர்களை அறியச்சொல்ல வேண்டுமோ அருச்சுனா வுலகத்திலுள்ள நல்லவர்களிலெனக்கின்பமான நன்மை செய்கிறவர்களும் என்னை அடைகிறவர்களும் அவர்கள் அல்லாதவர்கள் இப்பொழுது எனக்கு நல்லவர்களுமல்ல ஆசையால் அவர்களிருந்தாலும் இல்லாதவர்கள்இனிமேல் அவர்களுள்ளவர்களாகார் எப்பொழுதுமில்லாதவர்களே, எ-று.

ஏயவிருவோம்பேசியிவ்வறநூலினையேயெடுத்துரைப்ப
நாயஞானயோகத்தாலென்னையேயாராதிக்கின்றான்
மேயபொருமைதனைவிட்டுவிருப்பாலொக்கக்கேட்பாலுந்
தீபவினைகளறவிட்டுத்தேவருலகஞ்சேருமால்

இ-ள். நாமிருவரு மிசையப்பேசின இந்தத் தருமசாஸ்திரத்தையேயெடுத்துச்சொல்லுகிறவனும் நிறைவேறிய ஞானயோகத்திலென்னையே பூசிக்கிறவனும் மனதிலே சேர்ந்த பொறுமையை விட்டு ஆசையினாலே மனது ஒத்துக்கொள்ளக் கேட்கிறவனுஞ் சொல்லுகிறவனும் பொல்லாதபாவங்களை அறவிட்டுத் தேவர்களுடைய உலகத்திலே சேருவார்கள். எ-று- ௫௭

கலி நிலைத்துறை.

என்னதுமொழியினனியம்பியஞானத்தாலே
மன்னவவுனக்குறுவன்மயக்கெலாங்கெட்டதேயான்
சொன்னவிப்பொருள்களெல்லாந் துணிந்தனைகொல்லோவொன்
றன்னகைகூறநின்றுநாயகனருளிச்செய்தான். [று

இ-ள், என்னுடைய வார்த்தையினால் நான்சொன்னஞானத்தாலேரா ஜாவே உனக்குவலிய அஞ்ஞானமெல்லாம் நாசமாயினவோ நான்சொன் ன இந்த அர்த்தங்களெல்லாம் ஏகமனதுடனே கேட்டுநம்பி நிச்சயமென் று துணிந்தாயோவென்று நல்லசிரிப்புச்சிறக்கத் தேரிலேநின்றுகர்த்த னாகிய ஸ்ரீகிருஷ்ணசுவாமி அருளிச்செய்தார்-எ-று, ௫௮

கலிவிருத்தம்,

மன்னவவென்மாயமது சூதன்மறைநூலின்
முன்னவமொழிந்ததிரு வாய்மொழிகளாலே
என்னகுறையுண்டினி யுனக்கெனவியம்பத்
தன்னகமகிழ்ந்துயர் தனஞ்சயனுரைப்பான்

(இ-ள்) இராஜாவே யுனக்கினியென்னமயக்கம் இனிஎன்னகுறையுண் டென்று பரவாசுதேவனாகிய ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி வேதசாஸ்திரங்களை முன்னேதிருவாய்மலர்ந்தருளினவார்த்தைகளினாலேசொல்லத்தன்மன துசந்தோஷமாகிக்கீர்த்தியாலுயர்ந்த அருச்சுனன்சொல்லுவான்-எ-று

பையரவினிலேயினிது பள்ளியமாவோனே
மையமுமிவ்வையமதின் மன்னுயிர்கள்யாவுஞ்
செய்யவினையற்றது சிதைத்தலதுதானு
மெய்தெரியினீமுன்விளை யாடும்வகையன்றோ.

(இ-ள்) படத்தையுடைய பாம்பின்மேலே சுகமாகப் பள்ளிகொள்ளு கிற சுவாமிபிரபஞ்சமும் இந்தபிரபஞ்சத்தில் வாசமான சகலசீவன்க ளும் உண்டாகச்செய்த தொழிலுள்ளது அழித்தல் இஃதிரண்டும்மெ ய்யாகத்தெறிந்துபார்க்கில் நீமுன்விளையாடப்பட்ட விநோதமல்லவோ -எ-று. ௯௰

அணித்தகையசோதியே மலாவுன்னருளாலே
கணித்தலரிதாயபிர விக்கடல்கடந்தே
பிணித்தபெருமையைமலங் கெட்டதுபிரானே
பணித்தபணியல்லது செயப்படுவதுண்டோ.

இ-ள். அழகியசுபாவமான பிரகாசமுள்ள நிர்மலமாகியசுவாமிஉம்மு டையகிருபையினாலே கணக்கிடப்படாத பிறவிக்கடல்களைக்கடந்தேன் இந்தப்பிறவிக்கடல்களிலே என்னைக்கட்டி விழப்பண்ணின பெரிய மா யையினுடையவிசாலமானது நாசமாயிற்றுஎன்னுடையகர்த்தனே நீர் கட்டளையிட்ட ஏவலையல்லாமல் வேறுயேவல்செய்யப்படுவதுண்டோ இல்லை -எ-று *[ பிறவிக்கடலைக்கடக்கவேமோக்ஷக்கரையேறினேனெ னவும் மாயையைநாசமாகவே ஞானம்பெற்றேனெனவுஞ் சந்தேகந்தீர்ந்து கிருதார்த்தனானேனெனவு மருத்தாபத்தி.] ௯௧

மையமுழுதுண்ட திருவாய்மொழி திறந்திட்
டுய்யவடியேன் முனைசெய்தவுமையமேலே
ஐயமுமகன்றதனவாகுமறவிட்டேன்
செய்ததினியுந் தனருளிச்செயல்களன்றோ,

(இ-ள்)பிரபஞ்சமெல்லாவற்றையும் போசித்தருளியதிருவாய்மொழியைத்திறந்து அடியேன்மாயைவிட்டுத்தப்பிப் பிழைக்க அடியேன்முன்னேயருளிச்செய்த திருவார்த்தையினாலே சந்தேகம்போயிற்றுஎன்னுடையசுயமாகவிசாரிக்கிறதருமபாலவிசாரணையையுஞ்சுகதுக்கசம்பந்தமாகஅறவிட்டேன்இனி உம்முடைய அருள்வாக்குச் செயல்களேயல்லவோ அடியேன்செய்து-எ-று,*அற்புமறவிட்டேனென்றுபாடமோதில் என்னவர்களென்றவர்கள்மேல்வைத்த அன்புவரவிட்டேன்பதுகருத்து

வேறு,

தோன்றுதனவுந்தோன்றவையுஞ்செய்யுந்
தொழினிமித்தமாய்த்திகழுஞ்சூழ்கதிரோன்போதச்
சான்றுசிநின்றதனைத்துங்கரணங்கள்செய்யுந்
தகைமகளுக்கெல்லாந்தனிநிமித்தமாகி
வான்றுனெனவோர்வடிவின்றியொத்து
வரம்புசூழ்ந்துநின்றுவிம்மன்னுயிர்களெல்லா
மீன்றுலுங்காத்தழித்தல்செய்தாலுமுன்
னிபல்பொடிமாறுகாததெவ்வகையோவெர்தால்

இ-ள், நினையாததை நினைப்பிக்கிறதுசத்தபரிசரூபரசகெந்தமென்கின்ற ஐந்துகாரியத்துடனே செய்தொழிலொன்றுந் தொழில் நிமித்தியமாயெங்கும் பிரகாசிக்கும் சூரியனைப்போல சாக்ஷியமாயிருந்துமனம்புத்திசித்தம் ஆங்காரமென்கிறகரணங்கள்செய்யுங் காரியங்களுக்கெல்லாந்தானிமித்தமாகிக் கூடிவாழ்கின்றவன்என்றும் ஒருவடிவுமில்லாமல் ஞானயோகத்தினாலே யெதுவுஞ்சேராமல் இருக்கின்றனென்றுமன்னுயிர்களையெல்லாம் காத்தழித்து உண்டாக்குகின்றது முன்னுடையவியமினாலே ஆகின்றது அல்லாமல் பின்னையொன்றினாலேயு மாகின்றதில்லையென்றுசொன்னார் அருச்சுனராசன்-எ-று. ௯௩

எரிபாயதவனுக்கு வெம்மைதானே
வடிவாகியிருந்தப்போலியாதுமொன்றுந்
திரியாதமெய்யறிவினுருவாயேதுந்
திரியாமையெவ்வடிவாக காணப்படாவும்
பிரியாதுநினைப்பற நின்னைவித்தம்
பெருந்தொழில்கள் புரிகின்றபெற்றிகண்டாய்
கரியானதடிமைத் திறமைபூண்டு
காதலியாற்கியலாத கருமமுண்டோ

இ-ள். அக்கினிக்கு வெம்மையானது வடிவாயிருந்தாற்போலே எதிலேயுஞ்சேராமல்மெய்யறிவினுருவா யெதுவுந்தெரியாமல் இருக்கிறவடிவானவனேயென்றுங் காரணமெல்லாம் பிரியாமலுன்னைத் தியானித்தியானித்திருந்தபேர்க்கு ஊரானவனேயென்றும்பெருந்தொழில்கள்செய்கிறபேர்க்கு மரியவனேயென்று முனக்கடிமைபூண்டுபத்திசெய்தபேர்க்கு நினைத்தகாரியமெல்லா மாகுமென்றுசொன்னார் அருச்சுனராசன் எ-று, ௬௪

நாலுவிதமாக்கரணங்களேனு
நலுகாதவுருவினருய்ந்தபுதன்களேனுங்
காணுறுதனிலுழலுங்கரணங்கட்கெல்லா
காரணமாயநின்றவர்கள்காணுகின்றவெல்லாந்
தானுகும்வகைகாட்டியகரணந்தோறுந்
தனிததனியேநின்றுகலையளியாநின்று
யானுமுன்னையனவயோதுமெனறு
மறியாதவகைநிற்பதெவ்வகைநீயையா

இ-ள், நாலுவிதமானவெல்லாஞ் சேர்ந்தரூமுண்டானவனேயென்றும்நல்லபுலன்களென்கிற காட்டிலேயுழலுகின்றகரணங்களுக்கெல்லாமகாரணமாய்நின்றவனேயென்றும் கரணங்கள் காணுகின்றவெல்லாந்தானுகின்றவகைகாட்டினவனேயென்றும அந்தக்கரணங்கள் தோறும்பிரமபு பிறம்பாயிருந்து அறிவைத் தராமலிருந்தாயானு லுன்னைக்காரணங்காரணங்களேது மறியாவென்றும் தேவரீரிருக்கின்றவகைஇந்தவகைஅறியாதென்றுஞ்சொன்னார் அருச்சுனராசன்-எ-று, ௬௫

ஆடியினில்வேறுபடத்தோன்றுகின்ற
வந்நிழலுமுணர்வினுலுணர்ந்துபார்கிற்
கூடியவன்னிழல்போக்கிவேறில்லாமை
குறியமேலநிகழ்ந்தாற போற்குணங்களாலே
தேடியவிவ்வுடலேறுந்தோறுதித்தோன்றிச்
சிவனுய்த்திகழுகின்றநிகழ்ச்சிதானும்
பாடியவிம்மறைநெறியேயுணர்ந்துபார்க்கில்
நீயல்லாவகையுண்டோபரமயோகி

இ-ள், கண்ணாடியிலேவேறாய் காணுகின்றநிழலை அறிவினாலே அறிந்து அந்தநிழலைப்போக்கிவேறில்லாமல் குறிப்பினாலேநீசொன்ன ஞானமார்க்கப்பிரகாரம் பார்ககால் மூன்றுவிதகுணத்தினாலேவந்த சகலதேகங்கள்தோறும பிறந்து சீவனாய்த்திரிகின்ற இகழ்ச்சியெல்லாம் உலகத்திலே உன்னையல்லா மல்வேறே வகையுண்டோ பரமயோகியென்றும் சொன்னார் அருச்சுனராசன். எ-று. ௬௬

செறிவாகுமாடியிலா திடத்திலாங்கே
திகழுகின்றமுகநீழற்செய்கைதானும்
பிறிவாகிவேறுபடத் தோன்றாதேமுன்
பேசுகின்ற முகமேயாய்ப் பேதமகன்றாற்போ
னெறிவாழுங்கரணங்களெல்லாமேய்த்து
நீயேயாயொழிவின்றி நித்தியாகி
லறிவானுமயபொருளு மன்றியொன்றே
யாயருக்குமதுவேநின்னியற்கையாதி.

இ-ள், கண்ணாடியிலேகண்டமுகத்து நிழலுடையசெய்கையைப்பிரிவாய்வேறாகவெண்ணாமல் துலக்கமானகண்ணாடியில்லாத இடத்திலே இருக்கின்றமுகமும்போலப்பேதமில்லாமலும்செறிவாழுகின்றக்கரணங்களல்லாமலும்போக்கிநீயேயாகி ஓழிவில்லாமல்நித்தியமாயறிகிறவனும நிந்தபொருளானவஸ்துவும் பிறமபும்இல்லையொன்றாகவிருக்கின்றது மதனுமேலேஉன்னுடைய இயற்கையென்றுமாதியாயிருக்கின்ற வனேயென்றுசொன்னார் அருச்சுனராசன். எ-று, ௯௭

ஆதித்தன்றானொருவனாகிநின்றே
யகன்றாறுமமர்ந்திருன துதனல்கடோறும்
பேதித்துப்பலவாகித்தோன்றினாற்போற்
பிறிதின்றிநீயேயாயப்பிணக்கிறந்துநின்றே
வாதித்தமதியாகிகரணந்தோறு
மற்றவைபோற்றோன்றுகின்றமாயவனேமெய்மை
சோதித்துநின்பெருமைசொல்லுதற்குமேலைச
சுருதிகடாமல்லவோசொல்லிறந்தசோதி

இ-ள், சூரியனானவன்ஒருவனாகயிருந்தும்வீடுதோறும்வைத்திருக்கிறகுடத்துத்தண்ணீர்கள் தோறும்பலவாய்கண்டதுபோலப்பிரியாமலேக்கும்நியாயசாந்தமடைந்துன்பித்தனைப் போல்ஏகமாய்காரணங்கள்தோறும் காணுகிறமாயனேயென்று உன்னைச்சோதித்துஉன்பெருமையைச்சொல்லுதற்குச் சுருதிகளாலுஞ்சொல்லமுடியாது சொல்லிறந்தசோதியென்றுஞ் சொன்னார் அருச்சுனராஜன்-எ-று, ௯௮

நிலையொன்றிச்சலிப்பின்றி யொருவனேயாய்
நின்றாலும்வானிரவி நிழறன்னாலே
யலையொன்றுநீரோடே யலைந்துமற்றுங்
கசலமாநீரதனோ டசலமாயுந்
தலைநின்றுவரும்படி போலடிவுதோன்று
மவற்றுக்குத்தகநிற்குந் தகையோவுன்னை
கலைநின்றமறைதெரியவல்லவாகக்
காட்டுவதுஞ்சிலர்கண்டா லாவதென்னா.

இ-ள், நிலையில்லாமலு மசைவில்லாமலும் எங்கும் பரிபூரணமாய்ஒருவகையா யிருந்தும் ஆகாய மெல்லாம் நிறைந்து மநீராய

ரோடேமலைச்சேர்ந்து கலந்து புன்னையமிந்தப்புவன மெல்லாம் அழி த்துப்போய்நீர்மேலாகவிருந்தபிறகு சேலுருவாய் உண்டாகியதிலேயு ம் பொருந்தியிருந்தும் உனக்குத்தடையுண்டோ வென்றும் வேதாகம புராணசாஸ்திரங்களினலேயும் உன்னை யரியப்போமோவென்று அப் படிகளொர்த்தமகிமையைக் கருமிகளுக்குக் காட்டுகிறதென்னவென்றும் அவர்களைக்கண்டு ஆவதென்னவென்றுஞ் சொன்னார் அருச்சுனராசன் எ-று. ௬௯

ஓரொன்றலன்றியே யுலகிலுள்ள
 வருபொருள்களனைத்தினையு மொருகாலத்தே
சீரொன்றநின்றகதி ரிரவிகாட்டுஞ்
 செயல்போலயாவர்களுஞ் செய்வினைகளெல்லாம்
மாரொன்று நின்றதிருழியானே
 யருங்காலமொன்றிலறி வித்திடதியென்று
நேரொன்றுயுனையொழிந்து செய்கின்றாய்நீ
 நிற்கின்றவருளுடைய நிலைமையென்னே

(இ-ள்) பூலோகத்தி லுண்டான சீவராசிகளெல்லாவற்றிற்கும் மேக மாயிருக்கிற சூரியன் மத்தியானத்திலே கண்டதை மறந்து இராத்திரிக் கு இருள்காட்டினதுபோல எவர்களுஞ் செய்கிற வினைகளெல்லாம் நீ யேயென்று ஏகமாயிருந்து சங்குசக்கரத்தைத்தரித்தவனே யென்றும் ஓரேகிறகாலத்திலே யறிந்து கிருபைபண்ணுவா யென்றும்ஒரு தேரின் மேலிருந்து முலகத்திலே சஞ்சரிக்கிற சூரியனைப்போலிருக்கிற ஞான வான்களிடத்திற மென்னமோ அறியே னென்று சொன்னார் அருச்சுன ராசன்-எ-று. ௭௰

அலாகதிரோன்காட்டியவெப்பொருளுங்கண்டாய்
 காணொழியப்பொருளைவிழி யறிகிலாயோ
லீலதுறும்வெங்கிதர்காட்டறகேதுவாகி
 யியாதொன்றுங்காட்டுமது தானுமொன்றாய்
நிலைவுறுமப்பொறியதுநின்வடிவமென்று
 நிறையினுன்மறையின்முடி விறந்ததேனு
முலகறியக்குழலூதி நிரைகண்மேய்க்கு
 முரவோனேயாருன்னை யுணர்கிற்பாரோ

(இ-ள்) பிரகாசம்பொருந்திய சூரியனலே சகலமானபொருளும் கா ணப்படுமென்று அந்தசூரியனையல்லாமல் சகலபொருள்களையும்விழிய றியாதென்றும் அந்தவகைபோலயெங்கும்வியாபகமாயிருக்கிற வஸ்து வேயென்றும் போகமாயிருக்கின்றபோறிவார்கள் அப்படியறிகிறபேர் உன்னுடைய வடிவமென்றும் நிதானமாய் வேதத்தி னுடைய முடிவு சொன்னதினலே உலகத்தார் அறிய ஆயக்குழலூதிப் பசுக்களைமேய்க் கிறவனே யென்றும் லோகத்திலே உன்மகிமையை ஆரறியப் போகிறு ரென்றுஞ் சொன்னார் அருச்சுனராசன்-எ-று, ௭௧

விண்ணினாற் கின்றமுகிற் படலமுடத் தன்னுடைய
விழியதனை மறைப்பமேற்போய்க்
கண்ணினா லூடுருவக் காண்கிலாதான்
கதிரோனை யொளியிலனாய்க்கருதினாப்போ
லெண்ணிலாதவர்களெலா முன்னை மெய்யே
யிறந்துபிறந் துழலாதிநீயென்றுகொள்ளப்
பண்ணினாயுன்னுடைய பான்மைபார்க்கிற்
பற்றுண்டோ வீடுண்டோபரமமூர்த்தி.

(இ-ள்) ஆகாயம்போல மேகப்படலமானது தன்னுடையகண்ணைம றைத்தபிறகு கண்ணினாலே யூடுருவப் பார்த்தபேர் சூரியனை மறைத்த தாக நினைத்ததுபோல உன்னைத்தியானம்பண்ணுகிறதற்கு அன்பில்லா தபேரெல்லாரும் பிறந்திறந்துழல்கின்றாரனேகரென்றும் உன்னுடைய மதியைப்பார்க்கி லுனக்குபற்றுண்டோ வீடுண்டோபரமமூர்த்தியென் றுஞ்சொன்னார் அருச்சுனராஜன்-எ-று, எ௨

உலவாதபெருவானவெங்குந்தானே
யூடுருவிநின்றாலாங் கதனோடொன்றுங்
கலவாதவகைபோலி லுலகமெங்கும்
கலந்துணையாகநின்றாலுங் கணிவற்காகாப்
பலவாய்வுலகங்களுன்னோடொன்றும்
பற்றாதவகைநின்றபரிசுகண்டாற்
குலவாயமகனாகியளைநெய்யுண்டு
கோகுலமேயதிடுவதற்குக்குறைபாடுண்டோ

(இ-ள்) விஸ்தாரமான ஆகாயம் அசைவில்லாயலெங்கும் வியாபித்து வூடுருவியிருந்தாலும் அததோடே யொன்றுஞ் சேராது அந்த வகை போலனுந்தஉலகமெங்குங்கலந்துநிறைந்திருந்தாலும்பலவிதமானவுலக ங்கள்நின்னோடே ஒன்றுஞ்சேராது ஒன்றுஞ்சேராமலிருக்கிறவராகக்கு ஆயர்குலமகனாகி ஆநெய்யுண்டு பசுக்களைமேய்த்தானென்றால்குறையு ண்டோவென்று சொன்னார் அருச்சுனராசன் . எ-று. எ௩

விடுத்ததொழிலினவாகி நின்றபேறும்
வேறுசிலகூடுதலால் விகாரம்போன்றிட்
படுத்ததுகாட்டும்பளிங்கு நீரினோடே
யலைகின்றவவிர்மதியம் போலவாங்கே
கொடுந்தமனமுதலாய காரணந்தோறு
மாக்கவற்றின் தொழில்புரிவா யாகித்தோன்றுங்
கடுத்திரலாழியுங்கை யுடையாயுன்னைக்
கண்ணினாற்காண்கின்றார் கண்டபரிசுண்டோ

(இ-ள்) ஒருகாரியஞ்செய்யாமல்விட்டு விட்டு இருந்தாலும்மனமுத லான கரணங்கள் வேறொன்று அத்துடனேயும் சேருகிற தினாலே விகாரஞ் சனிக்கும் அதெப்படியென்றால் . பளிங்கிலடுத்தது

காணுகிருப்போலவும் நீரிலேயுற்றசந்திரனைப்போலவும் மரணங்களைக் கொண்டு அதினுடைய தொழில்செய்விப்பாயென்றுஞ் சங்கு சக்கரத் தைத்தரித்தகையனேயென்றும் கண்ணினாலே காண்கின்றபேருக்குச்ச மான முண்டோவென்றுஞ்சொன்னார் அர்ச்சுனராஜன் ௭௪

பொற்புடையகுடத்துவிளககொன்ருய்நின்ற
புகழ்தோறுமலவிளக்கேபுலனும்வண்ணம்
பற்பலவாமெனத்தோன்றும்பரிசுபோலப்
பரிசோதித்தெழுந்துள்ளபற்றினாலே
நிற்பனவாநடப்பனவாமுடம்புதோறு
நின்ருப்போலிருக்கின்றநிலைமைகண்டா
லற்புதம்வேறினுண்டோமாயாவுன்னை
யாராயாவறிவுடையோர்க்கறியலாமே

(இ-ள்) சல்லடைக்கண்போலிருக்கிறகுடத்திலே ஒரு தீபம் வைத்து ப்பார்க்கப்பார்க்க நிதானப்படாமல்பலபலவாய்க்காணும், அவை போல அன்பில்லாமல் மனவழுக்கினாலே பிறந்தசராசரங்களாய்ப் பிறந்திருக்கி ற ரூபங்கள்தோறும் வியாபித்திருக்கிற நிலைமையைக் கண்டால் அற்பு தமான அதிசயம் வேறேயுண்டோவென்றும்மாயவனே உன்னை யறிவி னாலேஆராயாதபேருக்கு அறிவிப்போமோவென்றுஞ்சொன்னார் அரு ச்சுனராசன்-எ-று. ௭௫

கதிரொளியைக்கண்காணுக்கண்ணிலுள்ள
காசதிமிரங்களையந்தக்கதிரோன்காணு
மதிசயமேயெனவுன்னையுலகுகாணு
வவ்வுலகைநீகாண்டியாதலாலே
விதமொழியுஞ்சாஸ்திரமுந்தெரியமாட்டா
மெய்ப்பொருளேயுனைக்காணவேண்டிமேலாந்
துதியெனநின்றவைசொல்லிமலர்கடுவிச
சுரர்கணமுமுனிக்கணமுந்துதிப்பதென்னே

இ-ள், சூரியப்பிரகாசத்தைக்கண்ணறியாது, கண்ணிலுண்டான கா சபடலத்தை அந்தச் சூரியனறிவான், அவைபோல அதிசயமான உன் னை உலகமறியாது அந்தஉலகைநீயறிவாய், அவையல்லாமல் வேத சா ஸ்திரமும் உன்னைக்காணமாட்டாது, உன்னைக்காண மெய்யான வஸ்து வேயென்றுந்தேவகணங்களும் முனிகணங்களும் மேலானஸ்துதி பண ணி புட்பங்களினாலே அருச்சுனை பண்ணுவார்களென்றுஞ் சொன்னார் அருச்சுனராசன்-எ-று. ௭௬

எழுசீரடியாசிரியவிருத்தம்.

பிணிக்கு பிறவிப்பெருங்கடலையைப்பெயர்த்தன்பெரும்பேதைமைநோயை
த் தணிந்தவாசேயெனக்கதுதான்றகாதே யாகத்தகுமாகத், துணித்த

விறல்வன்போரினையே துடங்கென்றனீரெனக்கிங்குப், பணித்தபடியே செய்வனெனப்பார்த்தனவனு முடன்பட்டான்.

இ-ள். கடினபிறவியாகிய பெரியவிலங்கையறுத்துநீக்கினேன்பெரிய அஞ்ஞானமாகிய வியாதியைத் தீர்த்த கர்த்தனே எனக்கு அந்தச்சண்டையாகாததே, ஆனதாகட்டுமெப்படியானாலுந் துணிந்தாகிய வெற்றியுள்ளபெரியசண்டையையே துடங்கென்று நீரிங்கே ஏவினபடியே செய்வேனென்று அருச்சுனனுஞ் சம்மதித்தான்-எ-று, ௭௭

கலிவிருத்தம்.

மாதவனுந்தனஞ்சயனுந்தங்களிலேமகிழ்ந்துரைத்த
வோதரியபொருளினை நீயுணர்ந்தவாறெங்ஙனெனில்
வேதவியாசனுடையமெய்யருளைமிகவுடையே
னாதலினாலறிந்தனன்வேறறியலாம்வகையுண்டோ

(இ-ள்) ஸ்ரீகிருஷ்ணசுவாமியும் அருச்சுனனும்தங்களிலே இப்படி சந்தோஷப்பட்டுச்சொன்னதை யாவராலுஞ் சொல்லவரிதான அர்த்தத்தைநீயறிந்தவழி யெந்தவழியென்று கேட்பீராகில்சொல்லுகிறேன் கேளும் திருதராட்டிரமஹாராசாவேயென்று (சஞ்சயன்) சொல்லுகிறான் (வேதவியாசமகாமுனியினுடையசத்தியமானகிருபையைமிகவுமுடையவனானபடியினாலே (அறிந்தேன்) அவர்கிருபையல்லாமல் வேறுவிதங்களிலே அறியலாகும் வகையுண்டோயில்லை-எ-று. ௭௮

அப்பொருளினைநினைந்தோறுமற்புதமாமகமகிழ்வு
மெய்ப்பொழுதுவருமவன்றானிருக்கின்றவகைவிரித்த
வொப்பரியதிருக்கோலமுணர்தோறுமுணர்தோறுஞ்
செப்பரியபெருக்களிப்பின்சிந்தையிலேசிறக்குமால்

(இ-ள்) அவர்களிருவரும்பேசிக்கொண்ட அந்த அருத்தத்தை நினைக்கிறபோதெல்லாம் ஆச்சரியமான ஆனந்தமும் நிஷ்டையுமெப்போதும்வருகின்றன அந்தக்கிருஷ்ணசுவாமி தாமிருக்கிற விராட்டுரூபவகையைவிரிவாகக்காட்டின ஒப்பில்லாத விசுவரூபமாகிய திருக்கோலத்தை அறியும்போதெல்லாம் என்னுடையமனதிலே, சொல்லஅரிதான பெரியமனக்களிப்பு மேன்மேலுமதிகமாகிறது-எ-று, ௭௯

எஞ்சலிலாப்பொருளதனையிப்படியேபுகன்றேனச்
சஞ்சயனின்றெடுத்துரைத்த நூற்றுவர்கட்குத்தாதையாய்
வஞ்சனையேகண்ணாகவாழ்கின்றானமற்றிவர்க்குப்
பஞ்சவரேவலியவரென்றிவ்வண்ணம்பகரலுற்றான்

இ-ள் குறைவில்லாத இந்த அருத்தத்தை இந்தப்படியே நடந்ததென்றுவகையாகவெடுத்து நின்றசஞ்சயன்சொல்லக்கௌரவர் நூறுபேருக்குந்தகப்பனாகிய முகத்திலேகண்ணில்லாமல் வஞ்சனையேகண்ணாகவாழ்கின்றதிருதராட்டிரனை இவர்களாகியகௌரவர்க்குப் பாண்டவர்களான பஞ்சவரேவலியவர்களென்றறிந்தபடிசொல்லுகின்றான்-எ-று. ௮௰

கலிவிருத்தம்

திருவறநீதிசெயம்புகழெல்லா
மருவருமாயைசெய்மாதவன்வாய்மை
தருமமவிடாததனஞ்சயனென்று
மிருவருகின்றவிடத்தனமென்றான்

இ-ள், அழகுள்ள நயம்நீதிசெயம் கீர்த்தி இதுவெல்லாம் எங்கேயி
ருக்குமென்றால் யாருங்கண்டுகூடப்படாதமாயைசெயயப்பட்டஸ்ரீகிரு
ஷ்ணசுவாமிசத்தியத்தையுங் கருமத்தையும் விடாத அருச்சுனனென்று
சொல்லப்பட்ட விருவரும் நின்றவிடத்திலிதுவெல்லாமிருக்குமென்
றான்-எ-று, ௮௧

என்றபொருட்டிறமிப்படியென்றக்
குன்றமெடுத்தருளகொண்டலமணிப்பான்
வென்றகுலத்தின்வியாசனவிரிப்பா
னின்றவருக்கிதுபோபடவன்றே

இ-ள், என்றுசொல்லப்பட்ட பொருளினுடைய வகையை இப்படி
யென்று அந்தகோவர்த்தனமலையை எடுத்துக் குடையாகப் பிடித்தும
மழையைத்தடுத்துப்பசுக்களையுமிடையரையுங்காத்தசொரூபமான ஸ்ரீகி
ருஷ்ணசுவாமி சொல்லுவார் அவர் சொன்னதை யெல்லா குலத்துக்கு
மேலான வெற்றிபொருந்தியபிர்மரிஷியாகிய வேதவியாசமகாமுனிவிரி
வாகப்படுவாரிவர்களிருவருமே உபதேசிக்கவும்பாடவும்வல்லவர்கள் அ
ல்லாமலிவர்களைத்தவிர நின்றமற்றபேர்களுக்கு இதுசொல்லவும் பாட
வுமுடன்படமாட்டுமோமாட்டாது-எ-று, * உடன்படல்மனதுக்கெடு
தல்) ௮௨

இதுவுங் கலிவிருத்தம்

வேதநூல்களின்முடிவினைவியாசனிற்பின்ன
ரோதநீள்கடலுலகிலுண்டாக்கியபுரவோன்
கோதிலாநெறியுணர்ந்தகோவிந்தமாமுனியின்
பாததாமரைபற்றிவிட்டின்பமேபடைத்தான்

இ-ள், இந்தவேதாந்தத்தைவியாசமகாமுனிக்குப்பிறகுகுளிர்ந்தநீள
முடையகடல் சூழ்ந்தவுலகத்திலுண்டாகி பெரியவராகொன்னில் குற்ற
மில்லாத முத்திமார்க்கத்தையறிந்த கோவிந்தமகாமுனியினுடையபா
தாரவிந்தத்தைத்தெப்பமாக பிடித்துப்பிறவிக்கடந்து மோட்சமாகியக
ரையிலேறி பிறவிக்கடலிலலைந்தக்கடலே அனேககாலவருத்தமுந்தீர்ந்து
ஆனந்த சுகத்தைப் பெற்றவர்-எ-று, ௮௩

கலிவிருத்தம்,

ஆற்றியல்வழுவியபுலன்களைந்தையும்
மாற்றியசங்கரபகவற்பாதனென்
றேற்றியபெயரினனருளினலியான்
சாற்றியதிப்பெருந்தமநூலையே

இ-ள், மோட்சமார்க்கத்தினுடைய சுபாவத்தைத்தவறின அஞ்சுபுல
ன்களையுமொன்று படச்செய்தவராகிய சங்கரபகவற்பாதனேற்றிவைத்

தபெபனாயுடைய கிருபையினாலே இந்தப்பெரிய தருமசாஸ்திரத்தை நான்சொன்னது-எ-று, அசு

அறுசீரடியாசிரிய விருத்தம்.

சேயமாமதுரைநின்றுஞ்செம்மையாய்ப்பாடிதேடி
யாயனாயமாயனார்தாமவதரித்தருளினாலே
போயனான்மொழிந்தகீதைபுலன்கடலடைந்தார்க்கன்றித்
தூயமாதவர்க்குமிந்ரசசுருதிநூல்கருதொணாதே

இ-ள், செவ்வியபொருமையுள்ள மதுராபுரியில் நின்றுந்திருவவதாரஞ்செய்தருளிச் செம்மையுள்ள திருவாய்ப் பாடிதேடி இடையனாய்ப் போய்க் கிருபையினாலே அந்த அவதாரகாலத்திலேஅருளிச்செய்த(கீதையானது) பஞ்சேந்திரியங்களை யடைந்தவர்களாலேநினைக்கலாம் அவர்களல்லாமல்மற்றசுக்ஷமான பெரியதவசுசெய்கிறவர்களுக்கு மிகுந்த வேதாந்த நூலேநினைக்கப்படாது-எ-று, அரு

தேற்பட்டகன்றுக்கன்றுசேய்தனைசசிலைகசோழற்கு
நாற்பத்திரண்டுஜனம்நன்மையைத்தறித்தலாலே
மேற்பட்டவேளானதிவேதாப்பட்டர்கானேனும்
பாற்பற்றபத்திதன்னாற்பரமார்த்தமுண்டாமென்றார்

இ-ள், தேரிலேயகப்பட்ட பசுக்கன்றுககுப்பதில் முன்னாலேபிள்ளையைத்தேரிலேகொடுத்தநீதிராசனாகியசோழனுக்கு அந்தநாள்முதல்நாற்பத்திரண்டு சென்மத்துக்கு நல்லதவமானபடியினாலேமேற்பட்டவேளான்குடிமுகல் வேதாப்பட்டாகானயேயவருடைய வுறுதியானபத்தியினாலேயுண்டானபரமார்த்ததெரிசனமென்றுஞ் சொன்னார்-எ-று,

கலித்துறை,

கட்டார்மயலிருட்காதபச்சோதிகலைநிசம்பி
எட்டாதுயர்ந்தின்பமாக்கலின்மாமதியெவ்வினையும்
விட்டார்கள்விட்டபின்வேதச்சுடரொளிமெய்யுணர்ந்த
பட்டாகன்னருளாம்பரமார்த்ததெரிசனமே,

இ-ள். உலகத்திலே யிருட்போன்றமயலைக் கட்டார்களென்றுமிருளணுகாதபுத்தியைச் சோதிப்பிரகாசமாய் எங்குமெட்டாமலுயர்ந்த இன்பமாகினபெயர் எந்தவினையும்விட்டுவிட்டவர்கள் விட்டபிரகுவேதச்சுடரொளியை மெய்யாயறிந்தபட்டாகனிடகிருபையினாலே அவர்களுக்குப் பரமார்த்த தெரிசனமென்றுஞ்சொன்னார்-எ-று. அஎ

( * )

௰அ-வது-உபநிஷத்துப்பிரதிபந்தனமோட்சயோகஅத்தியாயம்.

முற்றுப்பெற்றது

ஆக அத்தியாயம்-௰அ-க்கு-கூடியசெய்யுள்-ருஎக.

பகவற்கீதை மூலமும் உரையும்

முற்றுப்பெற்றது.

உ

சர்வம்விஷ்ணுமயம்ஜகத்,

## ஸ்ரீபகவற்கீதாமகுத்துவச்சுருக்கம்.

—(-)—

இவ்வுலகின்கண் சிறந்த மந்திரிகளுக்குள் முழுமந்திரிசுமந்திரன் முக்கால்மந்திரி சத்தியகீர்த்தி அரைமந்திரி பட்டி கால்மந்திரிஅப்பாசி இந்நான்குதரத்தாரில் கலியுகத்தில் மிகுந்தமதியூகியாகவும இராஜமந்திரியாகவும் சர்விஷயாநுபவகைவல்லியராகவும ஞானசூரியராகவுமிருந்த (அப்பாசிஎன்பவரை) ஒப்பற்ற முக்கியனென்றுகருதி அக்காலத்தில் அரசுசெலுத்திவந்த ஒருபாட்சாவானவர் சர்வசமயாங்கிகாரமாகவும் கியானபராளின் ஆட்சேபரகிதமாகவும் சுத்தாத்வித சுயமபிரகாச எதார்த்த ஆத்மஞானமோட்ச கைவல்ய திவ்வயக்கிரந்த மெதுவென்று விசாரணைசெய்துதமக்கு அனுப்பும் பொருட்டுத்தமது நகரத்திலிருந்து முஹராஞ்செய்தகடிதம் ஒன்றை அனுப்ப அதைக்கண்டு (அபபாசியானவர்) இவ்வுலகத்தின் வேதாகமபுராண காவியாலங்காரஸ்மிருதிகளிலும் விசேஷமுள்ளதென்றும் சமயகோடிகளினுடையதர்க்கநிவாரணசாட்சி பூதமென்றும் இருவினையகத்தி ஜீவாத்மாபரமாத்மாவிற் சைதன்யப்படும் கதியென்றும் மேற்படிபாட்சா வானவர் எழுதிகடிதலட்சணத்திற்குக் குறைவில்லாததென்றும் அதற்குமேலொருநூலுமின்றிஒப்பற்றவேதபரமரகசியமென்றும் பார்த்தன்ஃரிசனமென்றுமவிளங்காநின்ற (ஸ்ரீமத்பகவற்கீதையை அரபிபாஷையில் மொழிபெயர்த்து பாட்சா அவர்களுக்கு அனுப்பினார் அதுகண்டு மேற்சொன்னபாட்சாவானவர் இந்தஅத்வைதகிரந்தத்தை தம்முடையசமுகத்தின்நாற்றிசைமந்திரிகளுக்குங்காட்ட அதைமுகதிசைமந்திரிகளும திவ்யமென்றசங்கீகரிக்கமற்றோர்திசை மந்திரிமாத்திரம் தம்மதத்தைச்சாராமலிருக்கின்றதென்று அரசனுக்கறிவிக்க அரசன்சீர் தூக்காமல் (அப்பாசிக்குப்) பதிலுத்தரமெழுத அலஸ்யப்பட்டதால் மதியூகியாகிய (அப்பாசி) நுட்பத்தைக்கிரகித்துமறுபடியும்ஒருகடிதத்தில் (இப்பகவற்கீதையை) அலட்சியஞ்செய்தவன் நீசபீஜமாகயிருக்கவேண்டும் அவனுடையதுராட்சேபத்தினால் தமது அங்கீகாரகடிதம்வருதற்கு ஆலஸ்யமாயிற்றென்றுணர்ந்தேன் ஆதலால் அந்தச்சந்தேகத்தை நிவர்த்திசெய்துக்கொள்ளவேண்டுமென்று எழுதினார் அதைக்கண்டமாத்திரத்தில் பாடசாவானவர் அம்மந்திரியின்தாவின்வாய்மொழியால் அவன் நீசபீஜமென்றுஉண்மைதெரிந்துகொண்டு அவனைக்கண்டித்துப்போட்டு இந்தஸ்ரீமத் பகவற்கீதையைப்) பிரதிகாலம் பாராயணஞ்செய்து ஜீவனமுக்தரானார்

ஸ்ரீபகவற்கிதாமகுததுவம்-முற்றும்

பகவற்கீதை

# அத்தியாயங்களின் அட்டவணை.


| அத்தியாயம். | பக்கம். |
|---|---|
| பாயிரம | ௩ |
| ௧—சோக அத்தியாயம். | ௫ |
| ௨—சாங்கியோக அததியாயம், | ௰௪ |
| ௩—தேவபூசா அத்தியாயம். | ௩௫ |
| ௪—சம்பிரதாய அத்தியாயம். | ௪௬ |
| ௫—சந்நியாசயோக அத்தியாயம். | ௫௫ |
| ௬—அப்பியாசயோகஅத்தியாயம். | ௬௩ |
| ௭—மாயரூப அத்தியாயம். | ௭௭ |
| ௮—அட்சரயோக அத்தியாயம். | ௮௬ |
| ௯—வாயாவிகாரயோக அத்தியாயம் | ௯௩ |
| ௰—விபூதிவித்தாரயோக அத்தியாயம், | ௱௨ |
| ௰௧—விசுவரூப அத்தியாயம். | ௱௰ |
| ௰௨—பத்தியோக அத்தியாயம். | ௱௨௬ |
| ௰௩—பிரகிருதிபுருடயோக அத்தியாயம். | ௱௩௨ |
| ௰௪—குணத்திரயயோக அத்தியாயம். | ௱௪௨ |
| ௰௫—புருஷோத்தமயோக அத்தியாயம், | ௱௫௰ |
| ௰௬—தெய்வசத்துவிபாயோக அத்தியாயம், | ௱௫௭ |
| ௰௭—சிரக்காத்திரவியவிபாகயோக அத்தியாயம். | ௱௬௪ |
| ௰௮—சகலஉபநிஷத்துப்பிரதிபந்தனமோக்ஷயோக அத்தியாயம். | ௱௭௨ |


பகவற்கீதைஅத்தியாயங்களின் அட்டவணை

முற்றுப்பெற்றது.